Lion. S. Sriganeshan

உ

சுப்பிரமணியர் துணை.

# நாடி தர்ப்பணம்.

இது

தெல்லிப்பழை மேர்பாக்கம்

தென்மொழி வைத்தியசிரோன்மணி

ஆறுமுகம் புத்திரராகிய

சிதம்பரநாதவைத்தியர் அவர்களால்

தமிழில் வசனகாவியமாகச் செய்து

யாழ்ப்பாணம்

சைவப்பிரகாச யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Dr. T. K. SIVAGNANAM
L. A. M. P. (Cey)
Kondavil West
KONDAVIL

விபவ ௵ ஆவணி ௴.

1928

(*Copyright Rigistered*)

(மூன்று ரூபா விலை.)

உ

கணபதிதுணை.

# முகவுரை.

சுத்தசாட்குண்ணிய பரிபூரணராகிய பரமசிவன், ஆன்மாக்களிடத்து வைத்த பெருங்கருணையால், பிரத்யயம், இலக்ஷணம், சிகிச்சை, முதலாய பிரகரணங்களை விவரிக்கின்ற ஆயுள்வேதத்தைப் பார்வதிதேவியாருக்கு அனுக்கிரகஞ்செய்தருளினார். அந்தப் பார்வதிதேவியார் நந்திதேவருக்கருளிச்செய்ய, அவர் தேவர்கடகும், சித்துப்புருஷர்கட்கும் முனிவர்கட்கும் உபதேசித்தருளினார்.

இதற்கு மேற்கோள்.

சொல்லுமாந்தர் வினைவழித்தொல்வினை
புல்லுமாறு பொறுப்பவுநீள்பவங்
கொல்லுநோயுங் குணமுமருந்துடன்
வல்லிகேட்க வகுத்தனனாதியே. (க)

ஆதியம்பிகைக்குரைப்ப வதைநந்திகேட்டுவந்த
வேதனுக்குரைப்பவேதன் மேகவாகனற்குரைத்த
போதிலிந்திரனும்வாசி மகவுக்குப்புகன்றான்பின்னும்
கோதிலாவசுதேவன்றன் வந்தரிக்கதனைக்கூறும். (உ)

கூறுமாயுர்வேதத்திற் குறுமுனிகுறித்துநோக்கி
மாறுபாடில்லாவண்ணம் வளர்திராவிடமதாக்கி
வீறுயர்புவியில்மாந்தர் பயிர்தழைத்திட§வேகம்போ
லாறியசாரந்தன்னை யுலகினிலுதவிச்செய்தார். (ங)

கூறிய விருத்தங்களாலுமுணர்க.

(§வேகம்போல் என்பது வேறுபிரதியில் வேதத்தில் என்றும் பாடம் இருந்தது.)

அவ்வாறு உபதேசம் பெற்றவர்களும், அவர்களின் குமாரர் சிஷர்களும் வடமொழி தென்மொழி யிரண்டிலு மியற்றிய வைத்

திய சாஸ்திரங்களனேகமுண்டு. அவைகளை யெல்லா மிங்கே யெடுத்துக் கூறப்புகின் மிகவும் விரியுமாதலினால் விடுத்து, இந்த நாடிதர்ப்பணத்திற்கு வேண்டிய விஷயங்களையே எடுத்துக் காட்டப்படும்.

மனுஷருடைய தேகத்திற் பொருந்திய உறுப்புகளில் முப்பத்திரண்டு உறுப்புகளையும் பற்றிப் பிறந்த உரோகங்கள் ௪௪௪௮. அவைகளுள் ௬௧௨௬ கீழுறுப்புகளைப்பற்றியும், ௨௬௧ மேல் உறுப்புகளைப்பற்றியும், ௯0௨௯ உபயாங்கங்களைப்பற்றியும் பிறக்கின்றவைகளாம்.

"பகர்காலாயிரத்திஞேடு நானூற்றுநாற்பத்தெட்டும்
புகலுறுப்பெண்ணான்கத்திற்புகன்றிடும்"

என்னும் பாவினாலுமறிக.

அந்த உரோகங்களைப் பரீக்ஷைபண்ணி யவற்றின் குணங்களை யெல்லாமறிந்து, அவைகளுக்குப் பொருத்தமான அவுஷதங்களைப் பிரயோகிப்பதற்கும் மேலான அறிவு நாடிஞானம் ஒன்றேயாம்.

அந்த அறிவுக்குரிய நூல்கள்—நாடிஞானதரங்கிணி, நாடிவிஞ்ஞானம், நாடிப்ரகாசம், நாடிவிவேகம் என்பவைகளும், வேறும் தேகநாடியின் பார்வை யிலக்ஷணங்களைப் பேசும் அநேக நாடிசாஸ்திரங்களுண்டு என்றும் அவைகள் மர்பஸ்தானங்கள் மணிரந்திரங்களில் நடைபெறுகிற உண்மைகளை விசேஷமாய்க் கூறுவதில்லையென்றும் அவைகளை யிந்த நாடிதர்ப்பணம் ஒன்றுதானே விளங்கக் கூறுகின்றதென்றும் முதனூல் கூறுகின்றது.

தன்வந்தரியர் நாடிவிதி, அகஸ்தியர் நாடிவிதி, தேரையர் யமகவெண்பா, நாடி அகவல், நாடித்திரட்டு, நாடிசூத்திரம், பதினெண்சித்தர்பாடல் முதலிய அநேகம் தென்மொழியிலுமுள்ளன.

அந்த முதனூல்—ஆயுள்வேதத்தில் வைத்தியம் பயனடைகிற தேக நாடியின் பார்வையை விவரிக்கும் பாகத்தின் ஓர் அங்கம். அதை ஸ்ரீ கிருஷ்ணலாலா தநயர் "தத்தராமேணர்" என்பவர் சமஸ்கிருதத்தில் சுலோகமாக வியற்றி, அத்துடன் பூநர்ணிமதானுசார நாடிப்பரீக்ஷையையும் பிற்பகுதியிற் சேர்த்து அவராற் கூறப்பட்டது.

ஆகவே இந்நூலுக்கு உதாரணமாக எடுத்துக் காட்டிய விஷயங்கள் ஒழிந்த மற்றைய விஷயங்களனைத்தும் அவராற் கூறப்பட்டவைகளேயாம். உதாரணமாக எடுத்துக் காட்டின விதிகளின் நூற்பெயர்களு மந்தந்த இடங்களிற் காட்டியிருக்கின்றன. அப்படிக் காட்டாமல் விடப்பட்ட இடங்களிற் சேர்த்த விஷயங்கள் உவில்ஸன் என்பவரா லியற்றிய சமஸ்கிருத அகராதியிலிருந்தெடுக்கப்பட்டன.

சரம் அசரம் என்பனவாகிய இருவகைத் தோற்றத்தில் கிடச் செந்துகளுக்கும் புல் பூண்டு முதலிய தாபரவருக்கங்களுக்கும் கொள்ளப்படாத சுழற்சி, பகுத்தறிவில்லாத காக்கை முதலிய பறவை யினங்களுக்கும், முரட்டுத் தன்மையான யானை குதிரை முதலிய விலங்கினங்களுக்கும் கொள்ளப்படத்தக்கது; அவ்விரண்டு பகுப்பையும் கூறுதுவிட்டு, மனுடருக்குண்டாகின்ற உரோகமென்னும் விலங்குகளைத் தழைக்கும், பாசம் என்று சொல்வதாகிய படகதி விருத்தியிக்ஷணம், படகதியல்லாதது க்ஷீணமடைகிறதன்மை, படகதி தராபைடத்தில் குடிலப்படுகிற தன்மை முதலியவைகளையும், ரோகப்பூருவகாரணம் அரிஷ்டங்களையும் பேசுகிற நாடிதர்ப்பணம் என்னும் வடமொழி வைத்திய நூலை, இந்தியாவிலிருந்து இவ்விடம் வந்து 1923-ம் 1924-ம் ஆண்டுகளில் இங்கே தங்கியிருந்த ஸ்ரீ இராமசாமி ஐயர் அவர்களைக் கொண்டு தமிழ்ப்பாஷையில் மொழிபெயர்ப்பித்து, அதை யான் தமிழில் வசனநடையாக்கிக் கடுஞ்சொற்களுக்குக் கருத்துமெழுதி, அடியேனியற்றும்படி பிறவிப்பிணி முதலிய பிணிகளையெல்லாம் நீக்குகின்ற கதிரைமலைக்கடவுள் கிருபைசெய்தருளுவாராக.

இந்நூலின் முதலிற் கூறியிருக்கிற உபகரண அத்தியாயத்தில், மேலான திரிவிதச் சிகிச்சைகளைத் தழுவிப் பிறக்கின்ற முப்பத்திருவகைச் சிகிச்சைகளுக்கும் முதன்மையான பிரதிரூபங்களை யிலக்ஷணமாகக்கொண்டு ஆயுள்வேதியர் பிறப்பிக்கின்ற பிரசமநங்களின் பெயர், வைத்தியரிலக்ஷணம், ரோகியிலக்ஷணம், ரோகபேதங்கள், ரோகப்பூருவரூபம், ரோகப்பிறப்பின் காரணம், ரோக நிலைமைகளைச் சோதனைபண்ணி நிச்சயிக்கும் உபாயமான முறைமை, பஞ்சநிதானம், சாத்தியு

அசாத்திய கஷ்டசாத்திய நக்ஷத்திரங்களின் பலன், சாத்திய, யாப்பிய, அசாத்திய உரோகங்களின் தன்மை, மனுஷருடைய சீவியத்தில் தேகம் மாறி எடுக்கும் பருவங்கள் இன்ன இன்ன என்பவைகளும் பிறவும் கூறப்பட்டிருக்கின்றன.

முதலாவது அத்தியாயத்தில் அஷ்ட ஸ்தானப் பரீக்ஷை முதல், ரகதி ஸ்தானப்பரீக்ஷை பீறாகவுள்ள 17 விஷயங்களும் பிறவும்,

2-து அத்தியாயத்தில் நாடிஞான சமயம் முதல் அவபத்திய நாடி யிலக்ஷணமீறாயுள்ள 59 விஷயங்களும் பிறவும்,

3-வது அத்தியாயத்தில் ரோகநாடி யிலக்ஷணங்கள், நாடி எண்குறிஅளவை,நாடிசங்கியைவாய்ப்பாடு,முதலியனவும் பிறவும்,

4-வது அத்தியாயத்தில் பூநானிநாடி பரீக்ஷைமுதல், நாடி நவகதிகளும், சக்கரநாடி யிலக்ஷணங்களும் பிறவும்,

5-வது அத்தியாயத்தில் உபஸ்தான காரணநாடிமுதல் திர காமினி பீறாயுள்ள 31 விஷயங்களும் பிறவும் கூறப்பட்டுள்ளன.

இன்னும் இந்த உபகரண அத்தியாயத்தில் ரோகப்பிறப்பு இரண்டு என்றும் மூன்று என்றும் கூறி, ஸப்தவிதவியாதியை யுங் கூறியது பஞ்சநிதானம் இலகுவில்விளங்கும்பொருட்டென்ப:-

அப்படியே இந்த அத்தியாயத்திற் கூறிய வைத்தியரிலக்ஷணங்கள் பிறிம்பாகவிட்டு, மற்றைய விஷயங்களனைத்து முரோகங்களைப் பரீக்ஷைபண்ணி, அவைகளை நாடி யிலக்கணத்தோடு கலந்து நிதானஞ்செய்வதற்கு ஆதாரமா யுள்ளவைகளென்றறிக.

இவ்வகையான இலக்ஷணங்களையெல்லா மொழிந்த இந்த "நாடி தர்ப்பணம்" என்கிற சாஸ்திரத்தின் தகுந்த பிரயோசனம் யாதெனின், அறம் பொரு ளின்ப மோக்கங்களாலுண்டாகின்ற பேரின்பத்தைச் சீவனடைதற்குத் துணைக்காரணமாயிருக்கின்ற சரீரத்தைப் பாதுகாக்கத் தக்கதென்பதாம்.

அது எவ்வாறு பாதுகாக்குமெனின், வியாதிசம்பவித்தற்குக் காரணம் இரத்த நெறியின் சீர்விகாரமடைகிறதன்மை, அந்த இரத்தநெறி விபரீதமடைகிறதற்குக் காரணம் தோஷங்கள்

கோளாறடைகிறதன்மை, தோஷங்கள் கோளாறடைகிறதற்குக் காரணம்: உடம்பிற்கொத்துக்கொள்ளாத உணவின் தன்மையினுலும், காலவித்தியாசம் தேசசஞ்சாரம் முதலிய வேறு வித்தியாசங்களினுலும் உண்டாகின்றது. இவைகளிற் கூறுமலும் விட்டுக் கூறிய சிலகாரணங்களின் சுருக்க வரலாற்றையும், உரோக முண்டாவதன்முன்பதினின்றும் நீக்கிக்கொள்ளும் தந்திரமறியும்படியான புருவரூப நிதானத்தையும், தேக போஷணைக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும் சில ஆகாரவிதிகளையும், ஜீவன் நிலைபெற்றிருக்கிற இந்தக் காயத்தை நடப்பிக்கிற உதிரம் நடைபெறும் ஒழுங்குகளையும் இந்தச் சாஸ்திரத்திற் சுருக்கமாய்க் கூறியிருக்கிறபடியாலென்றறிக.

அப்படியிருக்க இந்நூலுக்கு "நாடி தர்ப்பணம்" எனப் பெயர் கூறியது என்னையெனின் "நாடி" என்பது தேகேந்திரியம், இரத்ததாது, நரம்பு உதிரநரம்பு, அந்திரம், நாளம் எனப் பல நாமம்பெற்றுத் தேகத்தோடொற்றுமையுடையதாய்ச் சகல உறுப்புகளிலும் பிரவேசித்து, அவைகளைப் போஷணைசெய்து, தானுமனுபவித்துப் பிரகாசிக்கச் செய்கிறபடியால் அதற்குச் சாலம் என்னும் ஒரு பெயருளது; "தர்ப்பணம்" என்பது ஒரு படிமக்கலமானது தன்னுளடங்கிய நீரோட்டத்தை எவ்வாறு பிரத்தியக்ஷமாக்கிறதோ அதுபோலவே, அந்த நாடியும் தனக்குரிய தாதின் மூலமாக, உரோகங்களி னிலக்ஷணங்களைத் தெரிவிக்கிறதாம்.

ஆதலால் இதிற்கூறிய விஷயங்களனைத்தையுமோர்ந்துணருமறிஞர்கள் யாவரும் அகமகிழ்ச்சியுடனேற்றுக்கொள்வார்கள் என்பது எனது கருத்து.

---

இந்நூலிற் கூறுமல்விடப்பட்ட ப்ரஸ்தாரசக்கரமும், ரோகியின் அங்கப் பரீக்ஷைக்குரிய சில கருவியிலக்ஷணமும், புத்தகத்திற் சில இடங்களிற் றப்பாயிருக்கிற பக்க இலக்கங்களும், இரண்டாம்முறை அச்சிடும்பொழுது அவைகளைச் சேர்த்தும் திருத்தியும் அச்சிடப்படும்.

இங்ஙனம்,

ஆ. சிதம்பரநாதன்.

# அநுக்கிரமணிகை.

## உபகரண அத்தியாயம்.


| பக்கம். | விஷயம். |
|---|---|
| க | விநாயகர்துதி |
| ,, | முருகக்கடவுள்துதி |
| ,, | பரமசிவவணக்கம் |
| ,, | பார்வதிதேவியார் வணக்கம் |
| உ | தன்வந்தரியார்துதி |
| ,, | அகஸ்தியர்துதி |
| ,, | அச்சுவனிதேவர்துதி |
| ,, | சித்தப்புருஷர்துதி |
| ,, | இந்நூலின் வடமொழி ஆசிரியர்துதி |
| ங | நூற்பயன் |
| ,, | மூவிதச் சிகிச்சை |
| ,, | அவுஷதம், சிகிச்சையின் பெயர்கள் |
| ச | வைத்திய அபிதானம் |
| ,, | வைத்திய இலக்ஷணம் |
| ரு | உத்தமவைத்திய இலக்ஷணம் |
| சு | ரோகியிலக்ஷணம் |
| ,, | உத்தமரோகியின்குணம் |
| எ | ரோகிக்குரிய உத்தம குணங்கள் |
| ,, | சிகிச்சை எளிதில் வசப்படாத ரோகியின் குணம் |
| அ | மூர்க்கரோகியின் தன்மை |
| கூ | பாலருக்கறியும் வியாதி |
| ,, | திரிதோஷங்கள் |
| ,, | பிரகிருதி |
| ,, | ரோகபேதங்கள் |

| பக்கம். | விஷயம் |
|---|---|
| கo | ரோகபேதங்கள் |
| கக | ,, ,, |
| ,, | ,, ,, |
| கஉ | ரோகபேதங்களுக்குச் செய்யும் சாந்தியான சிகிச்சை |
| ,, | ரோகநிலைமைகளைக் குறிப்பிட்டு நிச்சயிக்கும் முறைமை மூன்று |
| கரு | பஞ்சநிதானம் |
| ,, | ஷை பஞ்சநிதானவில் க்ஷணங்கள் |
| கஎ | ,, ,, |
| கஅ | சாத்திய அசாத்தியவிதங்கள் |
| ,, | நக்ஷத்திரபாதபலன்கள் |
| ககூ | ,, ,, |
| உo | ,, ,, |
| உக | ,, ,, |
| ,, | வாரயோகபலன் |
| உஉ | ,, ,, |
| ,, | சாத்திய அசாத்திய கஷ்டசாத்திய நக்ஷத்திரங்கள் |
| ,, | அறுவகைஇருதுகாலம் |
| உங | மனுஷருடைய சீவியத்தில் நடைபெறுகிற பருவங்களின் முறைமை |
| ,, | வேகம், மலம், சப்ததாது, பஞ்சவாய்வு இவைகளின் பெயர் |
| உச | உதராக்கினிபேதம் |
| ,, | இருபதுவகைக்குணங்கள். |

## முதலாம் அத்தியாயம்.


| பக்கம் | விஷயம் |
|---|---|
| I | கடவுள் வணக்கங்கள் |
| II | ,, ,, |
| ,, | அவையடக்கம் |
| ,, | சமதாதும் திரிதோஷமும் |
| க | வாகடம் |
| ,, | அஷ்டஸ்தானப்பரீக்ஷை |
| உ | நாடிஞான மவசியம் அறிய வேண்டும் என்பது |
| ,, | ஸ்திரிதானப் பரீட்சையின் முறைமை |
| ௩ | நாடிஅநுபவசித்திக்கு வேண்டிய ஏதுக்கள் இன்னவென்பது |
| ச | நாடிஅறிவை நிச்சயிக்கும் உபாயம் இன்னவென்பது |
| ,, | நாடிநடைக் குவமையாகக் கொள்ளும் ஜீவசாதிபேதம் |
| ரு | பருவம், காலம், ரோகபேதம் இவைகளில் நாடி நடக்கும் தன்மை |
| சு | நாடிஸ்பந்தனகாரணம் |
| எ | ,, ,, |
| அ | ,, ,, |
| கூ | ,, ,, |
| க0 | நாடிகளின் பெயர் |
| ,, | நாடிபேதம் |
| கக | சுழுமுனநாடி |
| கஉ | பஞ்சேந்திரியங்களின் குணங்களை நடத்தும் நாடி |
| ,, | சடத்துக் குபயோக மில்லாமற் செல்லும் இரசத்தின் றன்மை |


*

## முதலாம் அத்தியாம்.


| பக்கம் | விஷயம் |
|---|---|
| க௩ | உத்தமதேகருக்குக் கூறப்பட்ட நாபி ஸ்தானநாடி சக்கரம் |
| கச | இரஜேந்திரியப்பரீக்ஷையில் பிரதான மறியவேண்டிய காரணங்கள் |
| கரு | ,, ,, |
| ,, | அங்குஷ்டதேகிகள்நாடி. |
| கசு | ,, ,, |
| கஎ | பரீக்ஷாபாகவிதி |
| ,, | அங்குஷ்டதேகிகள் நாடி |
| கஅ | நாடிபார்க்குமிடங்கள் |
| ககூ | ஜீவாதாரமான நாடி |
| உ0 | கண்டநாடியின் குணம் |
| ,, | நாசிநாடியின் குணம் |
| ,, | அசைநிலைப்பிரமாணம் |
| உக | ,, ,, |
| உஉ | ரகதிஸ்தானப் பரீக்ஷை |
| ,, | பரீக்ஷாரூபபேதம் |
| உ௩ | ரகதிஸ்தானப்பரீக்ஷை யுவதிக்கும் பார்க்கலாம் என்பது |


---

## இரண்டாம் அத்தியாயம்.


| பக்கம் | விஷயம் |
|---|---|
| உ௩ | நாடிஞானசமயம் |
| உச | ஷடி பரீக்ஷைக்குத் தகாத சமயம் |
| உரு | இருதுகால நாடிப்பரீக்ஷை |
| உசு | யோக்கியதேகநாடி |
| ,, | யோக்கியரோகிநாடி |
| ,, | மடவைத்தியம் |
| உஎ | அயோக்கியபிராணி நாடி தர்சனம் |

## இரண்டாம் அத்தியாயம்.


| பக்கம் | விஷயம் |
|---|---|
| ௨௮ | பரீக்ஷைப்பிரகாரம் |
| ௨௯ | வித்தியாசமான அக்ஷரத்தோடு சேர்ந்த சில காரணங்கள் |
| ௩௧ | உபலக்சணம் |
| ௩௨ | பிஷச்சுவிலைதகைபார்க்கும் முறைமை |
| ௩௬ | ரோகரகிதமனுஷர்நாடி |
| ௩௭ | நாடிகளின் தேவதை |
| ,, | ஷெ வர்ணம் |
| ,, | ஷெ ஸ்பர்சம் |
| ,, | ஷெ சுபாவகதி |
| ௩௮ | வாதாதிநாடிகளின் தன்னிலைக்கிரமம் |
| ௩௯ | மதாந்தரம் |
| ௪0 | நாடிச்சக்கரம் |
| ௪௧ | ஷெ சக்கரத் திருஷ்டாந்தம் |
| ௪௨ | ,, ,, |
| ௪௩ | திரிதோஷசம்பவம் |
| ௪௪ | பித்தாசயத்தில்வியாதி சம்பவிக்கும்பொழுது நாடியின் நடை |
| ௪௫ | இரத்தம் இடையிற்சிலேஷமடையுங் காரணம் |
| ௪௭ | நாடியின் சாதாரணமான நடைக்கு உவமை |
| ,, | வாததொந்தம் |
| ,, | பித்ததொந்தம் |
| ,, | வாதகபதொந்தம் |
| ,, | வாதபித்ததொந்தம் |


## இரண்டாம் அத்தியாயம்.


| பக்கம் | விஷயம் |
|---|---|
| ௪௯ | நாடிகள் தங்களுக்குரிய நடையை ஈவுபண்ணும் முறைமை |
| ௫0 | வாதாதிநாடிகளின் சேர்க்கைநடையின் முறைமையான இலக்ஷணம் |
| ௫௧ | விசேஷகதி |
| ௫௨ | துவம்துவஜநாடிசாலம் |
| ௫௩ | நாடிகள் அங்குலிக்குறிநிதானத்தை விளக்கும் வேற்றுமை |
| ,, | முகக்குறி கண்குறி |
| ,, | இரட்டித்து நடக்குந் தோஷங்களில் தமனி நடக்கும் முறைமை |
| ௫௪ | திரிதோஷகுணநாடி |
| ௫௫ | சன்னிபாதகோபம் |
| ,, | சமான்யபூர்வசாத்தியத்வம் |
| ௫௬ | ருதுசந்தியான காலங்களில் நாடி நடக்கும் முறைமை |
| ௫௭ | அசாத்தியத்வம் |
| ௫௮ | ஸ்நாயுவின் நடை |
| ௫௯ | நாடிநடை அசாத்தியம் போலிருந்தாலும் சாத்தியமாவது |
| ௬0 | பூதாபிஷங்கநாடியு மபமிருத்துகாரணமும் |
| ௬௧ | உறமூல்விதி |

## இரண்டாம் அத்தியாயம்.


| பக்கம் | விஷயம் |
|---|---|
| ௬௨ | மரணாந்த உற்பத்திகாலங்களை அங்குஷ்டமூலத்திற் பார்த்து முடிபுரைத்தல் |
| ௬௩ | ,, ,, |
| ௬௪ | ,, ,, |
| ௬௫ | சுழுமுனைநாடியின் நடையினாலுண்டாகும் பலாபலம் |
| ,, | மரணக்குறியின் காலஅநிச்சயக் குறிப்புகள் |
| ௬௬ | ,, ,, |
| ,, | மரண நிச்சயக் குறிகள் |
| ௬௭ | ,, ,, |
| ௬௮ | ,, ,, |
| ௬௯ | ,, ,, |
| ௭0 | அரையாமத்தில் மரணக்குறி |
| ௭௧ | ஒருசாமபேதத்தில்மரணக்குறி |
| ,, | மூன்றுநாளில் மரணக்குறி |
| ௭௨ | ஐந்துநாளில் மரணக்குறி |
| ௭௩ | நாடித்துவாரத்தில் உதிரம் பிரவேசித்து நடைபெறுகிற கால அளவின்படி ஆயுளை நிர்மாணிக்கும் அறிவு |
| ௭௪ | நாடித்துவார போசனஞானம் |
| ,, | இரசஞானம் |
| ௭௫ | ,, ,, |
| ௭௬ | உபவாசகன்நாடி அல்லது இலங்கனநாடி |
| ,, | அவபத்தியநாடி |


## மூன்றும் அத்தியாயம்.


| பக்கம் | விஷயம் |
|---|---|
| ௭௭ | சுரப்பூர்வரூபம் |
| ௭௮ | பக்குவரூபசுரபேதநாடி |
| ௭௯ | வாதசுரநாடி |
| ,, | பித்தசுரநாடி |
| ,, | சிலேஷ்மசுரநாடி |
| ௮0 | தொந்தச்சுரங்களின் நாடி |
| ,, | ,, ,, |
| ௮௧ | ,, ,, |
| ,, | ருதிரகோபச்சுரநாடி |
| ௮௨ | ஆகந்துகசுரபேதம் |
| ,, | சந்ததாதிசுரபேதம் |
| ௮௩ | ,, ,, |
| ௮௪ | தாகபூருவம், சுரரகித மனுஷர்நாடி |
| ,, | அசீரணரூபநிதானம் |
| ௮௫ | ,, ,, |
| ௮௬ | கிரகணிரோகநாடி |
| ௮௭ | விஷூசிகாரோகத்தை யறிதல் |
| ,, | ஆநாகமூத்திரக்கிரிச்சரரோகநாடி |
| ௮௮ | சூலரோகநாடி |
| ,, | பிரமேகரோகநாடி |
| ,, | விஷ்டம்பா குன்மரோகம், சர்ப்பவிஷம், அர்த்திதவாதரோகநாடிகள் |
| ௮௯ | குன்மரோகநாடியின் விசேஷமான இலக்ஷணம் |
| ௯0 | பகந்தரரோகத்தை யறிதல் |
| ,, | சர்த்தி, ஸல்யவிரணம், அபிகாதம், பிரதரம் முதலியவைகளை யறியும் நாடி |

## மூன்றாம் அத்தியாயம்.


| பக்கம் | விஷயம் |
|---|---|
| ௯௧ | துனி, பிரதிதுனி, அஷ்டூலம், பிரதிஅஷ்டூலம் இவைகளின் நாடி |
| ,, | நாடி எண்குறிஅளவை |
| ௯௨ | ,, ,, |
| ௯௩ | ,, ,, |
| ௯௪ | ,, ,, |
| ௯௫ | நாடிசங்க்யைவாய்ப்பாடு |
| ,, | இருதயரோகமுண்டாகுங் காரணம் |
| ௯௭ | சஞ்சலை, தேசபுஞ்சை நடையியல் |
| ,, | துர்ப்பலை, க்ஷீணநாடிகளின் நடை |
| ௯௮ | புராணரோகிநாடி |
| ,, | சுகதேகர்நாடி |
| ௯௯ | கைபார்த்த மருத்துவன் நடக்கவேண்டிய முறைமை |


## நான்காம் அத்தியாயம்.


| பக்கம் | விஷயம் |
|---|---|
| ௧0௧ | பூநாநிமதாந்தரநாடிப் பரீக்ஷை |
| ,, | சிவபெருமான் துதி |
| ௧0௩ | நியூனகுணலக்ஷணம் |
| ,, | உத்தமகுணலக்ஷணம் |
| ,, | நவகதிகளும் |
| ௧0௪ | மச்சாதாதுவைப்பற்றியுண்டாகும் சில வியாதியின் காரணம் |
| ௧0௫ | ஷடி ரோகங்களைப் பரீக்ஷிப்பண்ணும்முறை |


## நான்காம் அத்தியாயம்.


| பக்கம் | விஷயம் |
|---|---|
| ௧0௬ | கிஜாலிகதி |
| ,, | மோஜிகதி |
| ௧0௭ | உமலிகதி |
| ௧0௮ | மின்ஸாரிகதி |
| ,, | ஜங்பலபாரநியாயம் |
| ௧0௯ | ஜூலபிகாதலக்ஷணம் |
| ௧௧0 | வக்கிரகதி |
| ௧௧௧ | ஸாஹறச்புலம்தம் |
| ௧௧௨ | மரணக்குறி |
| ௧௧௪ | கோஷ்டகநாடி சக்கரத்திற் பேசும்விஷயங்கள் |
| ௧௧௫ | ,, ,, |
| ௧௧௬ | ,, ,, |
| ௧௧௭ | ,, ,, |
| ௧௧௮ | ,, ,, |
| ௧௧௯ | ,, ,, |
| ௧௨0 | ,, ,, |
| ௧௨௧ | ,, ,, |
| ௧௨௩ | இம்பிஸாதம் |
| ,, | இங்கிபாஜம் |
| ௧௨௪ | நாடிகளின் தத்துவம் |
| ,, | இரண்டிரண்டாய்த் தொந்திக்கிறதன்மை |
| ௧௨௫ | இம்பிஸாதபேதம், சக்கரமுறைமை, அதிற் கூறிய விஷயங்களும் |
| ௧௨௬ | ,, ,, |
| ௧௨௭ | ,, ,, |
| ௧௨௮ | அன்யசக்கரம், அதிற் கூறிய விஷயங்களும் |
| ௧௨௯ | ,, ,, |
| ௧௩0 | ,, ,, |

## நான்கான் அத்தியாயம்.


| பக்கம். | விஷயம். |
|---|---|
| ௧௩௧ | ,, ,, |
| ௧௩௨ | ,, ,, |
| ௧௩௩ | ,, ,, |
| ௧௩௪ | ,, ,, |
| ௧௩௫ | ,, ,, |
| ௧௩௬ | ப்ரஸ்தாரசக்கரவிரிவுரை |
| ௧௩௭ | ப்ரஸ்தாரசக்கரத்திற் கூறிய துவிகுணம் |
| ௧௩௮ | ,, ,, |
| ௧௩௯ | திரிகுணம் |
| ௧௪0 | ,, ,, |
| ௧௪௧ | , ,, |
| ௧௪௨ | ,, ,, |
| ௧௪௩ | ,, ,, |


## ஐந்தாம் அத்தியாயம்.


| | |
|---|---|
| ௧௪௪ | உபஸ்தானகாரணநாடி |
| ,, | உணவின்குணநாடி |
| ௧௪௬ | பிரசவவேதனைநாடி |
| ௧௪௭ | அங்குஷ்டதேகியிலக்ஷணம் |
| ௧௪௮ | பரீக்ஷையில் அதமதானங்களை நிச்சயிக்கும் முறை. |
| ௧௪௯ | சந்தானப் புணர்ச்சி சிசுநிலைமைகளைத் தெரிவிக்கும் நாடி. |
| ௧௫0 | பாலர் பிரயோகநாடி |
| ௧௫௧ | சுகஆதுலர்நாடி |
| ௧௫௩ | ஸ்திரி புருஷரின் நாடித்துடிப்பின் வித்தியாசம் |


## ஐந்தாம் அத்தியாயம்.


| பக்கம். | விஷயம். |
|---|---|
| ௧௫௪ | ஆரோக்கிய அவஸ்தையையுடைய பெண்ணுக்குத் தருணத்தில் நடக்கும் நாடி [சாரி) |
| ,, | படபடத்தநாடி (சீக்கிர |
| ௧௫௫ | மந்தகாமினி |
| ,, | கிரமநாடி |
| ,, | ஒழுங்கீனமானநடையை யுடைய நாடி |
| ௧௫௬ | தொய்ந்தநடைநாடி |
| ,, | பூரணநடைநாடி |
| ,, | இரத்தஅபிவிருத்திநாடி (ரிக்தம்) சூக்ஷ்மகதியிற் சமநடைகாட்டும்குறிப்பு |
| ,, | சூக்ஷ்மநாடி, (இரத்தக்ஷீணத்திலும் துவாரம் நெருங்குந் தன்மையான குறிப்பு) |
| ௧௫௭ | கடினநடைநாடி, (பந்தித்தும் வக்கிரவடிவமாகாத குறிப்பு) |
| ,, | மிருதுநாடி, சுரதோஷகுணங்களாற் சுஷ்கித்து மெலிந்த நடையைக் காட்டுங் குறிப்பு) |
| ,, | சீக்கிரகாமினி, (பரணக்குறிப்பைக் காட்டும் தீவிரவேகமானநடை) |
| ௧௫௮ | தீரகாமினி (உதிரவிருத்தியில் மந்தநடை) |
| ,, | சாவதானதை |
| ,, | அசாவதானதை |

ஐந்தாம் அத்தியாயம்.


| பக்கம். | விஷயம். |
| --- | --- |
| கருசு | ஸாந்தரி, இடைவிட்டு நடக்கிற நாடி |
| ,, | இரத்த விருத்திநாடி, (தூலவிலக்ஷணத்தைக் காட்டும் குறிப்பு) |
| ,, | ரிக்த—நாடி, (சூக்ஷ்ம குணத்திற் றாலநடையைக்காட்டும்குறிப்பு) |
| கசுo | சூக்ஷ்மதரம், (மெலிந்த நாடி) |
| ,, | கடினநடை, (பந்திப்பைப் பிரிக்குங் குணமுடைய குறிப்பு) |
| கசுo | மிருதுநாடி, (அங்குஷ்டமூலநடை இருதயத்திற்கு விபரீதமான பலனை அளிக்கிற குறிப்பு) |


ஐந்தாம் அத்தியாயம்.


| பக்கம். | விஷயம். |
| --- | --- |
| | கசுக - ம் பக்கத்திற்குத் தப்பான, கருக-ம் பக்கத் |
| (கருக) | தில், சீக்கிரகாமினி, (தத்துவநாடியை விகாரப்படுத்துங் குறிப்பு) |
| ,, | தீரகாமினி, (பிரமாணத்துக்கு மேலதிகரித்த நடை, - அங்குஷ்டமூலத்தி லாறுதலான நடை கொள்ளுகிற குறிப்பு) |
| ,, | மதனகாமரசாயனம். |

உ

சிவசுப்பிரமணியர் துணை.

# நாடிதர்ப்பணம்.

## உபகரண அத்தியாயம்.

### விநாயகர்துதி.

### வெண்பா.

சீரா ருபகரண வத்யாயஞ் செப்புதற்குத்
தாரார் விநாயகன் றாள்காப்பே—நீராழி
சூழ்ந்த வுலகமதிற் சுக்கதகம் பன்னோயைத்
தாழ்த்தியுயிர் காப்பதுபோற் றான்.

### முருகக்கடவுள் துதி.

பன்முறைகை தேர்ந்த பரிகார மேன்மையுற
நன்மணிமூன் றும்முன்னர் நல்குவபோ—லின்னூலைக்
கொண்டாரும் போற்றுங் குகன்சே வடியிணைகள்
வண்டமிழ்முன் னைக வரண். (௨)

### பரமசிவவணக்கம்.

புரக்கவெண்ணோ யம்போற் புவனமெங்கு நின்றே
யிரக்குமடி யார்க்கருளு மீசன்—சுரக்கு
முபவரசச் சூர்க்காப்பா மோர்கருணை போலிவ்
வுபகரண வத்யாயத் தை. (௩)

இரங்குமென்றது எதுகை நோக்கி இரக்குமென நின்றது.

### பார்வதிதேவியார் வணக்கம்.

பின்னியெழு மேகப் பிணிதனைக்கொண் டார்துயரைப்
பொன்னமிர்த வல்லித்தூர் போக்குவபோ—லிந்நூ
றருமிறைக ணீங்கத் தருமத்தின் செல்வி
யிரும்பதுமத் தாளிரட்சை யே. (௪)

## தன்வந்தரியர்துதி.

### ஆசிரியவிருத்தம்.

தொண்டெறும்வினையுழப்பாற்றொடர்புதையெனும்புலத்தில்
மண்டியமந்தம்காற்றிவளர்பிணிவனத்துக்கெல்லாம்
விண்டலர்ந்தழல்போற்றேற்றிவிபுதபண்டிதராயோகம்
பண்டையிந்தகிலங்காக்குந்தன்வந்த்ரிபாதம்போற்றி. (௫)

## அகஸ்தியர்துதி.

### ஆசிரியப்பா.

இந்திரன் முதலா மிமையவர் பொருட்டுச்
சிந்துவி னீரைச் சிரங்கையிற் றிரட்டிய
செந்தமிழ் முனிவர் திருவடி யிணையைச்
சிந்தையில் வணங்கிச் செப்புவேனே. (௬)

## அச்சுவனிதேவர்துதி. சூத்திரம்.

அமரர் மருத்துவ னஸ்வனி தேவர்
தமக்கு மோர்துதி சாற்று வேனே. (௭)

## சித்துப்புருஷர்துதி.

### கலிவிருத்தம்.

செய்திடு மருந்துகள் செயமுறப் பேணிய
கொய்தகன் முப்பூத்தனைக் கூட்டல் போலச்
செய்தவப் பதினெண் சித்தர்தா ளென்னுட்
பெய்தன னிந்நூல் பிழையறப் பொருட்டே. (௮)

## நூலாசிரியர்துதி.

### ஆசிரியவிருத்தம்.

விரிந்தவிருணீக்கியுமிழ்கதிர்போலாயுள்
வேதியர்க்கானந்தமிகுமாயுள்வேதம்
பரிந்தபொருளோரங்காடிஞானம்
பலபிரிவுண்டவையொழிந்திவ்வங்காடி

தெரிந்ததனைவடமொழியிற்சுலோகமாகத்
திரட்டியங்கநாடிதர்ப்பணமென்றிட்ட
வருந்தவத்தனிராமேனரெனும்பேர்பூண்ட
வவர்நாமம்பரவியிவண்பகரலுற்றும். (௯)

## நூற்பயன். வெண்பா.

ஆக்கந் தழைக்கும் அறங்கோடா நாடெங்கும்
ஊக்க மிகும்பல் வளமோங்கும்—யாக்கைதுய
ராற்றுங் கரணி அபிர்ப்புக் கொருபடியைப்
போற்றுமிந்தச் சங்கியையின் பொற்பு. (௧௦)

## இந்த அத்தியாயத்தில் நாடிதர்ப்பணத்துக்காதாரமாயுள்ள சில விஷயங்களை எடுத்துக் கூறப்படுகின்றது.

## மூவிதச் சிகிச்சையாவன.

தேவசிகிச்சை, மானுடச்சிகிச்சை, இராக்ஷதசிகிச்சை என்பன.

அவற்றுள் — தேவசிகிச்சையாவது: சுவர்ணம் முதலாய லோக வருக்கங்களைக்கொண்டும், பாரதம் முதலாய தாதுவருக்கங்களைக்கொண்டும், வைரம் முதலாய இரத்தினங்களைக்கொண்டும், உபரசம், உபரத்தினம், இரசாயனம், பஸ்மம், செந்தூரம் முதலியவைகளைக்கொண்டு செய்வதும், சாந்தியும்.

மானுடச் சிகிச்சையாவது: கஷாயம், சூரணம், குளிகை முதலியவற்றைக்கொண்டு செய்வது.

இராக்ஷத சிகிச்சையாவது: க்ஷத்திரஞ்செய்தல், சூடேற்றல், *பாடகம், ஊசியேற்றல் முதலியன. (௨)

இவைகளின் விவரணங்களைச் சிகிச்சைநிதானங்களைக்கூறும் சாஸ்திரங்களிலறிந்துகொள்க. (*பாடகம்-பற்றுப்போடல்.)

## சிகிச்சை நாமங்கள்.

வியாதிகரம், பத்தியம், சாதகம், அவுஷதம், பிரசமனம், பிரகிருதிஸ்தாபனம், இவைகள் அவுஷதங்களுக்கும் சிகிச்சைக்கு முரியபெயர். (௩)

## வைத்தியருக்குரிய அபிதானங்கள்.

வைத்தியன், சிரேஷ்டன், அகதங்காரன், ரோகாரி, பிஷக், ரோகச்ஜன், சீவகன், வித்வான், ஆயுர்வேதன், சிகித்ஸகன், கதாகதாரி, பிராணசார்யன், விதி, பிராணரக்ஷகன் என்பன.

ஷூவிதகன், ரோககாதகன், பரிகாரி, பிணிதீர்ப்பான், மருத்துவன், பிடகர், ஆமாத்தியர், மருத்துநாலோர், ஆயோகவி, பண்டிதன் என்பவையும் வைத்தியருக்கு வழங்கும் பெயர்களாகும். இந்த அபிதானங்களில் ஸ்திரி மருத்துவமாதுக்கும் பால் காட்டும்விகுதியின்படி பொருத்தமானவை வழங்கும். (௪)

## வைத்தியரிலக்ஷணம்.

வைத்தியன், பல சாத்திரங்களையும் கற்றறிந்து, பின்பு ஒருத்தம வைத்தியன் கீழிருந்து அனேக காலத்திற்குப் படித்துக் கைபாகம் செய்பாக மனைத்து மவரிடங் கேட்டறிந்தும், தானும் வைத்திய சாஸ்திரங்களிலுள்ள முறைகளை ஐயந்தீர விளங்கியவைகளிற் கூறியிருக்கிற சிகிச்சைகளிற் றுனறிந்தவைகளைப் பிழையில்லாமற் செய்யுந் திறமையும், உடம்பிலுண்டாயிருக்குங் குணங்களைக் கைநாடிக்குறிப்பினாலும் உபாயமான ஏதுக்களினாலும், அறியுந் திறமையும், அந்தந்த வுரோகங்களுக்குப் பொருத்தமான அவுஷதம், பத்தியம் முதலிய ஆதரவுகளை உரோகிக்கு, அல்லது உரோகியின் பரிசாரகனுக்குக் கற்பிக்குந் திறமையும், கொடுத்த மருந்தினாலாவது அல்லது நோயின் குணத்தினாலாவது தோற்றுகிற புதிதுபுதிதான குணங்களையும், சாத்திய அசாத்திய விதங்களையும் நிதானஞ்செய்கிற ஓர்மமுடைமையும், மனம் வாக்குக் காயம் என்னுந் திரிகரணசுத்தி யுடையவராயும், யாவருக்கும் சாந்தமான வார்த்தையை யுத்தியாய் விளங்கப் பேசுந் திறமை யுடையவராயும், படிதம், யந்திரம், பற்று, க்ஷத்திரம் முதலிய சிகிச்சைகளிற் பராக்கிரமமுடையவராயும், இவ்விதச் சிகிச்சைகளா லுண்டாகின்ற குணம் அக்கிரபாகத்தை யடையும்பொழுது தாதோட்டம் ஊடுருவி நடக்கிற இயற்கையான நரம்பின் தன்மையை யறியுந் திறமையை யுடையவராயும், வெடுவெடுப்பில்லாத ஆறுதலான பரீக்ஷையமைந்த

கைப்பழக்க முடையவராயும், அடக்கம் பொறுமை முதலாய சாந்த குணங்க ளமைந்தவராயும் இருப்பவர் எவர்களாலும் மதிக்கப்படத்தக்கவர்.

பூவுலகத்தில் முதன்மையாக விதிக்கப்பட்ட வைத்தியம் மூன்று: அவைகள்—சத்மசரவைத்தியம், சித்தசாதிதவைத்தியம், உத்தமவைத்தியம் இவைகளினிலக்ஷணங்களை விரிந்த நூல்களி லறிந்துகொள்க. ஆனல் மூர்க்கவைத்திய னிலக்ஷணம், உத்தமவைத்திய னிலக்ஷணம் இரண்டும் சுருக்கமாய்க் கூறப்படுகின்றன. (௫)

சிகித்சாசாரீரக்கூறு, அவுஷதம், அவுஷதமுறைகளெழுதிய ஏடு, பதார்த்தகுணம், மாத்திரைக்கட்டு முதலிய சகல முறைகளும் தன்னிடமிருக்கிறதென்றும், தா னவைக ளனைத்தையுங் கரைகண்ட பரிகாரியென்றும் சம்பிரதாயமான வார்த்தைகளைப் பேசுகிற கபடி கொடுக்கிற மருந்தின் குணம், இருதயஸ்தானத்தினின்று நல்ல குணங்களை யுண்டாக்கியளிக்கிற முதற்பொருளை எப்பொழுது பந்திக்கச்செய்கின்றதோ அப்பொழுது அவன் மூர்க்கவைத்தியனென்னும் பெயரை யடைகிறன். "கோ" பந்த முற்றல் பெருந்தொகையான குணங்கள் மேற்படுகின்றன. இவர் மற்றவர்கள் விளங்கக்கூடாத வழுவழுத்த பேச்சு, அல்லது சாமர்த்தியமான திடாரிக்கங் கூறுதல்; இவருக்குச் சந்தேகம் நீங்காத கபடகுண முடைய மனசில் பயன்படுகிற வைத்திய அறிவு தரிக்கிறதில்லையாம்; இந்த மூர்க்க வைத்தியன் எப்பொழுது காமுகனு யவமதிக்கப்பட்டானே அப்பொழுது அனேக சீ! சீ!! என்னும் கெட்ட குணங்களைச் சுமந்து நடக்கிறன்.

துஷ்டவைத்தியன் உரோகி கொடுக்கும் பொருள்களை விசிறிப்போடுங் குண முடையவன்.

தைரியவீனனுக்கு க்ஷத்திரச்சிகிச்சை வியாபிக்கிறதில்லை. (௬)

## உத்தமவைத்திய ரிலக்ஷணம்.

சீவனுக்கு அபாயம் நேரிடாத சிகிச்சையை நடத்துகிற உத்தம வைத்தியர், தேகத்தின் கூறுகளையும், ரோகபேதங்களையும், உரோக உற்பத்தி முதலாய பஞ்சநிதான விலக்ஷணங்களையும் விளங்கி, ரோகி விருப்பமாய்த் தெரிவிக்கிறதை யறிதற்பொருட்டு

அவன் கொடுக்குந் திரவியத்தைப் பெற்றுப் பிராணனை யிரட்சிக் கத்தக்கதும், தாதுக்கு நல்ல குணத்தைக் கொடுக்கிறதுமாகிய ஆயோகங்களைப் பிரயோகித்து, புதிது புதிதாக உண்டாகிற உபத்திரவங்களைக் காலக்கிரமத்தில் நாசமடையச்செய்து நோயை யகற்றுந் திறமையுடையவரும், உலபம் என்பதாகிய செய்கைவழியில் அனுபவப்பட்ட சித்தியுடையவராயு மிருப்பவர்.

## ரோகியிலக்ஷணம்.

ரோகத்தை யடைந்தவருக்கு அந்த ரோகத்தின் குணங்கள் ஸ்தானத்திற் போ யதிகரித்துப் பிரதிபலிப்பை யுண்டாக்கிறது. அவைகளுக்குக் கொடுக்கும் மருந்தின் குணத்தினு லுண்டாகின்ற செயல் ரோகத்தை யெதிர்த்துப் பிரதிகுணத்தை யுண்டாக்கி, அந்த உரோகம் வளர்ச்சியடைகிற பலிப்பை நிந்திக்க, ஸ்தானத்திற் பந்தித்திருக்கிற குணங்கள் பிரிந்து தனிமையாகிறது. மிகுதிப்பற்றுய் ரோகிகளுக்குக் குணங்க ளிரவி லதிகரிக்கிறது.

## உத்தமரோகியின் குணம்.

உரோகிகளுக் குண்டாயிருக்கிற பிரகிருதி இயற்கையானதாயும், வர்னம், தைரியம், கண்ணின் தேசஸ் நல்ல குணமுடையவைகளாயும், இரட்டித்த தோஷம் கொடுக்கிற மருந்தினுல் படிப்படியாகக் குறைந்துவருகிறதும் சிகிச்சைக்குப் பொருத்தமான உரோகம். ஆனுல் ஆர்த்தவம், சுக்கிலம் இரண்டும் பழுதடையாம லிருக்கவேண்டியது. ரோகியின் ஜெனனக்குறிப்பின் காலகணிதமும் உரோகமுண்டாயிருக்கும்பொழுது சுகயோக பலனைப் பேசுவது நல்லகுணம். (கூ)

ரோகியானவன் சம்பத்துடையவனும், தைரியமுடையவனும், தன்னைப் பராமரிக்கத்தகுந்த நண்பரை யுடையவனும், கொடுக்கிற மருந்தினு லுணடாகின்ற விசேஷமான குணத்தைத் தாங்கி அதை வைத்தியருக்குத் தெரிவிக்கும் குணமுடையவனும் இருப்பவனுக்குச் செய்யும் சிகிச்சை ஜெயமடையும் பலனை யுண்டாக்கிறது. (க0)

சுட்டிய ரோகிக்கு நடத்துகிற வைத்தியம் குணப்படாமல் அர்த்தங்கொள்ளுகிற நியாயம் ரோகப்பூருவரூபத்தில்தோற்றுமல்

அடங்கியிருந்த இலக்ஷணம். அதை வைத்திய ரறியும்பொருட்டு ரோகி வைத்தியருடைய கற்பனைக்கமைந்து, கபடகுணங்களை யொழித்துப் பூர்வகடாட்சமான செயல்களை நினைவுகூர்ந்து இரக்கமுற்று, அவர் கொடுக்கும் மருந்தையும், கற்பிக்கும் பத்தியங்களையும் விசுவாசத்துட னேற்று உண்டு நோயை நீக்கவேண்டியது.

## ரோகிகளுக்குப் பொருத்தமான உத்தமகுணம் நான்கு.

ஞாபகமிருத்தல், குணங்கள் வெளிதோற்றி நடத்தல், (இலக்ஷணமொழுங்காயமைந்திருத்தல்,) தைரியம், வைத்தியருடைய கற்பனைக்குளமைந்திருத்தல் ஆகிய இந்தக் குணங்களைப் பொருந்தியிருக்கிற வுரோகிக்கு நடத்தும் சிகிச்சை எளிதில் வசப்படும். குணங்களிற் சில தோற்றுமலிருந்தாலும் குற்றமில்லை. (கஉ)

## சிகிச்சை எளிதில் வசப்படாத ரோகியின்குணம்

சம்பத்தில்லாதவன், தன்னுடைய சுயநன்மையை விரும்பாதவன், உதவியான மனுஷரைச் சேர்ந்திராதவன், மனத்துயரமுடையவன், துஷ்டகுணமுடையவன், ஆயுளின் முடிவைச் சமீபகாலமாக வமைந்திருப்பவன் வியாதியை இலகுவில் மாற்றிக் கொள்ளமாட்டான். (கங)

குறித்த உரோகிக்கு நடத்துகிற வைத்திய மமையப்பண்ணின பிரகிருதியாலுண்டாகின்ற சரியான குணம் மர்மஸ்தானங்களிறபோய்ப் பந்திக்கிறது. அப்படியானாலும் அந்த உரோகி வைத்தியர் கொடுக்கிற மருந்திலும், கடவுள் வழிபாட்டிலும் நம்பிக்கையுள்ளவனும், தன்னைப் பராமரிக்கத் தகுந்த நண்பரையுடையவனுமிருப்பனேயானால் அவனுக்குச் செய்யும் சிகிச்சையுமுத்தமமான குணமுடையதாயிருக்கின்றது. (கச)

புத்தி சித்தமுடைய வுத்தம ரோகிக்கு ரோக வுற்பத்தி கோவின் கண் தோற்றுகிறபடியால், பிராண வாயுவின் முதன்மையான ஊக்கம் குறைகிறது. அல்லாவிட்டால் சுகத்தைக் கொடுக்கிற சுத்த பாவகனின் சிரேஷ்டமான யத்தனம் ஓதை மூலமாக வுரோக வுற்பத்தி நிலையை யடைந்து அந்த உரோகத்தின் பெருக்கத்தைப் பந்திக்க விடாமற் சிதறப் பண்ணுகிறது. அப்படியே ஆராய்வான பிளாஸ்திரி, பற்று, கிண்டல், கிறல் முதலியு

க்ஷத்திர ஜடராக்கினிச் சிகிச்சைகளாலுண்டான உவத்திரமும் ஓதை பொருட்டடைந்து சுகத்தையும் கொடுக்கிறது. ஆனபடியால் உத்தமமான நான்கு குணங்களு மமைந்த யோக்கிய வுரோகிக்குக் குணங்கள் பிரத்தியக்ஷமானவுடன், வைத்தியன் கோவை யருட்டி ஆதரிக்குங் குணமுடையதும், ஊக்கங் குன்றி யிருந்த பிராண வாயுவின் முயற்சிக்கும், மூட குணமாயிருந்த சுத்த பாவகனின் சொலிப்புக்கும் சம குணத்தை யுண்டாக்கக் கூடிய தகுந்த *ஜைத்திரத்தைப் பிரயோகித்து அந்த "கோ" என்னும் இராச கருவியை உத்தமமான நிலைமை யுடையதாக நடைபெறச் செய்ய வேண்டியது. அப்படி அந்த உவத்திரங்களாலுண்டான ஒழுங்கினம் திருந்தாவிட்டால், அடிபடல், குற்றல், ஆயுதங்களாலறுபடல் முதலாய வேதனையின் காலங்களில், ஸம்வார விகசிதங்களுக்குரிய ஊக்கம் நஷ்டமடையுங் காரணமாய், அந்தக் கருவியின் யதார்த்தமான செயல் மூடத்தன்மையாகிச் சமகுண மில்லாத பலனை யுண்டாக்கி யளிக்கிறது. (*ஜைத்திரம்-அவுஷதம்) (கரு)

## மூர்க்க ரோகி.

புத்தி சித்தமில்லாத மூர்க்க ரோகிகளுக்கு நோயைத் தடுத்தற்குரிய இடம் *மோகவசம், அல்லாவிட்டால்பேதைமை, அல்லாவிட்டால் இருதயத்திற் பேசுகிற யதார்த்தமான கருவி ஸ்தாபணமாகாமலிருக்கிறதாம். வியாதி தோற்றுவிக்கிற குணங்களில் விளங்கு மறிவில்லை. வெளியிற் காணப்படுகிற உபத்திரமான குணங்கள் இயற்கைப் பிணி கோளாறடைந்து பிரகாசிக்கிற தன்மையல்ல. அது இணக்கமான மருந்தின் செய்கையால் சில குணமறியப் படுகிறது. (கசு)

சுட்டிய உரோகிக்கு, ரோகம் மூலாக்கினி காரணமாகப் பிறந்து, அக்கிரபாகத்தைச் சேர்ந்து 1தீர குணமுடையதாகிறது; பின் கோஜாதை காரணமாக ஜடம் அடக்கி வைத்திருந்த அக்கினியின் றன்மையால் ரோகம் இரண்டாய்ப் பிரிந்து பலமுடையதாகிறது. (1தீர-அடக்கப்படாத) (கஎ)

---

* மோகம்-ஞானேந்திரியம் வருந்துந் தன்மை, சோர்வு, தப்பிதமானது.

† ஸ்தாபனம்-தாபித்தல், உறுதிப் படல், கிரமம்.

சுக்கில சுரோணிதங்களினுற்பத்திக்குப் பிரயோசனமாயிருக்கிற பீசங்கள், நாடி சக்கரம், சிருட்டிப்பிலே வேறுபட்ட இலக்ஷணங்களைப் பொருந்திய 2ஏக பீசகி முதலாய அங்குஷ்ட தேகிகளுக்கு மூர்க்க ரோகியிலக்ஷணத்தோடமைத்துக் கூறப்பட்டது. (2ஏகம்-ஒன்று, வித்தியாசமானது.) அங்குஷ்டதேகிகள்-அலியர்.

## பாலருக்கறியப்படும் வியாதி.

பாலருக்கும் பரீக்ஷையிலறியப் படுகிற குணம் ஞானேந்திரியத்தின் நஷ்டம் வருந்துதலுண்டாகிற தன்மை, அது 3அலக்கியமான இலக்ஷணம். ரோக உற்பத்திக்குரிய பிரமாணம் நல்ல குணமுடையது. ரோகமென்னும் பகைவன் சில நியாயத்தின் பொருட்டு அறிவின் கருவியை இதமாக்குகிறதாம். (௧௯)

(3அலக்கியம்-விளக்கமில்லாதது.)

## திரிதோஷங்கள்.

வாதம், பித்தம், சிலேஷ்மம் இவைகள் கோளாறடைந்து உரோகத்தை உண்டாக்கிற நிலைமையில் தோஷங்கள் என்றும், கோளாறடையாத குணம் தேகத்தைப் போஷித்து விகாரமடையாமலிருக்கும் நிலைமையில் தாதுக்களென்றும் பெயர்பெறும்.

## பிரகிருதி.

வாதப் பிரகிருதி, பித்தப் பிரகிருதி, சிலேஷ்மப் பிரகிருதி, இவைகள் ஸ்திரி புருஷர்களுக்கு, சுரோணிதத்திலும், சுக்கிலத்திலும் சேர்ந்த தன்மை; கருப்ப வுற்பத்திகாலத்தில், வாத பித்த சிலேஷ்மங்கள் தங்கடங்களுக்குரிய கிரமமான மாத்திரையின்படி சேர்ந்து விரோதமில்லாமல் இணங்கியிருந்தால் உத்தமப் பிரகிருதியென்றும், அவைகள் இரட்டித்த தன்மை யீனப் பிரகிருதி யென்றும், மத்திமப் பிரகிருதி யென்றும் சொல்லப்படும். இவைகளினிலக்ஷணங்களை விரிந்த நூல்களிலறிந்து கொள்க. (௨௧)

## ரோக பேதம் இரண்டு.

அவை: சகஜம், ஆகந்துஜம்.

ரோகம் பெரும்பான்மை சிலருக்கு இயற்கையானது, சிலருக்கு செயற்கையானது; சிலருக்கு மனசைப் பற்றியும் சிலருக்கு ஜீவசம்பந்தமாயும் தேகமனுபவித்து விடுகிறது. (௨௨)

## திரிவித வியாதி.

கர்மஜம், தோஷஜம், கர்மதோஷஜம்.

அவைகளில்; கர்மஜம் என்பது, பூருவச் சென்ம பாச சம்பந்தமான செயல் பலனையுண்டாக்கி யுளிக்கிறது: அது கருப்போற்பத்தியில் * துஷ்ட கர்மமும் பாசத்தோடொற்றுமையுடையதாகிறபடியால் நோயுண்டானதாம். (* துஷ்ட-தோஷமடைந்த) ( )

தோஷஜம் என்பது, வாதாதி தோஷங்களின் எதிரிடையால் கோபங்கொண்ட குணம் போய்க் சேர்நிமேஷத்தை வியாபிக்க உரோகப்பலனையுண்டாக்கி விடுகிறது. (௨௪)

கர்மதோஷஜம், கர்மமும் தோஷங்களுக்கும் சேர்ந்து தனித்தனியாகாமற் பந்திக்கிற செயலாற் பிறப்பது. இம்மூன்று பேதமான வியாதிகளுக்கும் நடத்துகிற சிகிச்சையின் சத்வமான குணம் கோநிமேஷத்தை யுடுருவ, உண்டாகிற கடுமையான குணங்களில்லாமலழிகிறது. (௨௫)

வியாதி மேலும் அநேகமாய்ப் பிறப்பது ஏழு விதம்; அவை: ஸ்வபாவஜம், தோஷஜம், ஸகஜம், அபசாரஜம், ஆகந்துஜம், காலஜம், அபிசாபஜம்.

1. ஸ்வபாவஜரோகம் என்பது, தேச சஞ்சார வித்தியாசங்களினாலும், தேகம் பருவங்களை மாறி எடுக்கும் பொழுது (தோஷங்கள்) விகாரமடைந்த வித்தியாசத்தினாலும், மிருத்தை முன்னிட்டிருக்கிற காரணத்தினாலும் தோற்றுகிற சுகவீனம் உத்தமமான இயற்கைப் பிணியென்று விளங்கும். (௨௬)

2. தோஷஜம் என்பது, தோஷங்கள் பலமடைந்துண்டாகின்ற வியாதி. அது மித்தையுணவுகளின் சத்துப் பிறப்பித்த தன்மையிரண்டு விதம்; ஒன்று ஆமாசயத்தையிடம் பெற்றுக் கிளம்புகிற குணம், மற்றது பக்குவாசயத்திற்றங்கி யுண்டாகிறது; இந்த இரண்டு தன்மையுமல்லாமல் மனத் துயரத்தால் இடைவிடாமற்

சிந்திக்க மேலதிகமான குணங்கள் சாரீரத்தைப் பற்றியும், மனசைப் பற்றியும் கிளம்புகின்றது. (உஎ)

## மேற்படி, பலமடைந்த தோஷங்கள் விருத்தியாகிற வியாதியின் தன்மை.

மித்யாகாரத்தைப் புசித்த செயலினாலுண்டான குணம்கோசிமேஷத்தை யுடுருவ்கிறது; தோஷம் காபிஸ்தானம் காரணமாக வியாதியைப் பிறப்பிக்கிறது; அதில் இரட்டித்த தன்மை ஆமாசயத்தில் வியாபிக்க அப்பொழுது தோற்றிய குணம் கோசிமேஷத்தை யுடுருவுகிறது, பின் பக்குவாசயத்தை வியாபிக்க அப்பொழுதுண்டான குணமும் கோசிமேஷத்தை யுடுருவுகிறது, கோவின் ப்ரதீதமான கிரிகையால் சிபேடத்தை மறைத்திருந்த குணங்கள் பிரிந்து உறுப்புகளுக்குபயோக மாகிறது. இப்படியே தோஷங்கள் பலமடைந்து கர்ப்பிக்கிற அதிகாரம் நடக்கிறது. தோஷம் இருதயத்திற் குடிகொண்டால் அந்த ரோகம்விட்டுநீங்குகிற குணம் மனசுக்குத் துயரத்தை யுண்டாக்க, ரோகி மனவியசனத்தோடு சிந்திக்க அப்பொழுது உண்டாகிற குணம் மற்றும் மர்மஸ்தானங்களைச் சேர யத்தனமாகிறது. தோஷங்கள் இரட்டித்தன்மை ஆகந்துக ரோகம். (உஅ)

3. ஸகஜரோகம்—கருப்போற்பத்தி காலத்தில் தாய் தந்தையரினுதிரமும் வீரியமும் தோஷமடைய வந்தக்காலத்தில் கோவைப் பிரத்தியக்ஷமாக்கின ரோகம் சகஜ வியாதி. (உ௯)

## மேற்படி கருப்போற்பத்தியிற் பலமடைந்துண்டாகிற காரணம்.

அது: பிதா மாதாவின் சேர்க்கையில் சுகங்கொடாத குறை, (ஆர்த்தவமாவது சுக்கிலமாவது நல்ல குணத்தைப் பெற்றிராத தன்மை) கருப்போற்பத்தி காலத்தில் தாய்மார் ஆகாத வஸ்துக்களை யுண்பதினாலும், அசௌச சுத்திக் குறைவினாலும், முதல் நான்கு மாதமும் இந்திரிய விச்சையைக் கர்ப்பிக்கிற அகிதமான செயலினாலும், மூகை முதலாய ஐந்து குணங்களில் ஏதுமொன்றோ பஞ்சேந்திரியங்களை யுடுருவ, அந்தக் குணங்களுக்கேற்ற பிள்ளை, ஊமை, செவிடு, புணபுணம், குறள் முதலிய வடிவமுடைமைக்கும்

சரும கிலம், பிரமேகம், க்ஷயம் முதலிய வியாதிகளுக்கும் நியாயமானது. (௯௦)

4. அபசாரஜம்—சிலருக்கு காலங்கடந்த இரையெடுப்பு பக்குவமாகிறதில்லை. அவருக்கு நாபிஸ்தானத்தினின்று சஞ்சரிக்கிற தோஷம், வமனம், அலஜம் முதலிய வருத்தங்களைத் தூண்டி விடுகிறது. உரோகத்தினுற்பத்தமும் பிரகாசிக்கிறதில்லை; தீவிர கெதியான வாய்வு தகுதியற்றதாகிறது. வியாதியின் கூறுகளைத் தெரிவிக்கும் முதல் நிலைத்திருக்கிறதில்லையாம். (௯௧)

5. ஆகந்துஜம்—உதராக்கினி, வாய்வு முதலாய வற்றின் ஒழுங்கீனமான குணத்தினாலும், பூதப் பிரேதங்களின் குறைபாட்டினாலும் உண்டாகி யந்தக் குணம் கோநிமேஷத்தை யுருவுகிறது, தோஷம் நாபிஸ்தானத்திற் சேர்ந்து உண்டாக்கிறது (௯௨)

6. காலஜம்—அறுவகை இருதுகால பேதங்களில் மனுஷருக்குண்டாகும் வித்தியாசங்களாற் பிறப்பது. (௯௩)

7. அபிராபஜம்—இருஷிகள், தேவதை, முதலாயினோரை நிந்தை பண்ணின சாபத்தாற் பிறப்பது. (௯௪)

## ரோக பேதங்களுக்குச் செய்யும் சாந்தியான சிகிச்சை.

கர்மங்கள் முதிர்ந்துண்டான உரோகங்களுக்குச் சிவ பூசை முதலாய உபசாந்திகளும், தோஷங்கள் பலமடைந்துண்டாகிற வியாதிகளுக்கு அவுஷத வகைகளும் செய்து தடுக்க வேண்டியது. இவைகள் ஒன்றுடனொன்று சேர்ந்து பந்தித்த குணத்தினாலும், சோரத தோஷம் பந்தித்த குணத்தினாலும் இருவகையான சிகிச்சைகளையும் செய்து நிவிர்த்தியாக்க வேண்டியது. (௯௫)

## வைத்தியன் ரோகநிலைமைகளைத் தன் அறிவுக் கருவிகளால் குறிப்பிட்டு அவைகளை நிச்சயிக்கும் முறைமை மூன்று.

தர்சம், ஸ்பர்சம், பிரட்ணைசம். அவற்றுள்: தர்சம் என்பது தேகியின் நிலைமையைக் கண்ணினாற் பார்த்தறிந்து நிச்சயிப்பது;

ஸ்பர்சம் என்பது சிதோஷ்ண மத்திமத் தன்மைகளைக் கையினுற் ெருட்டறிவது, தாதோட்டத்தின் வித்தியாசங்களும் பிறவும்; பிரட்ணைசம் என்பது மூன்று வழியாக நிச்சயிக்கப் படுகிறது; ஒன்று ரோகியை வாயினுற் கேட்டறிதல், இன்னென்று பிரஸ்ர கருவியாற் சுவைத்தறிதல், மற்றது ரோகமுற்ற உறுப்புகளில் உரு பேலாதபடி சோதனைக் கருவி மூலமாயக் காதினுற்கேட்டறிதல், இன்னுமொன்று பரிமழ பேதங்களை மணத்தினுலறிதல், அது ஈனகந்தமோ, மத்திமகந்தமோ, உத்தமகந்தமோ என்பது. கூகூ)

ரோகங்களைச் சோதனை பண்ணி அவற்றின் முடிபுகளை ஞாபகத்தில் வைத்து வைத்தியம் செய்யும் வழிவகை ஐந்து. அதற்கு பஞ்சநிதானம் என்று பெயர்.

## பஞ்சநிதானம்.

எது, பூர்வரூபம், ரூபம், உபசயம், ஸம்ப்ராப்தி என்பன. ( )

அவற்றுள்: எது என்பது ரோகம் உற்பத்தியாகிற காரணம்; ரோகங்கள் வினை விகற்பமாயும் தோஷங்கள் விகற்பமாயும், வேறு வித்தியாசங்களினுலு முண்டாகின்ற முதற்காரணங்களை யறிதல்.

நிதானம் என்பது:—ரோக காரணங்களைத் தேர்ந்தறிந்து நிச்சயித்தல்; அதாவது—ரோகம் உண்டாவதற்கு முதற்காரணம் உண்டான இலக்ஷணத்திலிருந்து போன குணம், அப்பொழுது நடக்கிற குணம், மேல்வரப் போகிற குணம் ஆகிய இவைகளையும் யூகித்தறிந்து சரியான நிலைமையில் வைத்து வைத்தியம் செய் வது.

## பூர்வரூபம்.

ரோக பேதங்களை விளக்கும் தோஷங்கள் குறி கொள்ளுகிற சமுகத்திலில்லாத வியாதியானது தன்வயமிதம் பண்ணுகிற இலக்ஷணம் தோற்றமில்லாத அந்த வியாதியின் (சேர்க்கைபிரி வில்) அனுத்துவமான நிலைமை: அதற்கு இனமான எது எதுவோ அது பற்றிப் பராக் ரூபத்தைப் பிரித்தறிய வேண்டி யது.

(சேர்க்கை பிரிவில் என்பது தொந்தம் நிர்த்தொந்தம் இரண் டையும் குறித்தது; சிலவேளை தொந்தத்தில் எதிர்த்தெதிர்த்து

விடுகிற குணங்கள் அருபமான அணுத்துவ நிலைமையிலிருக்கிறபடியால் * அருத்தாபத்தமான பொருளை வேண்டியும் நேரிடுகிறது.

* அருத்தாபத்தம் என்பது பயனை மோசமாக விளங்கிக்கொள்வது; இங்கே ஒரு தோஷம் பயனடைய விருக்கிற ரோகத்தை இன்னொரு தோஷத்திற்கு மாற்றிச் சொல்வது.

மேற்படி பூர்வரூபம் குறி கொள்ளுகிற சம்பவங்களிற் சில கூறப்படுகிறது.

குறிக்கப்படாத ஒருறுப்பிலுண்டாகி மனசை வியாகுலப் படுத்தி நாபிஸ்தானத்திற் குறி கொள்ளுகிற வியாதியைக் குறிக்கப்பட்ட தோஷங்களில் யாதோ, ஆஸ்டம் முதலான குணங்களில் எவற்றையோ பிரத்தியக்ஷமாகாத "கோ" வுடன் அனேக வழியாய்ப் புலரச் செய்கின்றது; அந்தப் புலர்ச்சியைப் பிரயோகிப் பித்த தோஷம், கோளாறடைந்தவைகளில் வாத தோஷம் மேற்கொண்டு கற்பித்தால், அந்த வியாதி பிரத்தியக்ஷமாக்கின இலக்ஷணம் § அஸம்பவமானது. "கோ"வின் கண் புலர்ச்சியான குணம் இருதய கோசத்திலடங்கியிருந்த உரோககரம். அது தோஷத்தின் உக்கிரமான பார்வையால் சிரவத்தின் மூலமாகப் பிரத்தியக்ஷமானது. இந்த உரோககரம் அதிக்கிரமமாகிற அமயத்தில் தோற்றும் பயன், வாதம், பித்தம், கபம் என்பனவாகிய மூன்று தோஷங்களின் வகுப்புக்குமுரிய வியாதியின் சென்னியைக் கோகிமேஷத்திற் றெளிக்கிறதும் ஆறுகிறதுமாக நடைபெறும். இந்தக் காரணத்தினாலும், அந்த வுரோகத்தி னுக்கிரமான அழற்சி கோவுடன் காரணமான தன்மையினாலும், சுரத்தை முதலாகவுடைய வியாதிகட்கமைந்திருக்கிற இலக்ஷணம் பூர்வ ரூபத்தில் தோற்றாத நியாயம். இது பூர்வ ரூபம் குறிகொள்ளுகிற ஒரு பகுதி. (௱௧)

முதல் ஏகசாதியான உற்பத்தி, பின்பு இருகூறாய்ப் பிரிந்து விளங்கும் சாமான்ய பராக்ரூபம்; அது நாபிஸ்தானத்திற் கடினப்பட்டுத் தோற்றுகிற குணம், ஊர்த்துவாங்கத்தையோ அல்லது அதோ அங்கத்தையோ எதிர்தாக்கிறதற்குக் குறித்த தோஷம் மத்திய ஸ்தானத்தில் நிற்கிறது. அப்பொழுது தூஷிக்கப் பட்ட தாது தோற்றித் தூலநாடி மார்க்கமாகத் தெளிக்கப் பிரத்தியக்ஷமான நோநிமேஷம், அல்லது கோ வழங்கும் துவாரம், நெருக்கப்

படுகிறது அல்லது மறைகிறது; அப்போழ்து சுரத்தை முதலாக வுடைய உரோகங்களின் மறைந்திருந்த பிரதியிலக்ஷணமெல்லாம் விளங்கக் கூடியதாய் வெளிகாண்கிறது. இதுவும் பூர்வ ரூபம் குறிகொள்ளுகிற ஒரு பகுதி.

உத்தபஸ்நிகளுக்குப் பூர்வ ரூபத்தில் சுரத்தை முதலாக வுடைய வியாதிகளுண்டாகும் வேளையில் ப்ரதீத நிலைமையையு டைய "கோ" நிலை தளப்பியமைவுற்றிருக்கிறது. வாதாதி தோஷங்களின் குறி கோவின்கண் புலர்ச்சியடைகிறதில்லை; சுரத் தில் ஆயாசமுற்ற குணத்தை மனம் வெறுக்கத் தேக மனுபவிக் கிறதினால் தேக வர்ணம் மாறுதலடைகிறது. சேமம் கிரமமில்லாத சின்னமுடைய ஏக அம்சைக்கு ரோக ஆரம்ப தோஷம் அதிக மான குணங்களைச் சங்கற்பித்து விடுகிறது; அந்தக் குணம் யோனிமார்க்கத்தி லதிகவேதனையைக் கொடுக்கிறதாம். இதை விஸிட்ட பராக்ருப மென்று சொல்லப்படும். மூன்று தோஷங்க ளும் சேர்ந்து இருந்த ஸ்தானத்தி னிற்கும் போழ்து, அவைக ளுள் வாத தோஷம் பிறப்பிக்கிற குணம் சுவாசத்தை யுண்டாக் கிற தன்மை. சில வேளை சுர ரோகத்திலும் இலக்ஷணம் பூரணப் படாத தன்மை வாத தோஷத்தின் அங்கக் குறைபாடான இலக்ஷ ணத்தை அபகரித்திருந்த தோஷம் கோ சூழ்ச்சியுற்றிருக்கிற யதாஸ்தானத்தினின்று சிக்ஷை பண்ணுகிற நியாயத்தினால் அந்த இலக்ஷணம் தேய்ந்த வடிவுடையதாகத் தோற்றுகிறது. அந்த வாதத்தின் ஏக அம்சத்தினொரு கூறுபோய்க் களங்கமுறப் பண்ணின ஞானேந்திரிய காம்புத் துவாரத்தில் ஓர் சுழற்சியை யுடையதாகிறது. இந்த விஸிட்ட பூர்வ ரூபம் சிலவேளை தேகச் செயலாக, ரூப நிதானத்தில் விளக்குவதாகிய இலக்ஷணத்தை ஒரு பகுதி முதற் குறியாக எடுக்கிறது; அதனால் பூர்வ ரூபத்தில் வெளி தோற்றுகிற குணங்கள் தோறாமல் சம அறிவு ஒருசாரியை யின் றன்மையை யுடையதாகிறது. சிலவேளை பூர்வ ரூபம் குறி கொள்ளுகிற இலக்ஷணம் விளங்காத நியாயம் யாதெனின், நாபி ஸ்தானத்தினின்ற தோஷம் உண்டாக்கின பிரகிருதியில் தொக் தப் பட்ட முதற் குணம் போய்க் கோவைப் பிரவேசித்த காரணம் கோவும் ஒரு சாரியையின் ஊக்கத்தை யெடுக்கிறதானபடியாற் றான். இதுவும் பூருவ ரூபங் குறி கொள்ளுகிற ஒரு பகுதி.

இலக்ஷணம் விளக்கும் அறிவு—அந்தக் கேவலமான வியாதிகளாரம்பமாகிற தருணம் தோஷங்கள் கலப்பில்லாத ஓர் தெளிந்த வஸ்துவின் தோற்றுத பிரதி வடிவமான சூக்ஷ்மரூபமாகிற நிலைமையில், வாதம் சங்கற்பிக்கிற திருஷ்டாந்தம், இரக்ஷிக்கப்பட்டது இலக்ஷணத்தை விளக்கும் அறிவுடைய சமமான உற்பத்தி. அல்லாதது சமமில்லாத உற்பத்தி. இது—ஒரு பகுதி.

ரோக ஆரம்பம், சுக்கிலாசயம், சுரோணிதாசயங்களை ஆதாரமாக உற்பத்தியானால், அந்தத் தானங்களில் தோஷங்களின் கோளாறு நேரிடாமலிருந்தால், அந்த வியாதி சாத்மயமாகிற இலக்ஷணங்களைப் பிறப்பிக்கும். மற்றய மர்மங்களில் வியாதி சம்பவித்தால் தோஷத்தின் கோளாறு நேரிட்டாலும், சிலசமையம் அவுஷத உபயோக முறைமையினால் சாத்மயமாகிறதுமுண்டு. இதுவுமொரு பகுதி. (௩௩)

பூருவ ரூபத்தில் விகாரப்பட்ட சகல அம்சங்களுக்கு பூரிய செயல் வியாதியைப் பிரகாசிக்கச் செய்கிறது; தீவிர வேகமான வாயுவின் செயலால் ரோகம் விபரீதப்பட்டு விடுகிற குணங்கள் பிரகாசியாமலந்த உரோகத்தின் இலக்ஷணம் அடங்கியிருப்பது. இதுவும்—ஒரு பகுதி.

## பொதுக் குறிப்பு.

(பொதுவாய், உரோக முற்பத்தியாகிற உறுப்புக்கு அன்னிய ஸ்தானமாகக் குறிப்பிட்ட தோஷம் நிற்க, "கோ" சங்கற்பித்து விடுகிற வேகமான கிரிகையால் அந்த ரோகத்தின் குணம் தோஷத்தைப் பந்திக்க, உபயோகிக்கிற மருந்தின் சத்வ குணத்தாலந்தப் பந்திப்புப் பிரிந்து தனிமையாகிற அம்சங்களை "கோ" உருபாக்கி விட அந்த வியாதி காண்பிக்கிற இலக்ஷணம் சுத்தயானது.)

## ரூபம்.

ரூப நிதானம் என்பது—ரோக வியாபக ஏது.

பூருவரூபத்தில் குறிகாட்டின இலக்ஷணம் தோற்றும் பருவமுடையது. [1]பராக் ரூபம்; இதில் பிரத்தியக்ஷமான குணங்கள் ரோகிகளின் தேகத்தில் வியாபித்து அறியக்கூடியதாய் வெளிகண்டிருப்பது ரூபம், (ரூபம் என்பது இலக்ஷணம். (௩௪)

[1] பராக் என்பது-ரோகம் தன் இலக்ஷணத்தை இப்பவோ பின்னையோ வெளிகாட்டுவேனென்றிருக்குந் தருணம்.

## உபசயம்.

விபரீதப்பட்ட உரோகங்களுக்கும், விபரீதப்படாத ரோகங்களுக்கும் தக்கவாறு வைத்தியம் பண்ணி அவைகளைச் சாத்தியமான நிலைக்குக் கொண்டு வருதல். இதில் சுகப்படாதது மர்மஸ்தானங்களிற் போய் விபரீதப்பட்டால், அதை அநுபசயம், என்று சொல்லப்படும்—அசாத்தியமானது. (சுடு)

## ஸம்ப்ராப்தி.

இயற்கையிற் கோளாறடைந்த வியாதி எவ்வாறு நிலைத்திருக்கிறதோ, அது போலவே தோஷங்கள் கோளாறடைந் துண்டான உரோகமும் நிலைத்திருக்கிறது. அவைகளை நிவிர்த்தி செய்யும் வழிவகைகளை நிதானஞ் செய்வது.

நிலைத்திருக்கிறது என்பது-அங்கக்குறைபாடான தோஷமுண்டாக்கினஉரோகம், பலகாரணங்களினாலும் துண்டித்து,ஸ்தானத்தை விட்டுக் கிழம்ப வலிமையில்லாமல் ஊர்ந்துதிரிகிறது, இப்படியலைந்து திரிகிற தோஷம் தான் போயடைந்த தானத்தில் நடைபெறுகிற குணங்களைத் தன் வயமாக்கிக் கற்பிக்கிற காரணத்தினாற் றேகம் பலவிதமான வேற்றுமையை யடைந்து, நோயும் இயற்கைப் பிணிக்குச் சமமாய் வருகிறதாம்.

நிதானஞ்செய்வது-ஐயந்தெளிந்து நிச்சயிப்பது.

பலக்ஷயமான தோஷத்தாலோ அல்லது நெறி கெட்டு அதிக்கிரமித்த தோஷத்தாலோ உண்டான வியாதிகளை அநுமானிக்கிறது ஒரு பகுதி; அம்சக் குறைபாடாய்த் துண்டிக்கிற, கோபங்கொண்ட தோஷத்தாலோ உண்டான வியாதிகளை அநுமானிக்கிறது ஒரு பகுதி; அம்சக் குறைவாய்த் துண்டித்துக் கோபங்கொண்ட தோஷம் சேர்ந்திருக்கிற ஸ்தானத்தினின்றும் விடுகிற இரட்டித்த குணம், நாடி சக்கரத்திற் சஞ்சரிக்கிற காரணத்தினால், தேக வர்னம் மாறுதலடைகிறது, உபரங்கள் நீசத தன்மையாகிறது, பிரதி §கூலமான குணங்கள் சஞ்சரிக்கிற துவாரம் புரோட்சிக்கிற ஆமயத்தைப் பிரத்தியக்ஷமாக்கின நாடியின் பூர்வ அந்தங்கள் வெளிப்படுத்துகிற காரணங்களையும், ஏது முதல் உபசயமீறாகக் கூறிய காரணங்களையும்; நாடி தர்சனத்தோடு

கலந்து பரிக்ஷித்து நிதானஞ் செய்வது. (கூலம்-நீசத்தன்மை யான குணங்களின் தொகுதி) (சகூ)

இந்தச் சம்ப்ராப்தி நிதானம் தனித்தனி ஐந்து இலக்ஷணங் களை விரிவாய்க் கூறுகின்றது; அவைகளை இங்கே கூறப்படவில்லை. அந்த ஐவகை இலக்கணங்களையுங் கொண்டே இவைகளை நிச்ச யிக்க வேண்டியது. ஆனால் அஷ்டாங்க இருதயம் அவைகளைக் கூறியிருக்கிறது.

## சாத்திய விதங்கள்.

## சாத்தியம், யாப்பியம், அசாத்தியம் என்பன.

அவற்றுள்:—சாத்தியம் இரண்டு விதம், ஒன்று சுக சாத்தி யம் இலகுவில் மாறக் கூடியது; மற்றது கஷ்ட சாத்தியம் சிகிச் சைப் பிரயோகங்களால் சுகப்படுவது. யாப்பியம் என்பது—சுகப் படாத வருத்தமாயினும் மருந்தின் சரியான செய்கையால் நாட் சென்றும் சுகத்தைக் கொடுப்பது. யாப்பிய ரோகத்தில், ரோக வியாபக ஏதுமர்மங்களி லறியப்பட்டாலும், அந்தக் குணங்கள் கோநிமேடத்தைத் தாக்காதிருந்தால் அது யோய்க்கிய வியாதி. அசாத்தியம் என்பது சுகப்படாதது. (சஎ)

இதில் கூறிய பஞ்ச நிதானம் முற்றிற்று

---

## நக்ஷத்திரபாத பலன்.

அச்சுவினி முதலாங்காலிலுண்டான ரோகம் ஒன்பது இர வில் விடுகிறது; இரண்டாம்பாதம் மிருத்து காரணமாகிறது; மூன்றும் பாதம் ஏழுதினத்தில்விடுகிறது; நாலாங்காலில், குணங் களை மாறி எடுக்கிற ரோகம் வேதனைப்படுத்தி இருபத்தொரு நாளில் மாறுகிறது. (சஅ)

பரணி முதற்காலிலுண்டானரோகம் பதினொரு நாளைக்குக் கடுமைப்படுத்தி விடுகிறது; இரண்டாங்கால் நாற்பது நாளைக் குக் குணங்களை மாற்றி எடுக்கிறது; மூன்றாங்காலில் மிருத்து பயம்; நாலாங்காலி லுண்டான வருத்தம் வித்தியாசமான குணங்களைக் காட்டிப் பத்துத் தினத்தில் அல்லது பதினொராம் நாளில் விட்டுநீங்குகிறது. (சகூ)

கார்த்திகை முதற்காலில் பித்தமுற்பத்தி காரணமான சுரம் கஷ்டப் படுத்திப் பத்து நாளில் விடுகிறது; இரண்டாம் பாதமும் சோர்வு மயக்கம் முதலிய குணங்களைக் காட்டிப் பத்துத் தினத்தில் விடுகிறது; மூன்றாங்கால் ஐந்து தினத்தில் விடுகிறது. (௫0)

ரோகிணி முதலாம் பாதம் ஒன்பது இரவில் வருத்தம் நீங்குகிறது; இரண்டாம் பாதம் பதினெட்டு நாளில் மாறும்; மூன்றாங்கால் பத்திரவுக்கு வருத்துகிறது. (௫௧)

மிருகசிரிடம் முதற்காலிலுண்டான உரோகம் ஏழுநாளைக்கு வருத்தி விடுகிறது; இரண்டாம் பாதம் பன்னிரண்டு நாளில் விடுகிறது; மூன்றாங்காலானால் இருபத்தைந்து நாளில் விடுகிறது.

ஆதிரை பிரதம சரணம் பதினைந்து நாள்; இரண்டாம் பாதம் பன்னிரண்டு நாள்; மூன்றாம் பாதத்திலுண்டான உரோகம் மிருத்து சம்பவமாகிறது. (௫௨)

புனர்பூசம் முதற்காலிலுண்டான சுரம் பதினைந்து நாளில் விட்டு மாறுகிறது; இரண்டாங்கால் ஏழுநாளிலும்; மூன்றாங்கால் இருபத்தைந்து நாளிலும் விட்டு மாறுகிறது. (௫௩)

பூசம் முதற்கால்: ஏழு நாளையிலும், இரண்டாங்கால் இருபது நாளையிலும், மூன்றாங்கால் இருபத்தொரு நாளையிலும்: பீடை விடப்படுகிறது. (௫௪)

ஆயிலியம் முதற்கால் மூன்று மாதத்தில் விடும், மூன்றுமாதத்தில் விடாதிருந்தால் ரோகம் கடுமைப் படுத்துகிறது; இரண்டாங்காலும் மூன்றாங்காலும் மிருத்து சம்பவமாகிறது. (௫௫)

மகம் முதற்காலிலுண்டான ருஜம் ஏழு இரவுக்கு வருத்தி விடுகிறது; இரண்டாங்கால் இருபத்தேழுநாளிலும், மூன்றாங்கால் முப்பது தினத்திலும் விடுகிறது. (ருஜம்-வருத்தம்) (௫௬)

பூரம் முதற்காலிலுண்டான வருத்தம் ஐந்திரவில் விடப்படுகிறது; இரண்டாம் பாதம் பன்னிரண்டு தினத்திலும், மூன்றும் பாதம் ஒரு மாதத்திலும், ரோகி அவஸ்தைப்பட்டு இறந்து விடுவான். (௫௭)

உத்தரம் முதற்கால் பதினாறு நாளையிலும், இரண்டாங்கால் எழு இரவிலும், மூன்றாங்கால் ஒன்பது பகலிலும் நோய் விட்டு மாறுகிறது. (ரு அ)

அத்தம் முதற்கால் ஏழு இரவுக்குக் கடுமைப்படுத்தி விடுகிறது; இரண்டாங்கால் நாலு நாளிலும், மூன்றாங்கால் ஐந்து தினத்திலும் கஷ்டமானபீடை விட்டு மாறுகிறது. (ருகூ)

சித்திரை முதற்காலிலுண்டான உரோகத்தினுபத்திரவம் கோகிமேஷத்தைப் பிரமாணத்திற்கு மிஞ்சி மலரச்செய்தால் அது சிங்கநோக்குக்கொப்பாய் வருகிறதாம், அந்த உரோகத்தை யடைந்தவனுக்கு மிருத்துக் கோவைப் பந்திக்கச் செய்து மரணத்தை யுண்டாக்கிறது: இரண்டாங்கால் மூன்றுமாதத்திலும், மூன்றாங்கால் பதின்மூன்று தினத்திலும் ரோகம் விட்டு நீங்குகிறது. (சூ0)

சுவாதி முதற்கால் இருபத்தேழு நாளில் விடுகிறது; இரண்டாம் பாதம் மூன்றாம் பாதங்களிலுண்டான உரோகங்களுக்கு மிருத்து *வீஸதினத்திலுண்டாகிறது. (சூக)

விசாகம் முதற்காலிலுண்டான வியாதி நாற்பத்தெட்டுத் தினத்தில் விட்டு மாறுகிறது; இரண்டாங்கால் ஏக தினத்தில் அல்லது மூன்று நாளில் சுகத்தைக் கொடுக்கிறது; மூன்றாங்கால் பன்னிரண்டு நாளில் மாறுகிறது. (சூஉ)

அனுஷம் முதற்காலிலுண்டான உரோகம் எழுநாளைக்கிழுக்கிறது: இரண்டாங்கால் பதினைந்து தினத்திலும், மூன்றாங்கால் அறுபத்துநாலு தினத்திலும் ரோகம் விடப்படும். (சூங)

கேட்டை முதற்கால் மூன்று மாதத்தில் விடுகிறது; இரண்டாங்காலும் மூன்றாங்காலும் பதினாறு நாளில் மரணத்தை யுண்டாக்கிறது. (சூச)

மூலம் முதலாம், இரண்டாம், மூன்றாம் பாதங்களிலுண்டான உரோகம் பதினைந்து நாள் வரையும் வருத்தி விடுகிறது.

*வீஸதினம் என்பதற்குச் சரியான பொருள் கிடைக்கவில்லை,

பூராடம் முதற்காலுண்டான உரோகம் மூன்று மாதத்தில் விட்டு மாறுகிறது; இரண்டாம் பாதம் பதினாறு நாளையும், மூன்ாம் பாதம் மிருத்து காரணத்தையும் கூறுகிறது. (௬௬)

உத்தராடம் முதற்காலினுண்டான உரோகம் பதினைந்து நாளிலழிகிறது: இரண்டாங்கால் பன்னிரண்டு தினமும்; மூன்றாங் காலினுண்டான உரோகம் இருபது நாளைக்கு விட்டு விட்டுக் குணத்தைக்காட்டி யில்லாமலழிகிறது. (௬௭)

திருவோணம் முதற்கால் எழு தினத்திலும், இரணடாங்கால் இருபது தினத்திலும், மூன்றாங்கால் பதினாறு தினத்திலும் விடும். (௬௮)

அவிட்டம் முதலாங்கால் ரோகம் இருபது நாளில் விட்டுமாறு கிறது; இரண்டாம் பாதம் அறுபது நாள் வரையும், மூன்றாம் பாதம் பதினாறு நாள் வரையும் நின்று மாறுகிறது. (௬௯)

சதயம் முதற்காலினுண்டான வியாதி ஒன்றரை மாதத்திற்கு அதிக துயரத்தைக் கொடுக்கிறது; இரண்டாங்கால் ஆறுமாதத் திலும்; மூன்றாங்கால் பதினாறு நாளிலும் விடுகிறது. (௭0)

பூரட்டாதி முதலாங்காலிலும், இரண்டாங்காலிலும், மூன் றாங்காலிலு முண்டான உரோகம் மரணம். (௭௧)

உத்தரட்டாதி முதலாங்காலுக்குப் பதினாறு நாளில் பீடை விட்டு மாறுகிறது; இரண்டாங்கால் இருபத்தெட்டுநாளைக்கு நோய் கடுமைப் படுத்தி விடுகிறது; மூன்றாங்கால் பதினைந்துநா ளில் விடும். (௭௨)

ரேவதி முதலாங்காலினுண்டான உரோகம் எட்டு நாளில் மாறுகிறது; இரண்டாங்காலினுண்டான உரோகம் ஒன்றரை நாளில் விடப்படுகின்றது; மூன்றாங்காலி னுண்டானது பத்து நாளில் விடும். (௭௩)

## வாரயோகபலன்.

இரவி வாரத்தில் மகநக்ஷத்திரமும், சோமவாரத்தில் விசா கமும், மங்களவாரத்தில் திருவாதிரையும், புதவாரத்தில் மூலமும், குருவாரத்தில் கார்த்திகையும், சுக்கிரவாரத்தில்

ரோகிணியும், சனிவாரத்தில் அத்தநக்ஷத்திரமும் சேர்ந்து பலனைக் கொடுக்கிற காலத்தில் உண்டாகும் வருத்தம் சுகமடையாதது. அப்படியிருந்தாலும் புண்ணியயோகத்தினால் சந்தோஷமுண்டாகின்றது. (௭௪)

ஞாயிற்றுக்கிழமையில் அத்த நக்ஷத்திரமும், திங்கட்கிழமையில் மிருகசீரிஷமும், செவ்வாய்க்கிழமையில் அச்சுவினியும், புதன்கிழமையில் அனுஷமும், வியாழக்கிழமையில் பூசமும், வெள்ளிக்கிழமையில் இரேவதியும், சனிக்கிழமையில் உரோகிணி நக்ஷத்திரமும் கூடி நடக்கிற காலங்களில் மனுஷருக்கு ஜ்வராதி உரோகங்களுண்டானால் மாறும். (௭௫)

## அசாத்திய நக்ஷத்திரங்கள்.

மகம், பரணி, அத்தம், மூலம், ஆகிய இந்த நக்ஷத்திரங்களில் பிடிக்கப்பட்ட ரோகியை மிருத்துப் பழுதாக்கினது. ( )

## சாத்திய நக்ஷத்திரம்.

அச்சுவினி, ரோகிணி, பூசம், மிருகசீரிடம், கேட்டை, புனர்பூசம், ஆகிய இந்த நக்ஷத்திரங்களிலுண்டாகிற சுரம் முதலாய வருத்தங்கள் மாறுந் தகைமையுடையன. (௭௭)

## கஷ்டசாத்திய நக்ஷத்திரம்.

பூரம், பூராடம், பூரட்டாதி, சுவாதி, சித்திரை, உத்தரம், உத்தராடம், உத்திரட்டாதி, திருவோணம், அவிட்டம், மூலம், விசாகம், கார்த்திகை, ஆயிலியம், அனுஷம், கேட்டை, ஆகிய இந்த நக்ஷத்திரங்களில் நோயுண்டானால், அது கடுமைப்படுத்தி மாறும் என்பதாம்.

உபயோகிக்கும் அவுஷதத்தின் செய்கையால் உரோகம் நாசமடைந்து மிருத்துத் தேய்ந்து போகிறது. (௭௮)

---

## அறுவகை இருது காலங்களாவன.

வருஷருது, சரருது, ஏமந்தருது, சிசிரருது, வசந்தருது, கிரீஷ்மருது என்பன. இவைகள் ஆவணி முதல் இரண்டிரண்டு மாதங்கள் சேர்ந்து ஒவ்வொரு இருதுக்களாய் வழங்கும். (௭௯)

## மனுஷ்ருடைய சீவியத்தில் தேகம் மாறி மாறி எடுக்கும் பருவங்களாவன.

1. பாலியப் பருவம் ஏழு வயசுக்குட்பட்ட காலம், இளம்பராயம் என்றும் பெயர். 2. கௌமாரப் பருவம், ஜெனனந் துவங்கி ஐந்து வயது வரையும் உள்ள காலம். பெண்ணுக்குப் பதினறு வயதுவரையும் நடக்கிறகாலம். இதற்கும் பாலியம், இளமை, குமரன் என்றும் பெயர். குமரப் பருவமும் ஐந்து வயசு வரையுமுள்ள காலம்; ஆனல் பெண்ணுக்குப் பத்து வயசு துவங்கிப் பன்னிரண்டு வயசுவரையும் நடக்கிறகாலம், யாதும் பேய் பசாசு தந்திரங்களால் பதினறு வயது வரையும் ருதுவாகாமல் கன்னிப் பருவமாயிருப்பவளையும் குமரிப் பருவ மென்று கூறும். யௌவன பருவம், விரகறியும் பருவம், இதற்கும், இளமை, பாலியம் என்று பெயர், இந்த யௌவன பருவம் ஆணுக்கு பதினறு வயசு துவங்கி எழுபதுவயசு வரையுமுள்ள காலம், பெண்ணுக்குப் பதினறு வயசு துவங்கி மூப்பது வயது வரையும் நடக்கிற காலம், ஆணுக்கு யுவன் என்றும், பெண்ணுக்கு யுவதி என்றும் பெயர். ப்ரௌட பருவம் மூப்பது வயது துவங்கி ஐம்பத்தைந்து வயது வரையும் ஒரு பெண்ணுக்கு நடக்கிற காலம், விருத்தப் பருவம் எழுபது வயதின்மேல் நடக்கிற காலம்.

## வேகங்கள் பதினலு.

அபான வாய்வு, தும்மல், மலம், மூத்திரம், கொட்டாவி, பசி, தாகம், இருமல், நித்திரை, கண்ணீர், சுக்கிலம், சுவாசம், வாந்தி, இளைப்பு என்பவைகள். (அக)

மலம் மூன்று:—மலம், மூத்திரம், வியர்வை.

## சப்த தாதுக்கள்.

இரசதாது, இரத்ததாது, மாமிசதாது, மேதோதாது, அஸ்திதாது, மச்சதாது, சுக்கிலதாது. (அஉ)

## பஞ்சவாய்வுக்கள்.

பிராணன், உதானன், வியானன், சமானன், அபானன். (அங)

ரகிதங்களையும் கவனிக்கவேண்டியது. சுகதேகருக்கு ஈடுப்பக லிற் பித்தம் அதிகமாய் நடக்கிறது. ஆனபடியால் அந்த நேரத்தில் அவரை ரோகியென்று நிச்சயிப்பது முறைமையல்ல.

## நாடிப்பரீக்ஷைக்குத் தகாத சமையம்.

ஸ்நானஞ்செய்தவுடனும், போசனம்பண்ணினவுடனும், நாசியிலாவது தொண்டையிலாவது அடைந்திருக்குஞ் சளிக் கட்டை வெளிப்படுத்தச் செய்த பிரயாசத்தினுற் றேக மிளைப்புற் றிருக்கும்பொழுதும், அதிக பசி, தாகம், வெய்யில் வெப்பம் இவற்றுல் வருந்திக் களைத்திருக்கும்பொழுதும், நித்திரைவிட் டெழுந்தவுடனும், சரீர அப்பியாசத்திற்குத் தகுந்த தெண்டு தெவாக்ஷி எடுத்தல், மல்யுத்தஞ்செய்தல் இவைகளினுலும், தேகஉழைப்பு முதலிய பழக்கவழக்கமான செய்கைகளினுலும், மனம் வியாகுலமடைந்திருக்கும்பொழுதும் நாடியைப் பரீக்ஷை பண்ணி யறிவது புத்தியல்ல அந்தச்சமையங்களில் இரத் தோட்டம் நிதானமில்லாத தன்மையை யடைந்திருக்கிறதான படியால், வைத்தியன் அதை ஆராய்ந்தறிந்து நிதானஞ்செய்ய வேண்டியது.

தைலம் பொருந்தியிருக்கும்பொழுதும், மைதுனுந்தத்தி லும், போசனுந்தத்திலும், நாடி ஊர்த்துவ நோக்கமாக ஆரம் பித்து நடைகொள்ளுகிறது. இப்படியான வேளைகளில் பரிகாரி தன்னுடைய அனுபவப்படி நடத்திவந்த நல்ல குணங்களையும் கெட்ட குணமென்று விளங்கிக்கொள்ளாமற் றன்னுடைய அனு பவப்படி வைத்தியத்தை நடத்தி நிதானஞ்செய்துகொள்ள வேண்டியது. (உ)

ஸ்நானவேளையிலும், உறக்கஞ்செய்யும்பொழுதும், பசி பட்டினியாயிருக்கும்பொழுதும், தண்ணீரருந்தும்பொழுதும், வசியம் முதலிய இடுமருந்து தேகத்திற் சேருகிறபொழுதும், ஒரு பெண்ணைக் கற்பழிக்கிறபொழுதும் இருதயத்தில் நடக்க வேண்டிய ஒழுங்கு கபடமான செயலுடையதாகையால் அந்த நேரங்களில் நாடியின் நடை பாகனுக்கடங்காத குதிரையின் நடைக்குச் சமானமானதாயிருக்கும்.

தேகஉறுதிக்குரிய அப்பியாசங்களில், இரத்தம் நரம்பின் துவாரங்களில் தங்கித்து நடக்கிறது. அது உடனே தேகத்திற்

உ

சிவமயம்.

# கடவுள் வணக்கம்.

---

## விநாயகர் துதி.

### வெண்பா.

மணியி னொளிபோல மண்டலமாந் தர்க்கு
* மணிநரம்பி னூர்கறைமுன் மாறும்—அணிநடையாந்
தாதியல்கூ றும்நாடி தர்ப்பணத்துக் கீசனருள்
போதகத்தின் பொற்பதமே காப்பு.

மணி என்பது இரத்தினம். * மணி - ரந்திரங்க ளமையப்பெற்ற தோளம். அணி என்பது தாதுக்கள் உவமையாகப் பொருந்தி நடக்கும் நடையி னிலக்கணங்களைக் குறித்தது.— அவை, கிரமம், சேர்க்கை, படையெழுச்சி போல்வன.

## சுப்பிரமணியர் துதி.

### ஆசிரியப்பா.

சரவணத் துதித்த சாமித னிருபுண்
டரிக மலர்ப்பத மகத்திறைஞ் சுதுமே. (௨)

## சிவபெருமான் வணக்கம்.

மலைமக ளொருசார் மணந்துல கைந்தொழி
னிலைமுதற் பொருளையெ னெஞ்சகத் திருத்தி
இரும்பிணிக் குழுவை யொருகுறி நரம்பிற்
றெரிக்குமிவ் வுரையைச் செப்புவன் யானே. (௩)

## உமாதேவியார் துதி.

அரனிடப் பாக மமர்ந்த தேவியைக்
கரத்தி னிறைஞ்சிக் களித்திடு வேனே. (௪)

## திரிமூர்த்திகள் துதி.

### ஆசிரிய விருத்தம்.

மூன்றொருபத்திரண்டென்னுமுறுப்பிலெழு
நோய்க்குணத்தைவிரல்மூன்றொன்றில்
ஈன்றுருத்துக்காட்டுமிந்தநூல்புகல
அவ்வாநடையிணங்கிக்கையில்
மான்றொருநாடியிலாடுவாதபித்த
வையம்போல்மல்கியொன்றிற்
றோன்றியிருத்தொழில்மூன்றுப்புரியுமொரு
மூவரடிதொழுதுகொள்வாம். (ரு)

### அவையடக்கம்.

பூதலத்தட்டாங்கிருதயமாதி
புகல்பெருநூல்கொளும்பிடகர்
ஆதனிங்குரைக்கும்புன்சொனூலிணையு
மகத்துவர்ப்பின்றியேகொள்வர்
கோதகறீஞ்சாறுறுகனியையுநேர்
கூறிடாக்கைப்பதேசுவையாம்
பேதமார்கனியுஞ்சமமெனமதிக்கும்
பெட்புறுதகைமையான்மாதோ. (சா)

### சமநாதும் திரிதோஷமும்.

### வெண்பா.

சீத மனலிரண்டின் சேர்க்கை சமகுணத்தால்
வாதபித் தக்கபங்கள் வாழ்க்கைதுணை—யோதுசம
தாநிதா ரோக்யநிலை சாத்தநடை விகட
பேதமுத் தோஷமெனப் பேசு. (எ)

சிவசுப்பிரமணியர் துணை.

# நாடி தர்ப்பணம்.

## நாடியின் இலக்ஷணங்களைப் பரீக்ஷபண்ணி அறியும்முறைகளைக் கூறும் நூல்.

நாடிப் பரீக்ஷையாவது ஜீவசிலைமைகளைக் குறிப்பதான, நாதினிலக்கணங்களை விரல்களினால் நாடிக்குறிப்பிடங்களிற் றொட்டு அந்த இலக்கணங்களின் வேறுபாடுகளைச் சோதனை பண்ணியறிவது.

### வாகடம்.

வைத்தியனானவன் முதலிலே ரோகத்தைப் பரீக்ஷிக்க; அதன் பின் கர்மத்தைப் பரீக்ஷிக்க; அதன்பின் ஞானத்தை முதலாகக்கொண்டு ஆசரிக்கக்கடவன். (க)

தேசகால பேதங்களை யுணர்ந்தறிந்து, ரோகத்தினது பலாபலத்தை யறிந்து, வைத்தியன் சிகிச்சையைத் தொடங்குக; புகழையும் சோபனத்தையுமடைவான். (உ)

அதன்பின் ரோகியின் அவஸ்தையையும் நாடியையும் அவுடதப் பிரயோகங்களையும் பத்தியத்தையும் தேசத்தையும் காலத்தையும் பாத்திரத்தையும் எவனறிகிறானோ அவனே வைத்தியர்களுக்கு அரசனாவான். (ங)

### ரோகியின் அஷ்டஸ்தானப் பரீக்ஷை.

ரோகத்தையடைந்த சரீரத்தையுடையவனது நாடி, மூத்திரம், மலம், நாக்கு, சத்தம், பரிசம், நேத்திரம், * ஆகிருதி என்னும் எட்டிடங்களையும் பரிக்ஷிக்கக்கடவன். (ச)

---

* ஆகிருதி - தேகத்தினியல்பு,

பலவிதமாகிய சாஸ்திரங்களையறியாதவரும் அற்பபுத்தியுடையவருமாகிய வைத்தியர்களுக்கு, நாடி முதலிய அஷ்டவிதப் பரீக்ஷைகளும் சுகத்தின்பொருட்டுக் கூறப்படுகின்றன.

முதலிலே நாடியை அறிதலினாலே வாதம், பித்தம், கபம் என்பனவற்றாற் பிறக்கின்ற ரோகங்களினது சாத்திய, அசாத்திய, கட்டசாத்திய வேறுபாட்டுணர்வுகள் இலகுவாக வைத்தியர்களால் அறியப்படத்தக்கது; ஆதலினாற்றான் நாடியிலட்சணம் முதலிலே நிரூபிக்கப்படுகின்றது. (௬)

## நாடிஞான மவசிய மறியவேண்டு மென்பது.

உலகத்திலே வைத்தியன் நாடியறிவில்லாமற் பூசிக்கப்படுந் தன்மையை யடையமாட்டான்; ஆதலினாலே புத்திமானாகிய மனுஷன் படிக்கக்கடவன். (௭)

நாடியுணர்வில்லாத வைத்தியன் அறிவில்லாவிடத்து நூல் போலவும், உப்பில்லாவிடத்துப் போசனம் போலவும், நாயகன் இல்லாவிடத்துப் பெண் போலவு மிருப்பான். (௮)

## மருத்துவன் ஸ்திரீகளுக்குத் தானப்பரீக்ஷை செய்யவேண்டிய முறைமை.

ருதுவான பெண்கள் முதலியோர்க்கு நாடிப் பரீக்ஷை, நாவின் பரீக்ஷை, எவன் அறிகின்றிலனோ அந்த வைத்தியன் விரைவில் உயிர்களைக் கொல்லுகின்றான்; அன்றியும் சோபன மடையான். பெண்களுக்கு நாடி, நா, மலம் முதலியவைகளுடைய குணத்தைச் சோதனைபண்ணி அறி என்பது. (௯)

முதலிலே எல்லா ரோகங்களுக்கும், நாடியையும், நாக்கின் நுனியையும், கண்களையும் பரீக்ஷைபண்ணிப் பின்பு ரோகிக்கு வைத்தியஞ் செய்க. (௧௦)

நாடியறிவில்லாமல் எந்த வைத்தியன் வைத்தியத்தைச் செய்கிறானோ, அவன் இலக்ஷ்மியை யடையவுமாட்டான், தருமத்தை யடையவுமாட்டான், கீர்த்தியை யடையவுமாட்டான். (௧௧)

வைத்தியனே, நாடியினதும் மூத்திரத்தினதும் நாக்கினதும் பரீக்ஷைகளை முதற்செய்; அவைகளை யறிந்தபின் வருத்தக்காரனுக்குச் சுகத்தைக் கொடுப்பதாகிய அவுஷதத்தைக் கொடு. (௧௨)

வீணையை யடைந்ததாகிய நரம்பு எப்படி எல்லா இராகங்களையும் பேசுகின்றதோ அப்படியே கையை யடைந்ததாகிய நரம்பும் எல்லா உரோகங்களையும் வெளிப்படுத்துகின்றது. (௧௩)

நாடியிலக்கணத்தை யறியாமல் நிதான நூல் வாக்கியத்தின்படி எவன் வைத்தியத்தைத் தொடங்குகின்றானோ அவன் மூடனென்று சொல்லப்படும் கீர்த்தியை யடைகின்றான். மூர்க்க வைத்தியனென்று சொல்லப்படும். (௧௪)

உத்தமவைத்தியன் * நிதானபஞ்சகாதி யிலக்கணத்தை நாடி யிலக்கணத் தோடமைத்து வைத்தியத்தைத் தொடங்குவான். (௧௫)

எவ்வளவு அறிகுறிக ளறியப்பட்டிருந்தாலும் செய்த வைத்தியம் பலனற்றுப்போதலால் ஒற்றுமைப்பட்ட மனத்தோடு இதனைக் கேள். (௧௬)

அநேக நூல்களின் சாரத்தை யநுசரித்து வைத்தியர்களுக்கு ஆனந்தத்தைக் கொடுப்பதாகிய நாடிப்பரீக்ஷை மிக முயற்சியோடு முதலிலே சொல்லப்படுகின்றது. (௧௭)

அது எப்படியென்றால், சில இடங்களிலே நூலறிவினாலும், தேசகால வேற்றுமையினாலும், சில இடங்களிலே ஆராய்வினாலும், நாடி அறிவு தோன்றுமானாலும், சற்குருவினுபதேசத்தினாலும், தேவ அருளினாலும், முன்செய்த புண்ணியத்தினாலும், நாடியிலக்ஷணத்தை யறியும் பழக்கம் நன்றாக உண்டாகின்றது.

உலகத்திலெங்கேயாயினும் நாடியின் பழக்கமில்லை. ஆதலால் இங்கே எது சொல்லப்படுகின்றதோ அது நன்றாக உத்தம புருடர்களாற் போற்றிக்கொள்ளப்படத்தக்கது. (௧௮)

---

* நிதானபஞ்சகமென்பது உரோகங்களைப் பரீக்ஷித்தறியும் உபாயம் ஐந்து. அவை: நிதானம், பூர்வரூபம், ரூபம், உபசயம், ஸம்ப்ராப்தி என்பன.

நாடிகளின் கதிகள் எப்பொழுதும் வேருக அப்பியாசப் படுத்தவேண்டும். படித்த மாத்திரத்திஞலே இங்கே நாடி ஞானமுண்டாகமாட்டாது. (உ0)

நூல்களைப் படித்தலினுலுமின்று, பலவற்றைக் கேட்டலி ஞலுமின்று, நாடியறிவுண்டாகிறதற்கு மனுஷர்களுடைய அப் பியாசமே மேலான காரணம். (உக)

இந்த நாடியினது நடையை யறிதற்குத் தகுந்த அப்பியாச முடைமையொன்றே வேண்டும்; அல்ல நவைத்தியன் கோடி யுபாயங்களிற்ருனும் வல்லவனுகின்றிலன்; வைத்தியன் யோக சாதனையுடையவன்போல் நிச்சயமாக விருத்தல்வேண்டும். (உஉ)

## நாடி நடைக்கு உவமையாகக் கூறப்படும் ஜீவசாதி பேதங்களாவன.

நீரிலும் நிலத்திலும் ஆகாயத்திலும் சஞ்சரிக்கின்ற பிராணிகளுடைய நடைகளோடுகூட, வேறுபட்ட இலக்கணங் களையுடைய நாடிகளின் கதிகளுவமிக்கப்படுகின்றன். (உங)

நீர்வாழும் பிராணிகள்: தவளை, மற்சம் முதலியன. பூமி சம்பந்தமான பிராணிகள்: சர்ப்பம், அன்னம், மயில் முதலியன. ஆகாசசாரியான பிராணிகள்: லவா, படேரம் முதலியன.

இவைகளேயன்றி வேறு வைத்திய நூல்களில் ஆயுதப் பாவிப்பினுல் உண்டாகி விரைந்து செல்லும் வேகத்தையும், காற்ருேய்ந்தவிடத்து நின்று தளம்பும பட்டத்தின் பதறுதலை யும் நடைக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளன.

எந்த நாடிக்கு எப்படிப்பட்ட நடை யுவமையோ அது வித்துவான்களால் விசேஷமாக அறியப்படத்தக்கது; அந்த நூல் ஞானம் நிறைந்த சற்குருவினுல் ஓதப்படத்தக்கது. (உச)

வைத்தியங் கற்கும் மாணுக்கன் நல்ல அனுபவமுடைய ஒரு வைத்தியனுக்குக் கீழிருந்து படித்துச் செய்பாகங் கைபா கங்களை யெல்லாம் அவனிடங் கேட்டறிந்து பழகிக்கொள்ள வேண்டும். அப்படியில்லாவிட்டால் அந்த வைத்தியனுடன் தானும் போய் நோயுற்ற தேகிகளைப் பார்த்து நிதானித்து

அனுபவப்படல்வேண்டும். ஆனல் உத்தம வைத்தியன் அந்த மாணுக்கனுடைய கையிற்ருனே தொட்டு, அந்தந்த நேரத்திற்கு நடக்கிற நாடிநடையிலக்கணங்களை அததற்குப் பொருத்தமான உவமேய உவமானங்களில் அமைத்துக் காட்டி விளங்கப்படுத்துவான். (உரு)

நாடி, சுபம் அசுபம் என்பனவற்றின் குணங்களையெல்லாம் செவ்வையாக வெளிப்படுத்தும்; அதுவும் உரோகிகளுக்குக் காலபேத விசேடத்தால் வேறுபட்ட இலக்கணத்தை யுடையதாகிறது. (உசா)

அந்த நாடி யிலக்ஷணத்தைச் சொல்லப்படாதவனுகிய சுகதேகியிடத்து எந்த இலக்ஷணமுடையதோ ரோகியிடத்தும் அந்த இலக்ஷணமுடையதாகும். அது வயசினுலும் காலத்தினுலுமுண்டாகின்ற உரோகங்களினது பேதங்களினுலே வேறு வேருன தன்மையை யடைகின்றது. (உஎ)

1. வயசினுலுண்டாகின்ற பேதம் என்பது, பாலியப்பருவத்தில் நாடிநடை நெதியாயும்; யௌவன பருவத்தில், பாலியப்பருவத்தில் நடந்த நாடியின் நடையைப் பார்க்கிலும் ஆறுதலான நடையாயும்; வயோதிபப் பருவத்தில்நாடி, யௌவன பருவ நாடி நடைக்கு ஆறுதலாயும் நடக்கும்.

2. காலம் என்பது, விடியற்காலம், மத்தியான காலம், சாயங்காலம் என்பவை; இந்த வேளைகளிற் பெரும்பான்மை சில தேகிகளுக்கு நாடிநடை வித்தியாசம் வித்தியாசமான குணங்களை யெடுக்கிறது.

3. ரோகங்களின் பேதங்களாலென்பது, சுரத்தோடு கூடிய வருத்தங்களில் நாடிநடை ஒரேமாதிரியா யிருக்கமாட்டாது. அவைகளில் இடையிடை விட்டு வேற்றுமைப்பட்டு நடக்கும். அதிசாரம், பெரும்பாடு, அசிர்க்கரம், அரசம் முதலிய அணங்குகளில் காலை நாடி ஒரே தன்மையான நடையென்பது கிரந்த கர்த்தாவின் கொள்கை.

ஆதலினுல் அந்த நாடியினது எல்லாக் காலத்திற்கு முரிய நிலையைப் புத்திமானுகிய அறிஞன் இலக்கணங்களால் சாவதானமாக அறிவதற்கு முயலவேண்டும். (உஅ)

## நாடிஸ்பந்தன காரணம்.

இருதயத்தைப்பற்றி நிற்பனவாகிய தமனியு மதைச்சேர்ந்த கிளைகளும் உடம்பு முழுவதிலும் வியாபித்துச் சோணிதத்தின் பெருக்கைக் கொண்டுசெல்கின்றனவாய்ச் சரீரத்தை வளர்க்கின்றன. (௨௯)

இருதயமொடுங்குவதினால் ஓரளவினதாகிய இரத்தம் தமனியை யடைந்து, அதனாலே சேர்க்கப்பட்டு, ஊர்த்துவமார்க்கமாக ஸ்தாபித்திருக்கிற நரம்பையும், மற்ற நரம்புகளையும் பிரவேசித்துத் தேகமுழுவதிலுஞ் செறிந்து, அதன்பின் புப்புசத்தை யடைகின்றது; புப்புசத்தினின்றும் இருதயத்தை யடைகின்றது; இப்படியே தொழில் பின்னும் பின்னும் நடந்துகொண்டிருக்கின்றது. (௩௦)

இருதயம் குவியுந் தன்மையும் விரியுந் தன்மையுமுடையது. அதற்கு இருதயகமலம் என்றும் ஒரு பெயர். இரத்தாசயத்தின் கீழ்ப்பகுதியைப் பக்கத்திலமையப்பெற்ற தடித்த மாமிசத்தசையானது நெருக்குகிறதினா லிரத்தங்கள் வீரிட்டுப் போகும் பொழுது நிமிர்ந்துநிற்கின்ற நரம்புகளிலும், இரத்த ஓட்டத்திற்குரிய மற்றும் நரம்புகளிலும் பிரவேசித்துத் தேகமுழுவதிலும் ஓடிப் பின்னர்ப் புப்புசத்தை யடைகின்றன. புப்புசத்திலிருந்து இருதயத்தை யடைந்து, அங்கே பரிசுத்தமான இரத்தமாகப் பெறுகின்றது. தமனியோடு கூடிய சமஸ்தசிறு நரம்பின் கிரியை இப்படியே பின்னும் பின்னும் நடந்துகொண்டிருக்கின்றது. (௩௧)

(கறைநீ ளமையங் கறைபுற மேர்வர்
ஓவிய செம்பா லுட்செல விரிந்து
மூடவு மரரி மூன்று புதவுபோ
னுடியுற் பவத்தி னவின்ற வரணே.)

என்று நாடித்திரட்டுக் கூறும்.

இரத்தமோடுகின்ற வேகத்தினாலே தமனி யடிக்கடி ஸ்பந்திக்கிறது. பெருக்கினது இயற்கையின் வேறுபாட்டால் ஸ்பந்தனத்திற்கும் வேறுபாடுண்டு. (௩௨.)

மேலே சுட்டிய நாடிகளுக்குரிய வித்தியாசமான சலன காரியங்களை அங்குஷ்டமூலத்திலுமறிய வேண்டியது. இருதய ஸ்தானத்தில் முக்கியபிரயோசனமுடையதாய் நின்று சஞ்சரிக்கின்ற தமனிநாடி தேகமெங்கும் வியாபித்து அவ்வுறுப்புகளை உயர்ந்த இனமாகச் செய்கின்றது. அந்த நாடிகொண்டு செல்கின்ற உதிரம், மேலான பஞ்சேந்திரியங்களின் குணங்களையுடைய நரம்பின் மார்க்கமாகச் சென்று கைகளைப் போஷித்து நல்ல குணமாகச் செய்கின்றது. மனரகிதமான உதிரத்தின் உயர்ந்த குணம் கண்களைப் போஷிக்கின்றது. கைகளை நல்ல குணமாகப் போஷிக்கிற இரத்தம் சரீரத்தை நடப்பிக்கின்றது. நீசமான தானங்களை நீக்கிச் சிரேஷ்டமான உறுப்புக்களைப் பூரணப்படுத்தின தமனியின் ஒற்றுமையான பிரதிபிடம் இருதயஸ்த இரத்தாதார யந்திரமென்று சொல்லப்படுகின்றது. அந்தக் கருவி ஸ்தாபிக்கப்பெற்ற தானம் எந்த உறுப்போ அதில் ஸ்தூல மாமிஸ ரூபமான ஏகநலிகை யமையப்பெற்றிருக்கிறது. அது உபரகதரபத்தில் எதிராகத் தர்க்கித்து லோலித காரணமடி யறைகிறது. நளினி சமுதாயம் தமனியின் மூல பாகம். தமனி சம்பந்தமான அநேக கிளைநரம்புகள், பிரதிகிளைகள் நிகளத்திலிருந்து பிரிந்து தேகமுற்றும் வியாபிக்கின்றன. அவைகளில் தொண்டையை மருவிய சகை நாவுக்குரிய குணங்களுக்குத் தகுந்த உற்சாகத்தைப் புரிகின்றன. சமஸ்த சூக்ஷ்ம ரூபமான நல்கமும், தூல ரூபமான மாம்ஸ நலிகையுந் தமனி காரணமாக வியலுந் தன்மையுடையவைகள். தேகமுற்றிலுஞ் சுற்றி யோடுகிற இரத்தத்தை, யிருதயம் பிரதியாகச் சேர்த்துத் தமனி மார்க்கமாக வந்தந்த வுறுப்புகளுக் கிணங்க அங்குஷ்ட மூலங் கற்பனை செய்கிற பிரமாணத்தின்படி, போஷணைசெய்ய அவ்வுறுப்புகள் அனுபவிக்கின்றன. சம குணம் பொருந்திய இருதயமென்னு மியந்திரத்தின் சுபாவ நிலைமை, குலதை, மௌனதை என்பனவாகிய இக்காரணங்களிலிருந்து இஷ்டமாக்கிக்கொள்ளுதல். ஜலபூர்ணமஸக இரைச்சல் இரண்டாந் தாதாகிய பித்தத்தின் கோபமான பார்வையென்று சொல்லப்படுகிறது. அந்த அமங்கலமான மஸகம் சுத்த பாவகனின் அளவுக்கதிகமான சொலிப்பைச் சமகுணமாக்கி

யுதிரஞ்செல்லுகிற நாடி நரம்புகளின் சந்தித்துவாரம், அங்குஷ்ட மூலம் இவைகளை யுயர்ந்த வர்னமாக்கி யங்கிருந்து வெகு வேகமாக நிகளத்தை யநுசரிக்கிறது இருதயம் உதிரத்தை விட்டனுபவிக்கிறதன்மை நிமேஷம் என்னுட கிரியையினுலென்று சொல்லப்படுகிறது. இருதயத்திற் றங்கியிருக்கிற அசுத்த இரத்தத்தின் அப்ஸம், ஸ்தூல தமனியிலுயர்ந்த சாதியாகிக் கையின்பொருட்டுச் சமீப உறுப்பிற் பிரவேசித்தபடியால் மிகவு மற்பனற்பனுக மூன் னெற்றியைச் சேருகிறது. பருவப்பெயர்ச்சியினந்தம், ஆரம்பம் ஆகிய இந்தக் காலங்களில் குதிப்புறுகிற இரத்தம் தமனியின் துவாரங்களிற் பிரவேசித்தால் அது தேகமுற்று மலைந்து திரிந்து பேதப்பட்டு அங்குஷ்ட மூலத்தையுஞ் சூழ்ந்து புப்புசத்தையும் வித்தியாசப்படுத்துகின்றது. அந்த இரத்தம் மறுபடியும் (முன் இறந்த ஒரு சீவன் தன் சந்ததி வழியில் வந்து ஜென்மிப்பது போல், அடையப்படப்பெற்ற ஓதை காரணமாகக் கைகளுக்கு, உற்பத்தியானது. அந்தக் காலங்களில், மலசல வேதனை, பிரசவவேதனை காரியங்களும் நிகழ்ந்தால் விபரீதமடைந்து, அவை வெளிதோற்றிய வண்ணம் இருதயமிட்டமாக்கிக்கொள்ளுகிறது. அந்த இரத்தம் ஸ்தானத்திலிருந்து பிரசவமாகும்பொழுது அதிக வில்லங்கமுடையதாய் வெளிப்படுகிறது. அப்பொழுது மனசுக்கு ஒரு வகையான கலக்கமுடையதுபோற் றோற்றி வித்தியாசத்தைக் காட்டுகிறது. அந்த உதிரம் பிரவேசமான பின் இருதய மிஷ்டப்பிரகாரமான தன்மையை யடைகிறது. இந்தக் காரணங்களைச் சுவாச ஸ்தானத்திற் சோதனைபண்ணி யறியவேண்டியது

ஜெயங்கொள்ளப்பட்ட இரத்தம் நிந்தனைக் குரியதாய்த் தேகவர்னத்தையும் வித்தியாசப்படுத்துகிறது. சித்தம்: பயம், கிலேசம் முதலிய துர்க்குணங்களை யுணருந் தருண மெப்பொழுதோ அப்பொழுது, அதிக வுசிதமான வூக்கமும் கடவுளாற் கொடுக்கப்பட்டிருக்கிறது. தினந்தோறும் நல்ல பலனை யுண்டாக்கி யளிக்கிற ஜோதி இவைகளை யனுபவிக்கிறதில்லை. துக்கம், பயங்கரம், இவைகள் காரணமாக வியப்புற்ற உதிரத்தின் முதன்மையான குணம் பூரணதமனியி லெதிர் தாக்கிப் படகதியிலக்ஷணமாக நாடியோட்டத்தையும் நடக்கச் செய்கிறது.

தேகாரோக்கியத்திற் கிடையூறான இரத்தம் எதிர்த்து மேனோக்கித் தமனியிலோடும்பொழுது அந்த நாடிக்குரிய விசித்திரமான துவாரங்களையும் வேற்றுமைப்படுத்தி அங்குஷ்ட மூலத்திற் பிரவேசமாகி நல்ல வேகமான லோலித காரணங்களை யுண்டாக்கிறது. அவைகளை இருதய ஸ்தானத்திலறிந்துகொள்ள வேண்டும். இந்தக் காரணங்களினாலே தமனி நாடியில் உக்கிரமம் அதிகரித்துத் * தடபலக்ஷணத்தை மூயல யத்தனமாகிறது.

உதிரத்திற்குரிய "கே" எப்பொழுது சுழலுந் தன்மையைப் பொருந்தி நடக்கிறதோ அப்பொழுது சாரீரப்§பிரகிருதி பேதங்களும், தமனியின் தடபடகதியும் ஓதை காரணமாக வித்தியாசமடைகிறதாக வறியவேண்டியது. அதாவது: இரத்தம் தங்கி மேனோக்கி, அல்லது எதிர்தாக்கி, மந்தவேகமாயோடினாலந்த நாடியும் மந்தகதியாக நடக்கிறது. இரத்தம் மேனோக்கி, அல்லது எதிர்தாக்கி, துரிதமாயோடினாலந்த நாடி கோபங்கொண்டு சடுதியாயெழும்பித் தானத்தை விட்டுப் பெயருகிறது.

இந்த ஸ்திதியையுடைய நாடி, இரத்தாசயத்திற்குச் சமீபமான உறுப்புகளில், பிரயோசனமற்றதாய்த் திரிகிறது. ஜென்மத்திற்குரிய மூலர்தாரநாடி தூலகதியிலக்ஷணமாகவும், சூக்ஷமகதியிலக்ஷணமாகவும் உற்பத்தியானது. இந்தவிதமாகவே கடினபேதமான நியாயத்திலுங் கொள்க. இந்த லக்ஷணங்களமைந்த நாடிகளை உதிரத்தின் அணுப்பிரமாணத்தின் ஒரு பகுதி நவீரம், அதற்கு "கே" என்று பெயர். அது உதிரத்தை இனமாற்ருக்குகிறது. (அந்த இனமாற்று உயர்ந்த சாதி

---

* தடப என்பது — எழும்பி யடித்து அனுகூலமாகிர.

§ பிரகிருதி பேதங்கள் என்பது — ஏழாந் தாதாகிய சுக்கிலத்திலும், ஆர்த்தவத்திலும் கலந்துள்ள வாத பித்த கபங்களின் சமகுணம் தொந்தகுணம் ஆகிய இச்செயல்களினால் கருப்போற்பத்தி காலத்தில், உத்தமப்பிரகிருதி, மத்திமப்பிரகிருதி, ஈனப்பிரகிருதி என மூவகை தனித்தனி யுண்டாகின்றன.

யான இரத்தமோ தாழ்ந்த சாதியான இரத்தமோ என்பதைத் தேக நிலைமையி லறியவேண்டியது. குறித்துக் கூறிய நாடி ரோக அவஸ்தையி லதிக தீவிரமான கெதி தேய்கிறதும், உரு பேற்கிறதுமாகக் குறைந்து மீசதானத்தை யெடுக்கிறது. அப் பொழுது அந்த வேகம் சிரசிலேறித் தாக்கிக் கனிபண்ணி மரணத்தை யுண்டாக்கிறது. (௫௩)

## நாடிகளின் பெயர்.

சிரை, *ஹிம்சிரை, ○ஸ்நாயு, !வசா, நாடி, தமனி, தாமனி, தந்துகி, சீவதச்ஞை, தரா என்பவைகளுள் சிரை, ஹிம்சிரை, ஸ்நாயு, நாடி, தமனி, தாமனி, சீவதச்ஞை ஏழும் நாடிகளின் பரியாயப்பெயர்கள். மற்றைய தரா, வசா, தந்துகி, என்பவை உறுப்படியாகவும், சினையடியாகவும் பிறந்து அந்தந்தப் பெயர் வழங்கப்படுகின்றது. (௫௪)

தமனி-சுத்த இரத்த மோடுகிற நரம்பு. தரா-கருப்பாசய நாடி. சீவதச்ஞை-சீவாதாரயான உறுப்புகளைப் போஷணை செய்கிற நாடி. ஸிரா-சிரை, காரிரத்தக் குழாய்.) (௫௫)

## நாடிபேதம்.

உடம்பிலேயுள்ள நாடி மூன்று விதம்: அவைகளிலொன்று வாயுவைத் தாங்கிச் செல்வது; ஒன்று மலம், மூத்திரம், இரசம், அத்தி இவைகளைத் தாங்கிச் செல்வது; மற்றையது, ஆகாரத் தைச் சுமப்பது. (௫௬)

---

*ஹிம்சிரை இரசம், இரத்தம் ஓடுகிற நரம்பு என்றும்; ○ஸ்நாயு-தசை நாரையும் எலும்பையும் சேர்க்குங் கயிறுபோன்ற நரம்பு என்றும், தசை நரம்பு என்றும், என்பினந்தங்களைப் பொருத்தித் துவாரம் வழியாகச் சீவாதாரமான வாயுவைக் கொண்டு செல்வது போன்றது என்றும்; !வசா என்பது, நிணநீர், தசையோ டொட்டியிருக்கிற கொழுப்பு, அது எலும் பின் மச்சையிலிருந்து வித்தியாசப்பட்டதுபோலும் எண்ணப்படுகிறதென் றும், அப்படி எண்ணினும் ஒரே வஸ்துதானென்றும் பிரவுரைகளிற் கூறப்பட்டிருக்கிறது.

## சுழுமுனை நாடி.

கந்தத்தின் நடுவே ஸ்தாபிக்கப்பெற்றிருக்கிற நாடி சுழுமுனை; இந்தச் சக்கரத்திலே சூழ்ந்து எல்லா நாடிகளும் நிற்கின்றன. (கஎ)

நாபி நடுவே நிற்கின்ற நாடி பசுவின் வால்போன்ற வடிவுடையது. இவைகளெல்லா மெல்லாப் பக்கமும் சூழ்ந்து நிற்கின்றன. (கஅ)

நாடிகளெல்லாம் உந்தி மூலத்திற் குணங்களை மாற்றி எடுக்கின்றன. கோபுச்ச வடிவமான நாடிகள் ஸ்தாபனமாகிற உறுப்பை யுறுதிப்படுத்துகின்றன. கோ, எல்லாவற்றையு மிரட்சிக்கிறது. கம்பீரவிலக்ஷணத்தைத் தேகமடையப்பெறுகிறது எப்பொழுதோ அப்பொழுது சூழ்ச்சிபெற்றிருக்கிற கோவின் பார்வையாகிய நுண்ணிய விவேகம் விரைவா யெழும்பி அக்தரங்கமாகிற காரணம். பசுவின் வால்போன்ற வடிவுடைய நாடி, உள்ளத்தைச் சமநிலையில் வைக்கிறதற்கு, உபாகங்களினம்சம் இனம் மாறி மோடியான பலனை யுண்டாக்கியளிக்கிறது; அல்லது நீசத்துவமான கிரமலக்ஷணத்தைக் கற்பித்துவிடுகிறது. அங்கே மனம் விரும்பியபிரகாரம் சிக்ஷைபண்ணுகிற நாடி யறிவில்லையென்று சொல்வதுஞ் சரியல்ல. நிகளத்தில் நடைபெறுகிற செயல்களை நாபி மத்திய நாடி தெரிவிக்கிறது. தரபசாரமான அருட்சி சுழுமுனை காரணமாக நடக்கிறது.

தூலமாயும் சூக்ஷமமாயும் மூன்றரைக்கோடி நாடிகள் தேகிகளுக்குண்டு; அவைகள் நாபியிலும் கந்தத்திலும் ஸதாபிக்கப்பெற்றுக் குறுக்காகவும் மேனோக்கியும் கீழ்நோக்கியும் நிற்கின்றன. (கக)

மனுடனுக்குரிய தேகத்தில் எவைகள் மூன்றரைக்கோடி யுரோமங்கள்ரிருக்கின்றனவோ அவைகளெல்லாம் நாடிகளின் முகங்களி னுள்ளனவாய் வெயர்வைத் துளிகளையுஞ் சொரிகின்றன. (௨0)

அவற்றுள் ஆயிரத்தெழுபத்திரண்டு நாடிகள் * தூலநாடிகளென்று சொல்லப்படும். அவைகள் தேகத்திலுள்ள பஞ்சேந்

---

* தூலம் - பருமையானது.

திரியங்களைச் சுமக்கின்றன. பஞ்சேந்திரியங்களாவன: சப்த, ஸ்பர்ச, ரூப, ரச, கந்தம் என்பன. (௪௧)

சொல்லப்பட்ட ஆயிரத்தெழுபத்திரண்டில், தமனி இரத்தத்தையும், தன்யம் வாயுவையுங் கொண்டு பஞ்சேந்திரியங்களின் குணங்களை நடத்துகின்றன. (௪௨)

அவைகளுடையதும், சூக்ஷ்மநரம்புகளெழுநூறும், திப்பி வேறு சாரம் வேறாகப் பிரிந்த, அன்னரசங்களின் சுத்தமான திரவச்சத்தைக்கொண்டு இந்தச் சரீரத்தை யடைந்து விசேஷமான குணங்களோடு நடப்பிக்கின்றன. சடத்திற் குபயோகமில்லாமற் செல்கின்ற இரசம்மாத்திரம் அதிகக்கணக்கான வியர்வையாகவும், கண்ணிலிருந்து வடியும் நீராகவும், உரோமகூபங்களாலே பொசிகிறது. (௪௩)

அதிக நுட்பமான தமர்களையுடைய நாடிகள் சரீரத்திலூடுருவி நடக்கக்கூடியது. அந்த நரம்புகளி னந்தங்கள் சோடியாகப் பிரிந்து பிளவுபட்ட ஒரு பேனு அலகின் நுனி போன்ற வடிவுடையவைகளாம்.

அந்த எழுநூறு நரம்பும் அன்னரசங்களின் சத்தைக் கொண்டு சரீரத்தை வளர்க்கின்றன. (௪௪)

பாதநாடியின் புச்சங்க ளதிகமாகப் பரந்து கெட்ட குணங்களை யுண்டாக்கிறதில்லை. நாபிஸ்தானத்தி லுதித்த நரம்பு இருதயத்தைப் பூரணப்படுத்துகிறது. மஸ்தகத்தை யருட்டுகிற நரம்பு பைரவிநாடிக்குச் சம்பந்தமானது. அந்த நாடி தேகத்திலுள்ள எல்லாவுறுப்புகளிலும் வியாபித்து இருதயத்திற் கருட்சியை யுண்டாக்கி அங்கே பரிசுத்த இரத்தமாக்கப்பெற்ற வுதிரத்தை ஈகைசெய்கிறது. ஒவ்வொரு தானத்திலுமிருந்து இரசதாது, சருமதாது இவைகளையும் போஷித்துக் கெட்ட குணத்தைச் செய்கிற அசுத்த நீரை மிகச் சிறுச் சிறுப் பிரமாணமாக வெளியே கழியச்செய்கிறது. தேகபோஷணைக்கு வேண்டிய அளவின் பிரகாரம் போஷணை செய்கிறதினுல், தேகவர்னம் ஒளியுடையதாக்கப்பெற்று நரம்புக்கிடையு முறுதிப்பட்டு இதய சலதியும் விரைவா யசைகிறதற் கேதுவாகிறது.

சொல்லப்பட்ட எழுநூறு நாடிகளும் காயத்தை யிரட்சித்து நடத்துகிற தன்மை எப்படியென்றால், ஒரு குருஆனவர் யாகாதிகருமங்களால் அடைந்த பலனை உலகத்திற்குப் பயன் படுத்துந் தன்மைபோலேயாம். (சரு)

அவைகளுள் உத்தமமான நாடிகள் இருபத்துநான்கும் தேகமூற்றிலும் வியாபித்திருக்கின்றன. அதிலும் நான்கு நாடி முக்கியமானவை. ஒன்று பரீக்ஷணிய நாடி, இது வலது கையிலும் வலது காலிலுமாக வைக்கப்பெற்றிருக்கிறது. (சசு)

அந்த இருபத்துநான்கு நாடியின் பொருத்தமான இன மாற்றுக்குத் தமனி முதற்காரணமா யிருக்கிறது. நான்கு நாடி உத்தமமானவை யென்றது: புருஷருக்குரிய "தகனகாத பைரவி" தானப்பெயர்ச்சியில் விகாரப்பட்டு இனயார்றுகிறது. மற்றது "வாமகாதபைரவி" இவைகள் முறையே வலது பாத நாடி, வலது கைநாடி, இடது பாதநாடி, இடது கைநாடி எனப் பெயர் பெறும். ஏகநாடி அங்குஷ்டமூலத்தைச் சுற்றி யோடுகிற பரீக்ஷணிய நாடி. பாதநாடி சிரசுக்கும் அங்குஷ்ட மூலநாடி நேத்திரங்களுக்கும் போய் அவைகளை நல்ல குணமாகச் செய்கின்றன. இன்னும் தாங்கள் சஞ்சரிக்கும் ஸ்தானங்களெவையோ அவைகளிலெல்லாம் பிரயோசனமான காரணங்களையுடையவைகளாயிருக்கின்றன. தமனி நாடிக்கு தாதுநாடியென்னும் பெயர். அதுவும் ஒலியின் காரணமாகிற நாடிக்கு மர்ப வதுவுடையது. (சஎ)

இரத்தகர்த்தாவானவர், அந்த எழுநூறு நரம்பும் தேகத்திற் சுத்தமான இரத்தத்தைக் கொண்டு சென்று போஷிக்கிறதென்றும், ஒன்று அங்குஷ்ட மூலத்தைப் பொருந்திச் சிரசைக் காப்பாற்றுகிறதென்றும் கூறுகிறார். (சஅ)

## நாபிஸ்தான நாடி சக்கரம்.

நாபிஸ்தானத்தில் கூர்ம வடிவமான நாடி வலமிடமாகவிருக்கிறது. அதினுடைய வத்திரம் இடதுபக்கம் புச்சம் வலதுபக்

கம் நிந்திக்கப்படத்தக்கது. அந்தக் கச்சப வடிவமான சக்கரத்தின் ஊர்த்துவபாகம் இடதுகாலும் கையும், அதோபாகம் வலதுகையும் காலும் பொருந்தும்படி நிலைத்திருக்கிறது. முகத்தில் இரண்டு நாடியும், வாலில் இரண்டு நாடியும் தரபத்தின் வலது பக்கத்தில் ஐந்துகர நாடியும் இடது பக்கத்தில் ஐந்து பாத நாடியு முற்பத்தியாகி வலமிடப்பாகங்களை யிணைத்து அறிவின் உணர்ச்சிக்குரியதாய் வழங்குகின்றன. (சகூ)

பரீக்ஷணிய நாடி, பதம், * லிகம், அக்ஷி முதலாய உத்தமாங்கங்களிற் பிரவேசித்து அநேக காரணங்களை யாராய்ந்தறிகிறதற்குத் தீபத்தின் பிரகாசம் போலப் பிரதி யனுகூலமுடையதாயிருக்கிறது. அப்படியானுலும் ஹாத பைரவி சம்பந்தமான நாடிகள் பத்தும் சிறந்தவைகளா யிருக்கின்றன. சுக்கில சுரோணிதங்களை விட்டனுபவிக்கிற ஏது ஒன்றுளது; அவை வந்துழிக் கண்டுகொள்க.

புருஷருக்கு, தகனகாதபைரவி என்ற பெயரையுடைய ஏக ஏக நாடி முக்கியமானவை; அதுபோலவே ஸ்திரீகளுக்கும் வாமகாத பைரவி என்ற பெயரையுடைய ஏக ஏகநாடி முக்கியமானவை. அவைகளைப் பரீக்ஷித் தாராயும்பொழுது மனுஷருக்கு நடக்கவேண்டிய அனேக காரியங்களைத் தெரிவிக்கின்றன.

ஹாதபைரவி நாடியின் அம்ஸம் ஜனனேந்திரிய காரணங்களுக்குக் காரியபலனுடையதாயிருக்கிறது. இராஜேந்திரியப் பரீக்ஷைகளை இரண்டு பாலாருக்கும் கையிலே பார்க்கும்பொழுது அந்த நாடியின் நடை ஞானத்தின் காரணமாகிய மேனிலைக்குரியதோ அல்லது பிறவியின் காரணமாகிய செகத்தினுரிமையைப் பெற்றிருக்கிறதோ வென்பதைப் பிரித்தறிந்து குணங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியது.

இரண்டாம் பாகத்திற் கூறப்படும்.

---

* லிகம் - மை; அக்ஷி - கண்.

## இரஜேந்திரியப் பரிக்ஷையை யறிதல்.

புருடருக்குச் சுக்ல வுற்பத்திக்குப் பீஜங்கள் பிரயோசனமாயிருப்பது போலவே, ஸ்திரிகளுக்கும் இரஜஸ் என்னும் தாது உற்பத்தியாகிறதற்கு, 1பலம் நிமித்த காரணமாக 2 கிரந்திகள் பிரயோசனமாயிருக்கின்றன.

புருஷர்களுக்குப் பைரநாடி ஆதாரமாக உந்திஸ்தானத்தில் மூல பாகம் வலப்பக்கமாக ஒரு நாடி உற்பத்தியாகிப் §பிருக்கஸ்தானத்தைப் புரந்து பின் ஊர்த்துவமார்க்கமாக இடப்புறம் மேலெக்கி, புப்புசத்திற்கும் சார்பாய் இரத்தாசயத்தை யொட்டி வலது கர நாடியுடன் பொருந்தி அரைப்பலத்துடன் பேசுகிறது; அப்படியே ஸ்திரிகளுக்கும் ஆமாசயஸ்தானத்தில் அதோ பாகம் இடப்பக்கமாக ஒருநாடி உற்பத்தியாகிப் பிருக்கஸ்தானத்தைப் புரந்து பின் ஊர்த்துவமார்க்கமாக வலப்புறம் மேனோக்கிச் சுவாச ஸ்தானத்திற்கும் சார்பாய் இரத்தாசயத்தை யொட்டி யிடது கர நாடியுடன் பொருந்தி அரைப்பலத்துடன் பேசுகிறது.

## அங்குஷ்ட தேகிகள் நாடி.

கூன், குறள், முடம், ஊமை, முணமுணம் முதலாயினோரையும், அலியரையும் அங்குஷ்ட தேகிகள் என்று சொல்வது.

அலியரில் (பால் வேற்றுமை) பெண்டன்மையானால் இடது பாத நாடியும்; ஆண்டன்மையானால் வலதுபாத நாடியும்; சடத்தில் வித்தியாசமான குணகுணங்களை மாற்றிச் சம குணத்தை, இருவருக்கும் தனித்தனி எடுக்கிறது. ஆனால் இது எல்லாவழியிலும் பொருத்தமானதல்ல. இவர்களுக்குச் சமகுணம் ஏகசாதியான இலக்ஷணத்தைக் காட்டுகிறதாம். சிலருக்குக் கோஜத்தில் சமகுணமாகிறது. அந்தக் கோஜம் இயல்பிலே மாறுனது. இடையிற் பலம் வாங்கப்பெற்ற நபுஞ்சகனுக்கு நாடி, பிரதி குணங்களுண்டாகிற அந்தந்தக்காலங்களுக்குத் தக்கதாய், ஓதி பொருட்டு கிலே பெறுகிறது. வதன உரோமம் மேலிதழில் 4பொடித்திருக்கும் பேடருக்கு வலப் பக்கத்திலும், அப்படி அல்லாமற் கன்னங்களில் மாத்திரம் பொடித்திருக்கிற பெண்டருக்கு இடப்பக்கத்திலும் முதற் பரீட்சையை எடுக்கவேண்டு மென்பது விளங்கவேண்டியிருக்கு.

1 பலம் என்பது அக்ஷராகாரகிருதி. 2 கிரந்தி-கோளம். § பிருக்கம்-பீசம்.
4 பொடித்தல்-அரும்புதல்.

நபுஞ்சகருக்குரிய பாதநாடியின் சிகை, சிலருக்கு நாபியிலும், சிலருக்கு மேஷ்ரங்களிலும், சிலருக்கு கருப்பை வாசலிலும், சிலருக்கு ஆமாசயத்திற்காதாரமாயுள்ள நாடி சக்கரத்திலும் சேர்ந்திருக்கிறதாகக் கூறுகிறது.

அலியருள்ளும் உத்தமிக்கு இடதுகரநாடி கற்பிக்கிற நாதத்தை அல்லது சிகையை யடைகிற தகனன், கன்னங்களுக்கு முதன்மையாகச் சில சேவலின் வால்களுக்கொப்பான புச்சங்களை விவரிக்கிறது, சுழுமுனை நாடி பலபிரிவுகளையுடையதாய்ப் பாரிச பாகங்களில் விகாரப்பட்டிருக்கிறது. எளிதிற் கோபமுண்டாகும் மனைவிக்கு வலதுகர நாடி புறவடியிற்போய்க் கிரந்திகளையுடைய தாயிருக்கிறது.

பிறவியில் உறுப்பையிழந்த அங்குஷ்டதேகிக்கு நடக்கிற கோஜகதியையும், இடையிட்டுறுப்பையிழந்த அங்குஷ்டதேகிக்கு நடக்கிற கிருத்திரிம கதியையும் ஓர்ந்துணர்ந்து; அங்குஷ்டமூலம், கைப்பொருத்து, 5 (குடிகை, அநுகுடிகை) குல்பஸ்தானம், கபாலம், பாரிசம் ஆகிய இந்த ஆறு இடங்களிலும் பரீக்ஷை பண்ணி வியாதியை நிர்ணயிக்க வேண்டியது. கூறிய ஆறிடங்களுக்கும் விவரணம்;— அங்குஷ்டமூலநாடிப் பரீக்ஷையை, கூர்பரத்திலும், புயத்திலும்; குல்பஸ்தானப் பரீக்ஷையை குடிகையிலும், அநுகுடிகையிலும்; கபாலநாடிப் பரீக்ஷையை, பாரிசத்திலும், கைப்புயத்திலும் அறியலாம். 5(குடிகை-கணுக்கால்).

நபுஞ்சகிக்குக் கைநாடிப் பரீக்ஷையில்லை யென்று பின் கூறப்படினும், ரோகமாயிருக்கும் பொழுது கையில் பரீக்ஷை பண்ணி யறியவேண்டியது. அங்குஷ்டமூலத்தில் பைரவிநாடி மணிரந்திரமமையப் பெறுத சிகையையுடையதானபடியாற்றான் நபுஞ்சகிக்குக்கைநாடி பேசுவதில்லை யென்று பின் கூறப்படுகிறது. அங்குஷ்டமூலத்திலமைந்திருக்கிற கிரந்தி இயறகைக்கு மாறுன தாயும் அதிற் சகித்திருக்குமிரத்தம் கிரமமாய் நடைபெறுந் தகுதியில்லாததாயுமிருக்கிறதாம்.

சம்போக காரணமான குறிப்புகளறியப்படும்பொழுது அவர்களுக்குப் பலமில்லாத நாடி கற்பிக்கிற அறிவைத் தேகமடைந்திருக்கிறது. தாது நாடி சம்பந்தமாய்க் கற்பிக்கிற அறிவு தேகத்திலில்லாமலுமல்ல, அப்படியானலந்த விகாரம் கிரந்தாமானது, இந்தக் குணம் கருப்பை வாசலிற் கால்கொள்ளுகிற பொழுது,

அவஸ்தையை அனுபவிப்பவள்நாடி தேகத்திலறிய முடியாது, கருப்பகாலத்திலனுபவிக்கும் வயாவுமுதலிய சுபாசுபங்கள் இட்டமாய்ச் சுகப்படுகிறது.

தாது நாடி சம்பந்தமாய் என்பது,—அக்ஷர வடிவமான நாடிச் சக்கரத்திலுதித்த ரேகா நாடியைப் பைரவி நாடி ஒன்றித்து நெருங்கின தன்மை, அது விரிந்து கிளைகளையுடையதாய்த் தான்போயந்திக்குமிட மெங்ஙனே அங்கே அக்ஷர வடிவமான கிரந்திகளையுடையதாய் முடிகிறதாம்; ஆனபடியாற்றான் நாடி அங்க முற்றிலுந் தாதைச் சகித்து நடக்கிறதன்மை. அங்குஷ்ட தேகிகளுட் சிலருக்கு விகாரம் நிருவாகமில்லாமலிருப்பது.

ரோகங்களின் கூறுபாடுகளை யறிகிற கையில் ஊடுருவி நடக்கிற முடவருக்குக் குணங்களை மாற்றி எடுக்கிற நாடி தோற்றிக் கற்பிக்கிற அறிவுக்குரிய வலதுபாதம் பேசப்படுகிறது. தோஷங்கள் மூன்றும் வைத்தியனுடைய இடது கைவிரல்களுக்கு இணங்கியும் விரோதமாயும் நடக்கின்றன. உஷ்ணம சம்பவிக்கும்பொழுது பங்கப் பட்ட அந்த உறுப்பின் முடப்பாகத்தை யடைந்து பேசுகிறது. மலசலவாதிகளில், நாடி தெளிவான நடை, அல்லது ஒரு காடியின் நடையைப்போலாராய்வான நடையென்றும் சொல்லலாம்; இயல்பிலே யுள்ள சமமானநடை மந்தகதி, அல்லது ஒரு எருமையின் நடையை உவமையாகக் கூறலாம். இந்த நடைகள் தோற்றி மறைந்து விம்மி உற்பிதமாகிற முதற் குணம் வாதத்தைத் துண்டித்து நடக்கச் செய்கிறது. அந்த வாதத்தின் பிரபஞ்சனகதி பிரயோசனமுடையதாகிற பொழுது கூறிய எருமை நடை சுழன்று அதிகரிக்கிறது; அப்பொழுது பாதம் கற்பிக்கிற கற்கியினுவமையான நடையையும், நாடியிற் பேசுகிற உஷ்ண குணத்தையும்; இடது பாதம் பேசப்படுகிற உரோகிகளுக்குப் பாதம் கற்பிக்கிற 6ஸாதமான நடையையும், நாடியிற் பேசுகிற ஆயாசமான குணத்தையும் கையிலே பரீக்ஷை பண்ணி அறியவேண்டியது. (6 ஸாதம்-சுத்தம், க்ஷீணம்.)

தாது நாடி சேர்ந்திருக்கிற முடப்பெண்ணுக்கு மத காலக் குறிப்புக் காணப்படும் பொழுது, நாடி தாரவில் நிலையற்று நடக்கிறது. தாது நாடியில்லாதவளுக்கு அந்தக் காலத்தில் பங்கப் பட்ட உறுப்பின் முடப்பாகத்திற் பேசுகிறது. இங்கே முதற்

குறித்த பேதைக்குக் கணபங்கமான தோஷம் வைத்தியருடைய வலதுகைக் குறிப்பிற்றோற்றும் பொழுது, அந்தப் பாதங் கற்பிக்கிற கேவல உபலக்ஷணமான மாத்திரை ஒரு இரத்தத்தின் சக்கரச் சுற்றைப்போற் சுழன்று தராவில் நிலைகொள்ளுகிறது; தேகத்தில் இடப்பாத நாடி பேசுகிறது. இரண்டாவது குறித்த பேதைக்குத தாது நாடி யல்லாத மானச சம்பந்தமான நாடியானால் (தமனிக்குரியதானல்) அந்தச் சுழற்சியைப் பெற்றிருக்கிற நாடி தேகத்திற்குரியதல்ல; அது மூடப்பாகத்திற் றத்துவமுடையதாகிப் பேதப்படுகிறது; இவளுக்கு வலது பாத நாடி பேசுகிறது. இவைகளைத் தேகத்தின் கூறு பிரித்தறிந்து இடது வலது பக்கங்களை மாற்றி எடுத்துப் பரீக்ஷை செய்ய வேண்டியது. (ஏககாதகிநாடி தேகத்திற்கொரு நேத்திரம் போனின்று ரோககாரணங்களைத் தெரிவிக்குமென்று பின்னும் கூறப்படும்.)

சிலவேளை யுத்தத்திலாவது, அல்லது தற்செயலாயிடையிட்டாவது, அங்கபங்கமான ஒரு கால் மூடமானவனுக்குத் தேகத்திற் சுழுமுனை நாடி பேசுகிறது. வியாதியின் கூறுகளை விளக்கும் தோஷமுண்டாக்கின முதற்குணம் இரண்டு கூருகாமல் ஏகசாதியாயிருக்கிறது. இந்தப் பத்திப்பை நாபிஸ்தானத்தில் அல்லது வன்மஸ்தானங்களிலறியவேண்டியது. அங்குஷ்ட தேகிகளுள் திறமையான கூனன், குறளன் ஆகிய இவர்களுக்கு ஏகநாடி இடைவிட்டுக் கிரமமாய் நடக்கிறது.

ஆனபடியால் இவர்கள் காரிய நிபுணராயிருப்பாரென்பது ஒரு குறிப்பு. தன்னயங் கருதிப் பேசுகிறநாடி யறிவும் தோற்றுகிறதில்லை. மனைவி விகார வேட்கையினல் குறிப்பைக் காட்டும் பலனையுண்டாக்கி யளிக்கும் சுவரணையும் பேதமையாயிருக்கிறது. பிணியினல் வேதனைப்படும் குணங்களைத்தோஷங்கள் தூஸரியிற் றூண்டித்துப் பேசுகிறது. அந்த நாடி கோஜாதை காரணமாகத் தோற்றிக் குணங்களை மாற்றி எடுக்கிறது. இது ஒருபோது பரம்பரை வழியாகவும் நடைபெறும்.

ஊமை, புணமுணம் முதலாய இவர்களுக்குப் பரீக்ஷை புயத்திலறியப்படுவது.

## பரீக்ஷா பாகவிதி.

பரீக்ஷணீய நாடி, பெண்களுக்கு இடது பக்கத்திலும், ஆடவருக்கு வலது பக்கத்திலும் காரண சம்பந்தமுடையதாயிருக்கின்றது. சிவனேடுள்ள சகல தேகிகளுக்கும் ரோயின்ன உறுப்பிலுண்டாகி யிருக்கிறதென்பதையும் அதின் காரணங்களையும், வைத்தியனுடைய மனங் களிப்புற வினவும், வினவுக்கு விடையுமாகத் தெரியப்படுத்துகிறது. (ரு0)

## அங்நட்ட தேகிகளின் நாடிவிதி.

பெண் கிருத்திமத்திற்கொப்பான உறுப்பமைந்த நபுஞ்சகருக்குப் பார்க்கும் நாடிப் பரீக்ஷையில் பிரதானமாக அறிந்துகொள்ளவேண்டியது யாதெனின்: முதல் உறுப்பின் வித்தியாசமறிவது,— அது ஆண்டன்மையோ பெண்டன்மையோ என்பது. ஆண்டன்மையாயின் வலதுபக்க நாடியும், பெண்டன்மையாயின் இடதுபக்க நாடியும் பேசப்பட்டது. இரண்டாவதாக தானப்பெயர்ச்சி யறியவேண்டியது: அது உத்தம தானமோ அதம தானமோ வென்பது. அவர்களுக்கு நாடிநிலை உத்தம தானத்தைவிட்டு நீசதானத்தையடைந்திருக்கிறது. நபுஞ்சகனுக்கு அமைந்திருக்கும் குறி எவ்வகையோ அவ்வகையே நபுஞ்சகிக்கும். இவர்களுக்குரிய சாரீர நாடியின் தன்மை ஒப்புவமையில்லாத ஓரே தன்மையானது. அதினுடைய கதியைச் கோசகதி என்றும் கிருத்திருமகதி யென்றுஞ் சொல்லலாம். சடத்திலே உறுப்பு மாற்றப்பட்டது போலவே நரம்புகளுந் தங்கடங்களுக்குரிய உறுப்புகளி லமைந்திராத நிலைமையைப் பெற்றிருக்கின்றன. அல்லது உத்தம தானத்தை யிழந்து குறைந்த தானத்திற் பார்த்தறிகிற நாடி யென்றுஞ் சொல்லலாம்.

நாடியின் நடைக்குக் காரணமாயிருக்கிற, ரத்திரம் எப்படி ஸ்தாபித்திருக்கிறதோ அதற்குப் பொருத்தமாக நாடியும் வைக்கப்பெற்றிருக்கிறது. பதமே காரணமாயிருக்கிறது. கரநேத்திரக் குறியும் சரணச்சிகையி லறிந்துகொள்ள வேண்டியது. இடது பக்கத்திற் கிருக்கவேண்டிய பைரவி நாடியின் நாதம் வலதுபக்கத்தி லமைந்ததாயும், அதினுடைய சத்தி

மார்க்கத்தில் ஆடு மாடு முதலிய மிருகங்களுக்குப் பிணிக்கப் பட்ட கரம்பின் முடிச்சுகளுக்கு ஒப்பானதாயும், புச்சம் சேவல் மயில் முதலிய பறவைகளின் வால்களுக்கு ஒப்பானதாகவும் பாரிச பாகங்களில் மாறியிருக்கிறதாகத் தேகம்பெற்றிருக்கின் றது. அதுபோலவே வலது பக்கத்திற்குச் சிருட்டிக்கப்பட வேண்டிய பைரவிநாடி இடது பக்கத்திற்கும், இடது பக்கத் திற்குச் சிருட்டிக்கவேண்டிய நாடி வலது பக்கத்திற்கும் மாறி யிருக்கின்றன. இவர்கள் பக்க பாரிசங்களில் உவத்திரவத் தோடு கூடிய வேதனையுடையவராயிருப்பார்கள் என்பதாம்.

உத்தமமான உறுப்பமைந்த மனுஷருக்கு விதித்த நாடி ஸ்தானங்களில் நாடியின் குணம் பேதங்களை எப்படியறிந்து கொள்ளுகிறோமோ அப்படியே பிறவியிலே யுறுப்பை யிழந்த ஏகபீசகி, சந்துவாங்கி முதலிய அங்குடேகிகளுக்குப் பக்க பாரிசங்களிற் பார்த்தறிய வேண்டியது. (ருஉ)

சிருட்டிப்பிலே பேதப்படாத உறுப்பமைந்த நரருக்கு நாடியின் நடையைக் கையில் அங்குஷ்ட மூலத்திலும், வித்தி யாசப்பட்ட உறுப்பமைந்த ஷண்டனென்று சொல்வதாகிய அலிகளுக்கு, காலில் குல்பஸ்தானத்திலும், அங்கக் குறை பாடானவருக்குப் பாரிச பாகங்களிலும் பரீக்ஷைபண்ணி யறியவேண்டியது. (ருங)

## நாடி பார்த்தறிகிற இடங்கள்.

கரப்பிரயோகம் அங்குஷ்ட மூலத்திலும், பாதப் பிரயோ கம் குல்ப ஸ்தானத்திலும், தேஸப்பிரயோகம் நாபிஸ்தானத் திலும் பால்வேற்றுமையின்படி அறிந்துகொள்ளவேண்டியது. இன்னும் பாரிசபாகம், கபாலம் ஆகிய இந்த இடங்களில் நடக்கின்ற நாடியினிலக்கணத்தையும் பரீக்ஷை செய்து வியா திகளை நிர்ணயித்துக்கொள்ள வேண்டியது. (ருச)

பொதுவாய்க் கூனன், குறளன், முடவன், பேடி இவர்க ளுக்குப் பாதத்தில் பரீக்ஷை செய்யலாம்

அங்குஷ்ட மூலதானத்தில் நடத்துகிற அப்பியாசம் பெரும் பாலு முரோகிகளுக்குரியவிதி, மஸ்தகநாடிப் பரீக்ஷை இடை

விடாமல் வாசித்து அதில் புலனைச் செலுத்துபவருடைய குணத்தை வெளிப்படுத்துகிறது. கூறிய தானங்களெவையிலும் அங்குஷ்ட மூலத்திற் பார்த்தறிவது இலகுவாய் விளங்கக்கூடிய தன்மையால் அதைப் பிரதானமாகக் கூறியது. (௫௫)

மஸ்தகநாடி ஈவுபெருத கூடாரத்தைச் சுற்றியிருக்கிற துணியின் மறைப்பை யொத்த, தேகமும் வித்தியாசமானது. இனன்ஸ்தானநாடி பிரிந்து நடைபெறுகிற காரணங்களை விளங்கிக்கொள்ளுகிற ஸ்தானத்தைத் தேகநாட்டமென்று கூறப்படுகிறது. உதராக்கினியின் பலாபலன்களை விளங்கி வியாதிகளைச் சரியாய் நிர்ணயித்துக் கொள்ளவேண்டியது. (௫௬)

உந்தி, உதடு, பாணி, பாதம், கண்டம், நாசி என்பனவாகிய இந்த உறுப்புகளுக்குச் சமீபமாகத் தீவிரகெதியான நாடி ஸ்தாபித்திருக்கிற காரணம் அந்தந்த உறுப்புகளுக்குரிய, ஒலி, முயற்சி, உற்சாகங்களை அததற்கேற்ற பிரகாரம் செய்ய, செய்விக்க, நியமிக்கப்பட்டிருக்கிறது. குறித்த உறுப்புக்களிலிருந்து பிறக்கின்ற ஓசையை யவாவிக், கண்டத்திலிருந் துற்பத்தியான இசை நரம்பை விளக்குகிற பிராணவாயு பிரதியனுகூலமாகச் சஞ்சரிக்கிறது. அது சுத்தபாவகனு லேவப்பெற்று முதல் உபத்திரவத்தைக் கொடுத்துப் பின் சுகத்தைக் கொடுக்கிறது. (௫௭)

## ஜீவாதாரமான நாடி.

ஆண், பெண், அலி எனப் பால்வேற்றுமையை யுடைய மக்களுக்கு, பாணி, பாதம், கண்டம், கண், நாசி, செவி, சிங்ுவை, அந்தபாகம், யோனி லிங்கங்களிலும், வலமிடப்பாகமாகப் போய்க் குணங்களைக் கொடுக்கிற நாடிகள் பதினாறும். அவைகள் ஜீவாதாரமான வுணர்ச்சி கருவிகளை யருட்டுகிற நாடிகள். (௫அ)

சூரியன் நாடி உத்தமமான இலக்ஷணத்தைப் பெற்றிருக்கிறவருக்கு வலதுபக்கமாகவும் இடதுபக்கமாகவும் இனம்மாறி

எடுக்கிற நாடியைத் தேகமடைகிறது. இது ஜீவாதாரமான உறுப்புகளைப் போஷிக்கிற பதினாறு நாடியையும் பின்பற்றுகிறது. தேசன் தேவி என்னும் இரண்டும் அறியுமறிவு இங்கே இல்லை.

## கண்ட நாடியின் குணம்.

*கண்டநாடி, ஆகந்துகச்சுரம், தாகம், ஆயாசம், மைதுனம், மனத்துயரம், பயம், சோகம், கோபம் ஆகிய இவைகள் காரணமாக உண்டாகிற ரோக குணங்களைத் தெரியப்படுத்துகிறது. (ருகூ)

## நாசிநாடியின் குணம்.

நாசிநாடியானது, மரணத்திற்கேதுவான வருத்தங்களின் குணங்களையும், பசிபட்டினியிருந்து அகடுகிரம்பப் பூர்த்தியாயுட்கொண்ட இரையின் குணவீனங்களினு லுண்டாகின்ற நோயின் காரணங்களையும், விரகநோய், கண்டரோகம், சிரரோகம், கர்ன்னரோகம் ஆகிய இவைகளின் குணங்களையும், அனிலசம்பந்தமாகப் பிறக்கிற ரோகங்களையும் வெளிப்படுத்தும்.

## அசைநிலைப் பிரமாணம்.

நாடி முன்கையி லக்தம் மணிபந்தத்தில் இரண்டங்குலப் பிரமாண மசைந்து நடக்கிறது. காலில் குல்பஸ்தானத்தி லிரு விரலெடையளவு நடக்கிறது. கந்தரமூலத்தி லிரண்டிரண்டங்குலப் பிரமாணமும், மூக்கிலிரண்டங்குலப் பிரமாணமும், மேஷ்ரஸ்தானங்களி லிரண்டங்குலப் பிரமாணமுமாகக் காதின் துவாரங்களினு மப்பியாசஞ் செய்வது. (கூக)

கட்டிய வித்தியாசம் நிர்வாணமான வெற்றுடம்பின் பகுதிகளுக்குரியது. மணிபந்தமமையப்பெற்ற இடம் எங்கேயோ அந்த இடத்தில் வஸ்திரகவசஞ் செய்து நாடியோட்டத்தைப் பார்த்தறிந்துகொள்ளலாம். புச்சம் பிரிந்திராத காதகனுடைய முன்கையி லக்தத்திலுள்ள நரம்புகள், ஒரு திராட்சக்கொடியிலுள்ள கணுக்களுக்குச் சமானமான முடிச்சுகளை யுடையதாய் மாறிப் பிணிக்கப்பட்டிருக்கின்றன. இலக்ஷணப் பொருந்த

---

* கண்டம்-கழுத்து.

மில்லாத அனேக கிளைகள் அமங்கலப் பொருத்தமாக இடம் பிறழ்ந்து பெயருகின்றன. அவைகளைப் புஜநாடியின் கிளைக ளென்று சொல்லப்படும். நாடியின் நடை ஒரு அங்குலப் பிரமா ணந்தான் பிரிந்து இரண்டங்குலப் பிரமாணமாக நடக்கிறது. அது தானப்பொருத்தத்திற் குரைத்த இறுதிநிலையின் ஒரு பகு தியேயல்லாமற் றேகத்திற் கடையாகக் கூறப்பட்டதல்ல. பைரவிநாடியின் சிகை உயர்ந்த வருணமாகச் சிருட்டிக்கப்படா திருந்தால் நீசத்துவமடைகிறது. மேலே பேசிய இரண்டிரண் டங்குலப் பிரமாணங்களின் விவரம்: அக்கிரபாகம் கர்ன்னரந் திரங்களுக்கும், கண்டஸ்தானம் நாசிக்கும் விட்டு அனுபவிக் கின்றன. நடை துண்டியாமற் கர்ணங்களை ஊடுருவி நடக்கிற குணம் அக்கிரபாகமடைகிறது, இரண்டிரண் டங்குலப் பிர மாணம். இரண்டிரண்டங்குலம் என்றது ஈவைக் குறித்தது. காதகியின் நாடி விதிவிகிதமில்லாதது. தானப்பொருத்தமாக அறிகிற நாடி தேகத்தை யிரக்ஷித்து நடத்துகிறது. (சூ உ)

அந்த அங்குலப்பிரமாணம் என்பது பதர் நீக்கி யெடுத்த வாற்கோதுமை அரிசி ஒன்றுக்குச் சரியென்றுஞ் சொல்லலாம். அன்னரசங்களின் சத்துத் தங்கிப் போம்பொழுது நாடிநரம்பு களில் வழக்கப்படி செல்கிற இரத்தத்தின் பிரமாணம், சிலவேளை தோஷாகிதமான வித்தியாசங்களினால் கூடியுங் குறைந்து மோடு கிறது. அதனாலே அங்குலப் பிரமாணமும் வித்தியாசமடை கிறது. மூன்று தோஷங்களும் அனாமிகைவிரலின் மையத்தில் வளருகிறதும் தேய்கிறதுமாயிருக்கிற காரணத்தினால் ஒரு கர்த் தாவுக்கு நிகர் கூறுவது ஒப்புவமையல்ல. ஞானவிரலில் அதி காரமுடையவைகளாயிருக்கும்பொழுது ஒரு மாதாவுக்குச் சரி யாயும், அதிகாரமற்றிருக்கும்பொழுது ஒரு கிருகமேதிக்குச் சரியாயு மொப்பிடக்கூடியவைகளா யிருக்கின்றன. ஸ்திரிக ளுடைய நாடிப்பரீட்சையில் வைத்தியன் தன்னுடைய ஞான விரலில், அந்த நாடியின் நடையை ஸ்பரிசஞ் செய்தும், பரிசி யாமலும், அறிந்துகொள்ளவேண்டிய இரண்டு ஏற்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு கிருகஸ்தன் எவ்விதமான

பெண் விஷயத்திற் போய்த் தாழ்மை யடைந்தவனாய்க் காணப் பட்டாலும் அவனுக்கு நாடிப்பரீக்ஷை *சிவரூபமாகப் பார்க்க லாம். (சுகூ)

வேற்றுமைப்பட்ட அங்குலப் பிரமாணமாவது: ஓர் பந்தி னதைப்பிலிருந்து விலகி ஒய்ந்த அணுவினளவான துடிப்பை. வருத்துந் தாதுக்குப் பிரதியாகத் துகிற்போர்வையிட்டுப் பரீக்ஷிக்க அந்த அங்குல அளவையிலிருந்து ஒழுகி நடக்கும் உருடு நடையை ஒரு யவைப்பிரமாணமென்று கூறிபது. இரண் டங்குலப் பிரமாணப் பரீக்ஷை தேகரூபமாயிருந்தால் நாடித் தானம் மாற்றி, ரகதிஸ்தானமாக எடுக்கிறது. அது நாடிரூப மானால், கரமஸ்தானமாக மாற்றிக்கொள்ளுகிறது. தலைவனில் லாத ஸ்திரிக்கு நாடி சிவரூபமாக வளருகிறது. அவளுக்குச் சிவரூபமான காரணங்கள் விலக்கு. தீவிரகெதியை யுடைய கிருக ஸ்திரிக்குத் தேவி நாடி கையிலே விவரிக்கிறது. (சுஎ)

## ரகதிஸ்தானப் பரீக்ஷை—தேகரூபம், நாடிரூபம், ஜீவரூபம் என்பன.

அவற்றுள்—தேகரூபமாவது அங்கத்தைப் பிரதிரூபகம் பண்ணி இரகசியத்தானங்களை விட்டுப்பார்ப்பது; அனுமிகை யொழித்த முதல் இரு விரலையுங்கொண்டு பரீக்ஷைபண்ணி யறி வது. நாடிரூபம் என்பது கைபார்ப்பிக்கப்படுபவரது நாடிக் குறிப்பிடத்தில் அல்லது அங்குஷ்டமூலத்தில் பிரதிரூபகம்பண் ணிப் பார்ப்பது; இதற்குக் கரஸ்தானப் பரீக்ஷை என்றும் பெயர்; மூன்று விரலையுங்கொண்டு பரீக்ஷைபண்ணுவது. ஜீவரூபமாவது உயிருக்காதாரமான உறுப்புக்களைத் துகிற் போர்வை செய்து பிரதிரூபகம்பண்ணிப் பார்ப்பது. மூன்று விரலினு லுணர்ந்தறிவது. ஜீவரூபஸ்தானப்பரீட்சை கணவனை யில்லாத அறக்குடிமகளுக்கு விலக்குவிதியானது. கரஸ்தானப் பரீக்ஷையில் நான்கு விரலினாலும் பார்க்குங் குறிப்பு ஒன்று, அது கருப்பஸ்திரிக்குத் தெளிவாய்ப் பிரகாசிக்குமென்பதாம். ()

---

* சிவரூபம் என்பது அணிவிரல் மத்தியில் நாடியின் நடையைப் பொருந்தப் புணர்த்திப் பார்ப்பதாம்.

பாலியப்பருவம் நீங்கி ருதுவாகி விவாகஞ் செய்யாமலிருக்கும் குமரிப்பருவத்தை யுடையவளுக்கு, ரகதிஸ்தானப் பரீக்ஷை கூறியது.

இது: யாவராலும் நிந்திக்கப்படத்தக்க தூர ஸ்திரிக்கு விலக்கப்பட்டது. வருத்தமாயிருக்கும்பொழுது நாடியைச் சிவரூபமாகப் பரீக்ஷைபண்ணியறியலாம். இல்லறத் தலைவிக்குப் பரீக்ஷை செய்யவேண்டிய முறை இல்லறத் தலைவனுக்குக் கூறிய விதிப்படிபோலேயாம். ஏக அங்குலப்பிரமாணத்திற்கு மிதமான சேர்க்கை தொக்தநாடி, அது ரோகப்பரீக்ஷைக்குரியது; ரகதிஸ்தானப்பரீக்ஷையி லறிவதரிது. இதில் பிடகரறியவேண்டிய பிரதானமான காரணமொன்றுளது: அது யாதெனின், பாசமற்ற குணமுடையவனாய் அங்கனையின் மனசுக்குத் துயரத்தைக் கொடுக்கக்கூடிய செய்கை யொன்று மில்லாதவனா யிருக்கவேண்டியதுதான். (௬௬)

வாத பித்த கபங்களாற் றோந்தித்துப் பிறக்கின்ற சன்னிபாதங்களிலும், அதைப்போன்ற மற்று முரோகங்களிலும், சாத்திய, அசாத்திய, கஷ்டசாத்திய பேதங்களைச் சோதனைபண்ணி யறிகிற குணநாடியை, இனி இங்கே விவரணமாக எடுத்துக் காட்டப்படும். (௬௭)

முதலாம் அத்தியாயம் முற்றுப்பெற்றது.

---

## இரண்டாம் அத்தியாயம்.

### நாடி ஞான சமயம்.

நாடியின் நடையைப் பரீக்ஷைபண்ணி யறிவதற்குத் தகுந்த காலங்கள் மூன்று: அவை, பிராதகாலம், மத்தியானகாலம், சாயங்காலம் என்பனவாம். காலையில் மலசல விமோசனஞ் செய்துகொண்டபின் எவ்விதமான நிலைமையை யுடைய தேகிகளுக்கும் நாடி பார்த்து மருந்து கொடுப்பது உத்தமம். மத்தியானவேளையில் உணவுகொள்ள முன்பும், சாயுங்காலத்திற் சூரிய அஸ்தமயன நேரத்திலும் பரீக்ஷை செய்யவேண்டியது. பரீக்ஷைபண்ணப்படுபவனின் மலசல விமோசன சௌசசுத்தி முதலியவைகளைக் கவனிப்பதுடன் திரிகால தோஷாதிக்கிரம

ரகிதங்களையும் கவனிக்கவேண்டியது. சுகதேகருக்கு நடுப்பகலிற் பித்தம் அதிகமாய் நடக்கிறது. ஆனபடியால் அந்த நேரத்தில் அவரை ரோகியென்று நிச்சயிப்பது முறைமையல்ல.

## நாடிப்பரீக்ஷைக்குத் தகாத சமையம்.

ஸ்நானஞ்செய்தவுடனும், போசனம்பண்ணினவுடனும், நாசியிலாவது தொண்டையிலாவது அடைந்திருக்குஞ் சளிக்கட்டை வெளிப்படுத்தச் செய்த பிரயாசத்தினுற் றேகமிளைப்புற்றிருக்கும்பொழுதும், அதிக பசி, தாகம், வெய்யில் வெப்பம் இவற்றால் வருந்திக் களைத்திருக்கும்பொழுதும், நித்திரைவிட்டெழுந்தவுடனும், சரீர அப்பியாசத்திற்குத் தகுந்த தெண்டு தெவாக்ஷி எடுத்தல், மல்யுத்தஞ்செய்தல் இவைகளினுலும், தேகஉழைப்பு முதலிய பழக்கவழக்கமான செய்கைகளினுலும், மனம் வியாகுலமடைந்திருக்கும்பொழுதும் நாடியைப் பரீக்ஷை பண்ணி யறிவது புத்தியல்ல. அந்தச்சமையங்களில் இரத்தோட்டம் நிதானமில்லாத தன்மையை யடைந்திருக்கிறதானபடியால், வைத்தியன் அதை ஆராய்ந்தறிந்து நிதானஞ் செய்ய வேண்டியது.

தைலம் பொருந்தியிருக்கும்பொழுதும், மைதுனந்தத்திலும், போசனந்தத்திலும், நாடி ஊர்த்துவ நோக்கமாக ஆரம்பித்து நடைகொள்ளுகிறது. இப்படியான வேளைகளில் பரிகாரி தன்னுடைய அனுபவப்படி நடத்திவந்த நல்ல குணங்களையும் கெட்ட குணமென்று விளங்கிக்கொள்ளாமற் றன்னுடைய அனுபவப்படி வைத்தியத்தை நடத்தி நிதானஞ் செய்துகொள்ள வேண்டியது. (உ)

ஸ்நானவேளையிலும், உறக்கஞ்செய்யும்பொழுதும், பசி பட்டினியாயிருக்கும்பொழுதும், தண்ணீரருந்தும்பொழுதும், வசியம் முதலிய இடுமருந்து தேகத்திற் சேருகிறபொழுதும், ஒரு பெண்ணைக் கற்பழிக்கிறபொழுதும் இருதயத்தில் நடக்க வேண்டிய ஒழுங்கு கபடமான செயலுடையதாகையால் அந்த நேரங்களில் நாடியின் நடை பாகனுக்கடங்காத குதிரையின் நடைக்குச் சமானமானதாயிருக்கும்.

தேக உறுதிக்குரிய அப்பியாசங்களில், இரத்தம் நரம்பின் துவாரங்களில் தகித்து நடக்கிறது. அது உடனே தேகத்திற்

செறிந்து அனுகூலமுடையதாகிறது. அப்பொழுது நாடியும் வேறுவேறான குணத்தை எடுக்கிறது; கோபிமேஷம் ஓய்ந்திருக்கிறது. தைல அப்பியங்கம் மனசுக்கு இதமான நேத்திரங்களிற் செறிந்து சுகத்தைக் கொடுக்கிறது. ஸ்திரி சம்போக முடிவிலும், உணவு உட்கொள்ளும்பொழுதும் இருதயவியக்கமோய்ந்திருக்கிறது, முயற்சிகொள்ளுகிறது. இந்தக் காரணங்களினாலே நாடிப்பரீக்ஷை பண்ணுதற்குரிய நேரப்பொருத்தமும், பருவப்பெயர்ச்சி காலங்களுக்கேற்றபடியும் மாற்றி எடுக்கவேண்டி நேரிடுகிறது. முத்தேகிகளின் சித்தம் நற்குண நற்செய்கைகளிற் புலாதியடைந்திருக்கும்பொழுது, தேகத்தில் சூரியன் நாடி யுறுதியாய் நடக்கிறது. அப்பொழுது மனசுக்குரிய இயல்பான குணம் ஒருவிதமான தளப்பமும் அமைதியுமாம். இதனை வேறுவிதமாகச் சொல்லப்புகின் வாதநாடி ரோகபேதங்களுக்குப் பொருந்தத் தோற்றியுந் தோற்றாமலும் நடக்கிறது. நாடி நடையை யறிதற்கு நியமனம்பண்ணப்பட்ட நேரங்களில் ரோகங்கள் தங்களுக்குரிய குணத்தை மாற்றி இன்னொரு குணத்தை யடைகிறதும் விடுகிறதுமாக விருக்கிற சமையமாம். அதனாற்றான் நாடிதர்சனத்திற்கு அந்தந்த நேரங்கள் நியமிக்கப்பட்டன.

தைலாப்பியங்கம், நித்திரை, இவற்றின் சார்பான வேறு குணங்களிலும், போசனத்தின் பின்பும் மத்தியில் விட்டெடுக்கிற *விளம்பனத்திலும் நாடி, ஒரு ஒடுக்கமான வாய்க்காலிற் செல்லும் நீரோட்டமானது செல்லவியலாமற் குறுக்கே யோடுகிற தன்மைபோல, நடக்கிறதென்று கூறுகிறார். (௪)

## இருதுகாலங்களில் நாடிநடையைப் பரீக்ஷைபண்ணி யறியும் நேரம்.

### ஆசிரியப்பா.

காலை வசந்தங் கடும்பகல் கிரீஷ்ம
மெற்பா டமைய மேமந் தருது
வருடஞ் சிசிர வகையா மஞ்சர
ருதுவின் காலமு முச்சி யவற்றுட்
சிசிரம் புலரியுஞ் செக்கரும் பெறுமே.

* விளம்பனம்-தாமதம்.

என்பது நாடித்திரட்டு: மேற்படி சித்திரை வைகாசி மாதங்களில் காலையிலும், ஆனி ஆடி ஐப்பசி கார்த்திகை மாதங்களில் மத்தியானத்திலும், மார்கழி தை மாதங்களில் சூரிய அஸ்தமயன நேரத்திலும், ஆவணி புரட்டாசி மாதங்களிலும் மாசி பங்குனி மாதங்களிலும் நடு இராத்திரிசிலும் கை நாடி பார்க்கக் குறித்த நேரங்களாம்: இன்னும் சிசிருருதுகாலமாகிய மாசி பங்குனி மாதங்களில் இருவகைச் சந்திகாலங்களையுங் கொள்ளுப.

## யோக்கிய தேக நாடிப் பரீக்ஷை.

ஸ்திரமான சித்தமுடையவருக்கும், பாச சம்பந்தத்திலிருந்து விலகிக்கொண்டவருக்கும், அவ்விதமான கபட சிந்தனையில்லாதவருக்கும், அனேக சாஸ்திரங்களைக் கற்றறிந்த அறிஞருக்கும், ஞானமுடையவருக்கும் ஸ்பர்ஸநாடி வலதுகையிலே பரிவர்த்தனமாகிச் சோதனுங்குலியையுக் திருத்தி இனமாற்றுக்கிப் போஷிக்கிறது. (ரு)

மேலே பேசிய வாயுவேகமான அசைவற்ற சித்தமுடையவருக்கும், பாசசம்பந்தத்திலிருந்து தம்முடைய ஆன்மாவை நீக்கிக்கொண்டவருக்கும், உத்தம பண்டிதருக்கும், ஞானமுடையவருக்கும், திரிகரணசுத்தியமைந்த உத்தம வைத்தியனுக்கும், கையிலே நாடியானது திபத்தின் பிரகாசத்தைப்போற்றேன்றி, வெருட்சி, சாந்தம், பொறுமை ஆகிய இந்தக் குணங்களையுடைய ஒரு காளையின் நடைக்குச் சமமாக நடந்து அங்குஷ்ட மூலத்தில் ஸ்பர்ஸமாகிறது. (சு)

## மடவைத்தியம்.

கள்ளு, சாராயம், பிரண்டி முதலிய லகரி வஸ்துக்களையருந்தி யவைகளிற் சிவிப்பவனுக்கும், நாய் நரி முதலிய மிருகங்களின் நெஞ்சுக்கொப்பான கரவடமான மனதையுடைய கீழ்மகனுக்கும், மல மூத்திராதி வேகங்கள் பழுதாகி நாடி ஞானேந்திரியங்களுந் தகுதியற்றதாகின்றன. ஒருபோது, லோபி, சித்த விகாரத்தினாற் றன்னிந்திரியத்தை யொழுக விடுகிற காமுகன் ஆகிய இவர்களுக்கும் அப்படியிருக்கும், இல்லாமலுமிருக்கும். (எ)

சொல்லப்பட்ட மூடருக்கு நாடி பகுதி விகுதியில்லாதது. அந்த நாடியின் சிகை தரித்தற்குரிய இடத்தில் அதற்குத் தற்காப்பாகவுள்ள ஞானேந்திரிய நிமேட இனமாற்றமும் நிர்ப்பலமானதாகிறது. இவர்களுடைய நாடியின் நடைக்கு ஒரு ஆணெருமையின் நடையைத்தானும் உவமையாகக் கூறுவதரிது. (அ)

## யோக்கியரோகி நாடி.

உதரத்திற் றங்கியிருக்கிற மலசலங்களைக் கழித்துச் சௌக்கியமாயிருக்கிற சுகவீனருக்கு நாடி நடை கரசரணாதியவயவங்களில் மறைந்து நின்றாலும், பரீக்ஷை செய்ய விதிக்கப்பட்ட நேரங்களில் வெளிதோற்றி எழும்பி நடக்கும். (கூ)

குறித்துப் பேசிய நாடி, சூரியன் நாடி உத்தமமாயமையைப் பெற்ற தேகத்தையுடைய பக்குவரோகிக்கு அங்குஷ்ட மூலத்தோடு கூடிய ஏதுக்களறியப்படுகிறது. நோயுண்டாதற்குத் துணைக்காரணமாயுள்ள மலசலங்களை யொழுங்காய்க் கழிப்பவருக்கும், சுகத்தைப் பேணியிருப்பவருக்கும், மூலாதாரத்திற்கு முதன்மையான இருதய மியங்குகிறதற்கு முதற்காரணமாயும், மேன்மையான மூலாதாரத்திற்குச் சிரேஷ்டமாயுமிருக்கிற அக்கினி, சுத்திகாரணம் பாதநாடியின் சிகையிலும் கைநாடியின் சிகையிலுஞ் சொலித்து அங்குஷ்ட மூலத்திலே பேசுகிறது கை பார்ப்பிக்கிற ரோகிக்கறியப்படுவதாகிய நாடியின் பிரதியொலி சிகித்சாசாரீரம்: அது பைரவி நாடியின் முயற்சியினாலே பாதநாடி யொலிக்கிறது. உலகவாழ்க்கையை வெறுத்த ஞானிக்கும், முனிவர், சித்தர் முதலாய அறிஞருக்கும், நடக்கிற தக்க பலன் சுகத்தைப்போற்றி நடப்பவருக்கும், கர்ன்னபரம்பரையா யவதரித்த உத்தம வைத்தியனுக்கு அறியவேண்டிய நாடியின் சுகபலன் ஞானிகள் முதலாய அறிஞர் கணத்திற்குப் பொருத்தமானது. (க0)

## அயோக்கிய பிராணி நாடிதர்சனம்.

ஒருவன் முன் நின்ற மெய்ச் சமயத்தில் ஞான அருட்சியடைந்து அதினின்றுந் தவறிக் கரவடமான கெட்ட மார்க்கத்தில் நம்பிக்கை வைத்திருப்பவனுக்கும், பசுவின் நீனிக்கு நஞ்சிடுபவனுக்கும் அல்லது பீடையுண்டாகக்கூடிய யாதும் துர்ச்

செய்கைகளை யந்தப் பசுவினத்திற்குச் செய்பவனுக்கும், நாடி தர்சனமறிந்த வைத்தியன்மேற் குற்றமேற்றுபவருக்கும், நாடி பார்த்து வைத்தியஞ் செய்வதும், அத்தகைமையோருக்கு வைத்தியம் படிப்பிப்பதும் கூடாவாம். அப்படியானவருடைய சகவாசம் வைத்தியனுடைய நாடிதர்சனத்தையும் அவனுலவர்களுக்கிடுகிற அவுஷதங்களையுங் குற்றமுள்ளதாக்கிவிடுகிறது.

சுகத்தைப் பேணி நடப்பவருக்குக் கூறிய நாடி நோயுற்ற தேகிக்குக் கூறியதல்ல. பாத நாடியின் நிலையிலாவது அல்லது சொல்லப்பட்ட மற்றும் தானங்களிலாவது அறிந்துகொள்ளக் கூடாத நாடியை அங்குஷ்ட மூலத்திலே பார்த்தறிந்துகொள்ள வேண்டியது. தூர்த்தனுக்கு இருதயவியக்கந் தகுதியற்றதாக நடக்கிறது. குரு, உபாத்தி முதலாயினோரையும், உத்தம வைத்தியனையும் லளிதம் பண்ணிப் புறங்கூறுபவர் வைத்திய முறைமைக்குத் தகாதவர். இவ்விதமான மனுஷருக்குரிய பரிகாரநாடியிரட்டித்துப் பாபப்பகுதியை யடைந்திருந்தாலதை இதயாக்கினியின் பலாபலனென்று சொல்லப்படுகிறது. (கஉ)

## பரீக்ஷைப் பிரகாரம்.

தன்னுடைய புய நவீரத்தில் மாலையையாவது, அல்லது பட்டுவஸ்திரத்தையாவது தரிக்கப் பெறுகின்றவனும், பெரிய பீடையைத் தகனஞ்செய்கிற ரோகசங்காரகனுமாகிய வைத்தியன், நோயினூற் பீடிக்கப்பட்டவனைப் பரீக்ஷைபண்ணும் பொழுது, தான் எடுக்கவேண்டிய உத்தமஸ்திதி: தேகிக்குச் + சவ்யபாகமாயாவது அல்லது † கூர்ப்பரபாகமாயாவது பொருந்தாமல் தகுந்த ஆசனத்தில் இஷ்டப்பிரகாரமாகக் கை பார்ப்பிக்கப்படுபவனுக்கு எதிர்முகமாக அல்லது விபக்ஷமாகவிருந்துகொண்டு, அவன் பயபக்தியோடு தனக்கிருக்கிற நோயின் குணகுணங்களைச் சொல்லிக் கொடுக்கிற நிதியையாவது அல்லது மாசற்ற அடையாளத்தையாவது பக்ஷமாக ஏற்று, அந்த ரோகியினுடைய கூர்ப்பரபாகமாகப் பிரிந்து போய் அங்குஷ்ட மூலத்

+ சவ்யபாகம் - வலப்பக்கம், இடப்பக்கம், பிற்பக்கம்,

† கூர்ப்பரபாகம் - முழங்கார்பகுதி.

தில் *விமபாக மையமாக நடக்கிற நாடியின் நடையைப் பிரபஞ்சனகதி யென்று சொல்லப்படுகிறது. அந்த இடத்தில் ஒரு அதிகாரிபோலே நின்று தாக்கிக் குணாகுணங்களுக்குக் காரணமாயிருக்கிற மூன்று தாதுக்களையும் பிடகர் தம்முடைய கையின்கணுள்ள, தர்ச்சனி, மத்திமை, அனாமிகை என்பனவாகிய மூன்று விரல்களினாலும் எப்பொழுதும் அந்த வாதகதிநாடியின் நடையின் பொருட்டுப்பரீக்ஷித்தறிய வேண்டியது. (௧௩)

## மேலே சொல்லப்பட்ட நாடிப்பரீக்ஷையின் வித்தியாசமான அக்ஷர லக்ஷணத்தோடு சேர்ந்த சில காரணங்கள் காட்டப்படுகின்றன.

ரோகியின் கையில், தர்சன நேத்திரக் குறியை யூடுருவி நடக்கிற பைரவி நாடி, பாதநாடிக்கு அமங்கலமான ஒலி முயற்சிக்குக் காரணமாகச் சுண்டுவிரல், இடைவிரல், ஆழிவிரல் மூன்றிலும், ஒரு சிற்றெலியானது தன் மூஞ்சையை உன்னுதலுக்கும் நடைகொள்ளுந் தன்மைக்கும் உவமையாகப் பொருந்தி மாறி மாறிச் சாந்தமாக நடக்கிறது. உபசமனமான நாடி கையிலே துண்டித்து நடக்கிறது. அப்படியே ரோகியின் பாதநாடியின் பிரதியொலியு மோய்ந்தோய்ந் தொலிக்கிறது. வாத பித்த சிலேஷ்மங்கள் ஒன்றையொன்று நெருக்கி இடைஞ்சற்பண்ணி நடக்கிறது பாதநாடியின் நடை துண்டிக்கிற குணமில்லை. அங்குட்ட தேகிகளுக் குற்பத்தியாகிற நாடியின் சிகை ஒன்றுடனொன்று மாட்டப்பட்டு நீசகுணமான தன்மையினால், அவர்களுக்கு நாள்தோறும் செய்கிற பரீக்ஷையிற் கையிலே தோற்றுகிறது வாதநாடியின் நடையேயாம். எவர்களுக்கும் நாடித்தானம் சொல்லப்பட்ட இடத்தில் நாடியுட் குறிப்புத் தோற்றுகிறது. வலது பாத நாடி ஒருவகையான படகமென்னும் வாத்தியத் தொனிக்குவமையாக ஒலிக்கிறது. எருமையின் நடையைப்போல் நடக்கிறது. நபுஞ்சகிக்குப் பாதநாடியொலிக்கிறது மில்லை; கையிலே பரீக்ஷைபண்ணி யறிகிற காரணமுமில்லை. உத்தமமான உறுப்பமைந்த * தேகிக்குப் பாதத்தில் ஒலிக் காரணமுடையது. (*தேகி-நோயுற்ற தேகம்) (௧௪)

---

*விமபாகம் - இணங்காதிருக்கிற பகுதி, எதிரிடையான பக்கம், நெருக்கிடையிலிருந்து இட்டமாக்கிக்கொள்ளுகிறபகுதி.

ஆண் பெண் அலி என வகுக்கப்பட்ட மூன்று மரபினருக்கும் பாதத்தில்நடக்கிற மூன்றுதோஷங்களும் வைத்தியனுடைய வலது கையின் விரல்களுக் கெதிராகத் தோற்றி அசைந்து பரிசக்குறி நேத்திரங்களில் மாறி மாறி நடக்கின்றன. உபலக்ஷண மாத்திரை தரா காரணமாக அறியவேண்டியது. பெண்ணிடப் பாதநாடி, மனோதண்டம், விகாரம் முதலிய குணங்களைப் பேசுகிறது. இருதய வியக்கத்தை யுண்டாக்கி உறுப்புகளுக்குப் பலனை யளிக்கிற "கோ" ஊக்கங் குன்றியிருந்தால் மனசுக்குரிய முதன்மையான குணங்கள் சிறப்படைகிறதில்லை. சுற்றோட்டத்திலிருந்து நெறி தவறின நாடியுந் தேகத்திற் குபயோகமில்லாத கேவலத்தன்மையுடையதாய் கோவுக்கும் பாகம் பாகமாய்ப் பிரிந்து இனத்தைத் தழுவி நடக்கிற நாடிகளுக்கும் எதிரிடையான செயலையுடையதென்று கூறுகின்றது. தேகத்திற்குக் காரணப் பொருத்தமான நாடி, ஸ்பந்தன காரணங்களுக்கு மேதுவானது. வலதுபாத நாடி இடது பாதத்திலும் இடது பாத நாடி வலது பாதத்திலுமாக மாறிச் சிருட்டிக்கப்பட்ட பிராணிக்கு நிகழுகிற ஸ்பந்தன காரணம் தகுதியற்றது. (௧௫)

சிலவேளை அந்த நாதம் கையிலே வருத்திக் கடின இசை போலும் தோற்றுகிறது. விவரணமாகக் கூறியவைகளுள், ஏககாதகிநாடி தேகத்திற்கொரு நேத்திரம் போனின்று ரோககாரணங்களை யெல்லாம் வெளிப்படுத்துகிறது. ஞானேந்திரிய உற்பத்திக்குக் காரணமான நாடி சுற்றோட்டத்தை யெடுக்கிறது. பிரிந்துகொடாத பாத நாடி தேகத்திற்குப் பிரயோசனமற்றதாய்ப் போகப்போக ஒன்றுடனொன்று பங்கியின் சிக்கைப்போ லொற்றுமைப்பட்டிருக்கிற தன்மையை அங்குஷ்ட மூலத்திற் பார்த்தறிந்துகொள்ளலாம் (௧௬)

நபுஞ்சகருக்குத் திரிதோஷங்களின் தோற்றமும் வித்தியாசப்படுகின்றது. அதுபோலவே நாடி மூகமும் இடம் வலமாக மாறிப் பேதப்பட்டிருக்கிறதென்றும், உறுப்புகளைப் போஷித்து ஊக்கம் உண்டாக்கிற புச்சங்கள் கோவோடு கூடிய காரணமுடையதாய் நடக்கிறதென்றும் கூறப்படுகிறது. இவைகளினாலும் வேறுகாரணங்களினாலும் குணமறிந்து சொல்லுகிற நாடி பொருத்தமில்லை. இவ்விதமான உறுப்பமைந்த தேகியை

விவாகஞ் செய்த மனைவி பிணியினால் வருந்தியிருக்கிறது மல்லாமல் இருதயத்திற்குப் பலனையுண்டாக்கி யளிக்கிற ஒதை யும் யதார்த்த ஞானத்தை யடைந்திருக்கிறதில்லை. (௧௭)

பின்னும் அங்குஷ்டதேகி நியாயங் கூறப்படும் அக்ஷர வடிவம் பூராகியிற் கூறப்படும்.

## உபலக்கணம்.

ரோகிக்கு நாடியின் நடை வளைந்த ரூபமான செயல்: அதைப்பற்றி யறியவேண்டிய நியாயம் இரண்டு. அவற்றுள் ஒன்று, அந்தப் பிரதம கதியைத் தோற்றுமல் மறைக்கிற குணம் புயத்தைப்பற்றி நடந்து சுழன்று பிரிந்துபோய் அங்குலிச் சந்தி களில் மறைந்து நின்று ஊறு செய்கிறதோ என்பது: மற்றயது ஏகரூபமான பிரதமகதியை கூர்ப்பரபாகத்திலிருந்து பிரிந்து போய் அங்குஷ்டமூலத்திலும் அங்குலிச்சந்திகளிலு மறைந்து நின்று, அதற்குரிய சரியான இலக்ஷணத்தைத் தெரியவொட் டாமல் ஊறு செய்கிறதோ என்பது.

தோஷம் இரட்டித்து நடக்கிற காரணம் மாத்திரை நிதான மான இலக்ஷணத்தை வளைந்தரூபமாகச் செய்கிறது. விரலின் பொருத்துக்களிலும், பிரதிநேத்திர நிதானக் குறிப்பிடத்திலும் ரூபமாகிற பரிசுத்தமான உதிரம் பகுதிப் பிரமாணமாகிற அங் குஷ்ட மூலத்திலும், நின்று ஊறு செய்கிற தோஷத்தின் கோ ளாற்றை அழிக்கக்கூடிய உபசாதனஞ்செய்து அல்லது செய் வித்து, விதிப்படி ரோகியின் கையைப் பற்றிப் பார்க்க, அங் குஷ்ட மூலத்திலிருந்து இஷ்டமாக்கிக்கொள்ளுகிற நடை *பிர பஞ்சனகதி என்ற பெயரையுடைய வாதநாடியின் நடையே யாம்; அந்த நடையையே முதற் பரீக்ஷைபண்ணி யறிவது.

அங்குஷ்டமூலத்தில், பரீக்ஷணிய நாடியின் ஏகபுச்சம் பிர தமகதிக்குரிய நரம்பு.

நாடிதர்சனத்தில் திரிதோஷங்களின் ஏகரூபமான உற்பா தம் இரண்டிரண்டாகத் தொந்தித்து, மூளையான அரிய தந்தா

* பிரபஞ்சன என்பது துண்டிக்கிற (Breaking).

மான நடையை யுடையவைகளாய் ஜீவநாடியைத் தீபத்தின் பிரகாசத்திற்குச் சமானமானதாகப் பிரீதிபண்ணுகின்றது. (௨௦)

ஒரு தலைமகளுக்கு, யாவரும் விரும்பப்படத்தக்க மூகை யான குணம் மருவியிருக்கும்பொழுது, மோகிதபுருடனுக்கும், கையிலே தமனிநாடி சுடரின் ஒளியைப்போற் றோன்றித் தனித் தனி இருவருக்கும் நடக்கிறது. அல்லாமலும் தோஷங்களின் சங்கலிதத்தால் விகாரப்பட்டு நடக்கின்ற ஒலியின் காரணமாக மூன்று தாதுக்களும் ஒன்றுடனொன்று கலந்ததுபோலக் கைக் குத் தோற்றி இரண்டிரண்டாய்த் தொக்கித்து அறிதற்கரிய தன்மை ஏகரூபமாகவும் நடக்கிறது. பாதநாடி கற்பிக்கக் கர நாடி தேகத்தை யினமாற்றுக்கிறது. (௨௧)

பிடகர், நாடிசாஸ்திரத்திற் கூறிய விதிப்படி, ஸ்திரீக ளுக்கு நாடிபார்ப்பது, முதல் இடதுகையிலும், இடது பாதத் திலும் பிரயத்தனகாரணமாக வுடைய ஹாதபைரவி நாடியைப் பரீக்ஷைபண்ணி யறியவேண்டியது. அது ஒரு இரத்தினத் தின் நீரோட்டத்திற்குப் போலியான உவமஉதிரம் ஆளப்பெறு வனவாகிய கண்களை எதிர்முகமான நிமேடம் என்று சொல்வது. கையில் அங்குஷ்டமூல மணிரந்திரத்திற் சுத்தமான இரத்தம் திவ்விய சாதியாக்கப்பெற்று, உயிருக்காதாரமான இந்திரியாதி கரணங்களைப் போஷிக்கிறதினாலும், அந்தந்த உறுப்புகளுக்குத் தகுந்த பிரமாணத்தின்படி கற்பிக்கிறதினாலும், வேறு காரணங் களினாலும் தர்சனபகுதிகளுள் அங்குஷ்டமூலப்பரீக்ஷை உத்தம மானதென்று கூறியது. எவ்வகையான குணத்திலும் அந்த இடத்தில் நடையை யறிவது சுகம். பிடகர் வருத்தக்காரரைச் சோதனைபண்ணும்பொழுது தாமறிந்தளவி லாராய்ந்து செப்ப மாய்ப் பரீக்ஷைபண்ணவேண்டியது. (௨௨)

## பிஷைக்குவிதை நாடிப்பரீக்ஷைபண்ணும் முறைமை.

அங்கக்குறைவில்லாத அங்கனையின் இடதுகை அங்குஷ்ட மூலத்திற் சுத்த இரத்தத்தைச் சகித்து நடக்கிற தமனிநாடியை, வைத்திய பண்டிதைமார் தம் கனிட்டை விரலினாலே அவளுக் கிருக்கிற சுகம், துக்கம், ஜெயம் முதலிய குணங்களை, ஜீவரூப மாகப் பரீக்ஷைபண்ணி யறியவேண்டியது. வாதம் துண் டித்து நடக்கும்பொழுது, தமனிநாடிநடையின், மத்தியக் குறி

தோற்றுது. இதில் உயர்ந்த புரிய வஸ்திரத்தி னந்தத்தைப் பார்வைக் குறிப்பிடத்திற் பிரதியாகப் போர்வைசெய்து பரீக்ஷையை நடத்தவேண்டியது. (௨௩)

அங்கநிமேடப் பிரதிஸ்தானத்தினின்று அனேக காரணங்களைத் தெரிவிக்கிற தகனநாடி அங்குட்ட தேகிகளுக்குப் பழுதுடையதாயிருக்கிறது. உத்தமமான பாதநாடி யமைந்த அங்குட்டதேகியின் ஜடம், ஜீவரூபமான நாடி தமனி காரணமாகக் கொடுத்தனுபவிக்கிறது. அது எவரும் பிரமிக்கத்தக்க இந்தப் பிராணியைப்போன்ற உறுப்பைப் பொருந்தியிருக்கிற சகல ஜீவருக்குமுடைய சுகதுக்கங்களை மானுடவைத்திய னறியும்பொருட்டு அமங்கலமான போலிநாதத்தை யொலிக்கச் செய்கிறது. ஸுசநாகரிகாமமுற்று அந்தரங்களை நினைக்கும்பொழுதுகைநாடி பிரபஞ்சனகதி, அல்லது வாதநாடி துண்டித்துக் கையிலே நடக்கிறது. அங்குட்ட தேகிக்குப் புசநாடி கர்ப்பிக்கத் தேகமனுபவிக்கிறது. இவர்களுக்குத் தேகத்திற் சொல்லப்படாத மற்றைய நாடி பேசுகிறதில்லை. பாதநாடி எப்பொழுது இடைவிடாமல் நடைபுரிகிறதோ அப்பொழுது கரநாடி பிரயோசனமான கருமச் செயல்களைத் தெரிவிக்கிறது. யாதுமோர்மமான பொருத்தனைகொடுத்து, ஓர் கணிகையைக் கலந்து காதலனுபவிப்பவருக்குக், கையிலே நாடியின் நடை தேய்ந்து உருபேற்றுப் பெலனற்றுத் தாழ்மையான நிலைமையைப் பொருந்தி நடக்கிறது. (௨௪)

அங்குஷ்டமூலத்தில் ஸ்பர்ஸனுதிகாரணமாக விருக்கிற பரீக்ஷணிய நாடியின் நுட்பவரலாறுகளை இங்கே எடுத்துக் காண்பிக்கின்றன.

வருத்தக்காரனுக்குத் தீவிரமான வேதனையைக் கொடுக்கக்கூடிய க்ஷத்திர சடராக்கினிச் சிகிச்சைகளினுலே சிலவேளை பிராணநாடியின் இயல்பான எழுப்பம் ஊக்கமில்லாததாய்ப் பரீக்ஷிக்கப்படவேண்டி நேரிடுகிறது. (௨௫)

நாடி சோதனை நடத்தக் குறித்த சமயங்களில் தன்னடையிற் பிறழாமற் றேற்றி நடக்கிறவனுக்குடைய நாடி தேகத்திற் கொரு க்ஷேத்திரம் போனின்று நடத்துகிறது. பரீக்ஷணிய

நாடியின் பிரதிகிளைகள் உற்பத்தியான தானத்தில் ஓதைகாரண மாக வுடையது. வைத்தியமுறைமைக்குத் தகுந்த மக்களுக்குக் கையிற் சேர்ந்திருக்கிற குணநாடி சில ஏதுக்களினால் கேடான நிலைமைகளை யடைகிறது. அவையாவன: தாபனம், லேகனம், வேதனம், பீடனம், காதனம் முதலிய சிகிச்சைகளை மிதமின்றி வருத்தக்காரனுக்கு ஆய்க்கினை கொடுத்து மேலும் மேலும் நடத்துதலினால், தேயுதத்துவமான நாடியின்சிகையில் ஊறடைந் தால், கையிலே சூரியன் நாடியின் காரணப் பொருளில்லாமற் சிவசஞ்சாரத்தை விளக்குகிற நாடியின் சென்னி சூம்பலா கின்றது. (உசா)

மேன்மையான கீர்த்தியையுடைய வைத்தியர் பயிற்றும் பொருளின் விளக்கம், சமாதானமில்லாத †குருத்துவாந்தரம், சுகானுபவமான ரோகங்களைப் பிறழச் செய்கிறதில்லை. அங்கக் குறைவில்லாத சிரேஷ்டமான தேகத்தையுடையவரி னங்குஷ்ட மூலத்திற் பரீக்ஷைபண்ணுகிற புச்சநாடி அங்குட்டதேகியி னங்குட்டமூலத்தி லறியப்படுகிறதில்லை. (உஎ)

இரத்த ஓட்டத்திற்கு முதன்மையாகவுள்ள பிரயத்தனம், கடினத்தன்மையானாலும் போற்றத்தக்கது. அங்குஷ்டதேகிக் குக் கையிலே நடத்துகிற தாண்மையான பரீக்ஷைக்கு *ஜடம் நாடியின் புச்சங்களைக் குணமாக்கிக் கொடுத்துத் தானுமனுப விக்கிறது. பரீக்ஷணியநாடி ஸ்தாபிக்கப்பெற்ற இடத்தில் பிரதி நிமேஷமுமுடையது. அது இல்லாத அங்குஷ்ட தேகிக ளுடைய கையில் குருத்துவார மார்க்கமாக இரத்தம் ஓடிக் கொண்டு நிற்கிறது. அவர்களுக்குக் கையிலே பண்ணும் நாடிப் பரீக்ஷை அங்குஷ்டமூலத்திற்குப் பொருத்தமானதல்ல. அங்கே சிகை வசமாக இதம்பண்ணுகிறது. அவர்களுக்கு ஆழமான பகுதி யறிய முடியாது. ஞானேந்திரிய வுணர்ச்சியில்லை யென் பதாம். (உஅ)

குருவணக்கஞ் செய்யாத வைத்தியன் செய்யும் பரிகாரம் பலனற்றது; சேர்வினையில்லாதது. (உகூ)

---

* குருத்துவ அந்தரம் என்பது கடினத்தன்மையான கொள்கை.

பலசாஸ்திரங்களையுங் கற்றறிந்த புத்திமானுகிய வைத்தியன், தன் இஷ்டகுருவை வழிபட்டு, அவர் சிக்ஷைசெய்த உபதேசத்தை முன்னாகக்கொண்டு, நாடியின் குணம், பேதம், வாயுக்களின் சஞ்சாரம் இவைகளை நல்லாயறிந்து கரதலப் பரீக்ஷையைச் செய்யக்கடவன். (௩௦)

சுகப்படாத வருத்தங்களை மூன்றுவாரம் பரீக்ஷை செய்து பின்னும் செய்து ஆராவிட்டு, அதில் மனசைச் செலுத்திப் புத்திமான்களோடு யோசனைசெய்து ரோகத்திற்குக் கூறிய கைகண்ட மருந்தைக் கொடுத்துச் சுகப்படுத்த வேண்டியது. ( )

அத்துடன் அவனுக்கு இயற்கையான குணத்தைக் கொடுக்கக்கூடிய செய்கைகளையாவது, அல்லது * மனச்சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய பராக்கையாவது துண்டாக்கிச் சுத்தவாயு சஞ்சாரமான இடத்தில் மாற்றிவைத்துத் தெண்டித்துப்பார்க்க வேண்டும். (௩௨)

இணக்கமான சேர்க்கையில், தன்னடையை மாறுபடுத்தி நாள்தோறு மெதிரிடையாக நடந்துகொண்ட நாடி ஸ்திரிகளின் அந்தர்ஸ்தானத்தி லடைந்திருக்கிறது. அந்தக் கூதனஸ்தான உறுப்புக்குத் தற்காப்பாயுள்ள உதடுமார்க்கம் இடுக்கண் செய்கிறது, துராகிதமாய் நடக்கிறது. அந்தப் பயனை யடைகிற நாடி கற்பிக்கிற தன்யாசயம் உஷ்ணகுண முடையதாய்ப் போய்ச் சிசுபோஷண நாடிக்கு ஒரு திகைப்பான குணத்தை யுண்டாக்கி அங்கே நிகழவேண்டிய கிரமத்தையும் குலைக்கிறது. அங்குஷ்ட மூலக்குறிப்பில், நாடி அந்தக் குணமான நடையி னிலக்ஷணத்தையே விளங்கக் காட்டி நடக்கிறதாகப் பேசுகிறது. இந்த வித்தியாசங்களினல் "சௌடி" "லம்பாவம்" என்னும் நாடிகள் பலவீனமான குணமுடையதாகின்றன. அப்பொழுது நாடி சீக்கிரகுணமான நடையின் பலனையும் மந்தகுணமான மந்தகுணமான நடையின் பலனையு முண்டாக்கி யளிக்கிறது. (சாயங்காலம் நடை வெளிப்படை) இப்படியாக நடக்கிற ரோககுணங்களில் பரீக்ஷை பண்ணப்படுகிற கையில், ஒவ்வொருநாளும் ஒவ்

* மனச்சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய பராக்குச் சிலரோகங்களுக்கு விலக்கு, பத்தியாபத்தியத்திற்கூறுகிறது.

வொருநாடிக்குமுரிய சந்தித்துவாரங்களில் நடக்கிற இலக்ஷணத்தையும், இருதயஸ்தான ஆசயங்களிலும் வித்தியாசமாக நடக்கிற குணங்களையும் பிரித்தறிந்து, அந்த ரோகங்களின் குணம் மர்மஸ்தானங்களிற் பிரவேசிக்குமுன், அததற்குக் கூறிய கைகண்ட அவுஷதத்தை உபயோகிக்க வேண்டியது. அப்படிச் செய்யாவிட்டால் ரோகத்தின் குணம் வளர்ந்து தேகத்தை இயல்பிற் குறைந்த இனமாக மாற்றி விடுகிறது. அந்தக்குணம் மர்மஸ்தானங்களில் மாத்திரமல்லச் சீவாதாரமான எந்த உறுப்பிலுஞ் சேரக் கருதுமியல்புடையது. (௩௩)

வாதம், பித்தம், சிலேஷ்மம் என்பனவாகிய மூன்று தோஷங்களும் தனித்தனி அதிக்கிரமித்துக் கிரமமாய்ப் பிறக்கும் பொழுது நடை, மந்தகதி, மத்தியகதி, தீக்ஷணகதி என உணரப்படும்; அவைகள் ஒன்றுடனொன்று சேர்ந்து நடக்கும் பொழுது வாததொந்தம், மத்தியஸ்பர்ஸம், பித்ததொந்தம், தீக்ஷணஸ்பர்ஸம், அனுமிகை விரலிலறியப்படுவதாகிய சிலேஷ்மதொந்தம், மந்தஸ்பர்ஸமாகவு முணரப்படுகின்றது. தோஷங்கடங்கடங்களுக்குரிய §ரூபதலத்தைப்பிறழ்ந்து மாறிமாறிநடக்கும் பொழுது குடிலநடையாகவும் சிலவேளை பின்னநடையாகவும் உணரவேண்டிவரும். (௩௪)

## ரோகரகித மனுஷர் நாடி.

நோய் மாறிச் சுகம்வரும்பொழுது, சிரை தனக்குரிய இயல்பான நிலைமையை யடைந்து *பூலதை, புஜங்கம் என்பனவாகிய இச்செந்துக்களின் நடைக்குச் சமானமாகப் பொருந்தி வளைந்த இலக்ஷணமுடையதாய்த் தோற்றி நடக்கிறது. நிறைந்த ஒலியையுடையது. ஒருவருடைய உதவியின்றித் தன் கெறுவத்திலிருப்பவருக்கு, நாடிபலவானுக்கு ஏற்படுத்தின நாடியைப்போல் கடினத் தன்மையாக நடக்கிறது. நபுஞ்சகருக்கு நோய் மாறிச் சுகம் வரும்பொழுது அவர்களின் நாடி, இரத்த சுத்திக்குக் காரணமாயுள்ள ஜடம் வெளிப்படுத்தின தன்மை நடக்கிறது.

---

§ரூபதலம் என்பது - நாடியின் சொரூபங்களைப் பரிசிக்கிற விரலின் அர்த்தத்தைக் குறித்தது. *பூலதை-நிலப்புழு.

அந்த நாடி முன் பேசப்பட்ட சேர்க்கையில் விரோத நடையைப் போலும், அல்லது - வருத்தத்தின் குணங்களைத் தாங்கிச் சுகத்தைக் காட்டி நடக்கிறவன் நாடியைப்போலும், அல்லது - நோய்க்கு மருந்தை உண்ணும் காலத்தில் அதற்கு மாறுபாடான செய்கை, அவபத்தியங்களைக் கொண்டவன் நாடிபோலும் பல விதமாய் நடக்கிறது. துறவறத்தை விரும்பிய ஒருவனுக்கு நாடி அசைவற்றுறுதியுடன் நடக்கிறது சுகடலமுடையவனுக்கும்.

## நாடிகளின் தேவதை.

வாத நாடிக்கு அதிபதி பிரமா; பித்த நாடிக்கு அதிபதி ஈசுரன்; சிலேஷ்ம நாடிக்கு அதிபதி விஷ்ணு என்று கூறப்படும்.

## நாடிகளின் வர்ணம்.

வாதநாடி நீலம்; பித்தநாடி † பாண்டுரம்; சிலேஷ்ம நாடி சுவேதம். (௬௭)

## நாடிகளின் ஸ்பர்ஸம்.

பித்தநாடி உஷ்ணமாயும், கபநாடி சீதளமாயும், வாதநாடி மத்திய ஸ்பர்ஸமாகவும், அவைகள் கரநேத்திரக் குறிக்குத் தோற்றுகின்றன. (௬௮)

## நாடிகளின் சுபாவ கதியாவன.

வைகறையில் ஸிநிக்தமயம், மத்தியானத்தில் உஷ்ணவிதம், சாயுங்காலத்தில் வேகவதி, இராத்திரி காலத்தில் வேகவிவர்ச்சிதம் என்று சொல்லலாம். (௬௯)

அவற்றுள் - ஸிநிக்தம் என்பது எண்ணெய்த் தன்மையுள்ளது, இறுக்கமானது, குளிர்மையானது, சேருந்தன்மையுடையது, அழுத்தமும் பிரகாசமுமானது, அழுத்தமில்லாதது, தடிப்புத்தன்மையுடையது, தடிப்புத் தன்மையில்லாதது. வேக விவர்ச்சிதம் என்பது சாயுங்காலத்தில் நடந்த வேகம் குறைந்து வருவதாம்.

---

† பாண்டுரம் - மஞ்சளும் வெள்ளையுங் கலந்தது.

## வாதாதி நாடிகளின் தன்னிலைக் கிரமம்.

பிரதமவாதம் இரண்டாவது விரலினும், பித்தம் மத்திமை விரலினும், கபநாடி கடைசி விரலினுந் தோற்றித் தங்க டங்களுக்குப் பொருத்தமான இலக்ஷணத்துக்கமைய நடக்கின்றன.

அவைகளுக்குரிய நடையானது, ஒரு காப்பியத்தினுள்ள பாவில் வழுவிய இசையிலக்கணங்களையுந் திருத்திக் கூறவல்ல பண்டிதனாகிய வைத்தியனுடைய மன எண்ணத்திற்கும் சில வேளை மாறுதலாக நடந்து அவனையுந் தோல்வியடையச் செய்கின்றது. (சக)

ஒரு சகச பெலனுடைய சுகதேகிக்கு நாடிகள் அறுபது மாத்திரை நடக்கின்றன. அதாவது: சந்திரன் றன்னுடைய கலைகளை வளர்க்குந் தன்மையுந் தேயவிடுந் தன்மையும் போல நாடி நடையுந் தேய்ந்துதேய்ந் துருபேற்று நடக்கிறதாம் சூரியனுதயம்பண்ணும்பொழுது தோன்றுகின்ற பூவால், உலகத்தினுள்ள பொருள்களை எப்படிப் பிரகாசிக்கச் செய்கிறதோ அது போலவே நாடியினடை யுற்பத்தியும், ஸ்புரணமும் வைத்தியனுடைய விரல்களிற் றோற்றிப் பிரகாசிக்கச்செய்கின்றன. (சஉ)

பிரதம நாடியாகிய வாதம் தனக்குரிய மாத்திரையிற் றவறாது தற்சனி விரலிற் சிவித்துப் படிப்படியாகக் குறையப் பித்தம் விருத்தியாகிக் *கர்ணிகை விரலிற் றனக்குரிய மாத்திரையைக் குறையா தடித்து ஆறக், கபநாடி தன்மாத்திரையிற் குறையாம லசைந்து நடக்கின்றன. (சங)

வாயுவினெழுப்பம் இரண்டாம் விரலில் முதல் நின்று கண மாத்திரையை யடித்து இடைவிடுகின்றது.

சிலேஷ்ம நாடியின் நடையில் பித்தமும், பித்த நாடியின் நாதில் வாதமுந் தங்கியிருக்கின்றன. (சச)

வாயுவினுதவியா லியங்குகிற வாதம் நிர்மூலமானது. அதுகை பார்ப்பிப்பவனுடைய கரதலப் பரீக்ஷைக் குறிப்பை விளக்கும் பிரமாணத்திற்காக நியமிக்கப்பட்டது.

---

*கர்ணிகைவிரல்-நடுவிரல்.

## மதாந்தரம்.

வாதமானது ரோகங்களுக்கு முதற்காரணனாய் நின்று பித்த சிலேஷ்மங்களைத் தூண்டிவிட்டுத் தானு மவைகளோ டொத்த ஒருவன்போனின்று சப்த தாதுக்களினாலு முண்டாக் கப்பட்ட தேகத்தை அரசுபுரிவதால் அந்த வாதத்திற்கு அரச னென்று மொரு பெயருண்டு. தேரையர், ஜீவரக்ஷாமிர்தம் கூறுகின்றன. (௬௫)

இந்த நாடிசாஸ்திரத்தை வடமொழியிற் கூறிய கிரந்த கர்த்தாவானவர், முதலில் பித்தநாடியும், மத்திமையில் கபநாடி யும் பின் வாதநாடியுந்தோற்றி ஒன்றையொன்று தாக்கி நடக்கிற தென்றும், அதைத் தன்னுடைய அனுபவப்படியும், நூலறி வின்படியு மெடுத்துக் காட்டியிருக்கிறதாகக் கூறியிருக்கிறார்.

உத்தம வைத்தியனால் ஒருநாடியின் நடையிலிருந்து மற்ற நாடியினிலக்ஷணத்தையுஞ் சொல்ல இயலும்; அதற்கு உதா ரணமாக, துவிகுணத்தில் 'ஸொரதை' தீர்க்கநடை நடக்க மற்ற இருவரும் தீர்க்கநடையே நடக்கின்றன; திரிகுணத்தில் ''ஸொரதை'' சமபரிசம், கிரிசநடையாக நடந்து அந்தர்கதியில் ஸ்திதியை எடுக்கிறதென்பதும், ''வல்கம்'' சமநடையாகப் பிரச வித்து கிரிசநடையாக நடந்து விஸ்திருத நடையில் நிலைக்கிற தென்பதும் விளக்குகின்றன. (௬௭)

## நாடிச் சக்கரம்.

| | | | |
|---|---|---|---|
| நாடிகளின் பெயர். | வாதம். | பித்தம். | கபம். |
| நாடிகளின் வர்ணம். | ஸ்யாம ஹரிதம். | பீதலால நீலம். | ஸ்வேதம். |
| நாடிகளின் தேவதைகள். | பிரமா. | சிவன். | விஷ்ணு. |
| நாடிகளின் ஸ்பர்ஸம். | மத்ய ஸ்பர்ஸம். | உஷ்ண ஸ்பர்ஸம். | சீதள ஸ்பர்ஸம். |
| நாடி நடை. | விஸம கதி. | தீர்க்க கதி. | ஹ்ரஸ்வ கதி. |
| நாடிகளின் கந்தம். | ஹீன கந்தம். | தீவிர கந்தம். | மத்யம கந்தம். |
| நாடிகளின் கமனம். | திரியக் கமனம். | ஊர்த்துவ கமனம். | அதோ கமனம். |
| நாடி குருத்வமான தா, அல்லது லகுவானதா. | ஹலகீ. | ஹலகீ. | பாரீ. |
| நாடிகளின் பலாபலம். | இரவும் பகலும் பலமுடையது. | பகலிற் பலமுடையது. | இரவிற் பலமுடையது |

இந்தத் திருஷ்டாந்தம் இயல்பிலே வித்தியாசமில்லாத தேகத்தையுடையவரின் கைநாடியில் நடக்கிற தாதுகளின் செயலைப் புடமிட்டறியும் முறைமையைப்பற்றி விவரிக்கின்றது ( )

பலமுடைய வாதம் கையிலே வளர்ந்து குறைந்து அருந்தமாகி அந்திக்கிறது. இரத்த ஓட்டம் ஒரு சிறு வரிபோற் றோன்றிக் கையிலே யசைகிறது. (சகூ)

ஒரு அரசனானவன் தனக்கோ ராலோசனைக்காரன் வேண்டுமென்று உசாவுவதுபோல், அந்தப் பிரபலவாதமுந் தனக்கொரு மித்துரு வேண்டுமென்று தேடி உடலுறுப்புகளிற் றங்கி ஆராய்ந்து நடக்கின்றது. அதின் கருத்து யாதெனின் இரத்தந் தடிப்புற்ற காரணத்தினால் நடை மந்தகதியை யடைந்து நடக்கிறது. (ருo)

தேகமசைவற்ற மரம்போற் கிடத்தல் வாதத்தைப் பெலனாக நடக்கச்செய்கிறது. (ருக)

வாதம் மலக்குடலில்: நாபிக்கும் (Ense-form) என்னும் முருந்தெலும்புக்கும் மத்தியினின்றுலாவும்பொழுது மலசல விபரீதங்களை யுண்டாக்கிறது. (ருஉ)

ஸோஷம், தப்ஸம் (அல்லது சுரப்பு வீக்கமும் கடிச்சொறிவும்) தேகத்திற் குடிகொண்டிருந்தால் வாதத்தை வக்கிர கதியாக நடக்கச்செய்து அதற்கு உணவாகின்றன. (ருந)

பிருதுவித் தத்துவமுடைய வாதநாடி இரட்டித்து வக்கிர கதியாக நடந்தால், தேகத்தில், சிலேஷ்ம க்ஷயரோகம், வரட்சி, வீக்கம், தனுவலி நிலைத்துக் கேட்டைச் செய்கிறது. (ருச)

பிராணவாய்வு முதலாய தசவாய்வுக்களும், தேகத்திலொழுங்காய் நடக்க நாடிகளின் நடையும் கிரமமாயிருக்கும்; அவற்றுள் மத்யகதவாய்வு பித்தத்தோடு சேர்ந்து நடந்து அதனை முதனிலையில் வைத்துக்கொள்ளுகிறது. (ருரு)

எப்பொழுதும் நாடிகளின் நடைக்குத் துணைக்காரணமாயுள்ள வுயிர்ப்பைச் சிலேஷ்மம் கிரகித்து வைத்திருந்து, தானொரு அமைச்சனைப்போலும், சில குணங்களில் தறுகணாளர் வன்றொழிலின் செயலைப்போலும் பின்பற்றி நடக்கிறது. (ருசா)

இன்னும் முதற்பிரமாணமாக வுரைத்த திருஷ்டாந்தத்தில் அவதானம் பண்ணிக்கொள்ளவேண்டிய பிரதான காரணங்கள் பலவுள. அவற்றிற் சில வருமாறு. (ருஎ)

1-வது. பிரபலவாதம் அனுகரணவோசைக்குச் சார்பான ஒலியை ஏள்கி அருத்தமாகிக் கையிலே தனக்குரிய வளர்ச்சியை யனுகூலப்படுத்துகிறது. (ருஅ)

2-வது. அந்த அருத்த தாது, அங்குஷ்டமூலத்திற் சரலி யென்னும் பறவையைக் கண்ட சர்ப்பத்தின் தன்மையைப் போலும், உடலிலே சில்லென்றேலமிடுங் குக்கிற் பட்சியின் *அகவலுக்குப் போலியாகவும் வைத்தியருடைய புலனுக்கு விளங்கக்கூடியதாக விலாசமிடுகின்றது. (ருகூ)

3-வது. கரசிகையிலே ஓதையின் பயனடைதற்குடன் பாடாகிய பிரதிதினம், அகம் ஆடியை யொப்பாயிருக்கும் பொழுதாம். (சூ0)

4-வது. அக்ஷரசுத வடிவத்தைப் பொறித்திசைத்து நடக்கும் பிரதிதினம், இருதயகமலம் விகசிதஞ்செய்யும் பொழுதேயாம். (சூக)

அருத்த தாதாகிய வாதம் கோவின் காரியமாயிருக்கிற லோலிதத்திற்கு மிரக்கமற்ற அதம் என்று சொல்வதாகிய ஒரு குறையை வருவித்துத் தானும் வக்கிரரூபமுடையதாக மாற்றப் படுகிறது. (சூஉ)

6-வது. வருந்திய ஸ்தியையுடைய †மத்யகதவாய்வு பித்த பீசத்தை நிலையற்ற ஏதுவாகச் செய்கிறது. அல்லது பார்வையற்ற குக்கிற் பட்சியின் போக்குக்குச் சமானமாகச் செய்கிறது.

7-வது. இருதயத்திற்கு முதன்மையான குணத்தைக் கொடுக்கிற இயல்பையுடைய சோவின் §நிமேஷம் இயக்குகிற சலதி காரணத்தினால், சிலேஷ்ம தாதும் அங்குஷ்ட மூலத்தில், கூனியதாதாக அல்லது வக்கரிக்கின்ற நடையைப் பொருந்திய தாதாக மாற்றப்பட்டு, நடக்கிறது. (சூச)

* அகவல் - ஒலி. † மத்யகதவாய்வு - சமநடைக்குரிய வாய்வு.
§ நிமேஷம் - மாத்திரை.

கூறப்பட்ட நியாயங்களினால், பித்தநாடி குடில நடையாக வும், வாதம் வக்கிரகதியாகவும், சிலேஷ்மம் மந்தகதியாகவும் நடக்கும். (கூரு)

பித்தநாடி ஓரபாயத்தினின்றுந் தப்பியோடுங் கஜக்குலத் திற்கு முந்திச் செல்லும் யானையின் வேகமான கெதியைப் போற் சீக்கிர கெதியாக நடந்தால் மலபந்தம் ஒழுங்கினமாய்க் கழிகிறது. (கூகூ)

## திரிதோஷ ஸம்பவம்.

பித்தநாடி சீக்கிரகதியாயும், தாமத நடையாக நடந்த கப நாடி வக்கிர கதியாகவும், வக்கிரகதியாக நடந்த வாதநாடி மந்யகதியாகவும், முறை தப்பி நடந்தாலும், தொனியதிப் பிரஷ்டகமாய் மானெலியின் போக்கை யொத்திருந்தாலும், தோஷங்கள் மூன்றுமொன்றுடனொன்று சேர்ந்து பிறக்கின்றன. இதற்குப் பிரதி சமானியமாயுள்ள * ஸ்நாயு திரவவஸ்தைப் பொசியவிட்டுவிடுகிறது. ஆகையா லதற்குரிய நடையையுங் கவனிக்கவேண்டியது. (கூஎ)

இன்னமும் நாடி நடையின் அர்த்த மாறுதல்களைக் கூற வேண்டியிருப்பதால், அவைகளை எடுத்துக் காட்டப்படுகின்றன.

பித்தநாடி குடில நடையாகவும், வாதநாடி வக்கிரகதியாக வும், கப நாடி மந்தகதியாகவும், ஒன்றுடனொன்று சேர்ந்து மாறி நடக்கும்பொழுது அவைகளுடைய நடையை அக்வயப் படுத்திக்கொள்ளக்கூடாத தன்மை யுடையவைகளாய் ஒரே மாதிரியாக விருந்தால் இரத்த ஓட்டத்திற்கூறு சம்பவிக்கிற தாக அறியவேண்டியிருக்கு.

பித்தநாடி குடிலப்பட்டு அதிகவேகமாக நடந்து சிறிய பிரமாணமாகக் குறைந்து வந்து முடிவி லதினுடைய சிகையுந் தோற்றும லழிந்துபோனால் இதயச்சலதி காரணத்திற்கூறு சம்பவிக்கிறதாக அறியவேண்டியிருக்கிறது. (கூஅ)

ஊசியேற்றல், சுடுதல் முதலிய சித்திரவதையான செய்கை களினால் பித்தநாடியின் நடை மந்தமான குணத்தை எடுக்

---

* ஸ்நாயு - உணர்ச்சிநரம்பு.

கிறது. நாடியின் புச்சங்கள் விம்மி வேறுபடுகின்றன. அதி னுடைய காரணமாகக் கபநாடியும் மந்தகதியை யெடுக்கிறது. அந்தத்தில் வாதம் வக்கரித்து நடக்கிறது. நாடிகளின் நடைக் குக் காரணமாயிருக்கிற வாதநாடியின் நடை இவ்விதமாய் வக் கரித்து நடந்து இல்லாம லற்றுப்போய்விட்டால் நாடி ஓட்ட மும் தேகத்திலில்லை யென்பதறி. (௬௯)

பித்தநாடி குடிலநடையாகவும், வாதநாடி வக்கிரகதியாக வும் ஒன்றுட னொன்று மாறுபாடில்லாமல் இணங்கி நடக்க, சிலேஷ்ம நாடி மந்தகதியிற்றானே நடந்துகொண்டால், உண் டான ரோகம் நீங்குமென்பது சந்தேகமில்லை. (எ0)

பித்தாசயத்தில் வியாதி சம்பவித்தால் புத்திப் பிரமத்தை யுண்டாக்கும். வாததோஷத்தின் கோளாறு கருப்பாசயத்தை யடைந்து நடைகொள்ளமுன், நாடி விகாரப்படாமல் அணுப் பிரமாணமா யசைந்து நடப்பதுபோற் றோற்றும். அந்த நடைக் குக் * கடற்பன்றியானது அசைந்து நடக்கும் நடையை உவமை கூறலாம். (எக)

அந்த வருத்தம் முதிர்ச்சியடைந்து சித்த விப்பிரமமுமதி கரித்தால், வாதகோபத்தினு லுண்டான உத்தாபம்: கருப்பை யில் மாத்திரமன்று, சலப்பை, மலக்குடல், மச்சை முதலிய தாதுக்களிலும் சேர்ந்து விகாரப்படுகின்றது. அதற்குத் தகுந்த அவுஷதங்களை உபயோகித்து நிவிர்த்திசெய்யாவிட்டால், பித்த கோபம் மேற்கொண்டு மரணத்தையுண்டாக்கிறது. (எ௨)

வாதாசயத்தில் வியாதிசம்பவித்து மனோவிருத்திக்குக் கெடுதியான குணங்களேறிடும்பொழுதும் பித்தநாடி கடற்பன் றியைப்போல் நடக்கிறது. அப்பொழுது பித்தமதிகரித்து, தரா, மூளை, வஸ்தி முதலிய உறுப்புகளிற் சேர யத்தனமாயிருக் கிறது. அப்படி அந்தப் பித்தம் சிவாதாரமான உறுப்புகளைச் சேர்ந்து சஞ்சரித்தால் அந்தப் பித்தம் தானே சிலவேளை விரக தாப முடையவர் நாடி இலக்ஷணத்தைப் போலும் நடக்கும். அந்தத் தோஷங்க ளொன்றொன்ற யதிகரித்து நிலைபெறமுன்

* கடற்பன்றி யென்பதை ஒரு நதியிலுள்ள முதலை யென்று வேறு நூல் கூறும்.

தகுந்த அவுஷதங் கொடுத்து மாற்ருவிட்டால் வாதத்தினுக்கிரம் விருத்தியாகி யொழுங்கினமான கெட்ட குணங்களை யுண்டாக்கி மரணத்திற் கேதுவாக்கும். கூறிய இரண்டு ஸ்தானங்களிலும் உற்பத்தியாகிற ரோகங்களை உஷ்ணசீதவ உபசாந்தியான சிகிச்சைகளால் சுகப்படுத்தவேண்டியது. (எச)

தேகத்திற் சீவிக்கிற உதிரம் உறுப்புகளைப் போஷித்துத் தேஜஸ் முதலிய நல்ல குணங்களைக் கொடுத்துப் பிரகாசிக்கச் செய்கின்றது. அது நெறி வழுவித் தோஷமடைந்த காரணத்தினுற்ருன் முற்பவத்தை யிழந்து தற்பொழுது அற்ப பிரமாணமான குற்றவியல்புடையதாய்ச் சடுதிவேகமும் தூக்கமுமான நிதானமற்ற மாத்திரையான நடையையுடையதாக வுறுப்புகளிலும் பிரமாணமற்றதாகச் சேருகிற குணமுடையது. இயர்கையான குணத்தில் இரத்தமோடும் நெறி மனுடருக்குப் புலரிக் காலத்தில் மெல்ல மெல்ல ஆரம்பித்துப் படிப்படியாக உச்ச மாத்திரையாகி உச்சிப்பொழுதிலிருந்து படிப்படி பிரமாணம் குறைந்து அஸ்தமயன நேரம் உதயகாலத்தில் என்ன பிரமாணமாகத் தொடக்கத்தை எடுத்ததோ அதுபோல; இரத்தத்திஞேட்டம் நரம்புகளில் நடக்கிறது. இப்படியே இரத்தத்தின் சுபாவகுணமான செய்கை இரவுக்கும் நடக்குமென்பதாம்.

வாதாதி தோஷங்களின் காரணங்களினுலும், தேச கால பேத சஞ்சாரங்களினுலும், உதிரம் மிதமிஞ்சி விகாரமடைந்து, செல்லுமார்க்கந் தப்பிப் பிரமமுற்றபஜெயமடைந்து அணுவளவினேர் பகுதி பகுதியாக விகிதப்படி சொந்தஸ்தானத்தைச் சேருகின்றது. சீவனேடிருக்கிற அங்கத்தின் கருவிகளை இயங்கப் பண்ணுந் திறமையும், அற்ப சுகவீனருக்குச் சிறிது சவுக்கியத்தையும் கொடுக்கிற இதம் பொருந்திய பிராணவாய்வு ஞானேந்திரியங்களை வர்ச்சித்துக் கவர்ந்துகொள்ளுகிறது. (எரு)

இடையிற் ரேஷ்மடைந்து நீராகிய இரத்தத்தின் பிரமாணமும் சில காரணங்களினுல் மிதமிஞ்சிச் செல்லும்பொழுது தமனிற் ருக்கிக் குதிப்புற்று, மூளை, கருப்பை, சுக்கிலம் முதலிய பிரதானமான உறுப்புகளிலும் சேர்வதுண்டு. அவ்வாறு சேரும்

வேளையில், அச்சம், திடுக்கம் புளகம் முதலிய * சுதாசுதகுணங்களும் நேரிடுகிறதுண்டு. போஷிக்கப்பெறுகிற உறுப்புகள் குறைந்த இனமாகிறது. (எஎ)

இரண்டு கால்வாய்ச் சந்திபி லுண்டாகும் நீரின் சுரியலின் றன்மையை யொத்த அசுத்த இரத்தமானது; பிராணவாயுவினால் நல்ல குணத்தையாவது அல்லது கெட்ட குணத்தையாவது அடையப்பெற்றுப் பிரிந்து கையையும் மற்று புணர்ச்சிக்குரிய கரணங்களையும் போஷிக்கிறது. அப்பொழுது நாடியின் நடை; ஒரு மானனது தனக்குத் தீங்குசெய்ய வரும் பகைவனைச் சுற்றிப் பார்த்து விசைத்தெழும்பி யோடுந தன்மைபோல்; நடக்கிறதாம் (எஅ)

இடையிற் ஶ்ரேஷமடைந்த குருதி, நீரிற் கலந்து பிரிந்த ஆதப கிரணத்திற் கொப்பான தன்மை யுடையதாம்; நாடி தூல இலக்ஷணமாகத் தோற்றி நடக்கிறதாம்; அந்த நடை சர்ப்பத்தின் வளைவான கதிக்கு உவமை. குருதி கீழ்மை யடைந்த சியாயம் உஷ்ண மதிகரித்ததினாலென்றும், வாயுவினதிகரிப்பினா லுண்டான உக்கிரமத்தினாலென்றும் கூறப்படுகிறது; இந்த இரண்டி லொன்றேயாம். (எகூ)

உபரக்தம் இரத்தாசயத்திலிருந்து படிப்படியா யுறுப்புகளைச் சேர்வதற்கு நித்தியமும் குறித்த அளவின் பிரமாணமாக ஊர்ந்து செல்கிற நடைக்கு, ஒட்டை என்னும் மிருகம், கோவேறுகழுதை இவைகளொன்றின் நடையை உவமையாக ஒப்பிடலாம். இரத்தமோடும்பொழுது தேகத்தில் சகிக்க முடியாத வேதனை யிருக்கும்; சிலபொழு தில்லாம லிருந்தாலு மிருக்கும். அப்படியல்லாத சூனியமானது நாடிப்பரீக்ஷையில் அர்த்தமாற்றுகிறது; அதாவது வாதநாடி பித்தநாடி நின்ற இடத்திலும், பித்தநாடி சிலேஷ்மநாடி நின்ற இடத்திலும், சிலேஷ்மநாடி வாதநாடி நின்ற இடத்திலும், முதல் இருவரும் தங்கடங்கணடையி லொருவர்க் கொருவ ரீகைபுரிவதும், சிலேஷ்மத்திற்கு விட்டுக்கொடுப்பதுமாக மாறி நடப்பதாம். சிலேஷ்மநாடி வாதஸ்தானத்தை யெடுக்கும்பொழுது நாடியோட்ட நரம்பில் நடை தோற்றாமல் நடக்கிறது. (அ0)

---

* சுதம் - கேடான.

நாடியின் நடை, அபூர்வதந்திரமான பரீக்ஷாதானத்தில், ० சயதிமானம் இலகுமாத்திரையை அறிந்துகொள்வது சந்தேகம்: அது சிலவேளை பரந்து நீண்டதாகவும் சில குணங்களில் ஒடுக்கமானதாகவுந் தோற்றுகிறது. அவற்றுள் விருத்தியாகிப் பருத்துத் தோற்றுகிற புதிய சம்பவங்களை மிகு கவனத்துடனறியவேண்டியது. (அக)

## நாடியின் சாதாரணமான நடைக்கு உவமை.

### 1-வது வாததொந்தம்.

வாதநாடி சர்ப்பத்தைப்போலும் ! சலூகையைப்போலும் நடக்கிறது. (அ௨)

### 2-வது பித்ததொந்தம்.

பித்தமும் சிலேஷ்மமும் சேர்ந்து நடக்கும்பொழுது அவலக்ஷணமான எடுத்தலோசையுடன், அப்பியாசதானத்தில் ? குலிங்கம், காகம், ‖ மண்டூகம் என்பனவாகிய இந்தப் பிராணிகளின் நடைக்கு உவமையாக நடக்கிறது. அப்பொழுது விளங்குகின்றது பித்தத்தின் கீர்த்தி. (அ௩)

### 3-வது வாதசிலேஷ்மதொந்தம்.

வாதமும் சிலேஷ்மமும் கூடின உற்பத்தி முதனிலையாக வரும்பொழுது எடுத்தலோசை நீசத்தன்மையுடையதாகப் பிறப்பதுமன்றி, அப்பியாசவைப்பில், + கபோதம், மயூரம், அம்சம், குக்குடம் என்பனவாகிய இந்தப் பட்சிகளின் நடைக்கு உவமையாக நடக்கின்றன. (இப்படிச் சங்கலிதமாக நாடி நடக்கும்பொழுது சிலேஷ்மம் பெண்பாலைக் குறித்து நின்றது). (அ௪)

### 4-வது வாதபித்ததொந்தம்.

வாதபித்தங்களளாவிப்பிறப்பித்த நடை மோனையாக வரும்பொழுது, ஈனத்தொனியுடைய எடுத்தலோசை யுண்டா

---

० சயதி - மேற்கொள்ளுகிற. ! சலூகை - அட்டை. ? குலிங்கம் - ஊர்க்குருவி. ‖ மண்டூகம் - தவளை. + கபோதம் - புறாப்பறவை.

வதுமன்றி, வாதத்திற்கும் பித்தத்திற்கும் தனித்தனி உவமையாகக் கூறியிருக்கிற ஜீவர்களின் நடைகளுக்கொப்பாகப் பொருந்தி நடக்கும். (அரு)

நோய் பிணி துன்பத்தினாலும், இடைவிடாத யோசனை செய்தல், மிதமின்றி நித்திரைசெய்தல், பொறாமைகொள்ளல், யுத்தஞ்செய்தல், நித்திரையற்றிருத்தல், மருந்திடுரோகம், முதலிய பல காரணங்களினாலே வருந்திய இரத்தம் தோற்றாமற் செலவழிகிறது. அக்தக்காலத்தில் சித்தத்திற்கு இயல்பாயுள்ள குணமும் வித்தியாசப்பட்டு, விசாரமான அதிசயமுடைய பயங்கர முதலிய துர்க்குணங்களுண்டாவதுடன், ஞாபகசக்தி, பலம், வீரியம் இவைகளிற் சிலது மந்த உபரக்தத்தோடு கலந்துவிடுகிறது. நாடி வாதபித்தம் அச்சமுற்றககப்புள்ளின் சிறுகிய நடைக்கு உவமையாக நடக்கிறது. (அசா)

சுட்டிய நடையிலக்ஷணத்தின் சேடமான *சஹிதிநடையைத் தன்னுடைய நடைக்குப் பிரதியிலக்ஷணமாக அங்கிகரிக்க இருக்கும் வாதநாடி தன்னுடைய தானத்தை விட்டு மத்திமை விரலிலும், அந்தியவிரலிலுமாக மாறி மாறி ஒரு குதிப்புற்ற சுழற்சிபோறற்றேற்றுகிறது. இந்த நிலை நெடுக நிலைக்கிறதாகவும் சொல்லக்கூடியதல்ல. (அஎ)

இடையிற் றேஷமடைந்து மங்கலான இரத்தம், சுத்தபாவனை லுயர்ந்த சாதியாக்கப்பெற்றுச் சுத்த உதிரமாகாதிருந்தால், அந்தக் குணமுடையவருக்கு நாடி இணைத்துக் கட்டிய கோலுக்குச் சமானமாகத் தெற்றி நடக்கும் ககப்புள்ளின் இலக்ஷணமான நிலைமை; குறைந்த மாத்திரையைப் பொருந்தி நடக்கிறது. (அஅ)

அமங்கலமான ஸ்திதியை, நாடியோட்ட நரம்பின் புச்சங்களடைந்திருக்கிற அங்குஷ்ட மூலத்திற் பார்த்தறியவேண்டியது.

---

* சஹிதி - கெட்டிருக்கிற.

## நாடிகடங்களுக்குரிய நடையை ஒன்றுக்கொன்று ஈவுபண்ணும் முறைமையும் அதற்குரிய பிரமாணமுங் கூறுகின்றது.

சர்ப்பம், சலூகம் இவைகளின் சேர்க்கை நடையை உவமேயமாகப் பொருந்தி நடக்கிற வாதநாடி ஒருயவைப் பிரமாணமாக நடந்து மாறுகிற சத்தப்பிரமம் கையிலே யறியக்கூடியதல்ல. கையிலே யறியக்கூடிய விதி, நாடி நடையின் எண்குறியளவையை; இறை நாடி விட்ட யவைப்பிரமாணமான அசைவை யனுசரித்த பித்தம் அற்ப பிரமாணமாக ஒழுகவிட அதனைச் சிலேஷ்மநாடி கிரகித்து, குலிங்கம், காகம், மண்டூகம் ஆகிய இப்பிராணிகளின் மிஸ்ரநடைக்கு உவமையாகப் பொருந்தி நடக்கிறது. அப்படி நடந்தாலுமங்கே பித்தத்தின் மேன்மையே விளங்குகின்றது. பித்தநாடி வாதநாடிக்கு விட்டனுபவிக்கிறது. சிலேஷ்மநாடியினந்தப் பிரமமும் கையிற் புலப்படமாட்டாது. (அகூ)

இரத்தம் தடிப்பான தன்மையினுல், வாதம் வலிய இயங்குந் தகைமை குன்றிப் பித்த சிலேஷ்மங்களை இணக்கி மாற்றிக் கொள்ளுகிறது. அப்பொழுது கைநாடி குருநடையாகத் தோற்றித் தேய்கிறதும் வளருகிறதுமாக உணரப்படுகிறது. ஏந்தல் அமைச்சனை நெருக்க அமைச்சு அதிகரித்து நடப்பதாகிய நடை பித்ததொந்தம் என்று சொல்லப்படும். அதில் நாடி நடை, குலிங்கம், காகம், மண்டூகம் ஆகிய இந்தப் பிராணிகளின் நடைகளைச் சேருகிற உவமையாகப் பொருந்தி நடக்கிறது. பித்தத்தின் மிகுதி குறைய, அடைந்திருந்த யவைப் பிரமாணத்தி னற்ப பாகத்தைச் சிலேஷ்மத்திற்கும்; ஊர்க்குருவி காக்கை மண்டூகம் இவைகளின் நடைகளுக் குவமையான இலட்சணத்தை வாதநாடிக்கும் விட்டனுபவிக்கிறது. இந்தவிதமாகவே வாதநாடி கபநாடிக்கு மீவு கொடுக்கிறது. ஆனுல் கபநாடி தனக்குரிய பிரமத்தைக் கையிலே மோக்ஷித்துப் பிறக்கிறதுமில்லை. மற்ற இரண்டு நாடிகளுக்கும் விடுகிறதுமில்லை; அதாவது:—கபநாடி அந்த இலக்கணங்களைக் கிரகித்து வைத்திருந்து, மற்ற நாடிகளின் நடை தேய்ந்து கெட்டுப்போனபின், முதனிலைக்கு வரு மியல்புடையதாம். வாத சிலேஷ்மத் தொந்த

மும் வேறுபாடில்லாத நடையைக்காட்டி ஒரு யவை எடையிலும் குறைந்த பிரமாணமான இலக்ஷணத்தைக் கவருகிறது. (௬௰)

## வாதாதி நாடிகளின் சேர்க்கையைப்பற்றிய நடையின் முறையைபயான இலக்ஷணம்.

வாதம் வக்கிரகதியை யுடையது; பித்தத்தினெழுப்பம் * சபலநடை; அசைவற்ற சிலேஷ்மத்தில், செயங்கொண்ட நடையைக் கலந்து: கூடிப் பிறந்தன. (௬௧)

வாதம் முறை தப்பிக் குறுக்கோட்டமான நடையை வளர்த்து நிந்திக்கிற காரணத்தினால் வக்கிரரூபமான இலட்சணத்தைப் பெற்றுக்கொண்டது. பித்தநாடிக்குரிய களங்கமான இரத்தம் சுத்தி யடையாத காரணம் சபல நடையைப் பெற்றது உவகையோடு கலந்து சம்பந்தப்பட்ட வாத பித்தங்கள் அற்ப பிரமாணத்திலிருந்து விடப்பட்ட இயக்கமற்ற நடையை அந்தச் சிலேஷ்ம மனுபவித்த காரணம் அசைவற்ற நிலைமையானது; இது தானம் பிறழ்ந்து வாய்வுக்கு எதிர் நோக்கி நடந்த காரணத்தினால் குறைந்த இனமாக்கப்பெற்றுக் கொண்டது. (௬௨)

துவிதோஷ தொந்தமாவது இரண்டு தோஷங்களொன்றுகச் சேர்ந்து பிறந்த எஞ்சிய நடையில் ஒரு பகுதியைச் சேரா மனின்ற நாடிக்கு விட்டு, தன்னுடைய ஸ்தானத்தில் நின்று மற்றையவைகளை யிடைஞ்சற்பண்ணி நடக்கிற நாடிக்கும் தனித் தோஷம் இடண்டாய்ப் பிரிந்து ஒன்றை நெருக்கித் தன்னுடைய இடத்தினின்று நடக்கிற நாடிக்கும் துவிதோஷதொந்த மென்று பெயர். (௬௩)

அப்படியானாலும் பின் சொல்லப்பட்டது தனித்தோஷ தொந்தமென்றும் பெயர்பெறும்.

† திரிதோஷதொந்தத்தில் மூன்று தோஷங்களும் கலந்து பிறந்தநடை ஒன்றையொன்று நெருக்கி ஆதாரமற்று வருத்தக்

---

*சபல - கெதியான, நீதியினால் வெற்றியடைந்த, அசைவுள்ள.

† திரிதோஷம் என்பது—வாதம், பித்தம், சிலேஷ்மம் என்பவை. இவைகள் கோளாறடைந்த தன்மை தோஷங்களெனப் பெயர்பெற்றன.

காரனுக்கு அச்சத்தைக் கொடுக்கக்கூடிய அகோரகுணமுடைய தோஷம் எதுவோ அந்தத் தோஷத்தின் பெயரே பிரதமகாம மாகப் பெயரிடப்படுகிறது. (௬௪)

தொந்தத்தினற் பிரமமூற்ற தாதுக்களுக்குரிய சிகரத் துண்டம், கோ, அபிமுகத்தில் அருந்த தாதாகப் பெற்றுப் போஷிக்கின்றன. அவைகளே மூலபதம் மாற்றின தாதுக்க ளென்று வழங்கப்படும். (௬௫)

கோவின் நிமேஷத்திற்குரிய இதழ்கள் விரிந்து மூறைமை யாகச் சிகைஷபண்ணுத வருத்தக்காரருக்கும், அப்படியே விரிந்தும் மலராத அரும்புக்குச் சமானமான உறுப்பைப் பொருந்தியிருக்கிறவருக்கும்; நாடி சபல நடையும், ஸ்திரநடை யும், சிலவேளை வன்மஸ்தானங்களுடன் காரணமாக நடந்து; அங்குஷ்ட மூலத்தில் நடையில்லாததுபோற் றேய்ந்து உணரப் படுகின்றது. (௬௬)

காலவித்தியாசங்களுக்குத் தக்கபடியும் கோநிமேஷம் நடை பெறுகிறதாம்.

## வாதாதி நாடிகளின் விசேஷகதி.

வாதநாடியும் பித்தநாடியும் முறையே, சர்ப்பம் சலூகை இவைகளின் நடையையும், காகம், லாவம், பேகம் என்பன வாகிய இவைகளின் நடையையும் முதன்மையாகவுடையதென்று உவமையாகக் கூறப்பட்டது. (௬௭)

தமனி சிலேஷ்மத்திற் சேர்ந்து தன்னுடைய நடையைத் தெரிவிக்கிறபொழுது, இராசஹம்சம், மயூரம், பாராவதம், கபோதம் இவைகளின் சேர்க்கையான பித்தலாட்டமான நடை யையும் குக்குடநடையையும் உவமையாகப் பொருந்தி நடக்கிற சிலேஷ்மமானது, அதினுடைய நடையை யமுக்கிச் சிறப்பற்ற நடையாகக் காட்டி நடக்கிறது. (௬௮)

சர்ப்பம், சலூகை இவைகளின் நடையைச் சங்கிரண உவமையாகப் பொருந்தி நடக்கிற வாதநாடியின் தாழ்மையான நடை நரம்புமார்க்கமாகிய தமரில் வளருகிறது. அது ஒரு காய

கனுடைய அங்குஷ்ட மூலத்தில் துண்டித்த நடையாக வளைந்து அசைந்து நிலைத்து நடக்கிறது; அல்லது ஒரு ஓக்தியின் தலை யாட்டத்திற்கு ஒப்பாகத் தோற்றியும் தோற்றுமலும் நடக்கிறது. அந்த வாதம் தனக்குரிய பூர்வகதியிற் சிலபகுதியைப் பித்த நாடிக்கு ஈவுபண்ணி, ககப்புள்ளின் சிறுகிய நடையைப் பிரதிநடையாக அபகரித்துக்கொள்ளுகிறது. (௯௯)

மேற்குறித்த பிரகாரம் பித்தம் மாற்றப்பட்டு, காகம், *லாவம், பேகம் இவைகளுக்குரிய குறைந்த விகுதிநடைகளை முதன்மையாகப் பொருந்தி ஊறடைந்த நடையை யுடையதா யசைந்து நடக்கிறது. (௧௦௦)

பித்தநாடியின் பூர்வகதிக்குவமையான குலிங்கநடையை, ஒருழியக்காரனைப்போற் பின்பற்றி நடக்கிற சிலேஷ்மம், அற்ப அளவினதாகக் கிரகித்துத் தனக்கொரு பிரதிநடையாக வைத் திருக்கிறது. அப்படிக் கிரகித்து வைத்திருந்தாலும், இராசஹம்சம், மயூரம், பாராவதம், கபோதம், குக்குடம், ஆகிய இந்தப் பட்சிசாதிகளின் குறைவான நடைகளை உவமையாக அடக்கி வைத்திருந்து, மந்த, மந்த நடையாகத் தளம்பி நடக்கிறது சிலேஷ்மநடையின் உவமானத்தில், முதல் விதிக்கப்பட்ட எகினநடை, இலக்கண விதிக்கு அமையாதது; அதுபோலவே ஒரு உத்தம ஸ்திரியின் நாடிநடையும், பாகனுக்கடங்காத ஓர் யானையின் நடையை உவமையாகப் பொருந்தி நடக்கிறது.

## துவம் தவஜநாடிசாலம்.

## இரண்டிரண்டாய்த் தொந்தித்துப் பிறக்கின்ற நாடிகளின் நடை.

வாதநாடியும் பித்தநாடியுந் தொந்தித்துப் பிறக்கும் பொழுது, முதல் அரவைப்போலும், பின் தவளையைப்போலும் நடக்கும். (௧௦௨)

வாதமும் சிலேஷ்மமுந் தொந்தித்து நடக்கும்பொழுது, முதல் சர்ப்பத்தைப்போலும், பின் அன்னப்பறவையைப்போலும் நடக்கும். (௧௦௩)

* லாவம் - காடைப்புள்.

பித்தநாடியும் சிலேஷ்மநாடியுக் தொந்தித்து நடக்கும்பொழுது, முதல் தவளையைப்போலும், பின் மயிலைப்போலும் நடக்கும்.

## நாடிகள் அங்குலிக்குறி நிதானத்தை விளக்கும் வேற்றுமை.

வாதநாடி அதிகரித்து நடக்கும்பொழுது தர்ச்சனி விரலின் நுனியிலும், பித்தம் மத்திமைவிரலி னகத்திலும், கபம் அநாமிகைவிரலி னிறுதியிலும், வாதமும் பித்தமுந் தொந்தித்து நடக்கும்பொழுது தர்ச்சனி விரலுக்கும் மத்திமை விரலுக்குமிடையில் நின்று நடக்கின்றன.

வாதமும் கபமுந் தொந்தித்து நடக்கும்பொழுது அநாமிகை விரலிலும் தர்ச்சனி விரலிலுமாக மாறிமாறி நடக்கும். பித்தமுஞ் சிலேஷ்மமும் தொந்தித்து நடக்கும்பொழுது மத்திமை விரலுக்கும் அநாமிகை விரலுக்குமிடையிலே பேசும். இவ்விதமாக நாடிகள் மாறிமாறி நடந்தால் சன்னிபாத லக்ஷணத்தைக் கருதுகிறது. (௧0ரு)

## முகக்குறி கண்குறி.

வாதபித்த தொந்தத்தில் முகக்குறி சந்தோஷமாயு மிருப்பது; வாதகபதொந்தத்தில் முகக்குறி மந்தமாயும் கண்குறி மூடமாயுமிருப்பது.

## இரட்டித்து நடக்கிற தோஷதொந்தங்களில் தமனி நடக்கும் முறைமை.

தமனிநாடி வாதபித்த தொந்தத்தில் முடங்கிக் குதிப்புற்ற நடையையுடையதாய்த் தளம்புகிறது; அல்லது பின்வாங்கியசைகிறது. அல்லது வளைந்த வடிவுடையதுபோற் றோற்றி மேனோக்கி நடக்கிறது. வாதமும் சிலேஷ்மமுந் தொந்தித்து நடக்கும்பொழுது ஒன்றையொன்று தாக்கி அன்யோன்யமாக நுடங்கிப் பின்வாங்கியசைகிற மந்தகதியை யுடையதாய்த் தோற்றுகிறது. அல்லது கையிலே வளைந்ததாகத் தோற்றி மந்த தமனமாய் நடக்கிறது. (௧0சா)

பித்தமும் கபமும் தொந்தித்த நடை முதனிலையை யெடுக்கும் பொழுது நடை குதிப்புற்றுக் கையில் அந்த இலட்சணத்தைப் பகுத்தறியக்கூடிய மந்த கமனமாக நடக்கிறது. அதின் காரணம் யாதெனின்: தோஷங்களின் தொந்தத்தினாலே தமனி நாடியிலோடுகிற இரத்தம் தகித்துச் செல்லுகிறதாம். தமனியின் நடையை மிக நுட்பமாய்ப் பார்த்தறியவேண்டும். (௧௦௭)

வாதமிரட்டித்துப் பித்தத்தை நெருக்குகிற தொந்தத்தில் தமனிநாடி சிறுபிள்ளைத்தொட்டி லாட்டம்போல் வளைந்தசைவதாய் நிந்திக்கப்படுகிறது. (தாழ்மையடைந்த வாதபித்தங்கள் தமனியினடையை வளைந்தவடிவமுடையதாக மேனோக்கி யசையப்பண்ணுகிறதாம்) (௧௦௮)

## திரிதோஷகுண நாடி.

சர்ப்பநடையை உவமையான வாதமும், குறும்பூழின் போக்கை உவமையான பித்தமும், அன்னப்பறவையின் நடையை உவமையான சிலேஷ்மநாடியும்; தங்க டங்க ணடையை (ஒரு சேனாதிபதிக்கு ளடங்கிய எழுச்சியின் கோலம்போற் றோற்றி ஐக்கியமான) சமநடையை யுடையவைகளாய் நடக்க; நிதானமான நடையையுடைய தமனியும் நிதானமாக நடக்க மனுடருக்குப் பொருந்திய பெரிய தத்தும் விலக்கப்படுகிறது. (௧௦௯)

சுத்திக்கு வசப்படாத உபரக்தம், தான் போய்ச் சேர்ந்த உறுப்புகளையுந் தாழ்மை யடையப்பண்ணினபடியால், நிதான நேத்திரச் சிகித்சாநாளம் இயக்கமற்றிருக்கின்றது. அப்படியிருந்தாலும் அந்த நாளமூறடைகிறதல்ல. பூர்வீக இருஷிகளாற் கூறப்பட்ட வைத்திய சாஸ்திர விதிப்படி தோஷத்தையடைந்த தேகிகளுக்குரிய நாடியின் நடை (திரிதோஷ தொந்தத்திலும்) ஒரு நாடியின் நடையிலிருந்து மற்ற நாடியின் இலக்ஷணத்தைப் பிரித்தறியக்கூடியதாயிருக்கும் வரையு முண்டான ரோக மசாத்தியமாக மாட்டாது. (௧௧௦)

வாதாதி தோஷங்கள் மூன்றுமிணங்கி நடக்கிற சமநடை நாடி சர்ப்பகதி; அது இருதயத் துடிப்பிலே பேசுகிறது.

லாவம், ஹம்ஸம் என்பனவாகிய இப்பக்ஷிகளின் சங்கலிதமான நடையை உவமையான சமநடைநாடியின் நடை அங்குஷ்ட மூலத்திற் பேசுகிறது.

## சன்னிபாதகோபம்.

சன்னிபாதங் கோபங்கொண்ட நாடியின் நடை, லாவம், தித்திரி, வார்த்தாகம் இவைகளின் கமனம் என்று சொல்வதாகிய நடையிலக்ஷணத்தை உவமையாக நடக்கிறது. (கக௨)

திரிதோஷபூர்வ உற்பத்திகாரணமான ரோகங்களில், நாடி சிலவேளை மந்த கமனமாயும், சிலநேரம் சீக்கிர கெதியாயும், தோற்றி, உரோகிகளைச் சுகமடையவிடாததன்மையாகத், தாம் ஜெயங்கொள்ளுகிறது. (கக௩)

சன்னிபாதகோப மதிகரிக்கிற குணத்தில், காடைப்புள், சகுந்தப்பறவை, வார்த்தாகம் இவைகள் எதிரியிற் செல்லும் ஒரு எழுச்சிபோலவும், சிலவேளை ஒரு யுத்தசன்னத்தனின் துரிதமான நடைக்கு உவமையாகவும், சிலவேளை பாகனுக் கடங்காத முரண்டுத் தன்மையான யானையின் நடையைப் போலும், சிலவேளை சிலேஷ்மநாடி மந்த கமனமாகவும், சில வேளை சீக்கிரகமனமாகவும் நடக்கிறது. சன்னியில் வலிப்பின் காரணமாகிய கெட்டகுணங்களில், நாடியின் அறிவு சுழற்சியையுடையதாகிறது. திரிதோஷம் மாறும்பொழுது, பித்தநாடி உத்தம ஸ்தானத்தில் நின்று கிரமமாக நடந்தால், அது சாத்தியாசாத்திய மென்றும், கிருச்சிரமானது அசாத்திய மென்றும் சொல்லப்படுகிறது. பித்தம்: அதிகமாக நிற்பது சாத்தியம்; மத்திமமாக நிற்பது கஷ்டசாத்தியம்; நீசகுணமான பித்தம், எல்லா நாடிகளையும் உயர்ந்த இனமாற்றுக்குகிற கோவின் காரணத்தைத் தரிக்கச்செய்து அசாத்தியத்திற்குட் படுத்துகின்றது. (ககச)

## சமான்ய பூர்வசுக சாத்தியத்வம்.

எப்பொழுதும் தாதுக்களுக்குரிய பிரமாணம் அல்லது மாத்திரை அப்பியாசக் குறிப்பிற் றோற்றுமனின்றுவிட்டவுடனே நாடி தன்னடையும் அடங்கியிருக்கிறது; அந்தமாதிரியான குணங்களில் நடக்கிற நாடிஞானத்தைச் சுகசாத்தியமல்லாத அசாத்தியமென்று சொல்வது புத்தியல்ல. (ககரு)

நாடிநடை தெளிந்து, சிதைந்து நடக்கும்பொழுது, தோஷங்களும் தெறித்து அல்லது சிதைவுற்று கோசத்திலடைகிறது. அப்பொழுது இருதயமானது மனரகிதமான அனுகூலத்தை யுடையதோ அல்லது தூர்ச்சகுனமான சங்கேதத்தைப் பொருந்தியதோ என்பவைகளைச் சொல்வது சந்தேகம். அவைகளுடைய சேர்க்கை, பிரிவினால்: உத்தம, மத்திம, ஹீன பிரகிருதிகள் பிறவிக்குரிய தன்மை. இருதயகோசமசைவற்றிருக்கும்பொழுது கெட்டகுணமான நோய்க்குக் காரணமாயிருக்கிறது. நாடிகற்பனைக்கு, உற்பத்தி காரணமான அங்குஷ்டமூலத்திற் றோற்றுகிற தவறுகள் விருத்தியடையாத காயம் சுகசாத்தியப்பலனை யடைகிறது. (ஞானேந்திரியம் பழுதடையாமலிருக்கவேண்டும்) இருதய ஸ்தானத்தில் நடக்கவேண்டிய கம்பிதமானது ஒருமணியடியின் ஓசைக்குச் சமானமானதாக அல்லது ஓர் நதிப்பெருக்கினிரைச்சலைப்போ லெழுத்தில்லாவோசைக்குச் சமானமானதாக ஒலிக்கிறகுணம், தேகத்திற்குத் தீமையைச் செய்கிற காரணங்களைத் தெரிவித்தது. (௧௧௬)

தேகமானது காலவித்தியாசங்களுக்குத் தக்கபடியும், பருவாந்தங்களில் உரிய நிலைமைமாறி அடுத்த பருவத்தை யெடுக்கிற இனமாற்றத்திற்குப் பொருத்தமானபடியும், மூன்றுதோஷங்களிலேதுமொன்று அதிகரிக்கிறபொழுது, வாதந் தானே மேற்கொண்டு நின்று, நிமித்தம் பார்ப்பிக்கப்படுபவருடைய கையிற்றன்னுடைய நடையை அசைந்து நடக்க, பித்தம் அக்கினி முறைமையை யொழுங்காய்ப் பேசக் கபநாடியும் நிலையற்று நடக்கிறது. பித்தம் அதிக்கிரமித்து நடைகொள்ளமுன் அதினுடைய உற்பத்தியை வாதநாடியின் நடையிலிருந்து அறிந்து கொள்ளக்கூடியதான உரோகம் கட்டசாத்தியத்திற்குரியது. திருத்தமில்லாத இருதயகோசம் தீமையின் காரணமான விபரீத கருத்தையுடையதா யசாத்தியமான அறிவையடைகிறது. பிறவியில் வித்தியாசமில்லாத அங்குஷ்ட மூலகாரணமான நாடி ‘‘பைரவி’ எப்பொழுதும், பாலியம், யெளவனம், விருத்தாப்பியம் என்பனவாகிய பருவங்களினீற்றில், இணங்கி நடக்கிற தோஷங்களுக்குரிய ப்ரகோபம் சாந்தமாகிப் பின்னும் பின்னும் பேசுகிறது. (௧௧௭)

## அசாத்தியத்வம்.

அசாத்தியக் குணத்தில் அமைச்சன் முறை பிறழ்ந்து பெலனற்று நீசத்தன்மையான உருபேற்று மந்த கமனமாக ஆறி நடக்கிறது; அல்லாமலும் திடுகூறாய்ப் புசலடிப்பதுபோலெழும்பி நின்றுவிடுகிறது; நீசத்துவமான உருபேற்ற தன்மை அதிக சூக்ஷமமாகித் தரித்துத் தரித்து நின்று கரநேத்திரக்குறிப்புக்கு அதர்சனமாகிறது. எப்பொழுதும் ஸ்தானத்திற் சூக்ஷமரூபமாகவும் தோற்றுமலும் நடக்கிற தமனி எதிர்நோக்கிக் குதித்துப் பின்வாங்கி நிலைதளம்பித் திக்கித் திக்கிப் போகிறது: மறுபடியும் சோதனுங்குலியிற் றேற்றிக் குதிப்புற்று நடக்கிறது, ஓராற்றின் நீரோட்டத்தைப்போற் கடகடென் றோடுகிறது. தமனியின்நடையை யமுக்கிவைத்திருந்த சிலேஷ்மம் தீவிரகெதியா யெழும்புகிறது; தமனி உறுக்கி நடக்கிறதினால் இருதயத்தின் சுபாவத் தன்மை அனேக விதமான குணங்களுக்கு ஏதுவாகிச் சன்னிபாதம் அசாத்தியமாகிறது. (கக அ)

அசாத்தியக் குணத்தில், ஸ்பந்தனகாரண மச்சத்தைக் கொடுக்கிறது; வியாகுலமான குணங்களுண்டாகிறது; மயங்கிக் கலந்த நாடி தீவிரகெதியுடைய சிலேஷ்மம் குளிரடைந்து கையிலே தரித்துத் தரித்து எதிர்நோக்கி நெறிவழுவி நிலையற்று அலைவுற்று நடக்கிறது. கோவுக்குச் சிறப்பாகவுடைய பொதுத் தன்மைமுற்றுமிழந்து உருவமும் வேற்றுமையை யடைகிறது.

இருதய இயல்பு விழித்து உதைத்தலுக்குரிய இனமானபொருள் எதுவோ அதனையு மூணருகிறதில்லை. தன்னிஷ்டமாகிற நாடி நீசத்தன்மை யடைந்து துரிதகெதியை எடுக்கிறது. அங்குஷ்டமூலத்தினின்று கற்பிக்கிற தானப்பொருள் பழுதடைகிறது. அசாத்திய இலட்சணத்திற் கூறிய பல காரணங்களினாலும் கூர்மவடிவமான நாடியினருட்சிக்குரிய நிதானமாத்திரையும் ஒரு மாறுதலான சுழற்சியை யெடுக்கிறது. அதுபோலவே நாடியின் சந்தித்துவாரத்திலும், பிரத்தியக்ஷமான கோஜத்திலும்பெறுகிறது. அது உதரவன்னியின் சொலிப்பினாலுண்டான அபப்பிரயோசனத்தைக் கைக்கும் மார்பிற்குமாக மாறிமாறிச் சிக்ஷை செய்கிறது; அப்படியே கருப்பாசய நிலைமையையும்

கினைக் வேண்டியது; பெரும்பான்மை மிருத்து காரணங்களை அங்குஷ்டமூலத்திலும், இரத்தாசயத் துடிப்பிலும் பார்த்தறிய வேண்டும்.

அசாத்தியரோகத்துக் தேகத்திலதிக தாபமுண்டாயிருத்தல், சீதளத்தன்மை யதிகரித்து நாடி குளிரடைந்திருத்தல், அல்லது நாடி உஷ்ணமதிகரித்திருத்தல், உச்சி அதிக உஷ்ணமாயிருத்தல், அப்படியே நடை தேய்ந்து தேய்ந்தில்லாமலற்றுப் போதல், திரிதோஷங்களும் ஸ்பந்தனமாகிற நாடியுடன் பலமற்றதாகின்றன.

சன்னிபாத அவஸ்தைகளின் மரண காலங்களில், தாதோட்ட நாடியின் சமலக்கணம் பிறழ்ந்து நடை நிலையற்றுத் தளம்புகிறது அசாத்திய அதிசார ரோகங்களில், ஹாதபைரவி அதிகமான வியர்வையை யுண்டாக்கிறது. தேகத்திற்குப் பலனையழிக்கிற அக்கினியின் குணம் கெட்டு, நாடி நியூன குணமான தடபலக்ஷண முடையதாயடிக்கிறது. (கஉஉ)

நிலையற்ற பித்தநாடியின் நடை பிரபஞ்சனகதியிலும், பிரபஞ்சனகதி உறுதியான சிலேஷ்மநாடியிலுக் தோற்றிப் பேதமுடையவைகளாய்ச் சுழன்று, உரிய தானம் பிறழ்ந்து திரிதல், பகுத்தறிய இயலாத நிதானமற்ற நடையாயிருக்கிறது. அந்த நடை சக்கரவாகமென்னும் ஓர் பறவையைப்போல், அல்லது ஒரு சக்கரத்தின் சுற்றைப்போற் கீழ்மேலாகச் சுழன்று அச்சமுண்டாகக்கூடிய தீவிரவேகமாய் நடக்கிறது; ஒரு சமயம் நடவாமலுக் தரிக்கிறது. அவைகளைச் சிலேஷ்மம் பரிபாலித்து வைத்திருந்து பலவேறு வகைப்படுத்தி மயில்நடைக்கு உவமையாகவாவது அல்லது குயில்நடைக்கு உவமையாகவாவது பொருந்த நடக்கிற இலக்ஷணம் சூக்ஷமத்தன்மையதிகரித்து அசாத்தியமாகிறது. தமனியின் சம்வாதம், புடமிட்டறியப்படுபவருடைய கையிலே, சுகநடையைத் தோற்றாது. (கஉ௩)

ஸ்நாயுவின் நடை அரூபதொந்தமானது; அசாத்தியமாகும்பொழுது அதினுடையநடை சூக்ஷமகதியில் வக்கிரரூபமாகத் தோற்றி தேகத்தில் வருத்தி மனசைக் கலக்கிறது. ( )

நெறிதவறிய அந்தநாடி அதிக தோஷத்தை யடைகிறது. அது சகித்துச் செல்கிற மாம்ஸநீர் உட்டுளையின்கண் மாம்ஸ ரூபமான செயலைக் காண்பிக்கிறது. நடைதேய்ந்துசிலவழிகிறது. இந்த மாம்ஸரூபம் நரம்பின் துவாரத்தையும் சலன நேத்திரத் தையும் நெருக்குகிறதினுல், வைத்தியஞ் செய்விக்கிறவனுக்கு நடைபெறுகிற நாடியின் பூர்வாங்கங்கள் விளைந்த காரணமாயும், நாடி முற்றுய்ச் சிறுத்தும் இருக்கிறது. பிரபஞ்சன கதியும் அசாத்தியமாகிறது. (௧௨௫)

தலைமீது பாரமேற்றி நடந்து நடக்க இயலாம லிளைத்து மூர்ச்சையுற்றிருப்பவனுக்கும், பூதப் பிரேத பைசாச காரணங் களினுற் பயந்து திகிலடைந்திருப்பவனுக்கும், திரவியம், மனைவி, மகார் முதலிய ஸ்திதிகளை யிழந்த காரணங்களினுல் பிரமையுற்றிருப்பவனுக்கும், பிரமாணத்திற்குமிஞ்சிய உணவினு லுதரம் விம்மி மூளிபிதுங்கி விஷமித்துப் பிறண்டிக்கொண் டிருப்பவனுக்கும், மூர்ச்சையுற் றடங்கிப் பிரேதத்திற்குச் சரியா யிருப்தவனுக்கும், நாடி அசாத்தியம்போலிருந்தாலும் அது அசாத்தியமல்ல இவர்களுக்குத் தகுந்த சிகிச்சையைக்கொண்டு உயிரைத் தப்பவைக்கவேண்டியது. இதின் காரணம் யாதெ னின் எலும்பின் பொருத்துக்களிற் சொல்லப்பட்ட நாடியினிரத் தோட்டம் தங்கி உபத்திரவத்தைக் கொடுத்துப் பின் சுகத்தைக் கொடுப்பது. (௧௨௬)

உயரமான ஸ்தானங்களிலிருந்து விழுந்து அறிவு மயங்கி யிருப்பவனுக்கும், சில துஷ்டமிருகங்களுடன் போராடிக் காயப் பட்டு மூர்ச்சையுற்றிருப்பவனுக்கும், அதிசாரரோகிக்கும் இராச யக்ஷ்மரோகிக்கும், மதனயுத்தத்திற்றுழ்மையடையப்பட்ட சுக்ர க்ஷீணகனுக்கும், நாடி நடை அதிக க்ஷீணமுடையதாய்த் தோற்றுகிறது. அப்படித் தோற்றினுலும் மரணத்தை யுண்டு பண்ணமாட்டாது. சிலசமையம் அசாத்தியத்திற்குத் திரும்பி னுலும் அந்தக் குணங்களை நிவிர்த்திசெய்யக்கூடிய, மந்திர, தந்திர, அவுஷதம் முதலிய சிகிச்சைகளினுல் வசப்படும் (௧௨௭)

## பூதாபிஷங்க நாடியும் அபமிருத்துகாரணமும்.

பூதாபிஷங்கத்திற் றிரிதோஷங்கள் சகிதமாகச் சேர்ந்து பக்திக்கிறதினுல், உடம்பில் உதிரத்தைக்கொண்டுசெல்கிற நாடி, உறுப்புகளுக்குப் பொருத்தமாயும், பிரமாணத்திற்கு மிஞ்சியும் நடக்கிறது: அபமிருத்து காரணங்களில், நாடி யுரோகத்தினுல் வருந்தியிருப்பவருடைய மரணநாடியின் நடையைப்போலல்ல, அவனுக்கு அந்த நேரத்தில் உடனே கொல்லும் சன்னிபாத ரோக நாடியின் நடைக்குச் சமானமாகப் பொருந்தும். (கஉஅ) (உடனே கொல்லும் சன்னிபாதம் அபின்னியாச சன்னிபாதம்.)

ஏவலின்பொருட்டு மனுடரைச் சருவி வருத்தப்படுத்துகிற பூதப்பிரேதங்களாலுண்டாகிற குணபேதங்கள், விளையற்றிருக்கிற சன்னிபாதங்களில் கெடுதியைச் செய்கிற நடையைப்போல், நாடி லோலித காரணமாக இரத்தத்தைக் கொண்டுசெல்கிறது. உபதொக்தம்போ லாளப்பட்ட திரிதோஷங்கள் வழக்கப்படி போஷிக்கப்பட்டுப் பிரமாணத்தைக் கடந்து சென்று, இரத்தாதாரத்தினின்று இரத்தத்தைச் சேர்ப்பதும் பகுதி பகுதியாயுறப்புக்களுக்கு இயல்வதுமாகிய "கோ" என்பதையொருபுடைவையின் நெசவைப்போல் வளைகிறது, பிரிந்து கொடுக்கிறது, துர்நிமித்தமான சன்னிபாதத்தைப்போல் மரணம் நிச்சயிக்கப்படுகிறது. நாடி பயங்கரம், மனக்கலக்கம், மனோதண்டம், கோபம், விகாரம், முதலியகுணு நுணங்களமைந்தவன் நாடியைப்போல் நடக்குமென்றும், அபமிருத்தில் அச்சமில்லாதவன் குணநாடியைப் பிரதிபுவமையாக அடைந்து நடக்குமென்றும் கூறுகிறது. அபமிருத்து என்பது அச்சமற்ற காரணங்களைப் பிரதிபலனுகச் சேர்ந்திருக்கிறது. சுபமிருத்து நேரிடுங் காலத்தை முன்னுக இருப்பவனுக்குப் பயங்கரமில்லாதவன் நாடியைப்போல் நடந்தால் துர்மரணத்துக்குரிய செயலென்றறியப்படுகிறது. ()

உயரமான தானங்களிலிருந்து தவறிவிழுந்து ஜீவனுக்கு ஆதாரமான உள்ளுறுப்புகள் யாதொன்றிற் காயப்பட்டு, சஞ்சலம், குளிர் முதலியய சோகமான கெட்ட குணங்களைப் பட்டிருப்பவனுக்கு, நாடி அக்ஷரத் தொனியோடு தெளிவாயப

பேசுகிறதில்லை; அவன் உடனேயுபிரிறவாமற் சில தினங்களுக்கு இருந்தால் பெலன் குன்றி நாடியினது சேர்க்கை யற்பமேனும் இல்லாமற் பழுதாய் வழங்குகிறது. (கூ0)

மேலே சொல்லப்பட்ட அவதானவினனுக்கு, கோவு விசனம் முதலிய சோகமான குணங்களும், குளிரும் அகலும்பொழுது, நாடி சாருது காலத்திற் காணப்படும் கோகில நடைக்கொப் பாகவும், பாதநாடி ஒருவில் நாணி லொலியைப் போலக்ஷரவடிவ மில்லாத போலிநாதத்தைப் போலும் பேசுகிறது. மூடமும் வெளிப்புமான குணத்தில், நாடி வலிமை குன்றி மிக்க அஞ ருற்றவன் குணநாடியின் நடையைக் காட்டி நடக்கிறது. இந்த விதமாக நாணீண்ட அபமிருத்துகளில் உயிர்நீங்கும் சமயம்பட் டனுபவிக்கிற துயரம் சுபமரணுவஸ்தையிற் பட்டனுபவிக்கிற துயரமன்றி வேறு பயங்கரமான துயரமடைகிறதில்லை. சிலேஷ்ம நாடி தொக்கித்து நேர்கிரையற்ற தன்மையாக நடக்கிறது: மா ணத்திற் காக்கையின் நடையைப்போல் நடக்கிறது. (கூக)

## உறழல் விதி.

ரோகம், சாத்தியம்போலிருந்து அசாத்தியமாகிறதும், அசாத்தியம்போலிருந்து சாத்தியமாகிறதும் இயற்கை செய ற்கை என்னும் இரு குணங்களின் விபரீதங்களாலு முண்டாகின் றன. உறழல் என்பது வழுவிலக்கு. இங்கே அசாத்தியத்திற் சாத்திக குணத்தைப் பேசப்படுகிறது.

ஒரு சிலதினையப்போற் பின்பற்றிநின்று, பித்தத்தை நெரு க்கி அதினுடைய இடத்தையும் தங்கணடையினுற் பூரணப் படுத்தி, வைத்தியன் கொடுக்கும் மருந்தையும் பலனடையவிடா மல் அசாத்தியகுணமான உருபுபுணர்ந்து மேற்கொண்டு நடந்த வாதமும் சிலேஷ்மமும் குறைந்த மாத்திரையைப் பொருந்தி நடக்க, முறைபிறழ்ந்துநின்ற பித்தம் அந்த நடைகளை உறழ்ந்து ஜெயங்கொண்டு உச்சநடையைப் புரிய, ரோகிக்குக் கொடுக்கிற சுகங்கொடுக்கக்கூடிய, அவுஷதம், மரணத்தைப் பிறழச்செய் கிறது. (கூஉ)

அந்தப் பித்தம் நீதியாக நடக்க, நீரோட்டத்தைப்போ னடந்த தமனியும் சாத்தியகுணமாக நடக்கும். அபமிருத்து ரோகியைத் தொடரும் கெட்ட குணமான செய்கை அசாத்திய மாக்கமாட்டாது. (கஙந)

குக்குடங் கிண்டிக் குழைந்துதன் காலாற் சிக்கின் றகன்ற ஜெயம்பித் துறழ்ச்சி, என்று நாடித்திரட்டுக் கூறும்.

தமனிநாடிகள் சுயபேதமற்ற தங்கடானங்களில் நின்று நடக்கும்வரையும், தேகத்திற் கிடையூறான அபஜெய முண்டாக மாட்டாது: புராணரோகிக்கு மிதமிஞ்சிச்செய்கிற சிகிச்சை நல்ல குணமுடையதாயிருந்தால் சாத்தியபேதமான குணங்க ணிலைக்கமாட்டாது. அதற்கும் புத்ரோகங்களுக்கும் பொருத்த மில்லாமலனேக விதமாய்ச் செய்கிற சிகிச்சையினால், மனசுக் குரிய சத்குணம், நாளம் இவைகளைப் பழுதாக்கி அசாத்தியத் திற் கேதுவாக்கிறது. (கஙச)

## மரணாந்த உற்பத்திகாலங்களை அங்குஷ்டமூலத்திற் பார்த்து முடிபுரைத்தல்.

### ஒருமாச அந்தத்தில் மரணக்குறி.

பூலதை, புஜங்கம், ஆகிய இந்தப் பிராணிகளின் நடையை ரூபக இலக்கணமாகக் குறிப்புக்காட்டின நாடி, நடையை யொழித்து ஒன்றோடொன்று சேர்ந்து பின்னப்பட்டு, தானம் பிறழ்ந்து, ஒருமலைமே லேறுந் தன்மைபோ லுருண் டுருண்டு நடத்தல், உட்கிச் சிதைவுற்ற நடையாகத் தேய்ந்து தேய்ந்து நடத்தல், ஆகிய இந்தக் குறியுற்பத்தியான நேரம் முதல் ஒரு மாசத்தின் அந்தத்தில் மரணம் சீவனை யெடுக்கிறது. (கஙரு)

சிலேஷ்மநாடி பூலதையின் வேகப்போற் றுடித்து அழிந்தா லும், அந்தத் துடிப்பு மெலிந்து கிருசநடைகொண்டாலும், அந்தக் கிருசநடை குடிலப்பட்டு நிலையற்றுத் தளம்பினாலும், மரணம் ஒருமதியி னெல்லையில் முடிகிறது. (கஙசு)

ஐயநாடி சர்ப்பத்தின் ஓட்டத்தைப்போல் அகன்று பல முடையதாய் வாங்கி நிலையற்றத் தளம்பினாலும், அல்லது அதிக

கிருசகமனமாகத் தோற்றி யக்கடையைக் காட்டும் ரேகை விளக்கமில்லாம லழிக்துபோகிறதும்; அப்பொழுது கபவிருத்திக்குரிய கொடிய குணங்கள் மேற்பட்டு இருதயகோசத்தைச் சூழ்ந்து, கோவின் சமாதான ஆக்கத்தையுந் தாழ்மையுறச் செய்து, துர்க்குணமான ரோகிக் கமைந்திருக்கிற தூலசரியின் மேன்மையான மடையும் பேதமடைந்து மரணம் சந்தேகமில்லாமல் ஒரு மாசத்தின் முடிவி லுண்டாகிறது. (கருஎ)

## ஏழாம் எட்டாம் நாட்களில் மரணக்குறி.

சாந்தமாக நடந்த சிலேஷ்மநாடி மத்திமைவிரலிற் சேர்ந்து க்ஷணப்பொழுது வேகமாய் நடந்து இல்லாம லற்றுப்போகிற குணம் ஏழாம்நாளில் மரணத்தைப் பிறப்பித்தது. (கருஅ)

கபாதிக்கமான குணங்கள் தலைப்பட்டுச் சிலேஷ்மநாடி மறைந்து நிலைதளம்பித் தானம் பிறழ்ந்து தீவிரமான கெதி காட்டி யுடனே யழிந்துபோகுதல், திரட்சி வீக்கம் முதலிய நீர்ப்பிடிப்பான வியாதிகளாற் றேக வர்ன்னம் மாறியிருத்தல், வெளிகாட்டாம லுள்ளடங்கியிருத்தல்: இந்த நாடிநடை யுண்டான அமையத் தொடக்கம் ஏழாம் எட்டாம் நாளில் காய மழிந்துபோகிறது. (கரு௯)

## நாலு நாளில் மரணக்குறி.

வலதுபாதநாடி பழுதடைந்தால், தர்சனக்குறிப்பிடத்தில், மூன்று தாதுக்களையும் பகுத்து, ரோகம் சாத்தியநிலைக்குரியதோ அல்லது அசாத்தியநிலைக்குரியதோ என்பதை அறிவது சந்தேகம்: முகநாடி நித்தியமும் நீரோட்டத்தைப்போ லோடினல், அது பிறந்த நேரந் தொடங்கி நான்காம் நாளில் யமகண்டமென் றுன்னு. (கசo)

பைரவி நாடிகள் ரூபகஇலக்கணப் பாகுபாட்டை வேற்றுமை யடைகிறதினல், அங்குஷ்டமூலத்திற் பகுத்தறிந்து கொள்வது இயலாதது. அதுபோலவே நாடி யாரம்பத்திற்குரிய மூதற்காரணமும் பேதப்பட்டு, நித்தியநாடி (தமனி) யின் சலனப்: ஆற்றின் நீரோட்டத்தைப்போலு, முறுப்புகளுக்கு இரத்தத்தைக் கொண்டு செல்லும் ஸ்பந்தன காரணம்போலும், பலவிதமாக மாறுபடுகிறது. ரோகிக்கு இந்த விகடமான நடை

யுண்டான அமையக் தொடங்கி நான்காம்நாளில் உயிர் உடம்பை விட்டுப் பிரிகிறது. இதில், முன் பேசப்பட்ட சப்தநினுந்த அசாத்திய நாடி, கபம் தற்சனி விரலில் மாறி மாறி அதிவேக மாக நடந்து நாலு மினிற்றி லில்லாம லழிந்துபோகிறது. (கசக)

## மூன்று நாளில் மரணக்குறி.

தாபக்குண மதிகரித்துக் காய்கிற சுரரோகங்களில் உண் டான தோஷம், அதினுடைய உக்கிரமான அழற்சியினல் நெருக் கப்பட்டுச் சடத்திற் கியல்பாயுள்ள திரிதோஷங்களின் ஸ்பர் ஸத்தை உணவாக்கிக்கொள்ளுகிறது. அந்த உணர்ச்சியி னெரு பகுதியாவது உடம்பி லிருக்க லில்லாமற் ருபத்தி னுக்கிரமத் தினு லழிந்துபோனவுடன் நாடிநரம்பும் விறைத்துச் சடுதியாய் மரணமுண்டாகிறது: அது தவறினல் மூன்றுதின வெல்லையில் இறப்பு உண்டாகின்றது. அந்த ஸ்பர்ஸபாகத்தைத் தாபத்தின் கொடூரந் தாக்காம லிருந்தால், மூன்று தோஷங்களுக்கு முரிய இயல்பான குணம் வளர்ந்து மரணமும் விட்டு நீங்கிறது. (கசஉ)

சுரத்தி னழற்சி யதிகரித்துச் சூடுள்ளடங்கியிருக்கிற சன் னிபாதசுரத்தில், நாடி சிதளமாயும் அமலமாயும் நடந்தால், மூன்றும்நா ளந்தம் நான்காம்நாள் முதலில் மரணம் சம்பவிக் கிறது. (கசங)

## ஒருநாளில் அநிச்சய மரணக்குறி.

பிரமரகமனத்தைப்போல் நாடியின் நடை தேய்கிற வளர் கிற சுழற்சி ஒரு தினத்திற் றேகத்தையழிக்கும் அல்லது விடும் )

## ஒருநாளில் மரணக்குறி.

பிராணிக்குரிய நாடி ஜீவனைக் கோறும் பொருட்டுக் கை யிலே சுழன்று வண்டைப்போற் றெறித்து வீழ்கிறது: அது அங்குஷ்டமூலத்திலிருந்து தூர வீழ்ந்து மார்பை யறைந்து அச் சத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு அதிர்ச்சியை யுண்டாக்கி யுட் கிப்போகிறது. அதற்கு நியாயம் யாதெனின்: தானத்தைவிட் டுப் பெயர்ந்த, தாதின் அவகுணமான செய்கை, மனசுக்குரிய இஷ்டார்த்தமான கருவியைச் சுற்றித் திரும்பச்செய்கிறது அல் லது இயற்கையான குணத்திற்கு விரோதமாகச் செய்கிறது. மிருந்து ஒரு தினத்தை எடுக்கிறது. (கசரு)

## சுழுமுனைநாடியின் நடையினாலுண்டாகும் பலாபலம்.

சுழுமுனைநாடி எப்பொழுது மெல்லா நாடிகளுக்கு மாதாரமாய் ஸ்பந்தன காரணமாயுடையது. அது நாடிரூபக அங்குலிகளிலொருமுறைக் கதிகமாய் நடத்தல் அல்லது அதற்கு எதிரிடையாக மற்றைய நாடிகள் செல்லுதல் மரணத்தை யுண்டாக்கிறது. (கசசு)

உடுக்கைப்பறையின் முடிப்புக்குச் சமமாகக் கனிந்து ஒலித்த குறிப்பைக் காட்டின தோற்றம் ஒரு நாளிற் காயத்தை அழிக்கிறது அல்லது விடுகிறது. (கசஎ)

அங்குஷ்ட மூலத்தில் உடுக்கைப் பறையின் முடிப்பைப் போற் றுடித்துச் சைகை காட்டின நாடியை மரணகாரணமும் இனமாற்றுக்குகிறது: அதின் நியாயம், அந்தத் துடிப்பு அருமையாகத் துடித்து மறைந்தால் மரணமில்லை, இடைவிடாமற் கனிந்து, ரம்கதி பண்ணித் தரித்தால், மரணம் ஒரு நாளந்தத்தில் மாற்றிச் சிவனை எடுக்கிறது. (கசஅ)

பாதநாடி, கையிலே தூலித்த வடிவமாயடர்ந்து நிலைக்கப் பட்ட ஓசையுடன் காணப்படுகிறதும், முகம் செந்தாமரைப் புஷ்பத்தைப்போற் பிரகாசமுடையதாய்த் தோற்றப்படுகிறது மாகிய இந்தக் குணங்களைப் பொருந்தியிருக்கிறவனுக்கு: மரணம் விட்டுத் தூரமாயெடுக்கிறது. (கசகூ)

கவிலப்பட்டவனுக்குப் பாதநாடி, ப்ரதீதமான நல்லநிலையை யடைந்து நடக்கிறது; பெண்ணுக்குப் பாதநாடி தூலித்து இனமாற்றுகிறதில்லை, ஆகையால் அவளுக்குப் பிராணாபாயமான காலனாடி கர்மாந்தரக்கிரியைக்குரிய தேகத்தின் பகுதியிலிருந்து நடக்கிறது. (கருo)

வருஷக்கணக்காக மாறுமல் நீடித்திருக்கிற வருத்தங்களின் நாடி, திரிதோஷதொந்தத்தில், வாதம் பித்தம் சிலேஷ்மம் மூன்றும் நடக்க முயலுந் தன்மையில்லாமற்றேய்ந்து கிருச்சரமானது சாத்தியம்; வலுக்கொண்டு நடக்கிறது அசாத்தியம், இது நிச்சயமானது. (கருக)

## பதினறுநாளில் மரணக்குறி.

நாடி கெதியாய் நடந்தால் மலபேதமும் சீதளவாதமுமுண்டாகிறது: அந்தக் குணங்கள் மருந்தின் செய்கையாற்றிருந்தாவிட்டால் மரணத்திற்குக் கணிக்கப்பட்ட பதினன்கு நாட்களுள் முதல் இரண்டாந்தினத்தில் மிருத்துநாடி சாதுரியமான மனசைரம்மியப்படுத்தி, உள்ளடங்கிய வன்னியை அளவின்மேலதிகரிக்கச்செய்து, தான் பழகிய திவசங்களொன்றில், இரண்டு கிழமைக்குள் மரணத்தை யாற்றிவிடுகிறது. (கடுஉ)

மேலே பேசப்பட்ட நாடி, மலாசயத்தினின்று, தனக்குரிய துர்க்குணங்களால் மலசலந் தங்கிச் செல்லு மொழுக்கத்தைப் பழுதடையப்பண்ணி, ப்ரதிதமான சமநிலையையுடைய கோவையுங் களங்கமுறச் செய்து குளிரடையப்பண்ணுகிறது. அந்த நம்பிக்கையீனமான வுரோகிக்குக் குறித்த தினங்கள், இரண்டாம் நாள், ஏழாநாள், இவைகளொன்றிற் றப்பியிருந்தால் பதினன்காநாளில் மரணஞ் சம்பவிக்கிறது. இந்த வித்தியாசங்களா லங்குஷ்டமூலத்தில் நாடியறிவு இல்லாமலற்றுப்போனது.

## ஏழுநாளில் மரணக்குறி.

வாதநாடி யொருநேரந் தீவிரவேக முடையதாயிருத்தல், இன்னொருநேரம் சீதளகுண முடையதாயிருத்தல், மரணவியர்வை முதலிய தசாவத்தைக் குறிகாணல், இருதயத்திற்குச் சிரேஷ்டமாக ஸ்தாபனம் பண்ணப்பெற்றிருக்கிற தாதுகள் வரண்டுபோகுதல், அல்லது அந்தப் புச்சமாகிய கூந்தல்களாவியாய்ப்போகுதல், இந்த அவலக்ஷணங்களையும் துர்ச்செயல்களையும் பொருந்திய ஏதமுடையவருக்குச் சீவன் ஏழிராவந்தத்திற்றேகத்தி னிலைத்திருக்கமாட்டாது. (கடுச)

மேலே கூறிய வாதநாடி தீவிரகெதியாகவும், சிலேஷ்மநாடி தாமதமான மந்தநடையாகவும் நடக்க, நிகளநாடி யொழிந்த மற்றுமுறுப்புகள் அதிகமாய் விகாரப்பட்டு வேற்றுமையையடைந்திருந்தா லேழுநாள் முடிவி லந்தத் தனுபூதல சீவியத்தை யிறக்குவிடுமென்பதாம். (கடுரு)

## அரைமாதத்தில் மரணக்குறி.

தேகமதிக குளிரடைந்திருத்தல், அல்லது ஒரு சாரதியின் செயலுக்கொப்பாகக் கைகால்களைப் போட்டுலைத்தல், கண்களைத் திமிட்டித் திமிட்டிப் பார்க்குதல், அல்லது ஏற்றுவிழிக்கொப்பாக விருத்தல், நாடி அதிக அழற்சியுடையதாய் வரண்டிருத்தலாகச் சொல்லப்பட்ட குணங்களுண்டாகி அரைமாதம் சீவனோடிருக்கிறவனுக்கு, அந்த மரணநாடி வுடாட்டமான நாள் முதல் பதினன்காம் நாள் உயிரை வதைக்கிறது. (கருசுா)

## பதினைந்து நாளில் மரணக்குறி.

சாரீரசுபாவகுணம் மாறிச் சீதமதிகரித்திருத்தல், வதனகாந்தி குறைந்து மேல்மூச்சு, தேக எரிச்சலுண்டாயிருத்தல், உடனே நாடிநிலையற்று அலைவுற்றுத் தீவிரவேகமாக நடத்தல்; பதினைந்து தினத்திலாயுள் கழிகிறது.

## மூன்றிராத்திரியில் மரணக்குறி.

முகநாடி எந்த நேரத்திற் றன்னுடைய விலக்கணத்தை யிறந்து, முறைபிறழ்ந்து, நடுவிரலினின்று குளிரை யதிகரிக்கச் செய்ததோ அப்பொழுது ஆயாசம் களை முதலிய ஆவேசமான குணங்களுமதிகரித்து, நாடியுந் தோற்றுத மந்தகதியுடையதாய் நடந்தால், மூன்றல்கலில் பிராணனைக் கோறுகிறது. (கருஎ)

மேற்படி கூறிய மரணகாலத்தில் வாதநாடி முறைபிறழ்ந்து நடக்கிறது. அது புலரிப்போழ்திற் றேற்றும லந்தர்கதியாக நடக்கிறது. கோ, சீதளகுண முடையதாகி உடனே மனசுக்கு அழுக்கமான குணத்தைப் பிறப்பித்துக் கோள்புரிய முயலுகிறது. அப்பொழுது நாடி, அதிக மாறுதலான மந்த அசைவு: ரோகியினுயிர்நிலை மூள்றல்கலிலழிகிறது. (கருஅ)

சீதங் கோவுறச் சிறந்த நாடி
யூதை பிறழ்த்தொழித் துலாவுமென் றனரே.

என்பது நாடிசூத்திரம்.

மருத்துவன்றானுண்டுவந்த அவுடதங்களை முறைப்படி உபயோகித்தும் குணமாகாமல், அசாத்தியமாகவந்த வருத்தத்தில், நாடி தனக்குரிய வடிவி லதிகம் சுருக்கிச் சூக்ஷ்மமாயும், அதிக வேகமாயும், சீதளமாயுந் தோற்றியிருந்தால், அந்த வருத்தங்களை யனுபவித்திருக்கிறவனுக்கு வேறுபட்ட ஆயுளை யழித்து விடுகிறது. (௧௫௧)

சீவனுக்காதாரமாயுள்ள ஏரானேந்திரியங்கள் வித்தியாசப் பட்டிருக்கிற ரோகியின் ஆயுள் அழிந்த நியாயம், மரணசமீப காலத்தில் நாடி தன்னடையைச் சிதறிச் சூக்குமவேகமாய்த் தோற்றிச் சீதள குணத்தை யதிகரிக்கச் செய்ததினால்.

பிணியுடையவருக்கு, நாடி மின்னலைப்போற் றோற்றுமற் றோற்றுகிறது அகாலவிதியின் துர்க்குறி; அணுப்பிரமாணத்தி னொருபகுதி உயிர்ப்பு, செங்கோற்கடவுடண்டனைக்குட்பட்டது.

> தற்சனி விரலிற் றடித்துக் கரந்த
> உற்பவ மோர்தினத் துள்ளுயிர் வீவே.

என்பது நாடித்திரட்டு.

குறுநாடி அக்கினிக்குச் சமானமாகவும், நெடுநாடி அரவினோட்டத்திற்குச் சமானமாகவும் செல்லுதல்; கண்டத்திற் கபம் நிறைந்திருத்தல் ஆகிய இந்த இலட்சணங்களைப் பொருந்திய ரோகியின் வாழ்நாள் துர்லபமானது. (௧௫௨)

## மூன்றேகால் நாழிகையிலாயுளிறப்பு.

கபிநாடி பதறிவேகமாக நாசிக்காதாரமாயுள்ள சீதத்தை இருதயஸ்தானத்தி லடையச்செய்த காரணம், ஒன்றரைமணித்தியாலத்தில் மிருத்து மருவினது. (௧௫௩)

அந்தக் கபிநாடி இரத்தமோடவேண்டிய துவாரங்களை யடையப்பண்ணுகிறது. அப்பொழுது நாசிவழியாக விழுகிற கோழை சுவாசப்பையை யடைந்து நெருக்குகிறது; கோ, சீதளத்தன்மையைப் பொருந்துகிறது. இந்தக் கெட்ட குணங்களைத் தாங்கியிருக்கிற ரோகிக்கு, நாடி பர்சனஸ்தானத்தில

வாதசிலேஷ்மங்கடானு மறியக்கூடியதாகவில்லை; அவனை மரணம் ஒரு சாம வரைப்பில் அல்லது மூன்று மணித்தியாலத்தில் எடுத்தது. (௧௬௪)

அழற்சுரத்தில் மலக்குடலைப் பேதிக்கிற நாடி சீக்கிரமான நடை; பித்தம் ஏகதினத்தில் மீண்டிருப்பவனை, இரண்டாம் நாளிலிறக்கச்செய்கிறது. அதாவது: ரோகிக்கு மூன்று தோஷங்களுந் தொந்தப்பட்டு நாடியின் நடையு மதிக குடிலப்பட்டு நீசத்துவமான இலக்ஷணத்தைப் புணர்ந்து நிலைதளம்பும் பொழுது சிதறிய துடி, மத்திமைவிரலிலாடிநடக்கிறது அது நடைகொண்ட ஒரு பகலுக்குள் அக்கினிக்குச் சமானமான சுரத்தைப் பிரவேசிக்கச் செய்கிறது அந்தச் சுரத்தை யனுபவித்த ரோகி ஒரு திவாவுக்குச் சீவித்திருப்பது அருமை; அந்த நாட் டப்பினு லடுத்த தினமிறந்துவிடுவானென் றெண்ணலாம்.

## பன்னிரண்டாம் யாமத்தில் மிருத்து.

சுழுமுனைநாடி தர்சனங்குலி மத்தியிலடிக்கடி தோற்றி நடத்தல் பன்னிரண்டாம் யாமபேதத்தில் மிருத்துண்டாகிறது. ஆனால் இதில் யூகித்தறிகிறதற்கொன்றுமில்லை; நாடி நடை தோற்றுகிறதில்லை. (௧௬௬)

சுழுமுனைநாடி எப்பொழுதும் நடுவிரலின்கணின்று மற்ற நாடிகளுக்குரிய நடையை விளக்குந் தத்துவமுடையது; அது மலசலந் தங்கிச் செல்லுமொழுக்கத்தினின்று வேதனைகொடுத்து மலாசயத்தை விபரீதப்படுத்துகிறது; படகதி யில்லாமல் இடைக்கிடை யுன்னியுன்னிக் கையிலே பரிசமில்லாமலடைகிறது. இந்தச் செயல்களை யபகரித்திருக்கிற ரோகியை மரணம் மூன்று மணித்தியாலத்தி லெடுத்தது. கையிலே வாதகபங்கடானு மறியக்கூடியதாகவில்லை. (௧௬௭)

கூர்மவடிவமான நாடிச்சக்கரத்தின் வக்கிரத்தில் ஸ்தாபித்த நாடி சடுதியாய்ப் பிறப்பித்த வித்துத்து, ஒதியைப் புணர்ந்து ஊறுபடுத்திப் பலனை இல்லாமற் கெடுத்தது. இந்த அபத்தமான செயலினுலுண்டான குணத்தை யனுபவித்த பிராணன், ஏகதிவசம் மீண்டிருந்தால் இரண்டாநாள் பொழுதிறந்துவிடுமென்பது நிர்மானிக்கப்பட்டது. (௧௬௮)

மேலே சொல்லப்பட்ட குணமமைந்த ரோகிக்கு, நாடி ஆதாரவோதை அக்கிர பாகமாக மாறி அல்லது வேறுபடுத்திக் காடியுடன்கலந்த கறிகுழம்பைப்போல் மனசைக் கலக்கி, அதைத்துச் சீவனை வதைக்கிறது. தடபம் இருதயத்தை யசைத்தவுடனிறவாதிருந்தால் அது உண்டான நேரந்தொடங்கி ஒரு தினத்தி லிறப்பு; அதுவுந் தப்பினுல் இரண்டாமல்கலில் அக்கினிகடமைக்குரியவனுகமாட்டான். (கசுகூ)

மேல்மாடங்களிலிருந்து தவறிவிழுந்தவனுக்கு, நாடி எந்த நேரத்தில் ஆற்றின் நீரோட்டத்தைப்போலும், புரண்டும் நடக்கிறதோ அப்பொழுதும், அக்கினிச் சுவாலைக்குச் சமானமாயமுன்று மாருத கதியைப்போ லலைவுற்று மோதினுலும், உடனே இருதயத்தி லளவுக்கு மேலான அங்கி குடிகொண்டு நிலைக்கிறது. இரத்தோட்டம் எதிர்முகமாக ஓடுகிறது. 'கோ' இடம் பிறழ்ந்து பேதைமையடைகிறது. கையிலே சிலேஷ்ம நாடி யசைகிறது. நடை கலங்கியிருக்கிறதினுல் அசைகிறது தனிச் சிலேஷ்மமென்றுஞ் சொல்லமுடியாது. இருதயத்தின் சுபாவ இயல்பு மாற்றப்பட்டுத் தீவிரமான தாபத்தை யனுபவித்துவிடுகிறது. இந்தக் குணங்கள் விருத்திப்பட இருதயத்திலோரிரைப்புடன் நடத்தல், அது மாறி எரிச்சல் காரணமாகுதல் ஆகிய இந்தக் குணங்களிருக்கும் வரையும் சீவன் நிலைத்திருக்கும். (கஎ0)

## அரையாமத்தில் மரணக்குறி.

நாடி அங்குஷ்ட மூலத்திலிருந்து விலகி, நீரிற்சூழ்ந்து சுழியோடி மிதக்கும் சர்ப்பத்தைப்போல், தன்னுடைய நடையையொழித்தொழித்துத் துவய அங்குலிகளிற் காட்டினுல் ஒன்றரை மணித்தியாலத்தில் மிருத்து மேற்கொள்ளுகிறது.

விதி விகிதமில்லாத நடை அங்குஷ்ட மூலத்திலருத்தமாகி விலகித் தர்ச்சனிவிரல் கருப்பை முதலான இடங்களில் மாறி மாறி நடக்கிறது. சூரியன்நாடி மத்திமை அனுமிகைவிரல்களிற் சேர்ந்து கேவலத்தன்மையாக நடக்கிறது. நல்ல குணங்கள் முற்றுயழிந்து கெட்ட குணங்களை யுணவாகக் கொள்ளுகிற ரோகிக்கு முடிபு அருந்தசாமபேதத்திலென்று சொல்லலாம்.

## ஒரு சாமபேதத்தில் மரணக்குறி.

கபநாடி துவயஅங்குலிகளி லருத்தபாகயாகத் தொந்தித்து நீரிற் சுழியோடி மிதப்பதுபோற் றோற்றியுந் தோற்றுமலுமிருந்தால், மரணம் மூன்றுமணித்தியாலத்தில் நிச்சயிக்கப்படுகிறது. ஞானார்த்தமான அறிவு குருவை வணங்கிநின்றது. (களந)

அங்குஷ்ட மூலத்திலிருந் திரண்டங்குலம் விலகிக் கேவலப் பட்டனுமிகையிற் றடித்துப் பாதிபாதியாகி விகாரப்பட்டு விரலினிருபுடையிலும் விம்மி விம்மித் தோற்றினாலும் ஒரு சாமபேதத்தில் அல்லது இரண்டாஞ் சாமத்தில் மரணமுண்டாம்.

## மூன்று நாளில் மரணக்குறி.

பாதத்தின் பெருவிரலிலே வைக்கப்பட்ட நாடி மின்னலைப் போற் றோற்றி நிலையற்று மூன்று விரலிலும நடைகொண்டு, உறையிட்டதுபோல் மறைந்து நின்றுவிட்டால்; இந்தக் குணத்தை நண்ணியிருப்பவனைக் கைவிடுகிறதற்குக் குறிக்கப்பட்ட திவசம் மூன்றில், மரணம் சந்தேகமில்லாமலெடுக்கிறது.

*ப்ரதீதமான நிலைமைகளையுடைய "கோ" வாத பித்த கபங்களாற் சூழ்ச்சியுற்றசைவற்றிருந்தாலும், மத்திமைவிரலுக்குரிமையான நாடி, பாதத்திரய தொந்தங்களால் விலக்கப்பட்டாலும், அனுமிகை விரலினடி சகலஉறுப்புகளுக்குங் கொடுத்து அனுபவியாதிருந்தாலுஞ் சொல்லப்பட்ட ரோகிக்கு மரணாவஸ்தையான குணங்களதிகரித்து மூன்றுநாளந்தத்தில் மரணந் தண்டிக்கிறது. (களசா)

நாடி தர்ச்சனிவிரலினின்று சகல உறுப்புகளையு மியக்குந் தன்மையும், மத்திமைவிரலின் நாடி கோவினால் வியாபிக்கப் பெற்ற §சதுர்த்தாம்ஸத்தை மாறி மாறிக் கிரமப்படி ஒன்றின்பின்னொன்றா யுயர்ந்தவர்ணமாகச் சங்கற்பிக்கிற அறிவும், ப்ரதீத நிலைமையையுடைய "கோ" தமனி, தாமனி, இடது பாதத்திரயம் இவைகளை விதிவிகிதப்படி கற்பிக்கிற அதிகாரமும்,

---

* ப்ரதீதமென்பதற்குப் பொருள் அரும்பதவுரையிற் காண்க.

இன்னுமந்தப் பித்த மிடதுபாதத் திரயத்தையும், சிலேஷ்மம் சகல அம்ஸங்களையும் நல்ல குணமாக நடத்துகிற தன்மையிருக்கும் வரையும் சித்த நிதானத்திற்குரிய ப்ரதீதநிலைமை யழிய மாட்டாது. (௧௭௭)

§சதுர்த்தாம்ஸம் என்பது— கோ சூழ்ச்சியுற்றிருக்கும் அம்ஸங்கள் நான்கு கோவினால் வியாபிக்கப்பெற்றவை; அந்த அம்ஸங்களின் ஒருபகுதி கோவுக்குரிய ப்ரதீத்மான குணங்கள் கெடாமலிருக்கும் வரையும் அம்ஸங்கள் நான்கும் ஏகார்த்தமான பொருளடைகிறதில்லை.

## ஐந்து நாளில் மரணக்குறி.

பாதத்தின் விரலிலே வைக்கப்பெற்ற நாடி உஷ்ணத்தை வேகமாகக் காட்டி நடந்தால், மரணம் ஐந்தாம் ஆறும்நாட்களிலுண்டாம். (௧௭௮)

வாதநாடியும் பித்தநாடியும், நாடி ஆரம்பத்திலுள்ள அம்ஸங்கள் நான்கினை வேறுபட்ட இனமாகச் செய்கின்றன. அவற்றை வியாபித்திருக்கிற "கோ" வளைந்து மறைந்து குற்றமுடையதாயசைகிறது. நாடி தொய்ந்து மாத்திரை சிறுத்து நீசமாகித் தெறித்து வீழ்கிற உஷ்ணமான செயல், ப்ரதீதநிலையைக் குலைக்கிறது. அப்பொழுது மிருத்து உற்பத்தியாகிறது. இந்த அபசகுனங்களைப்பொருந்திய ரோகிக்கு ஐந்தாநாளிற்றில், இருதயஸ்தானத்தி லமைக்கப்பெற்றுள்ள நளினியின் சேர்க்கையான இதழ்கள் யாதுமொன்றற்குரிய துவாரம் இயல்பினுமகன்று அல்லது அடைந்து இருந்தாலும், அல்லது மாமிச கண்டத்தில் வெடிப்புண்டாயிருந்தாலும், ஐந்தாம் ஆறும் நாட்களில் மரணமுண்டாமென்று சுட்டிக் கூறிய மிருத்துற்பவனை ஒரு தினமேனும் காத்திருக்கவேண்டியதில்லை. (௧௭௯)

சரணாங்குஷ்ட மூலத்தில் நடந்த நாடி, எப்பொழுது மந்தம் மந்தமாகத் தோற்றுகின்றதோ, அந்த நேரந்தொடங்கி ஐந்து பகலுக் கவஸ்தைப்படுகிறவனுக்குச் சாவு அந்தத் தினங்களிலுண்டாகுமென்பது நிலைபரமானதல்ல. (௧௮௦)

நாடி ஆரம்பமாகிற முதலில் வாதந் தலைப்பட்டுகடக்கப் பித்தத்தின் குணம் அம்சங்சணுன் கினுன் றையினமாற்ருக்கினுலும், அவற்றை வியாபிக்கிற "கோ" மந்தம் மந்தமாகக் களங்கமுற்றசைகிறது. இந்த அவகுணங்களை அனுபவித்திருந்த ரோகிக்கு ஐந்தாநாள்மீண் டடுத்த தினம் மிருத்துண்டானது. (௧அ௧)

## நாடித்துவாரத்தில் உதிரம் பிரவேசித்து நடைபெறுகிற கால அளவின்படி ஆயுளை நிர்யாணிக்கும் அறிவு.

வாமநாடி தீர்க்கரேகையாக ஓடி வாகுமூலத்திலும் ஸ்பந்தன காரணமுடையதாயிருக்கிறவருக்கு, வாழ்நாள் நூற்றைந்து வருஷத்திற்குச் சந்தேமில்லாம னிலைத்திருக்கிறது.

வாமநாடி ரோகிகளுக்கும் தீர்க்கரேகையான இலக்ஷணம் புஜபக்தத்தில் (குணங்களை) மாற்றி அடித்து அசைகிறது; இவரும் நூற்றைந்து வருஷம் சீவித்து வேற்றுடம்பை யெடுப்பார் என்பதாம். (௧அ௩)

அந்த நாடி தீர்க்கரேரைக் குறிப்பைக் காட்டிக் கர்ன்னமூலத்திலும் ஸ்பந்தனகாரணமாகவுடையவர் பூமியிற்றேவபத்தியுடையவராயும், தர்மநெறியுடையவராயும் (பிறந்திருந்து) ஐம்பத்திரண்டரைவருஷம் சீவனேடிருப்பர். (௧அ௪)

குறித்துப் பேசப்பட்டவருக்குரிய வாமநாடி, லம்பநாடியனுகூலப்படுகிற காதின்மூலத்தில், தன்னுடைய உருவத்தை மாற்றியெடுக்கிறது; அதனல் உறுதியாய் நிர்ணயித்த நிலைமை மாறிக் குறைந்த பலனைப் பெறுகிற வயசு ஐம்பத்திரண்டரை.

வாமநாடி அற்பரேகையாக நடந்து, அனுமூலத்திலும் ஸ்ப்பந்தன காரணத்தோடு பொருந்தியவருக்கு வாழ்நாள் ஐந்து வருடத்திற்குமேலில்லை. இவருக்கு அந்த நாடி தாடைமூலத்திற்குரிய ஜடத்தில் இனமாறியடித்து அனுகூலப்படுகிறதாம்.

10

## நாடித்துவார போசனஞானம்.

உண்ணும் உணவுகள் குடலிற் சென்று பக்குவமாகும் பொழுது, அந்தப் பதார்த்தங்களிற் சில, மதுரரசமாகவும், சில அம்லரசமாகவும், சில கடூரசமாகவும் மாறுதலடைவதுண்டு; அவைகளின் திரவமாக்கப்பெற்ற சுத்தசத்தின் நுண்ணிய அம்ஸம், நரம்பின் துவாரமார்க்கமாகப் போய் உறுப்புகளைப் போஷணைசெய்ய, அவற்றை அனுபவிக்கிற தேகம் பெறுகிற குணநாடி யிலக்ஷணத்தை யறிதல்:—

எண்ணெயும் வெல்லமும் நாடி நிலைக்குப் பலமுள்ள விதிவிகிதமான பலனை உண்டாக்கிறது; நாடி உறுதியுடன் புஷ்டியாய் நடக்கிறது. மாம்சபோசனம் நாடியை ஒரு தண்டிக்குச் சமானமாக அசையச் செய்யுங் குணத்தை யுண்டாக்கிறது. க்ஷீரம் சாந்தமான வேக நடையின் குணத்தை யுண்டாக்கிறது, நடை சபலகெதி. தூதம், பீநிஸ், நாடிக்கு மந்தகதியான இயக்கத்தைக் கொடுக்கிறது. மதுரச்சுவையான உணவின் குணநாடி மண்டூகம் போன்றநடை. (௧௮௭)

மூற்றிய வாழைக்காய், மோசதம், வடை முதலாய எண்ணெய் வகையிற் செய்த பருப்படையற் பலகாரங்களும், ரூக்ஷகுணமான பதார்த்தங்களும், சுஷ்கத்திரவிய போசனங்களும்; வாதபித்த ரோகங்களின் குணநாடியின் நடையைக்கொண்ட இலக்ஷணத்தை யளிக்கிறது. அது தாழ்ந்த வருணமாய்ப் பொருத்தமில்லாத பிரமாணமாகத் திரிகிறது. (௧௮௮)

## இரசஞானம்.

மதுரமான சுவையையுடைய இரசத்தின் செயல், நாடிக்கு மயிலின் நடைக்கு உவமையான குணத்தைப் பிறப்பிக்கிறது. திக்தரசத்தை யுண்பதினாலுண்டாகும் குணநாடியின் நடைக்குப் பூலதை என்னும் செந்தின் நடையை உவமையாகக் கூறலாம். திக்தத் திரவிய பக்ஷண நாடியின் நடை தூலகதி. புளிப்புச்

சுவையான ரசம் உஷ்ணமான குணத்தையும், நாடி நடையை, ப்லவநடைக்குச் சமானமாகவும் உண்டாக்கிறது. அம்லபதார்த்த ஆகாரகுணநாடி மண்டூககதி. உறைப்பு, கார்ப்பு, அழுச்சி முதலாய சுவையையுடைய காரமான இரசம் பிரமரச் செயலின் வடிவுபோன்ற நடையிலக்ஷணத்தை நாடியிற் காட்டுகிறது.

*கஷாயரசத்தினால் நாடி கடினத்தன்மையாயும், தெளிவற்ற சுத்தநடையாயும் நடக்கிறது. உவர்ப்புச் சுவையான இரசத்தின்செயல் நாடிக்குக் கபடமற்ற தீவிரநடையை உண்டாக்கி இரத்த ஓட்டத்தை யொழிக்கிறதற்குச் சலனதாரையை வளைகிறது. இந்த வழிவகையில், நாடி இரண்டின் சேர்க்கையான குணம்போலவும், மூன்றின் சேர்க்கையான குணம்போலவும், சதுர்யோக லக்ஷணம்போலவும் பலவிதமாய் நடக்கிறது. நிதானமான நெறி கருப்பாசயத்தில் நிகழுகிறது. துண்டித்த பின்னமான இரசத்தின் குணம் சலதாரையைச் சூழ நடக்கிற தன்மை, ஒருவேளை ஸ்திரிபுருஷ சங்கமநாடி வித்தியாசம் வித்தியாசமான இலக்ஷணநடையை யுருபிகரித்து அர்த்தத்தைக் கொடுக்கிறதென்றும் சொல்லலாம். (கக௦)

புளிப்புச் சுவையான இரசங்களினாலும், மிஷ்டை முதலிய மதுராமிலவுணி னிரசங்களினாலும் நாடி சீதகுணமான தன்மையை யடைகிறது. அவல், வறல் முதலிய பிருஷ்டத் திரவியங்களினிரசம் நாடிக்குத் திடமான மந்தநடையைப் பிறப்பிக்கின்றது. குஷ்மாண்டமும், மூலகம், அக்கோடம் முதலிய கந்த வருக்கங்களினிரசமும், நாடியின் நடை இரத்தோட்ட காரணங்களுக்கு அதிக ஆறுதலான குணத்தைக் கொடுத்து லோலிதமாகிறது. சாகம், புஷ்பம் முதலிய மஞ்சரி வருக்க இரசங்களும், அரம்பைக்கனியினிரசமும் நாடிநரம்புகளுக்கு இரத்தம் பூரணமாகிற குணத்தை யீகின்றன. (ககக)

மாம்சவருக்க இரசத்தினால் நாடி உறுதியுடனாறுதலாய் நடக்கிறது. துக்தம் குளிர்ச்சியையும் பலத்தையு முண்டாக்கிறது. போஞ்சி கொத்தவரை போன்ற ஓஷதி வகைகளின் பிஞ்சுகளினாலும், நாடி சீதகுணமாய் நடக்கிறது. செய்,

* கஷாயரசமென்பது கயர்ப்புத் துவர்ப்புச் சுவைகளையுடைய இரசம்.

வெல்லப்பாகு, ரவை முதலிய *பிஷ்டபதார்த்தங்களினால் நாடி யசைவற்ற மந்தநடைகொண்டு தோற்றுகிறது. (கசூஉ)

கடி, பதநீர், ஸிரிகண்டம் மூதலிய உணவின் குணநாடி கடினமான நடை. லட்டு, ஸூகாரம் முதலிய ஆகாரவியல்நாடி மிருதுநடை. திரவப் பதார்த்தம் கர்க்கசம், அதுபோல இரு தயத்திலும் கடினத்தன்மையை யெடுக்கிறது. நாடி ஆரம்ப காரணத்திற்கு மிருது கடினமான தத்துவத்தைக் கொடுத்து இரட்டித்த இயல்புடைய நாடியைப்போல் நடக்கச் செய்கிறது.

* பிஷ்டம் என்பது - வெல்லம் பால் நெய்யுடன் மாவகை யுஞ் சேர்த்துண்டாக்கின ஒருவகை யுணவு.

பச்சைக்கர்ப்பூரம் பாக்குடனருந்தில்
முச்சுரநாடி முயன்று நடக்கும். என்பது நாடிசூத்திரம்.

## உபவாசகன் நாடியின்குணம்.

உணவின்றியிருப்பவனுக்கு நாடி க்ஷீணகதி போலவும், வேகமாய் நடந்து சமைத்தவனடிபோலவும் தோற்றும்; ஸ்திரீ சம்போகம் செய்தவனடியுமப்படி. ஆனல் பின் கூறப்பட்ட வனுக்கு வேகமான நடை சலனதுவாரத்தையடைகிறது.

## அவபத்திய நாடியின்குணம்.

சுரமுண்டா யிருக்கும்பொழுது தயிரளாவிய உணவையுட் கொண்டால், நாடி உஷ்ணகுணம் பொருந்தி விஷமித்து வேக மாய் நடக்கிறது. (கசூச)

இரண்டாம் அத்தியாயம் முற்றுப்பெற்றது.

# மூன்றும் அத்தியாயம்.

## சுரப்பூர்வ ரூபம்.

சுரகுணத்திலே பூர்வரூபமான நாடி, அந்தந்தக் குணங் களுக்குப் பொருத்தமானபடி, நடையிலக்கணத்தை மாற்றி எடுக்கிறது.

பொதுவாக, தேகத்திற் றேற்றும் வருத்தங்களில், நாடி யின் யதார்த்தகதி, தூலம், மந்தம், வக்கிரம், யுத்தசன்னத் தக்காரரின் சாந்தமான நடை, ஒரு குட்டனின் குதிப்பைப் போன்ற நடை, மந்தி, தேரை, மிதவையின் அசைவோடுவமை யான நடை, கரணப்புறு, தாரா என்று சொல்லப்பட்ட இவை களின் இலக்ஷணத்திற்குச் சில பொருத்தமான உவமையாகவும், அந்தர் கதியாகவும், பலமுடையதாகவும் பலமற்றதாகவும் தோற்றி நடக்கிறது. (க)

சுரதாபமான பூதப்பிரேத குறைபாடுகளில், நாடி: ப்லவ கதி யுவமையிற் ப்ரபலமுடையதாக நடக்கிறது. சுரதாபமதி கரிக்கிற நியாயத்திற் குணங்களிரட்டித்து நடக்கிற சகல வேத னையைக் காட்டுகிறது. (உ)

சுரத்தின் வேகமான குணம், சந்தித் துவாரங்களிற் சஞ் சரித்து விபரீதப்பட்டு உவாதிப்படுகிற அங்கனைக்குச் சுகமும் உவாதியும் கணப்பொழுதில் மாறிமாறி எடுக்கிறது. அது, ஆசனமார்க்கமாக ஆடுருவி நடக்கிற வேதனை, கணப்பொழுதில் மாறித், தேகத்திற் றேற்றி, மாறிக் "கோ" சூழ்ச்சியுற்றிருக் கிற துவாரங்களை யடைகிறது. நாடி மந்த நடை, தோஷ மொய்ப்பில் மேடகா நடை; இந்த நடை இருதய வியக்கத் திற்குரிய சலனதுவாரங்களையு மடைகிறது. அப்பொழுது தாபச்சுரப் பூர்வகுணங்க டோற்றிக் கடுமைப்படுத்தினால் நாடி ஒரு கீர்த்தியின் ஆட்டத்திற்கொப்பாக அல்லது குதிரையின் போக்கைப்போல் நடக்கிறது. இது தோஷசுரத்தில் விபரீத மான குணம். அந்தத் தாபத்தின் குணம் யோனி மார்க்கமாக ஆடுருவிக் கருக்குழியில் வித்தியாசமான குணத்தை யுண்டாக் கிறது; நாடி மேடகாசாலம், அப்பொழுது சந்நிபாதசுரத்

திற்குரிய பூர்வகுணங்களுண்டாகிறது, இதில் நாடியின் பிரமாணம் அநேகவிதமான வேற்றுமையடைந்து கையிலே சுழன்று நடக்கிறது. (௩)

## பக்குவரூபசுரபேதநாடி.

சுரம் கோபங்கொள்ளும்பொழுது, தமனி நிலையற்ற உஷ்ணமுடையதாகத் தோற்றி வேகமாய் நடக்கிறது. அந்த உஷ்ணம் கெடுக நிலைத்திராது. (௪)

சுரதருணத்தில், நாடி வித்தியாசமான குணங்களைப் புணருகிற வருத்தக்காரருக்கு, ஊறுசெய்கிறதற்கு: அதுவும் வித்தியாசமான உருபுபுணர்ந்து, சுரத்தைத் தூண்டிவிடுகிறது. அப்பொழுது நாடி விரக தாபமுள்ளதாய் நடக்கிறது. விரகதாபக்குணம் கோபங்கொள்ளும்பொழுது நாடி: ஆடவனுக்கு வக்கிரகதியாயும் அரிவைக்கு அலைவுற்றும் நடக்கிறது. (௫)

உஷ்ணமடங்கிப் பித்த மதிகரிக்கிற நியாயம் சுரத்தின் குணத்தோடு பொருந்திய அளவான அனலேயன்றிப் பித்தத்திற்குள்ள விழைவல்ல. சுரகோபத்தில், தாரநாடி அழுன்று வேகமான நடைகொள்ளுகிற நியாயமுடையது. (௬)

அந்தச்சுரம் விஷமாக்கினியினு லுண்டானதே யல்லாமல் உத்தமாக்கினியின் காரணமானதல்ல. இந்தக் காரணங்களினுல், ஒதை சுரத்திலுள்ள நல்ல குணமான வேகங்களை மாற்றி நாடியையும் விஷமகுணமடையச்செய்து திருத்துகிறது. அப்பொழுது நாடி வேகவான் நாடிக்குச் சமானமாய் நடக்கிறது.

சுரரோகத்திலே நாடி குடிலப்பட்டுக் கெதியாய் நடத்தல், ஸதிரீ சம்பவமான விகார குண முண்டாயிருக்கும்பொழுது, மைதுனந்த அல்கலில் வாதநாடி, ப்லவகநடைக்குச் சமானமாக நடக்கிறது; காலையில் விளக்கின் சுடரைப்போற் றளம்பி நடக்கிறது. (அ)

சுரதருணத்தில் காமமுற்றவருக்குச் சுரம் கோபங்கொண்டு உக்கிரமானல், தலைமகனுக்கு நாடி வக்கிரகதியாகவும், தலைமகளுக்கு நாடி கிலைதளம்பியும் நடக்குமென்று முன்னருங் கூறப்பட்டது. லீலை முடிந்தவருடைய கைநாடி, பிச்சாடி என்னும்

பிராணியின் நடைக்கு உவமையாக இரவுக்கு நடந்து, காலையில் தீபத்தின் சிகைக்கு ஒப்பான குறியுடையதாய் மந்தநடையாக நடக்கிறது. (௯)

வாதசுர நாடி.

சகஜவாதச் சுரத்தில், நாடி சாந்தமானதாயும், சூக்ஷ்மமானதாயும், உறுதியானதாயும், ஆறுதலானதாயும் தோற்றி நடக்கிறது; மிருதுசூக்ஷ்மத்தில் உறுதியான மந்தநடை என்றும் சொல்லலாம்

தீவிரவாதச்சுரத்தில், நாடி ஸ்பந்தன காரணமும், நடையும் தூலரூபமாகத் தோற்றிக் கடினமாயும் சீக்கிரமாயும் நடக்கிறது. சீதள ஸ்பர்ஸவாதச் சுரத்தில் வக்கிரகதியாகவும் சபல நடையாகவும் நடக்கிறது. குடிலகதியிற் சபலநடை யென்றும் சொல்லலாம். (௧0)

பித்தசுர நாடி.

பித்தச் சுரத்தில் நாடி: தீவிரமாயும், நிதானமானதாயும், தீர்க்காகாரமாயும் கெதியுடையதாயும் தோற்றி நடக்கிறது. அந்த நாடிதானே சீக்கிரவேகமாய் நடக்கும்பொழுது, இலக்கணப் பொருத்தமில்லாமல், முன் பின்னாகவும் பின் முன்னாகவும் மாறி விபரீதப்பட்டால், அந்தச்சுரம் விஷமித்து நாடி ஸ்பந்தன காரணமும் குரூரமாக அசைகிறது. ஸ்பந்தன காரணம் திடத்துவமாக அசையும்பொழுது விஷமிக்கிற குணமுண்டாக மாட்டாது. நாடி தீர்க்கநடையிற் றீவிரகெதியுடையதாயும் கபடமற்றதாயும் நடக்கிறதென்றும் சொல்லலாம்.

பித்தச்சுர மழிகிறகுணத்தில், நாடியோட்டத்தின் கெதி, இயக்கத்திற்குரிய துவாரத்தை யூடுருவி மாறிச் சுத்தமான நிதான விலக்ஷணத்தை யெடுக்கிறது. நெடுநடை கடினநடைகளுக்கு முதன்மையான குணங்கள் விருத்தியாகிச் சீக்கிரமான நடை அங்குஷ்ட மூலத்திற் றுடித்து நடக்கிறது. (௧௨)

சிலேஷ்மசுர நாடி.

கபதோஷத்தாற் பிறந்த சுரத்தில், நாடி ஒரு மெல்லிய இழைக்குச் சமானமாகத் தோற்றி, மந்தமாகவும் சீதளமுடைய

தாகவும் நடக்கிறது. மல அசீரணத்தில் அதிகமாய் வளாவி நடக்கிறதில்லை. சுரம் சொஸ்தமாகும் வரையும், இரத்தோட்ட ஆரம்பத்திலுமிப்படியே நடைபெறுகிறது. சுரகோபம் மாறும் பொழுது, தந்து சமாகாரத்திற் சூக்ஷமகதியுடையதாய் நடக்கிறது. அந்த நடை கெதியற்ற வேகமாக வுறழ்ந்து சீதளகுணமான பலனை யுண்டாக்கி யழிக்கிறது. மல அசீரணத்தில் நாடி நடை யதிகமாய் வளாவிச் சர்ப்ப கதியைப்போனடந்தால் அது நல்லகுணமல்ல. (கங)

சிலேஷ்மமதிகரித்துண்டாகிற சுரத்தில் நாடி மந்தகதியிற் குளிருடையதாய் வழுக்கி வழுக்கி யுறுதியான நடையுடன் நடக்கிறதென்று கிரந்த கர்த்தா எடுத்துக் காட்டியிருக்கிறார்.

## தொந்தசுரங்கள் — வாதபித்தசுர நாடி.

வாதபித்த சுரத்தில், நாடியின் நடை: சஞ்சலம், தரலம், தூலம் கடினம் என்று சொல்லப்பட்ட குணங்களை ரூபிக்கிறது. பதறிச் சூனியமான தூலநடையிற் கடினமாக நடக்கிறது.

## சிலேஷ்மவாதசுர நாடி.

சிலேஷ்மவாதச்சுரத்தில், இருதயத்தில் நிலையாத வெறுப்புடையதாய் மந்தநடையாக நடக்கிறதென்று சொல்லலாம். (கரு)

ஷை மந்தசிலேஷ்மாதி வாய்வுப் பொருமலுள்ள சுரங்களில், நாடி எப்பொழுதும் சூடுடையதாயும், நிதானமற்றதாயும் நடக்கிறது. ரூக்ஷ வாதத்தில் பிறக்கிற நாடிநடை பித்தம் வெப்பித்த காரணமாயிருக்கலாம். (கசா)

## பித்தசிலேஷ்ம சுரநாடி.

பித்தச் சிலேஷ்மச் சுரத்தில் நாடி சூக்ஷமரூபமாகவும், சீத குணமாகவும், உறுதியுடன் நடக்கிறது. (சூக்ஷமகதியிற் குளிருடையதும் திடமாயும் நடக்கிறதென்றும் சொல்லலாம்.) (பின்னும் பார்) (கஎ)

## வாதசிலேஷ்ம சுரநாடி.

வாதக் கபச் சுர ரோகிக்கு, இரத்தாசயத்தி லழுந்சி யுடையதாய், அங்குஷ்டமூலத்திற் சாந்தமான நடை யுடையதாய் நாடி நடக்கிறது. (கஅ)

சுட்டிய வாதசிலேஷ்மச் சுரத்தில் நடைகுலைந்து, சிலேட்டுமத்தின் நடை குறைந்த மாத்திரை யுடையதாகவும், வாதத்தின் நடை கூடினமாத்திரை யுடையதாகவும் மாறிக் கபவாதமெனப் பெயர்பெற்றுப் பயனை யளிக்கிற குணம் தீவிரதாபமுடையதா யொன்றுட னொன் றிணங்கி நடவாத எதிரிடையான கடினத்தன்மையாய் அங்குஷ்டமூலத்தில் நிலைத்து நடக்கின்றன. அதில் வாயு அளவிறந்த கோபத்தைப் பிரதியுபகாரமாக அங்கிகரித்துக் கெட்டகுண முடையதாய்ச் சஞ்சரிக்கிறதாக அறியப்படுகிறது. பித்தத்தின் நல்ல குணமான சஞ்சரிப்பு ஓய்ந்திருக்கிறது. இந்தக் காரணங்களினால் நாடிநடை முற்றுமுழுதாய்க் குடிலப்பட்டு அதிக தூலகதி யுடையதாய் நடக்கிறது. (கசு)

பித்தச் சிலேஷ்மச் சுரத்தில், நாடி அற்ப சீதமுடையதாயும் தோற்றி, அங்குஷ்டமூலத்தில் வளைந்தும் வளையாமல் விடுகிறதுமான பொருள்பட நடக்கிறது. (உ)

## ருதிரகோபச் சுரநாடி.

சுரத்தி னுக்கிரமமான வேகத்தினு லுண்டான வேதனை நிலைபெற்றிருந்தாலும், சந்தாப வெந்தழலி லிருந்து வருந்துதனிலைத்திருந்தாலு மந்த மக்களுக்குரிய இரத்த பூரிதை மாசுற்று இரத்தத்தைக்கொண்டு செல்கிற நாடி மத்திமைவிரலிற் றூங்கி நடக்கிறது. (உக)

ஸந்தாபிதமான உஷ்ணம் நிலைத்து வருந்துகிறவருக்கு நாடி மத்திமைவிரல், பிரவேச ஸ்தானத்தில் இனமாற்றுகிறது. "கோ" யத்தனமாகிற தடபலக்ஷணம் இந்திரிய வுணர்ச்சி நரம்பி லறியப்படுகிறது. அது, வாதாதிதோஷங்கள் மூன்றும், உதிரத்தை யுஷ்ணமுடையதாய்ப் புழுங்கச்செய்த குண மதி

கரித்து, இக்திரிய வுணர்ச்சி நரம்பில், அந்தத் தோஷ மடைந்த இரத்தத்தின் பலனைப் பிரகாசிக்கச்செய்த காரணமாம். (உஉ)

## ஆகந்துக சுரபேதங்களின் நாடி நிதானம்.

### பூதஜ்வர நாடி.

பூதச்சுரத்தில், நாடி ஒரு நீரோட்டத்தின் தன்மைபோற் சிதறி, எழுப்பத்திற்குத் தக்கபடி, அது இரத்தாசயத்திற் பிரவேசிக்கிற இரத்தத்தின் சென்னியாகிய முதல் இரத்தத்தை, சதுர்த்தாம்சங்க ளடக்கிக்கொள்ளுகிற நியாயத்தினல், இரத்தமோடவேண்டிய ஸ்பந்தன காரணமும், பூர்வவேக கெதியுடையதாகிறதாம். (உங)

இரத்தோட்டத்தின் அபவாதத்தினல், "கோ" நிகழுகிற சம்வாரகிரியை ஒய்கிறது; பாசம் ஞானேந்திரியங்களை ஒரு ஆபரணம் வழைகிறதுபோல மறைக்கிறது. அப்பொழுது ஞானேந்திரியங்க ளுணர்ச்சியற் றிருக்கிறது. கோவின் விகசிதமென்னும் கிரியையின் பகுதி, ஞானேந்திரியங்களை நோக்க, ஞானேந்திரியங்கள் பற்றியிருந்த சம்குசிதம் கோவுடன் தாயமாகி இருதயஸ்தானத்தில் நடைபெறவேண்டிய விகசித சம்வாரம் கிரமமாய் நிகழப்பெறும். பூதச்சுரம் குணமாகிறபொழுது, நாடியின் வேகமான குணம் முற்றுமுழுதாய் மாறி, நிலைதளம்பி நடக்கும். (உச)

ஆகந்துகம் என்பது இடையிற் சம்பவித்தது.

### சந்ததாதிசுரபேதம்.

சந்ததாதிசுரபேதங்களில், தோஷங்கள் கோளா றடைந்த நியாயம், குறிக்கப்படாத அர்த்தத்தைக் கொடுக்கிற பிரமாணம்; அந்தத் தானத்தில் குணங்களைச் செய்கிறது; அங்கே நடைகொள்ளுகிற இயக்கம் மிக ஆழமா யுடையது. (உரு)

### ஏகாகிகச்சுரம், துவியாகிகச்சுரம், திரியாகிகச்சுரம், சாதுர்த்திகசுரம், பஞ்சாகிகசுரம்.

ஏகாகிகச்சுரத்தில் நாடி சபடமற்ற நடை: இலக்கணப் பொருத்தமில்லாத பிரமாணமான பயனை யளிக்கிற ஸ்தானத்தில்

வளருகிற நடையை மிக ஆராய்வா யறியவேண்டியது. அது கணமாத்திரைக் கொருமுறை விட்டுவிட் டெடுத்து மோகித்து விஷமச்சுரமாகிறது. (உசா)

துவியாகிகம், திரியாகிகம், சாதுர்த்திகம் என்னும் பெயரை யுடைய இந்தச் சுரங்களில் வாதமதிகரித்தல், நாடி சுழன்று வக்கிரகதியை யடைகிறது. இவைகளிலும், சுட்டிய ஏகாகிகச்சுரத்திலும் குணத்தை மாற்றி யெடுக்கிற நாடி பயிற்றி விடுகிற செயல் பாரிசபாகங்களிற் போய் கிமிஷத்திற்கொரு முறை வித்தியாசமான குணங்களை யுண்டாக்கிவிடுகிறது. சாதுர்த்திக விபரீதம் அல்லது பஞ்சாகிகசுரம், இதிலும், விஷமச்சுரத்திலும் உஷ்ணமதிகரித்தால் நாடி கெதியாய் நடக்கிறது. மேற்கூறிய சுரங்களிலு மப்படி. (உஎ)

கூறிய சுரங்களில், இரத்தோட்டம் நடைபெறுகிற மாத்திரையின் காரணமாக நாடி வண்டைப்போ லெழும்பியும், பன்றியின் நடையைப்போற் றாக்கமாயும், மானின் நடையைப்போற் குதிப்புற்றும் நடக்கும்.

சுரரோகங்களி லுஷ்ண மதிகரித்துக் கோபங்கொள்ளும் பொழுது, ஸ்திரிக்குத் தராநாடி அழன்றவேகமுடைய கெதியாய் நடக்கிறது. அல்லது ஊர்த்துவ வேகமுடையதாய் நடக்கிற தென்றுஞ் சொல்லலாம். அப்பொழுது துக்கம், கோபம், தீவிரமான வேதனை, காம இச்சை, மனோசிந்தனை, அலுப்பு, ஆயாசம், தளர்ச்சி, ஆடல் பாடல் முதலிய விகாரச்சேட்டையான குணங்கள் கண்டால் நாடி யிரத்தோட்டத்தின் சீர், க்ஷீணகதியாக வூடுருவி அதிக மந்தகமனமான நடையுடையதாய் நடக்கிறது. (உஅ)

குறித்துக் கூறிய குணங்கள், கொடுக்கு மவுஷதவகையினால், வசமாகிற தன்மையிலும், வேகரோகிக்கும் நாடி அந்தச் சுரத்தின் கோபமான குணம் மாறி *ஒதி காரணமாக வேறு குணத்தை யெடுக்கிறது. அப்பொழுது நாடி சாந்தமான குணமாய் நடக்கிறது. குரோதம், காமபாதம், பயம், சிந்தனை, விசனம், ஆயாசம், களை, ஆடல், பாடல், நகைப்பு முதலிய

Lion: S. Sriganeshan

விகாரச் சேட்டையான குணங்கள் மாறும்பொழுதும், நாடியின் நடை தொய்ந்து உறழ்ந்து, அங்குட்டமூலத்தில், ஆறுதலான மந்தநடையாக நடக்கிறது. (உகூ)

(* ஓதி என்பது இரத்தம் தங்குமிடங்களினின்று பலனைக் கொடுப்பது)

## தாகபூருவம், சுரரகிதமனுஷர் நாடி நடையின் வேற்றுமை.

தாப மாரம்பமாகிறபொழுது நாடி: அதிகப் பிரயாசையினுற் களைத்துத் தொய்ந்தவன் நாடியைப்போலும், அச்சமுற்றவனுடியைப்போலும், சிலநேரம் பறையடியின் துடியைப்போலும், சிலநேரம் ஒரு கருமத்தைச் சிந்தித்துவிட்டுவிட்டுத் தியானிப்பவனுடிநடையைப்போலும், வாசித்தலிற் புலனை விட்டுக் கலங்கினவனுடியைப்போலும், சோககுணமுடையவனுடியைப்போலும் நடக்கிறது. சுரரகிதமாகிறவருக்கு மிப்படியனேகவிதமாய்ப் பொருந்தி நடக்கிறது. (௩0)

## செகராசசேகரம்.

.........பித்தநாடி யணினடை கொள்ளுமாயின்; வேதனையான காச்சல் மீழுமோர் சாமம் என்ப.

## நாடிசூத்திரம்.

ஐயும் பித்து மடர்ந்துற நிற்கில்
மெய்யில் வியாதி மீழுநாளெட்டே, என்ப.

## அசிரணரு ப நிதானம்.

அசிரணரோகங்களில், பொதுவாய் நாடி கடினத்தன்மையான நடையை யுடையதுபோலவும், பூரணப்பட்டதுபோலவும், பூரணப்படாத தன்மை கிரந்தியில் மறைந்திருப்பதுபோலவும், சாந்தமாகிற சுத்தமான நடையை யுடையதுபோலவும், கெதியுடையதுபோலவும், தீவிரகுண முடையதுபோலவும், உத்தாபமுடையதுபோலவும் தோற்றி, எழும்பி நடக்கிறது. (௩க)

## ஆமாசீரணம் பக்குவாசீரணரோகங்களின் நாடி.

ஏகநடை யிரட்டித்துப் பேதமடைகிறதில்லை; நாடி கடினம்; இரத்தம் செல்லுநெறியில் இரசம் கலந்து சடமினமாற்றுகிறதில்லை; இந்த ஸ்திதியிற் சிலேஷ்மநாடி தொந்தியாமற் பலமற்றதாயும், களங்கமற்ற சீக்கிரவேகமுடை யதாயும் நடக்கிறது. (௬௨)

அக்கினிமந்தம், அசீரணம், அலஸம், விஷூசிகாரோகம் என்பவைகளுக்கு, சிலேஷ்ம மிகுந்திருக்கும்பொழுது வமன அவுஷதமும், பித்தக்குண மதிகரித்திருக்கும்பொழுது மிருது விரேசன அவுஷதமும், வாததோஷ மதிகரித்திருக்கும்பொழுது ஸ்வேதனச் சிகிச்சைகளையும் செய்து ரோகியைச் சுகப்படுத்த வேண்டியது. ஆனால் இந்தச் சிகிச்சைக ளொன்றுக்கொன்று எதிரிடையானவைகள். பத்தியாபத்தியவிதியிற் கூறப்பட்டது.

## அசீரணரோக விசேட அளவை.

பக்குவாசீரணத்தில், நாடி பூரணப்படாத தன்மையாயும், அதிக ஆறுதலான நடையாயும் ஜடத்திற் றூங்கி நடக்கிறது. இரத்தம் பூரணநாடியிற் பிரசவித் துஷ்ணத்தைக் கொடுக்கிறது. கருப்பவதிக்கு ஆமத்தோ டொற்றுமையுடையது. கோதை அதமாதமகுணங்களைத் தணித்துச் சாந்தமாகிறது. கருப்பஸ்திரிகளுக் கதிகரிக்கிற சோம்பலான குணமும் சாந்தியாகிறது. ()

ஸ்திரிகைநாடி, இரத்தபூரணமான நாடியில் வெப்புடையதாய், அங்குஷ்டமூலத்தை யடைகிறது. அது ஆமவாதகிநாடி நடைக் கொப்பாக நடக்கிறது.

இலகுபோசனத்தையெடுக்கிற, தீப்தாக்கினி யுடைய பெண்ணுக்கு, நாடி வேகவதியின் கொள்கையைப்போலே நடக்கிறது மந்தாக்கினி யுடையவருக்கும், தாதுப்பெலனற்றவருக்கும் நாடி மந்தநடையாகத் தோற்றுகிறது. * அக்கினிபேதம் மந்தமாகத் தாது உட்கி நோய்கொண்டவருக்கு, நாடி அன்னப்புள்ளின் பழுதடைந்த நடையைப்போற் றோன்றி நடக்கிறது. ()

* அக்கினிபேதம் என்பது உதராக்கினியின் பேதங்கள்.

ஜடராக்கினி யனைத்தும் மந்தாக்கினித் தன்மையாகிக் கோவை நெருங்கியிருந்தால், அவர் துர்ப்பலமான வாழ்வை யுடையவராய்ப் பூமியிற் சீவிப்பவராம்.

சீதமும் இரத்தமும் விபரீதப்பட் டுண்டாகிற வருத்தம் பூரணமடையாத குணத்தில் நிகழுகிற நாடியின் நிதானம் அக்கிரபாகம்; நடையி னிலக்ஷணம் சர்ப்பகதி; அதுபோலவே உணவுப் பிரியவீனம், உபவாச மிரண்டிலும், நாடி அக்கிரபாகமாகச் சர்ப்பத்தின் எழுச்சிக்கு ஆரம்பமான பூர்வச்செயலுக் குவமையாகப் பொருந்தி நடக்கிறது. (கரு)

சீதமும் இரத்தமும் விபரீதப்படாமல் நடக்கிற வருத்தங்களில், நாடி அங்குஷ்டமூலத்திற் பேசாமலிருக்கிறபொழுது, திரிதோஷங்களு மொன்றுட னொன்று சேர்ந்து தேகத்தை வித்தியாசப்படுத்திச் சதுர்த்தாம்சத்தைப் போஷிக்கின்றன. சர்ப்பத்தின் பூருவகதிக்கு மேற்பிரமாணமான படகதிக் குவமையாக நடக்கிறது. அந்தப் படகதி யிலக்கணத்தை அக்கிரபாகம் அங்குஷ்டமூலத்திற் கேகிறது. இந்தவிதமாகவே திருஷ்டான்னம் முதலிய தோஷமான போசனங்களை யுண்டவருக்கும் உபவாசமாயிருப்பவருக்கும்; நாடியிலக்ஷணத்திற் கமைந்த சர்ப்பகதி அக்கிரபாகமாக மாறி அங்கிருந்து சமலக்ஷணமான பலனை யங்குஷ்டமூலத்திற் களிக்கிறது. (கசு)

## கிரகணிரோக நாடி.

பாதத்தில் ஓதிமநடையைப்போலும், கையிற் றவளையின் பாய்ச்சலைப்போலும் குதித்து நடக்கிறது பாதத்திலும். பைரவிநாடி அன்னப்பறவையின் உத்தமமான நடைக்குப் போலியாயும், பாதநாடி தவளையின் பாய்ச்சலுக்கு உவமையாயும் தளம்பி நடக்கிறதாம். உதராக்கினி மந்தமாகிறபொழுதும், தொந்தக் கிரகணி அதிசாரமுண்டாகிறபொழுதும் நாடி யுள்ளடங்கி யிருத்தல். (கஎ)

ஆர்திரத்தைப் பற்றிய மலக்கழிச்சலில், நாடி ஆறுதலாய் நடக்கிறதில்லை; துண்டிக்கிறதன்மைபோற் சாந்தமாகிறது. கிரகணிரோகத்திற் றெளிவாய்ப் பேசுகிறது. மற்று மதிசார

பேதங்களில் தொய்ந்த நடையாக நடக்கிறது. விளப்பிகாசிர ணத்தில் நாடிநடை, ப்லவகதி, சிலவேளை நபுஞ்சகருக்கு ஆமாதி சாரத்தில், நாடி தூலகதியாகத் தோற்றுகிறது. (௩அ)

நிர்க்கிரகிக்கப்பட்ட தொந்தக் கிரகணி ரோகங்களில், கோகிமேஷம் பயிற்றுகிற உபராந்தம், சாந்தகுணமான வேகமான நடையை யளிக்கிறது. அதிசார ரோகம் மாறினவருக்கு உபராந்தம் பலவீனப்படுகிறது. (௩௯)

## விஷூசிகாரோகத்தையறிதல்.

மல மூத்திரங்கள் தங்கிச் செல்லும் பாதையில் உண்டாகிற மலபந்த மாறுபாடுகளிலும், விஷூசிகாரோகமென்னும், தேவதைக் குறைபாட்டினால் நிகழுகின்ற நாடியின் நடை தவளையைப் போல் நடக்கிறது. (௪0)

சூரியன் நாடியின் மேலான வேகம் போய் மலசலம் பிரிந்து செல்லு மருநெறியினின்று, சுஷ்க குணத்தையுண்டாக்கிப் பந்திக்கச் செய்கிறது. கேவலகுணமாகின்றன. கோ, தகுதியற்ற இயக்கமுடையதாகிறது. விஷூசிகாரோகம் மாறும்பொழுதும் நாடி தவளையைப்போல் நடக்கிறது. (௪௧)

அதிசாரரோகங்களில், நாபிஸ்தானத்திற்குரிய அக்கினியின் பிரமாணம் குறைந்து நீசத்தன்மையடைந்து அர்த்த சந்திரனுக்குச் சமானமாய் வருகிறதாம். அதை உத்தம குணத்திற்குக் கொண்டுவர, பத்தியவிதியிற்கூறிய தீபன பதார்த்தங்களும், இலகுபோசனமும் கொடுத்துத் திருத்தவேண்டியது.

விடுசிகைரோக விசிநடை தோற்று [திரட்டு.
திடையிடையுளதென் றியப்புதுஞ்சுருதி.— என்பது நாடித்

## ஆநாகமூத்திரக் கிரீச்சர ரோகநாடி.

தங்கித் தங்கி யடிக்கடி யிறங்கும் மூத்திர ரோகத்திலும், மூத்திரக்கிரிச்சரத்திலும், நாடி குரூரமான குறுநடை. அங்குட்டமூலகாரணம் பாரி. (பாரி என்பது - சிங்கேற்றுக்கும், மனைவிக்கும் பெயர்)

அரவுபோனடிமூன்று மங்கது சுற்றிநின்றாற்
கருதியசலக்கழிச்ச லென்றுதான் கருதலாமே.

என்று தன்வந்தரீயம் கூறும்.

## சூலரோக நாடி.

சூலரோகங்களில், சிரையிலோடுகிற இரத்தம், பெரும்பான்மை அரிசியவித்த கொதி சலத்திற்குச் சமமாகச் சூடுடையதாயோடுகிறது. ஆனபடியால் அந்த நாடியினிலக்ஷணம்: வாதசூலையில் மருத்துக் குதிப்புற்றுச் சோதனுங்குலிக்கு வக்கிரரூபமான இலக்ஷணத்தைக் காட்டி நடக்கிறது. அப்படியே அந்த நடை பித்தசூலையிலு மாறுமலதிகரிக்கிறது. சாத்தியமல்லாத சூலையில் புஷ்டி ரூபமாக வளருகிறது. (சுகூ)

அனிலச்சூலை குணம்மாறி வேறு குணத்தை யுண்டாக்கிற நியாயத்தில், பிரதான வாயுவினலதிகரித்த சூட்டின் காரணம், நாடியின் § அதிஷ்டிப்பு மிகுந்த வளைவுடையதாயசையுந் தன்மை யுடையதாகிறது. அனலச்சூலைகுணம்மாறி மறுகுணத்தையெடுக்கிற நியாயத்திலும், அந்த வாயுவினலதிகரித்த சூட்டின் காரணம். ஆமசூலம் குணம் மாறி வேறுகுணமுண்டாகிற நியாயத்திலு மந்த அதிஷ்டிப்புக்குரிய இயக்கம் வக்கிரவடிவமாக வளர்ந்து இணைந்து நடக்கிறது. (§அதிஷ்டிப்பு-இரத்தோஷ்ட ஆரம்பத்திற்கு முதன்மையாகவுள்ளது)

## பிரமேகரோக நாடி.

பிரமேகரோகத்தில் நாடி கிரந்திவடிவமாகத் தோற்றுகிறது. வேறுவிதமான குற்றங்களில் கபம் சூடுள்ள தன்மையாக நடக்கிறது. அந்தரங்கமான ஆகாரம் சுகமடைந்த வருத்தத்தையும் மறுபடி யுண்டாக்கிறது. ஆமவாதரோகநாடி, ருதுகால பேதங்களில், உஷ்ணமான குணமாய் நடக்கிறது.

## விஷ்டம்பாகுன்ம ரோகம், சர்ப்பவிஷம், அர்த்திதவாதரோகம் இவைகளின் நாடி.

விஷ்டம்பா குன்மரோகத்திலும், விஷமுடைய சர்ப்பதசனத்தாற் றீண்டப்பெற்ற காயங்களிலும் நடக்கிற செயல்

வக்கிரரூபம். அதிகமான வாதப்பிடிப்புகளில், நாடி கினேக்கிற நடையை யுடையது. கண்டத்தின் மேற்பகுதியான ஊர்த்துவாங்கத்திலுள்ள பிரதானமான உறுப்புக்களில் யாதுமொன்ருயினும் பேதித்திருக்கிற குணத்தில் நாடி மேனேக்கி யெழும்பி நடக்கிறது. (சசு)

சர்ப்பாரிட்டத்திலும், கரவிட பக்ஷணத்திலும் உண்டாகிற நவீனமான குணங்களில், பிரத்தியக்ஷமாகிற "கோ" மறைந்திருக்கிறது. அந்தக் காலத்திற்குரிய நாடியைச் சரீரக் குறிப்பினு லறிந்துகொள்ளவேண்டியது. அறிவு முதலிய வுணர்ச்சியில்லாத குணம் ஓதை காரணமாக வுண்டானது. இந்தப் பீடைகளிலுண்டாகிற நவீனமான குணம் என்னவோ, அது உண்டாகிற முக்கிய காரணத்தை வைத்தியராராய்ந்தறிந்து கொள்ளவேண்டியது. (சஎ)

விஷ்டம்ப குன்மரோகம் குணங்களைக் காட்டி யடைவது போலவே விஷபக்ஷணிகையிலும் பொருளுடையதாகிறது. விபரீதமா யுண்டாகிற குணங்களை ஓதி மூலமாக அறிந்துகொள்ளவேண்டியது. துர்ச்செயலான நாடியின் நடை வக்கிராகாரமான பயனை யளிக்கிற காரணம், இனனபிதானநாடி ஈவுகொடாததன்மை. பீடையின் குணம் மாறி வேறு வேறு குணங்களை யனுபவிக்கிற நியாயம் மேலுமதிகமான வாயுவின் பிரகோபத்தினல், கோகிமேடமுமோய்ந்திருக்கிறது. அல்லது கோகிமேடம் மூடமாயிருக்கிறதென்றும் சொல்லலாம். நாடியிலோடுகிற இரத்தம் தடித்து நாடியை வீங்கச்செய்து இருதயத்தைத் தாக்கிக் கினேக்கிக் தாங்கிச் செல்கிறது. இந்த விதமாகச் சூரியனுடி பிரிந்து தேகத்திற்குச் சுகபூரணமான வாழ்வின் பலனைக் கொடாத பூருவரூபமான பீடையையுடைய அங்கபேதமான குணங்களில், நாடி பொதுவா யூர்த்துவகதியாய் நடக்கிறது. (சஅ)

## குன்மரோக நாடியளவையின் விசேஷமான இலக்ஷணம்.

நாடி: தனக்குரிய நடையி னிலக்கணத்தைக் கையிலே தோற்றுவித்துப் பலனையளிக்கிற ஸ்தானத்தில், அங்குலி ஸ்பரி

சத்திற்கு, அந்தநடை பதறி எதிரிமேற்செல்ல முயலும், ஒரு பாராவதத்தின் நடையைப்போல் நடக்கிறது. (சகூ)

பதறுங் குணமான கம்பிதக் கிரியையை யூகிக்கிற "கோ" குன்மரோக நாடியின் வழுக்களைத் திருத்தி நடத்துகிறதாம்.

## பகந்தரரோகத்தையறிதல்.

உறுப்பில் விரணரோகங்கள் கடுமைப்படுத்துகிறபொழுது பீடையுற்ற பித்தமிடையிற்றேற்றி நடந்தது. பகந்தரரோக வினங்களைப்பற்றிய இயற்கையான நிலைமையில், நாடி விரணம் பிறக்கிறது. அதில் பிடிக்கப்பட்ட வாய்வு இடையிற் சேர்ந்து, உக்கிரமான குணத்தை புண்டாக்கி நரம்பின் கண் அக்கினிரூப மான குணத்தை யதிகரிக்கச் செய்கிறது. (ருo)

விரணரோகிக்கு அபக்குவமான கெட்டகுணம் மாறிப் பக்குவமான குணத்தை யெடுக்கிறபொழுது, நாடியின் நடை பித்தக் குணமான நாடியின் தன்மைபோலப் பலனை யளிக்கிறது பகந்தரரோகத்தைப் போலவே நாடி விரணரோககுணம் மாறுகிறது மனுபவிக்கிறதும். இந்த நாடிகளுடைய நடை வாதநாடியின் தன்மையைப்போலொத்து அதிக உஷ்ணமான குணத்தை யுண்டாக்கிறது. (ருக)

## சர்த்தி, ஸல்பவிரணம், அபிகாதம், பிரதரம் முதலியவைகளை யறியும் நாடி.

வமனரோகம், ஸல்யவிரணம், கல்மூள் கட்டைகளாலறை யுண்ட காயங்களிலும், ஸ்மரணை கெட்டிருக்கையில் விட்டனுபவிக்கிற ஏதுக்கள், மலசலந் தங்கிச் செல்லும் மார்க்கத்திற் போய் அடைந்து, பதைப்புறுவித்த குணத்தின் தன்மையிலும், நாடியின் நடை அரிஷ்டத்தினின்று தப்பிய தமனி; அது சிலேஷ்மம் மேற்கொள்ள முன், விண்நாகவேகமான கெதியையுடையதென்று சொல்லப்படுகிறது. ஸ்திரிகளுக்குண்டாகிற பிரதராதி, மாதாந்தரப் பூப்பையறிகிற கிரமத்தவறுகளிலும் நாடி இப்படி நடக்கிறது. (ருஉ)

சுட்டிய ரோகிகளுக்குரிய நாடி சிலேஷ்மம் பிரத்தியக்ஷமானபொழுதும், தமனி நாடியில் க்ஷத்திரம் முதலிய அரிஷ

டம் தாக்கப்பெற்றாலும், அன்னம், கசி, என்பனவாகிய இந்தப் பறவைகளின் நடைகளுக்குச் சமானமாக நடக்கிறது இந்த விதமாகவே ஸ்திரிகளுக்குண்டாகிற பிரதரம், அசிர்க்கரம் முதலிய ரோகங்களிலு மறியவேண்டியது. (ருங)

## நாடித்திரட்டிற்கூறிய, துனி, பிரதிதுனி, அஷ்டீலப், பிரதிஅஷ்டீலம் இவைகளின் நாடி.

பணவம் போற்சிரை படபடத் தோடுங்
குணத்துனி பிரதியட் டீலப் பிணிகளே.

களரவங் காற்றிற் களிப்பது போலொரு
சுழனடை பிரதி துனிதுனி யென்னே.

## நாடி எண்குறி அளவை.

நரம்பு மண்டலத்தோடு காரணமான சந்தி ஸ்தானங்களில் நாடியி னிரத்தோட்டத்தை யறிகிறதற்கு உதவிகாரணமாயிருக்கிற துடிப்பை எண்ணி யறியும்வகை. அது கரத்தில் மணிபந்தத்திலும் பாதத்தில் குல்பஸ்தானத்திலும் சிறந்து விளங்கும்.

முப்பது வயசுள்ள ஒரு புருடனும் பதினெட்டு வயசுள்ள ஒரு புதல்வியும் கூடிப் பிறந்த பிள்ளைக்கு நாடியின் துடிப்பு 60. அவைகள் நெடிலக்ஷர ஒலியின் மாத்திரை யளவினதாக அடித்துப் பெயருகிற இலக்ஷணத்தை அங்குஷ்டமூலப்பார்வை பேசுகிறது (ருச)

முப்பது வயசின்மேல் நாற்பது வயசுவரையுமுள்ள ஒரு ஆடவனுக்கும், பதினெட்டு வயசின்மேல் இருபத்துநான்கு வயசுவரையுமுள்ள ஒரு அரிவைக்கும் பிறந்த பிள்ளைக்கு நாடியின் றுடிப்பு 56 மாத்திரை யடிக்கும். (ருரு)

நாற்பது வயதின்மேல் நாற்பத்தநான்கு வயது வரையுமுள்ள ஒருவனும், இருபத்துநான்கு வயதின்மேல் முப்பது வயதுவரையுமுள்ள ஒருத்தியும் கூடிப் பிறந்த பிள்ளைக்கு நாடிஸ்பந்தன மாத்திரை 50. (உரையினிலக்கம்) (ருசா)

நாற்பத்தாறு வயசு துவங்கி ஐம்பத்தாறு வயசு வரையுமுள்ள ஒரு கணவனும், முப்பது வயசு துவங்கி முப்பத்தாறு வயசு வரையுமுள்ள ஒரு காரிகையும் கலந்து பிறந்த பிள்ளைக்கு நாடி 40 மாத்திரை நடக்கும். (௫எ)

ஐம்பத்து நான்கு வயசின்மேலுள்ள ஆணுக்கும். முப்பத்தாறு வயசுக்கு மேற்பட்ட பெண்ணுக்கும் ஜெனனமான குழந்தையின் நாடித்துடிப்பு 36 மாத்திரையில் நடக்கிறது. (௫அ)

நாடி*ஸ்பந்தன § குணகாரம் † கௌமார பருவத்தில் நாற்பது மாத்திரை தொடக்கம் ஐம்பது மாத்திரை யீறாக நடக்கும்.

> *ஸ்பந்தனம் என்பது இரத்தோட்ட ஆரம்பத்திற்குரிய பெயர்ச்சி. § குணகாரம் - எண்ணியறிதல். †கௌமாரன பருவம் - 1. ஜெனனந்துவங்கி ஐந்து வயசு வரையும். 2. இளம் பெண்ணுக்குரிய பதினாறு வயதுவரையும் உள்ள காலம். (பருவபேதங்களை உபகரண அத்தியாயத்திற் பார்.)

§ யௌவன பருவத்தில் ஐம்பத்தாறு மாத்திரை முதல் அறுபது மாத்திரை யீறாக நடக்கும். ஆனால் நோயுள்ள பிதா மாதாவுக்கும் ஆயுஸின் கிரமமில்லாத பிதாமாதாவுக்கும் பிறந்த பிள்ளைக்கு நாடி யௌவன பருவத்தில், மூப்பத்தாறு மாத்திரை நடக்கும். (§யௌவனபருவம்: பார் உபகரண அத்தியாயத்தில்)

முப்பது வயது தொடங்கி ஐம்பத்தைந்து வயதுவரையும் நடக்கிற பருவத்தில், இருபத்தொன்பது மாத்திரை நிகழுகிறது; அல்லது அந்தர்ஸ்தானத்தில், இருபத்தெட்டு மாத்திரை நடக்கிறது. நாடி சர்ப்பகதிக் குவமையாக நடக்கிற உற்பத்தி ஸ்பந்தன சங்க்யை முப்பது மாத்திரையில் மாறிப் பெயருகிறது. (௬க)

விருத்தாப்பிய வயசில் மூப்பது மாத்திரைக்கும் முப்பத்தொரு மாத்திரைக்குமிடையில் சுப அனுகூலமாக அடித்து மாறுகிறது. அதின் காரணம் ஸ்பந்தன சங்க்யைக்குரிய பிரமம் உத்தமமான துவாரத்தோடொற்றுமையாயிருக்கிறது.

ப்ரௌடகாலத்தில், புணர்ந்து பிரியாத ஸ்திரி புருஷருக்கு, நாடி: ஸ்தானத்தில் மாறிச் சமகுணமாகிறது அப்படிப் புணர்ச்சியை விரும்பிய ப்ரௌட ஸ்திரிக்கு நாடி சங்க்யை இருபத்தொன்பது மாத்திரையும், கேவலமான ப்ரௌடபுருடனுக்கு நாடி ஸ்பந்தன சங்க்யை முப்பத்தொரு மாத்திரையும் நடைபெறுகிறது. அறுபது வயசின் மேல் எண்பத்து நான்கு வயசு வரையும் தாதுப்பெலன் குறையாம லிருப்பவனுக்கும், பெண்களுக்கு மாதாந்தரப் பூப்பு நின்றபின்பும் நாடி முப்பத்தொரு மாத்திரை நடக்கும். (கூ௩)

§ பராக்கில் இருவருக்கும் ஒரு விநாடிக்கு 112 மாத்திரையடிக்கும். அவைகளில் இரண்டு மாத்திரை பகிர்கதமாகவும், 110 மாத்திரை அந்தர்கதமாகவும் நடக்கிறது. (கூ௪)
§ பராக்கு என்பது ருதுவாகும் பருவத்திற்கு முன்புள்ளகாலம்.

கருப்பந் தரித்த பெண்களுக்கு, அக்கருப்பமுண்டாகிச் சிசு பூமியிற் பிறக்கும்வரையு மொவ்வொரு நாடியு மிரண்டு கணமாத்திரை வீதம் நடக்கிறது. அந்தச் சிசுர் ஜென்மித்த நாற்பது கிழமைவரையும் ஒவ்வொரு நாடியும் ஒவ்வொரு தினமுமொருகணமாத்திரைவீதம் நடக்கும். (கூ௫)

## மதாந்தரம்.

கருப்பஸ்திரிக்கு எட்டா மாதந் துவங்கிச் சிசுப் பிறக்கும் வரையும் நாடிஸ்பந்தனம் 140 தீர்க்கமாத்திரையில் நடக்குமென்று கூறுவர். (கூ௬)

புருண நாடித் துடி நாற் றறுபதே.

என்று நாடித்திரட்டுக் கூறும்.

பிரசவ ஆரம்பத்தில் ஒவ்வொரு நாடியும் அறுபது மாத்திரை வீதம், மூன்று நாடிகளும் நாற்றெண்பது மாத்திரை நடக்கிறது. இதில் ஒவ்வொன்றிலும பத்துப் பத்து மாத்திரையாக மூன்று நாடிகளிடமுமிருந்து தசவாயுவினென்று கவர்ந்து சகஜபெலனோடு உதரத்து ளிருக்கும் சிசுவை வெளியே தள்ளுகின்றது. சில கர்ப்பிணிகளுக்குப் பிரசவகாலத்தில் சிசு

Lion. J. Sriganeshan

வெளியே வராம லிருப்பதின் நியாயம், பெலவீனமானவ ரிடமும் நோயாளிக ளிடமும் அந்த வாய்வு தனக்குரிய மாத்திரையை நாடிகளிடமிருந் தனுபவித்துக்கொள்ளாததினாலும், கருப்பாசயம் நோயுற்றிருக்கும்பொழுது கருப்பந்தரித்த காரணத்தினாலும், அகாலப் புணர்ச்சியை விரும்பி யனுபவித்துக்கொண்டவருக்குமாம். (௬௭)

## பிரசவத்தின் பின்பு நாடி எண்குறி.

பிரசவ முடிவின் பின்சதச் சதுர்த்தச
மவை முத னூற்றுமுப் பதுவரைப் பெண்குறி,

என்று நாடித்திரட்டுக் கூறும்.

ஒரு பிள்ளை பிறந்த ஒரு வருஷம் வரையிலும் நாடியின் றுடிப்பு நூற்றுமுப்பது மாத்திரைவீதம் நடக்கும். இரண்டாவது வருஷம் வரையிலும் நாடி நூற்றுப்பத்து மாத்திரை வீதம் நடக்கும். மூன்றாவது வருஷம்வரையும், அந்த மகவுக்கு நாடி ஸ்பந்தன அசைவு நூறு மாத்திரைவீதம் அடிக்கிறது. ()

நாலு வயசு துவங்கி ஏழு வயசுவரையுமுள்ள ஒரு பிள்ளையின் நாடி பத்துப்பல மாத்திரைவீதம் நடக்கும். (௬௯)

ஏழு வயசு துவக்கம் பதினைந்து வயசுவரையும் நாடி பதினைந்துபல மாத்திரைவீதம் நடக்கும். (௭௦)

பதினைந்து வயசுமுதல் முப்பதுவயசீறாக நாடி முப்பத்தாறுபல மாத்திரைவீதம் நடக்கும். (௭௧)

முப்பது வயசுமுதல் ஐம்பதுவயசீறாகத் தோற்றும் நாடி ஸ்பந்தன ஸங்கியை எழுபத்தைந்துபல மாத்திரைவீதம் நடக்கிறது. இந்த எழுபத்தைந்துபல மாத்திரைவீதமென்று சொல்லப்பட்ட ஸிராகதிப் பிரமாணத்தில், நாற்பத்துநான்குபல மாத்திரை, நாடிகள் மூலமாக வெளியாகவும், முப்பத்தொருபல மாத்திரை வாயுக்கள் மூலமாக மறைந்தும் நடக்கின்றன. ஸ்திரி சம்போகசமைய காலத்திலும், கோபமான காலங்களிலும், இந்த முப்பத்தொருபல மாத்திரையை, வாயுக்கள் வெளிகாட்டி மறைக்கின்றன. (௭௨)

## மதாந்தரம்.

இருபத்துநான்கு வயதுமுதல் முப்பத்தாறு வயசு வரைக்கும் நாடி ஸ்பந்தனஸம்க்யை எண்பது பல மாத்திரைவீதம் நடக்கிறதென்றும், அதின்பாகம் நாற்பது பலமாத்திரையை வாய்வுக்கள் கிரகித்துக் கொள்ளுகின்றனவென்றும், நாற்பது பல மாத்திரையை நாடிகள் வெளிக்காட்டி நடக்கின்றனவென்றும் கூறுகிறது. (எங)

நாடிகளின் நடை வயசின் கிரமப்படி அந்தந்தப் பராயங்களுக்குப் பொருத்தமாயும், தேகபல பேதத்திற்குத் தக்க பொருத்தமாயும் நடந்து, பின்பு க்ஷீணகதியை யடைகிறது.

குளிர்காலங்களில் நாடிகள், தங்களுக்குரிய நடையிலிருந்து இரண்டரைப்பல மாத்திரை குறைய, நடக்கின்றன. இப்படி அநேக விதமான வருத்தங்களில், நாடி கால வித்தியாசங்களுக்குத் தகுந்தபடி நடக்கின்றது. (எரு)

## நாடிசங்க்யை வாய்ப்பாடு.

| | |
|---|---|
| 10 மாத்திரை | 1 பிராண மாத்திரை |
| 6 பிராணமாத்திரை | 1 பலமாத்திரை |
| 60 பலமாத்திரை | 1 தெண்டமாத்திரை. |

## இருதயரோகமுண்டாவதின் காரணம்.

இருதயத்தின் முற்பக்கத்திற் சகிக்க முடியாத குத்து வலிப்புண்டானல், அது இரத்தாசயத்தினுள்ள இரத்தோட்டத்தை வாய்வுக்கள் நெருங்கித் தடைபண்ணுகிறதினுலுண்டாகிறது. (எசு)

இருதயத்தின் பின்புறம் முதுகுப் பக்கத்தில் சூலை, இசிவு உண்டாகும்பொழுது, இரத்த ஓட்டம் அந்தப் புறத்தில் வியாபித்தால் வாயுவின் ஓட்டம் தடைபட்டு வருத்தத்தைக் கொடுக்கிறது. (எஎ)

மேலே பேசின வருத்தங்களில், ரத்தோட்ட யந்திரம் பிரதானமான பகுதி, ஸம்குசிதமான பலனை யளித்தது. இரத்

தோட்டத்தைக் குலைதை காரணமாக விருதயமனுபவித்துக் கொள்ளும்பொழுது, வாயுவின் வேகம் பந்தித்து நாடி நடைக்கு மந்தபலனை யளிக்கிறது. (எஅ)

நாடியின் நடை அதிக சூக்ஷமகுணமாகத் தோற்றும்பொழுது மலபந்த முண்டாகின்றது. மலபந்த முண்டாயிருக்கும் பொழுது அசீரணச்சுர முண்டாகின்றது. அந்த அசீரணச் சுரத்தி லற்ப பிரமாணமான இரத்தம் நாடியிலோடுகிறது. அந்த நாடி துர்ப்பல கதியிற் றெய்ந்து நடக்கிறது. (எகூ)

பூரணமான இரத்தமோடுகிற நாடியின் நடை கரதலப் பரீக்ஷைக்கு அடித்துத் தனக்குரிய இலக்ஷணத்தைப் பேசுகிறது. அல்லாத நாடியின் செயல் இரத்தோட்ட வித்தியாசத்தினால் பேதப்படச் சரீரசுபாவகுணமும் வித்தியாசமடைகின்றது. அதுபோலவே நோய்கொண்ட தேகத்திலோடுகிற வசா வெருவையும்; ரோககுணங்கள் மாறி மாறி யுண்டாக, நாடியின் நடையும் வித்தியாசம் வித்தியாசமான இலக்ஷண முடையதாய் நடக்கிறது. நிமேஷமென்னும் ஊக்கத்தினாற் கற்பிக்கப்பெற்ற உதிரம், திருப்தியடைந்த கையின்கண் எப்பொழுதும் நாடி இயக்கத்திற்கு முதற்காரணமான குறிப்பைத் தெரிவிக்கிறது. குறைந்த தானங்களை விட்டுப் பார்வையிடுகிற நடையின் வித்தியாசங்களை அங்குஷ்டமூலத்திலறியவேண்டியது. அந்த நாடிக்குரிய ஐவகை நடையின் அபிதானங்களையும் அவைக ளமைந்து நடக்கு மிலக்ஷணங்களையு மிதனடியி லெடுத்துக் காட்டப்படுகின்றன.

1. தேசபுஞ்சை; 2. சஞ்சலை; 3 க்ஷீணதை; 4. துர்ப்பலை; 5. தீரகாமினி என்ப.

அவற்றுள் தேசபுஞ்சை என்பது, உக்கிரமானகுணம், பிரகாசமான ரூபம், அக்கினித்தன்மை, அதிகவேகமானநடை, தைரியமான இராசிநடை, நிபிடமாத்திரை, இறுகியநடை.

2-வது: சஞ்சலை— லோலிதகுணம், அசைவுடையது, வாயு, மின்னலின் விப்பம்.

3-வது: க்ஷீணதை—நுண்மை, உசிதம், சுஷ்கம், பழுது, தளர்ச்சி, ருசிகரம்.

4-வது: துர்ப்பலே — தொய்ந்தது, நேரக்கமில்லாதது, சோய்த்தது, பலக்ஷயமானது.

5-வது: தீரகாமினி — உறுதியான நடை, சாந்தமான நடை, தூக்கமான நடை, தத்துவமான நடை, ஆழமான நடை, சுகநடை என்பன. (அ௦)

## சஞ்சலேகதிஇயலும் தேசபுஞ்சைகதியியலும்.

இரத்தக்கொதிப்பிலும், சுரத்திலும் கெதியாய் நடக்கிற நாடி சஞ்சலேநடையியலேத தோற்றுவிக்கிறது. சுரந் தொடங்குகிறபொழுது, வாதம் தேசபுஞ்சாகதியைச் சிரையிற் பிரப்பிக்கிறது. (அக)

இரத்தத்தின் சுபாவ வர்ன்னம் மாறி உஷ்ணமான குணம் உண்டாகும்பொழுது, நாடி கெதியாய் நடக்கிறது. சுரத்திலே அகங்களிப்புற்ற செயலில், சஞ்சலே நாடியின் நடைக் குவமையாகிறது. சுரப்பூருவகுணம் மாறி மறு குணத்தை யெடுக்கிறபொழுது வாதகுணமான ரோகநடைகள் மாறி நடக்கிற நாடியைப்போலே தேசபுஞ்சை நடக்கிறது. (அஉ)

## துர்ப்பலநாடி, க்ஷீணநாடி இவைகளின் நடை.

சுரரோக குணங்களிலும், அதிசாரரோகத்திலும், நீர்ப்பாடு பெரும்பாட்டுக்குணங்களிலும், நாடி தொய்ந்த நடையையுடையதாகிறது. அவஸ்தைப்பாடான பிராண னுடம்பைவிட்டழிகிறபொழுதும், நாடி துர்ப்பல நடையாயும், க்ஷீணநடையாயும் நடக்கிறது. (அங)

(அவஸ்தைகுண மொழுங்கில்லாம னடக்கிற மரணத்தின் முன், நாடி பிரபலமுடையதாகவும், நிதானமில்லாத கெதியாகவும் நடந்து சீவனழியும்பொழு தொடுங்குகிறது.)

அதிசாரரோகம், பெரும்பாடு இவைகளில் சுரக்குணமிருந்தால், துர்ப்பலநாடி விகாரப்பட்டு நடக்கிறது. அப்படி நடந்தாலும், நாடி தர்ப்பலசக்தியின் பலனேயே யளிக்கிறது. (அச)

## புராணரோகிநாடி.

அனேககாட் சென்றும் மாருத கீடித்த ரோகிக்கு நடக்கிற நாடியின் நடை திரகாமினி. (அரு)

அந்த வருத்தங்களின் வேகமான குணம், "கோ" என்னும் பிரதானமான கருவியை மறைக்கிறது இருதயஸ்தானத்தில் ஸ்தாபித்திருக்கிற நாடி தன்னிஷ்டப்பிரகாரம் இயங்குகிற பலனைக் காட்டுகிறது. (அசா)

## சுகதேகர்க்குரிய நாடி நடை.

சௌக்கியம், சுகானுபவ முடையராய்ப் பூமியிற் பிறந்து ஜீவிப்பவருடைய ஆரோக்கியம், நிலைபெற்றிருக்கிற எந்தக் காலத்திலும், அவருக்கு நாடி அன்னப்பறவையின் நடை தேய்ந்து பந்திக்கிற தன்மைபோலும், அல்லது யானையின் நடை ஓய்ந்து நிலைக்கிற தன்மைபோலும் நடக்கிறது. (அஎ)

(அன்னப்புள்ளின் தூக்கமான நடையைப்போல் அல்லது யானை யின் தூங்கலான நடையைப்போல் நடக்கிறதாம்)

இரத்தோட்ட ஆரம்பஸ்தான நிலை அமலத்தன்மையான லோலிதமும், மந்தத்துவ முற்று யழிந்துபோகாத அசைவும், நாடிக்குத் தீர்க்கநடையையும், சுபலக்ஷணத்தையு முண்டாக்கிறது. (அஅ)

(இலேசா யசையவேண்டிய தென்பதாம்.)

"கோ" சுத்தமான பதவையிற் சஞ்சரித்துத் தானம் மாறி, நீதியூகமான பிரமாணத்தை யடைகிறதும், சந்திரநேத்திரஸ்தானங்களுக்குப் பரிசுத்தமான இனமாற்றைச் சங்கற்பிக்கிறதும் உத்தமமான லக்ஷணமென்று சொல்லப்படுகிறது. அதுவும் அமந்தத்துவம், சஞ்சலம் இவைகளினின்றும் ரஹிதமாகிச் சகல நாடிக்குமுரிய குணங்களைச் சுபலக்ஷணமாகச் செய்கிறதாம். (அகூ)

தோஷசமத்துவம் பரீக்ஷைக்கு இதயத்தொனியிலுமறியக் கூடியதாகிறது. அந்த இயல்பையுடைய நாடி, கெதியாய்

நடக்கிற நியாயத்தாலும், அல்லது வருத்தத்தின் குணங்கள் மேலும் மேலு முருத்து வேதனையையுண்டாக்கிற நியாயத்தாலு மிருக்கலாம். உற்பத்தி விகாரப்படாத தமனியின் தர்மப்பிரகாரமான நடை, பரீக்ஷித்து நியாயங் கண்டறிதற்கு மனோ தண்டமான சுவாசத்தை விடுகிறது. அல்லது கர்ண்ணரந்திரங்களினூற் கேட்டறிதற்கு ஒலியை யுண்டாக்கிறது. (கூO)

வாய்வு கொடுக்கப்பெறுகிற துவாரம் ஒன்று, அது ரோகத்தின் குணங்களை மாறியெடுக்கிற நாடிக்குரிய தத்துவத்தை விசித்திரமாக வரைந்து காட்டுகிறது. அந்த நாடியின் நடை பின்னம். மற்றும் சமஸ்த ரோகங்களுக்குமுரிய குணங்களழிந்து தோற்றுகிறது. நாடிதர்சனம் அங்குஷ்டமூலத்தி லறிய வேண்டியது. ரோக இனங்களைப் பிரித்தறிந்து அததற்குப் பொருத்தமான அவுஷதங்களை விதிக்கிற வைத்தியர், தான் கொடுத்த மருந்தினூலுண்டாகின்ற விசேஷமான குணங்களின் முடிபை யுக்தித் துவாரநேத்திரங்களிலு மறிந்து கொள்ள வேண்டியது. அதின் பயன் யாதெனின்: அந்த ரோகம் சிதறிச் சில்லறையாகித் துண்டிக்கிற குணமாக அறியப்படுகிறது. அப்படித் துண்டித்த குணத்தை ரோகம் தனக்கொரு விதைமுதலாக அடைந்து வைத்திருந்து இருதயத்திற் காட்டுகிறது. அல்லது அந்தப் பின்னமானகுணம் இலக்கணப் பொருத்தமில்லாத நவீன ரோக இனமாக மாறி வளர்ந்து மிகுந்த கோபத்தை யுண்டாக்கின தோஷ சம்பந்தமான குணங்களாக அளிக்கிறது. அந்த அன்னிய அலக்ஷண ரோக குணத்தைப் பிரதியுவமையாகக் கொண்ட அந்தத் தோஷம் எதிர்நோக்கித் தாக்குகிறது. குறைந்த நீசதானங்களிலும் சிறுப் பிரமாணங்களை விலக்கி யறியப்படுகிறது. ரோகங்கள் சங்கிரணமாகி யுண்டான வித்தியாசமான நாடி ஒரேவிதமான நடையின் பயனைக் காட்டுகிறது.

## ரோகிகளைப் பரீக்ஷைபண்ணிய மருத்துவன் நடக்கவேண்டிய முறைமை.

வைத்தியன் ரோகிகளைப் பரீக்ஷைபண்ணியவுடன், சுத்த சலத்தில் ஸ்நானம் செய்யவேண்டும். இல்லாவிட்டால் இரண்டு

கைகளையுமாவது சலத்தினற் சுத்திசெய்யவேண்டியது. அதனல் ரோகிக்கு ரோகம் நாசத்தை யடையவும், வைத்தியன் கங்காநதியில் ஸ்நானம் பண்ணினபலனை யடையவும் பெறும்.

பேற்கோள்: தேரையர் பாடல்.

கன்பவுரு நோயதைமுக் கண்சொடறி வுற்றறிந்தார்
தன்மநீ ராடற் சதத்துடனெட்—டின்மையெனி
லங்கைபதந் தூய்மைபின்றே லங்குலிபூ எற்றலின்றேற்
கங்கை பதம்புனிறு காண்.

அதுபோலவே, ரோகிகளுக்கும் அநித்தியமான தோஷங்கள் கோளாறடையாமலெப்பொழுதும் சுத்திகாரணத்திற்கமைந்திருந்தால் அந்த ரோகங்களைப் பரீக்ஷைபண்ணிச் சமநிலை கண்டறிகிற கைநாடியும் சுத்தமாய் நடக்கும். (கூ௩)

இரத்தத்தின் சுத்திமூசாந்திரம், பயிற்றப்பெறுகிற நாடியின் ஒன்றிப்பு, சுபுஞ்சரோகிகளுக்கு எதிர்நோக்கித் தாக்குகிறது. இந்தக் கிரியைபினலே, விகசிதம் சம்வாரம் தாழ்மையடைகின்றன. அதனல் சுத்த நிமேடம் பேசுகிறது காற்றிற்கறகறக்கிற மூங்கிற் குலத்திற்குப் போலியாக. இந்தக் காரணங்களினலந்த வருத்தக்காரரைப் பற்றுகிற பிரதி குணங்கள் நெடுநாட் சென்றும மாறுமலிருப்பதின் நியாயம். இவர்களுக்குப் பிறக்கும் புத்திராதிகளு மிந்தக் குணமமைந்தவரா யிருப்பரென்பதாம். (கூ௪)

மூன்றுமத்தியாயம் முற்றுப்பெற்றது.

Dr. T. K. SIVAGNANAM
L. A. M. P. (Cey)
Kondavil West
KONDAVIL

உ

சிவமயம்.

# நாடி தர்ப்பணம்.

## [இரண்டாம் பாகம்]

### நான்காம் அத்தியாயம்.

### யூநானி மதாந்தர நாடிப்பரீக்ஷை நிதானம்.

சிவபெருமான்துதி.

வெண்பா.

நாடிகுலக் கம்பரியை நன்றுரைக்கத் திங்களராச்
சூடியரு ளீசன் பதந்துதியே—தேடரிய
யூனன்ம தானுசா ரத்தை யுறழ்ந்தெடுத்த
தேனர் வடமொழியிற் றேர்ந்து.

யூனானி மத வைத்தியக் கொள்கையின்படி, நாடிகள் நாபிஸ்தானத்திலுற்பத்தியாகிக் கஹஸ்தானங்களோடுகாரணமாய்த் தேகத்தில் அந்தர்கதியாகவும் பகிர்கதியாகவும் வியாபித்து உறுப்புகளைப் போஷிக்கின்றன. அவைகளில் பூர்வாங்கங்களுக்குரிய செயல் வன்மஸ்தானங்கள் காரணமாக நாபிஸ்தானந் தோற்றுவிக்கிறது. அவைகளினுற்பத்தி சாஸ்திரங்களை யறிந்த வைத்தியருடைய அகங் களிப்புறச் சிவாங்கத்திலும், கை பார்ப்பிக்கப்பெறுபவருடைய குறிப்பிடங்களில், ஒரு இரத்தினப் பரீக்ஷைக்கு ஒப்பாக அந்த நாடி தோற்றுகிறதும் அறிகிறதும், மறுபடி உற்பத்தியாகிறதுமாகிய இயல் இசை நடை இலக்கணங்களை ஒரு வரிவடிவின் றன்மைபோலவே வெளிகாட்டியும், மறைத்தும் பிரகாசிக்கச் செய்கின்றது. (க)

ரூஹம் இரண்டு: அவை, அயவானி, நபஸானி என்பன. அயவானி இருதயத்தையும், நபஸானி மஸ்தகஸ்தையும் உயர்ந்த வருணமாக வுபகரிக்கின்றன. ஆனால் தாங்களனுபவிக்கிறதில்லை. அந்தச் சுகானுபவமான குணங்களை யனுபவிக்கிறது; இருதயம். அதுபோலவே இருதயஸ்தானத்தில் ஸ்தாபித்திருக்கிற நாடிகளின் நிலைமை, மனுஷருக்குத் தேக சவுக்கியமான குணங்களை யுண்டாக்கி அப்பயனை யளிக்கிறது,

அங்குஷ்ட மூலத்திற் பரிவர்த்தனமாகிச் சிகைஷபண்ணுகிற நாடி, மானஸிகச்சிரைகள்; அவைகள் தேகத்தினுள்ளுறுப்பில் தாமரைமலரி னுள்ளிருக்கும் பொகுட்டைச் சுற்றியிருப்பதாகிய கேசரத்தின் வடிவம்போலே இருதய கமலத்திற் சேர்ந்திருக்கின்றன. இரத்தாசயத்திலிருந்து உதிரத்தை நாடி நரம்பு வழியாக அயலுறுப்புகளுக்குக் கொண்டுசெல்லும்படி கற்பிக்கும் தகைமையுடைய இருதயமானது விரியுந்தன்மையுங் குவியுந்தன்மையுமுடையது. இந்த இரண்டு தன்மையும் வாயுவின் முயற்சியினாலென்றும் அல்லது நாடியருட்சிகொள்ளுகிற ஸ்பந்தன காரணத்தினாலென்றும் இருவகையாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்த இரண்டு கிரியைகளினன்றேயல்லாமல் வேறு காரணமில்லை. சூரியன் உதயம்பண்ணும்பொழுது தோற்றுகின்ற கிரணத்தின் சாயலைப்பற்றிப் பங்கஜமெவ்வாறு விகசிதஞ் செய்கின்றதோ அதுபோலவே யிரத்தமோடுகின்ற விதானக்கிரியையினாற் றேகாரோக்கியத்திற்குரிய அகமலர்ச்சியுண்டாகின்றது. அயவானிரூஹம் என்பது முதிராத வாய்வு சுத்த பாவகனால் உயர்ந்த வருணமாகப் பெறுவது. அதை அதை உவந்துகொள்ளுகிற மனம் அங்குஷ்டமூலகாரணமாகத் தேவையான பாகங்களுக்கு விட்டுத் தேஜஸ் முதலிய பிரகாசமான வனப்பை யமையச் செய்கின்றது. அந்தக் காந்தி தூரமான உறுப்புகளை யடையும்பொழுது இருத் பதுமம் சங்குசிதமாகிற செயலை யளிக்கிறது. இனன் பிரிந்துகொடாத காரண சம்பந்தமான மனுடருடைய தேகத்திற்குரிய சப்பூர்ண ஊக்கங் கெட்டுப்போகிறதுமல்லாமல் உஷ்ணசம்பவமான ரோகமும் நிலைபெறுகின்றது. அந்தக் காலங்களிலவருக்குரிய சுய அறிவும் §ஸ்வஸ்தமாகாமற் றடைசெய்கிற பலனை யளிக்கிறது. தேக உற்

§ ஸ்வஸ்த - மனநிறைவுள்ள, சுகத்திலுள்ள.

சாகத்திற்குரிய ப்ரதிதமான குணங்களைப் பயக்து சாயத்தை கடைபெறச் செய்கிற நாடிகள் பத்து. (௩)

விளித்தலின் பொருட்டு விகசிதமும், பிளிற்றலின் பொருட்டுச் சம்வாரமும் இரத்தாசயத்தில் கிரமமாய் கடைபெறவேண்டியன. உத்தமகுணமுடைய, லம்பாவம், சோடாவம், என்னும் இந்த இரண்டு காடிகளின் நுகரும் பண்பின் ரெழிலின் சேர்பு கம்பிராதி பேதங்களைக் கொடுக்கின்றன. (பின்னும் சொல்லப் படும்.) அப்பொழுது இரத்தாசயம் மாறுபாடான செயல்களை நிக்கிரகிக்கிறதற்கு யூகிக்கிற கோவுட னனுகூலமாகிற ஏதுவுடையதாகிறது. இனனனுகூலமான பயனடையாத தேகிக்கு நடக்கிற உவமையில்லாத காதம், அதிக நியூனகுணமுடையது. இரத்தோட்டத்தின் ஆரம்பமும் கோஜாதை காரணமாக உற்பத்தியாகிறது. (௪)

நியூனகுணமான லக்ஷணம் மூன்று.

1. சமதையிற்பிரிபு அல்லது அதர்மகுணம்.
2. சுத்தலக்ஷணத்திரிபு அல்லது சுஷ்ககுணம்.
3. பிரத்யேகபேதம் அல்லது பிரித்தும்பொருள் கொடாத இலக்ஷணம்.

உத்தமமான குணம் மூன்று.

1. சமானதை—ஏகரூபமாக ஒலித்து அந்த அக்ஷரத்தினிலக்ஷணத்தைப் பிழையில்லாமற் பேசி அதற்கு இனமான எழுத்திற்கு மாற்றிவிடுதல்.

2. சாதகுணம்—சுத்தலக்ஷணமான தொனி.

3. பிரத்யேககுணம்—அக்ஷரங்களை ஒன்றின்பின்னொன்றாய் விளங்க உருவகப்படுத்தி விவரணமாய்ப் பேசுமிலக்ஷணத்தையுடையது. வைகறை நண்பகல் எற்பாடு ஆகிய நேரங்களுக்கு முறைப்படி நடக்கிற நாடியிலக்ஷணம்.

நாடிகளின் நவகதிகளாவன.

1. தீர்க்ககதி (என்பது) நெடுநடை.
2. ஹ்ரஸ்வகதி ,, குறுநடை.

3. சமானகதி—சமகதி நிதானமான நடை.

4. தூலகதி (என்பது) பாரமானநடை, பருத்தநடை, மந்தநடை.

5. கிருசகதி—கிரிசகதி (என்பது) மெலிந்த நடை, லகு நடை, ரத்தஞ்சுண்டியநடை.

சமான விஸ்திருதம்—சமநடையிற் பரந்தகதி, சமகதியில் நெடுநடை, சமநடையில் விருத்தியடைந்தநடை.

7. பஹிர்கதி—அதிக உன்னதமான நடை, விளங்கக்கூடிய உயர்ந்த இலக்ஷணத்தை யளிக்கிறது.

8. அந்தர் கதி—தோற்றுதநடை, அதிக நீசமான பலனை யளிக்கிறது.

9. உச்சநீசத்வ சமானம்—உயர்ந்தநடை நீசத்துவமாகிச் சமநடையாக நடத்தல்.

லம்பநாடி இனமாற்றுகிறது ரோக சம்பந்தமான உஷ்ண மதிகரிக்கிற குணத்தின் காரணம். அந்த மனோகதமான நடை: மனசுக்கு வேதனையைக் கொடுக்கிறது; கோவின ப்ரதீதமான குணங்களுக்குரிய தாளாண்மை யொழுங்கினமாக இயலுகிறது.

நியூனலம்பநாடி இனமாற்றுகிறது உஷ்ணமழிகிறதற்குக் காரணம். சுத்த நிமேடம் மாசடைந்த தன்மை ரோகிகளுக்குரிய ப்ரதீத யத்தனமும் நியூனகுணமடைகிற நியாயம்.

சமநடையையுடைய லம்பநாடி அயகிருதி யிலக்ஷணமுடையதாய் நடத்தல் உண்டாகியிருந்த உஷ்ணகுணம் சரியாய் விடப்பட்ட காரணம். அதிக விஸ்திருதநடை இனமாற்றுகிறது நெகிழ்ந்து செல்லுந்தன்மையான குணத்தை யுண்டாக்கி யளிக்கிறது. தன்னுடைய ஸ்தானத்தினின்று யதார்த்தமான அனுமானங்களைக் கற்பிக்கிற ஏதுக்களிலிருந்து நிலைபிறழ்ந்து நடையை அதிகரிக்கச்செய்கிற அந்த நாடியின் எதிர்முகமானது வாரத்தில் சௌடிபயனளிக்கிற காரணம் சங்கலிதமா யதிகரிக்கிறது. (ரு)

## மச்சாதாதுவைப்பற்றி யுண்டாகும் சிலரோகங்களின் காரணம்.

இரத்தாசயத்திலிருந்து சிரசுக்குச் செல்லும் நரம்புகளில் "லம்பநாடி" மிக முக்கியமானது. அது அந்த இடத்தில் பூரண

சக்தியுடனிருந்து ஒரு கிருபனைப்போ லரசுபுரிவதுமன்றி மனுஷருடைய இராசகருவிகளிலொன்றாகிய உச்சி உள் மூளைக்குச் சுத்த உதிரத்தைக் கொண்டு சென்று அங்கே பிரகாசிக்கச் செய்கின்றது. சுத்த இரத்தமோடுவதாகிய குழல்களுள் சிரேஷ்டமான இந்தச் சிரைக்குப் பெலவீன முண்டாகும்பொழுது சிரரோக முண்டாகின்றது. உஷ்ணஞ் சம்பவித்தால் அறிவின் பேதமான சித்தப் பிரமையும், குளிரடைந்தால் மூகைக் குணமான மூடத்தன்மையு முண்டாகுமென்பதாம். (சு)

## மேலேகூறிய ரோகங்களைப் பரீக்ஷபண்ணும் முறை.

வைத்தியன்: அந்த ரோகியின் கையைப்பற்றி, தன்னுடைய தற்சனி, மத்திமை, அனுமிகை, கனிட்டை என்று சொல்லப் படாநின்ற நான்கு விரல்களாலும் தொட்டு, நாடியின் நடையைப் பார்த்து அறிந்துகொள்ளவேண்டியது. அப்படிப் பார்க்கும் பொழுது, லம்பன நாடியின் நடை சோதனுவிகற்ப விதிக்கமைக்கப்பெற்ற கனிட்டை விரலின் அந்தம் மையத்தில்தோற்றி நடக்குமிலக்ஷணம், ஒருயசமானைச் சுமந்துசெல்லும் இவுளி, தான் நடக்கும்பொழுது பயந்த அதைப்பைப்போலே நடக்கிறதாம். (எ)

அந்த நாடியின் காரணமாகத் துண்டிக்கிற அந்தர்கதியும் ஒரு முதன்மையான பயனைக் கொடுக்கிற செயலைரபோல் அயகிருதி என்னும் நடையை உவமையாகப் பொருந்துகிற ஏதுவுடையதாகிறது. கழுத்தின் மேற்பாகம் குணங்களை யனுபவிக்க மஸ்தகம் பிங்கலசாதியான சிகையைச் சமீபமாகச் சேர்த்து மனசில் நிகழவேண்டிய சீக்கிர யுக்தியை விரைவாயெழுப்புகிறதற்குத் தூண்டிவிடுகிறது. சூரியன் நாடிபொருத்தமான அங்குஷ்டமூலத்தின்குணம், மேலான அதிகாரத்தையுடையதாய்ச் சாரீர ஊக்கத்திற்குரிய ஏதுக்களை யுண்டாக்கிக் குணங்களைக் கொடுக்கிறது. (அ)

இதுவரையுங் கூறிய நாடிகளுக்குச் சுய ஆதாரமாயிருக்கிற தமனி முக்கியமானதானபடியால், மனுடருடைய மணிபந்தத்தினடக்கிற நடையைப் பரீக்ஷை செய்கிற வைத்தியர்;

தாம் ஜெயமடைந்த முதலாம் இரண்டாமங்குலிகளில் மயங்கி அந்த நடைக்கு உடைந்துபோகிறதுபோற் றோற்றியழிகிறது.

நீசதானத்தைவிட்டு இருதயத்திற்குவேதனையைக் கொடுத்து நடந்த லம்பநாடியின் சேர்க்கை இனமாற்றுகிறது சேகி. அதற்கு தமனிநாடி முக்கியகாரணமாயிருக்கிறது. நடை உடன்பாடான விவாதம். அதைப் பரிக்ஷைபண்ணி யறியப்படும் கையில் ஏற்பாடுபண்ணிக்கொள்ளுகிற நான்காவது விரலில் தோற்றி நடக்கிறது. வேறு நூல்கள் அந்தநாடி தன்னடையைப் பிரதிரூபமாக வரைந்து காட்டுகிற காரணம் பரீக்ஷைபண்ணப்பெறுகிற கையிலல்ல. அது மூன்றும் நாலாம் விரலில் இனமாற்றுகிறதென்று கூறுகின்றது. யூனானி வைத்தியசாரம், தோஷசம்பந்தமாகச் சிக்ஷைபண்ணுகிற நடை கோபங்கொண்டு, அங்குஷ்டமூலத்தில் பரீக்ஷைக்கு நான்காவது விரலிற் பேசுகிறதென்று கூறுகிறது. (கo)

## கிஜாலிகதி.

நாடியின்நடை மான் நடைபோன்ற விசித்திரமான உற்பத்தி நிர்மிதமான பலன்களைக் கொடுக்கிறது. அந்த நடை யிரடடித்துக் குதிப்புற்று நடத்தல் §கிஜாலி கதிக்கு உவமையாக நடக்கிறது. அப்படி நடந்த நடை பித்தத்தின் கோபமான விகாரமான குணங்களை உண்டாக்கிறது. கையிலே யறியப்பட்டது.

## மோஜிகதி.

அப்பியாச தானத்தில், நாடியின் நடை கரையிற் புரளும் சமுத்திர அலையைப்போல் முன்வாங்கிப் பின்வாங்கி நடத்தல் அபாயமான மோஜி கதியென்று சொல்லலாம். (மோஜீ=தோணி) அது: தேசநிலை, ருதுகாலபேதநிலை, இவைகளுக்குத் தக்கபடி; சிரேஷ்டமான குணமுடைய நாடியை யடக்குகிறதற்கு, வாயு விஷமகுணத்தை அதிகரிக்கச் செய்து அந்த நடையைப் பிறப்பித்துக் கைக்கும் மற்று மூலப்பின் விகுதிகளுக்கும் ஏவிவிடுகிறது. (கஉ)

---

§ கிஜாலி என்பதைப் பெண்மான் என்று சொல்லுவார்கள்.

அந்த மோஜிகதி சிலவேளை குக்கியிலிருந்து வாதியை யுண்டாக்கிற கிருமியினங்களின் செய்கையாலுண்டான குணத்திலும் நடக்கும். அப்படியிருந்தால் சிலேஷ்மத்தினுடைய நடை மறுபடியுஞ் சேர்ந்து அதிக்கிரமித்து ஆமத்தோடொற்றுமை யுடையதாய்க் குரூரமான குணத்தைக் காட்டி நடக்கும். (ஆமாசயத்தில் நிலைத்திருக்கும்பொழுது கபி, வாதநாடியிற் சேர்ந்து குரூரமாய் நடக்கிறதாம். கபி=சிலேஷ்மம்.) (கங)

கிருமிரோகத்தின் செயற்கையான குணம் ஊர்த்துவஸ்தானத்தை எதிர்த்தேறும்பொழுது அதிக உபத்திரவத்தை உண்டாக்கல்: தொந்தரவு செய்கிற கிருமி, அப்படியே யுள்ளுறுப்பில் இடைவிடாமலுலாவும்பொழுது, நாடியும் ஆறுதலில்லாமனடக்கிறது. அந்த நாடியின் நடை அங்குஷ்டமூலத்தினின்று விளக்கி அருத்தாபத்தமான செயலைச் சிக்ஷைபண்ணுகிறபொழுதும், ஆமத்தின் தொனி பிரத்தியக்ஷமான ஓசையைக் கொடுக்கிற பொழுதும், நாடி கிருமிரோக பர்யாய காரணமென்றறியவேண்டியது. (கச)

## உமலிகதி.

நாடியின் நடை * உமலம், § பிபீலிகை, ! மோரம் என்பன வாகிய இந்தப் பிராணிகளின் நடைக்கு உவமையாகச் சங்கலிதமாகி யிரட்டித்துச் சக்தியோடு நடந்த நாடி மரணத்தைக் குறிக்கிறது. (கரு)

உமலிநடை உவமானத்தில் பிபீலிகை உவமேயமும், பிபீலிகை நடை உவமானத்தில் மோரகதி உவமேயமுமாகக் கலந்து சங்கலிதமாகிற ஆகிஉவமம் உவமேயத்தில் மோரகதி எழுவாயர்த்தமுடையதாகத் தோற்றிப் பயனை யளிக்கிற காரணமான நடை, சுக்கிலதாது சம்பந்தமான இரசசக்தியுடைய நாடியின் நடையை அங்குஷ்டமூலத்திற் றெரிவிக்கிற உமலி உவமானகதி நடக்கிறது. கூறியநாடி: முடிவுக்குரிய இலக்ஷணமுடையதாகுந் தன்மை, மோரகதியிற் பிபீலிகை நடை: பிரமாணத்திற்கு மிஞ்சிய வாத சிலேஷ்மங்களின் வலிமையைக் கொண்டு நடத்தல்.

---

* உமலம் - மரஅட்டை; உமலி - மரஅட்டை. § பிபீலிகை - காரெறும்பு.
! மோரம் - மயில்.

அதைச் சகித்து நடக்கிற பிராணியை மண்ணிற் புதைக்கிறதற்கு ஏமதண்டனை கோலவையடைந்தது. (௧௷)

## மின்ஸாரிகதி.

வாள், கத்தி முதலிய கூரிய ஆயுதங்களா லறுபட்ட காயங்களில் நாடி § மின்ஸாரி கதிக்குவமையாக நடக்கிறது. அந்தக் காயத்திற் கன்றற்பட்ட தலையிரத்தம் சிதறியோடுகிற கெதிக்குத் தக்கபடி, நாடியின் நடை சுமார் பதினெட்டுக் கணமாத்திரை நடக்கிறதாயிருக்கலாம். அந்தக்ஷத்திர அரிட்டத்தினின்றுந் தப்பிக்கொண்ட தமனிநாடி, இருதயஸ்தானத்திலந்தர்கதியாய் நடந்தது. நீர்ப்பிடிப்பான வீக்கம் திரட்சி விரணங்களுக்குச் செய்கிற அவதானமற்ற அபக்குவச் சிகிச்சைகளிலும், நாடி இந்தவிதமாக நடக்கிறது. (§மின்ஸாரி என்பதைக் கொக்குப் பறவை என்றுஞ் சொல்வார்கள்.) பார் அரும்பதவுரையில். ()

மனுடருடைய தேகத்தில், விரணம், காயம் முதலிய வருத்தங்க ளுண்டாகும்பொழுதும், உண்டாகியிருக்கும்பொழுதும், மனந் திகிலடையக்கூடிய காருகமேதுஞ் சம்பவித்தால், அப்பொழுது அந்த இரத்தோட்டத்தின் வேகத்திற்கு மின்ஸாரகெதியை யுவமையாகக் கூறுகின்றது. அப்படித் திகிலடைந்தோடுகிற புண்ணீர் சிதறி முன்கெற்றியை விருத்தியாக்கின்றன. இரத்தாசயத்திற்கு ஆறுதலைக் கொடுத்த, அந்த விரணமுண்டான உறுப்பிற்கு விரோதமாக: உபரம் உதிரத்தை இயக்கிவிடுகிற குணம். இந்த மாறுபாடான செய்கை, நாடியின் உத்தமமான திர்யக்கமனத்தை, அல்லது அதோகமனத்தை, அல்லது ஊர்த்துவ கமனத்தைச் சிக்ஷைபண்ணுகிற கரநாடித்துவாரம் வன்மஸ்தானங்களுக்கும் விடுகிறது. அங்குஷ்டமூலத்தில் நடக்கிற நாடி தேயுவின் தத்துவமான சபரை. (௧அ)

## ஜந்பலபாரறியாயம்.

கருப்பத்திலிருக்கிற சூனு பூரணவளர்ச்சி யுடையதாய்ப் பிரசவம் இன்றைக்கோ நாளைக்கோ என இருக்குந் தருணம்; நாடி பகைவனிலிருந்து மீண்டு வெற்றியடைந்த, ஒரு *சிகரியானது தன் வாலை எவ்விதமாக அனுகூலப்படுத்துகிறதோ அது

போல நடக்கிறதாம். பித்தமும் சிலேஷ்மமு மதிக்கிரமித்துக் கோபங்கொண்ட நடையில், தமனியும் தன்னுடைய நடையை உபலக்ஷணமாகத் தெரிவித்த காரணம் அங்குஷ்டமூலத்தில் ஆரம்பமாகிற நடை இரையைக் காத்திருக்கும் ஒரு பூனையின் யத்தனமான குறிப்பு; நாடிஓட்டம் பூனையின் வாயி லகப்பட்ட ஒரு எலியானது தன் வாலைக் குழைத்துத் துடிப்பதுபோ லாடு கிறதாம். (கக)

மூஷிகபுச்சம்போற் குழைகிற இலக்ஷணம்போய்க் கோவைப் போஷிக்கிறது. ஏகஓரம் கனிகிற மோடியுான குணமும், தூஸரி தரப மியலுகிற கிரமமான செயலும் ப்ரதீதநிலைமையை யுடைய கோவை யிரக்கமுறச் செய்கின்றன. பித்த சிலேஷ்மங்கள் கோபங்கொண்டு குணம் மாறி எடுக்கும்பொழுது இந்தக் குணங் களை யுண்டாக்கி யளிக்கிறது. பின் கோஷ்டகநாடிசக்கரத்தி லும் கூறப்படும். (உ0)

## ஜாலபிகரத லக்ஷணம்.

கௌரிநாடியில் க்ஷத்திரம் பட்ட குணத்தில் நடக்கிற சூக்ஷ்மகதியும், தீரகதியுந் தொய்ந்து நடக்கிறது. அதினுடைய இலக்ஷணமாகிய இரண்டு கூற்றையும், விரலிற் காட்டி நடக்கிற மிருத்துக்குரிய தாது வேறேரினமாக மாற்றிக் கையிலே காண் பிக்க அப்பொழுது தொடர்வது பித்த கபம். இரண்டும் உஷ் ணித் தெழும்பி நடக்கிறது. (உக)

(ஜாலபிகாதம் என்பது ஒரு சாதியை இன்னேரினமாக மாற்றுகிற செயல்.) பார்கோஷ்டக நாடிசக்கரம்.

மேற்கூறிய நாடியில், க்ஷத்திரம் பட்ட குணத்தில் வடிவத் திற் சிறுத்து தடிக்க இயலாத ஸ்திரமான நடையாய் நடக்கிறது. அதை மர்மஸ்தானங்களுக்கு முதற்காரணமாக மாலினி தாங்கிச் செல்கிறது. இரத்தம் மாலினிநாடி மார்க்கமாக முதல் மர்மஸ் தானங்களைச் சேருகிறது. அப்பொழுது கோகிமேடம் பலம் குன்றி அந்த நாடி போஷணை செய்கிற உறுப்புகளுக்கு மந்த

---

ஜங்பலபார என்பது கருப்பத்திலிருக்கும் சிசுவைக் குறித்தது.

2. பூனை. *சிரி. எலி.

விதமான பலனேயே யளிக்கிறது. நடை மத்திமைவிரலில் இரு கூறாகப் பிரிந்து இனமாற்றுகிற வடிவம் ஒரு தராசின் இரண்டு தட்டிலும் வைக்கப்பட்ட சமநிறையைப்போற் றனிவிரலி னிரு டைகளிலுந் தோற்றும். (உஉ)

## வக்கிரகதி.

புத்திமந்தம், மெய்மறதி, தடுமாற்றம், குணபேதம் ஆகிய இந்தக் குணங்களிற் றோற்றுகிற தாதோட்டத்தின் நடை இருதயத்திற்போய் உறுதியாய் நின்று மற்று மித்திரியங்களேயுஞ் சேருகிறது. அந்த நடைகளுக் கொப்பான இலக்ஷணம் வக்கிராகாரமான ரூக்ஷகுணம், மலபந்தமான வித்தியாசங்களும், அந்த மல சலங்கள் தங்கிப் பிரிந்து செல்லும் தானத்திற் பழக்க வழக்கமான செய்கை சந்தேகமான எண்ணத்திலும் நாடி குடில நடையில் ரூக்ஷகுணமாக நடக்கிறது. (உங)

வக்கிரரூபமாகச் சிக்ஷைபண்ணுகிற நடையை யுடைய நாடியின் முன்னிலையிற் றோற்றுகிற தாது ரூக்ஷகுண முடையதாய்த், தோஷசம்பந்தமில்லாத கோவை வளைந்து நெருக்குகிறது. மனோரதமாகப் பயிற்றுகிற மூளையின் கருவிகளேயும், மணிரந்திரங்களேயுந் தன்வயமாக்குகிறது. மலபந்தப் பழக்க வழக்கத்தை யுண்டாக்கிச் சுகத்தைக் கொடுக்கிறபொழுது அந்த வாதிக்கு நடக்கிறது வாதநாடி. (உச)

ஆகம்பிதம் சிக்ஷைபண்ணுகிற பாரஸி, இருதயஸ்தானத்தில் இனமாற்றுகிறது; அங்குஷ்டமூல காரணமாக வன்பஸ்தானங்களிலு மினமாற்றுகிறது. அந்த நாடி நஞ்சூட்டிய சல்லியம் பட்ட காயங்களிலுண்டான நச்சுநீரையோ, அல்லது தோஷங்களின் விஷமகுணத்தா லுண்டான கெட்ட இரத்தத்தையோ தான் போ யடைகிற உறுப்புகளிற் சேர விடுகிறது. அந்த அசுத்த இரத்தத்தி னுண்டான கெட்ட குணம் சமான வாயுவேகமான நாடி. அது: கோவின் பரிசுத்தமான கிரிகையால் தூய்மையாக்கப்பெற்று, தேகத்தின் மேற்பகுதியாகிய கபாலத்தி லுறுப்புக்கு யுகத்தைக் கொடுத்து இயங்கச்செய்கிற நாடிக்கு அங்குஷ்டமூலத்தின் காரணமாகச் சிறந்த இயல்பை யுண்டாக்கிறது. அப்பொழுது சபரைநாடியும், ஸௌதைநாடி

யும் இணங்கி நடந்தால் உண்டாகியிருந்த வருத்தத்தின் கடுமை தணிகிறது. (உரு)

பரிபூர்ணநாடி கர்ப்பிக்கிற பாரலி அங்குஷ்டமூலத்திற் றுண்டித்து நடக்கிறது இரத்தம் விருத்தியாகிறது, கோவை யடைகிறது அங்குஷ்டமூலத்திற் றுண்டித்து நடக்கிற நடை "கோ" சங்கற்பித்துவிட்ட பின்னநடையேயாம். அந்த நடையைப் பெற்ற நாடி: தமோகுணமான பலனை யுண்டாக்கி, இரகசிய உறுப்புகளுக்கு விட்டுச் சந்ததி விருத்திக்குரிய இன்பப்பற்றை நினைப்பூட்டுகிறது. அந்த வேட்கை முடியும்வரையும், அங்குஷ்டமூலத்தில் நடைகொள்ளுகிறது; சிலேஷ்மகுணநாடி. (உசு)

## லாஹுக்புலம்தம்.

சுக்கிலநீரைச் சுரக்கப்பண்ணும் சத்தியுடையதும், ஆண் குறிக்கு அருட்சியைக் கொடுத்தும்; விசைத்து நடக்கிற நாடி: கூர்மவடிவமான நாடிச்சக்கரத்தி லுதித்த நாடிகளி லேதோ ஒன்று. அதை பித்தத்தின் நல்ல குணமான கோபம் தூண்டிவிட எழும்பி நடக்கிறது; தமனியோடு மருவிக் கையிலே பரீக்ஷைபண்ணப்படுகிறது. (உஎ)

(கதியிலக்கணம் முன் கூறப்பட்டிருக்கிறது)

அதற்குத் துணைக்காரணமா யிருக்கிற பித்தத்தின் முதன்மையான கோபம் எதிர்த்து நடைபெறுகிற செயலை யுண்டாக்கிறது. கூர்மவடிவமான தரபத்திலுதித்த உபரகம் சிக்ஷைபண்ணுகிற செயல் சமுசார விருத்தியின் செயலைப்பற்றி; நிமேஷம் சிக்ஷைபண்ணுகிற நாடியின் செயல் ஜெனனவைத்தியத்தைப்பற்றி; இந்தக் குணங்களை யமைத்து அங்குஷ்டமூலத்தில் வெளிப்படுத்துகிற நாடி "லாஹுக்புலம்தம்" என்னும் பெயரை யுடையது. ()

(அந்தநாடி) சமஸ்தானத்திற் பரீக்ஷைபண்ணி யறிகிற நான்காவது விரலிற் பேசுகிற தமனியோடு மருவித் தனக்குரிய இலக்ஷணத்தைக் காட்டுகிறதா யிருந்தாலும், இயல்பு, *இசை, §நுணுக்கம், உற்பத்தி காரணங்களையும், கனமாத்திரை யிலக்

* இசை - கண்டத்தி னொலியி னிலக்ஷணம். §நுணுக்கம் - அக்ஷரத்தின் ஒலி.

கணங்களேயும் கூறிய விதிப்படி அப்பியாசஞ்செய்கிற "தவில" நாடி. அது கருப்பையிலுற்பத்தி காரணமான குணங்களுக்குரிய உண்மைபடிந்த நாடி. (உகூ)

அந்த நாடியின் நடை தோற்றிப் பரிசமாகிற அங்குலியில், லம்பநாடியின் காரணமாக அக்ஷரரூப லக்ஷணங்களையும் பேசுகிறது. (௩௦)

மரணக்குறி.

†பரிமாணம் நியூனரூபமாகிற நாடியின் நடை கூடத்தாலறைவதுபோ லறைதல், நிலையற்றுச் சுழன்று கீழேறக்கிக் கம்பீரமான நடையாய் நடக்குதல், ஒரு இரதத்தின் சக்கரம்போற் சுழலல்; மரணம் எதிர்பார்த்திருக்கிற குறிப்பை விளக்கினது. ()

ஜெயமடையாத நாடி பிரதிரூபமான பிரமாணத்தை யெடுக்கிறது. அந்தப் பரிமாணம் நாளத்தின் மூலமாகக் கோவை நியூனமாக்கி இதள்களை ஒன்றி மலரச்செய்தால், கோ பிரசவிப்பிக்கிற ஹரஸ்வநடை அங்குஷ்டமூலத்திற் கீழேறக்கி நடக்கிறது. அந்த நடையையுடைய நாடி பயிற்றுகிற அமீகநடையும், லம்பநாடி சிக்ஷபண்ணுகிற தூலாகாரமும் அங்குஷ்ட மூலத்தில் நடக்கிறது. (அமீகநடை=பகிர்கதி) (௩௨)

நாடி நடையும், தோஷங்களுக்குரிய இடப்பெயர்ச்சி, காலப்பெயர்ச்சி இவைகளில் மாறி எடுக்கிற குறைரிட்டத்திற்குத் தக்கபடி ஜீவர்களுக்குச் சிருட்டிக்கப்பட்ட விதியும் பலவிதமான ஹீனகுணத்தை யடைகிறது. கண்டநாளம் கலேபர நடையினால் வேயப்பெறுகிறது. அகங்களிகூர்ந்தகற்றுததன்மை தாரதம்மியமான பலனையளிக்கிறது. தண்டனைக்கு வசப்படாத தோஷம் கண்டத்திற் களகள வென்னுஞ் சத்தத்தை யுண்டாக்கினது. (கலேபரம்—கபம்.) (௩௩)

தோஷங்கள் சங்கிரணமாகிற குணங்களுக்கேற்றபடி நாடியின் அனுகூலமான மறுமொழியை அறிதற்கு அந்த நாடி தானே கற்பிக்கிற பலாபலமான அறிவிலுமில்லை; அதற்கு அனுபவமே வேண்டியது. சுழுமுனைநாடி சம்பந்தமாகச் சிக்ஷ

† பரிமாணம், மாத்திரையின் பிரமாணம்.

பண்ணுகிற கண்டநாளம் ஹ்ரஸ்வநடை. அது *கடியப்பெறாத கபத்தினுல் வளையப்பெறுகிறது. (ஙச)

* கடிதல் - குற்றந்தீர்த்தல்.

சுரஸ்நிரிக்குத் தோஷகுணமில்லாத ! தராஜம் இச்சையை யுண்டாக்கி அல்குற்சந்தி மார்க்கமாக மூன்றிலின்கண் பலனைக் கொடுக்கிறது. (ஙரு)

! தராஜம் - கருப்பாசயநாடியிற் பிறந்த (கிளைநரம்பு.)

நோயற்ற கருப்பாசயநிலைமை கொக்கி னுறக்கத்திற்கு உவமையாகக் கூறப்படுகிறது; !! உரிமைபற்றிச் சிவன் நிலைத்தற் குரிய பெருமை பாராட்டப்படத்தக்கது. (ஙசு)

!! உரிமை - கணவன்.

இனி இங்கே, கோஷ்டகநாடி, இம்பிஸாதம், இங்கிபாஜம் முதலாய அகநடை புறநடை வித்தியாசங்களையும், நாடி கதாங்க இலக்கணங்களையும், முதனூலிற் கூறியபடி சக்கர முறைமையாக அவைகளை எடுத்துக் காட்டப்படுகின்றன.

## கோஷ்டகநாடி.

### யூநானி மதானுசார நாடிகோஷ்டகம்.

### கிஜாலி.

### மிருகஸாவகம்.

1 பித்தநாடி பெண்மானின் நடைக்கு உவமையாக நடந்தால் பித்தவிருத்தியான ரோகமுண்டாகும். மான் நடைபோன்ற விசித்திரமான நடையைத் துண்டித்து நடக்கிற நாடியின் குணம் இருதயத்தை யடைந்தால் அங்கே நடைபெறுகிற கிரமமான செயல்களை யொழுங்கீனமாகச் செய்கிறது. அனுக்கத்தை யுண்டாக்கினது. இருதயஸ்தானத்தில் நடைபெறவேண்டிய ஒழுங்குகள் நடைபெறுகிறது. நாடியின் பூர்வாந்தங்கள் கற்பிக்கிற கிஜாலிகதி அங்குஷ்டமூலத்திலும் அதைச் சார்பான வன்மஸ்தானங்களிலும் நடக்கிறது.

| யூநானிமதானுசாரநாடிகோஷ்டகம். | |
|---|---|
| மோஜி. | தூதி. |
| தரங்கம். | கிருமி. |
| 2. அந்த நாடியின் நடை சிலேஷ்மஸ்தானத்திலே யறியப்பட்டால் கையிலே ஒரு தோணியினுட்டத்தைப்போற்றுக்கி நடக்கிறது. பயங்கரகுணமான செயலின் காரணம். நாடியின் பூர்வாந்தங்கள் கர்பிக்கிற நடை மோஜிகதி; அங்குஷ்டமூலத்திலும் மற்றும் மர்மஸ்தானங்களிலும் நடக்கிறது. அப்பொழுது ஆமாசயத்திற்குரிய சக்கரம் சிகைஷபண்ணுகிற குறிப்பும் அச்சமான குணத்தை, அல்லது தேகிக்குப் பலவீன முண்டாகிற குணத்தை. | 3 அந்த நாடி கிடத்தைப்போல் மந்தம் மந்தமாக நடந்தால் கபத்தைச் சகித்துச் செல்கிறது, ஆமதோஷம் சிகைஷபண்ணுகிற செயலின் காரணங்களை விளக்கினது. இப்படி நடக்கிற நாடியின் நடை கர்பிக்கிற நடை தூதிகதி: அங்குட்டமூலத்தி லறியப்படுகிறது. |

## யூநானிமதானுசாரநாடிகோஷ்டகம்,

### மின்ஸாரி,

### ஆரா.

4 அந்தநடை மயங்கித் தேய்கிறதாக: முன் நெற்றியை; ஒரு சூசிமுகவியலின் செயல்போலே தோற்றி: அடைகிறதற்குக் காரணம்; அந்த உபாகங்களுற்பத்தியான சக்கரத்தின் மத்தியில் ஸ்தாபிக்கப்பெற்றிருக்கிற நாடி (சுழுமுனை) இயக்கின அசைவு. இந்தவிதமாகவே விரகதாபமுள்ள தாராவிலுஞ் சேர: அது கனிகிறது; பொசிகிறது. அந்த நாடி பரிசிக்கிற கையிலே சாந்தமும் குழப்பமுமான நடையைக் காட்டுகிறது. அது சகித்துச் செல்கிற மன்வேகமான பசிய வாய்வும், அக்கினியின் அம்சமான அச்சக்குறிப்பும் ஒரு சித்திரமான துவாரத்தை யுண்டாக்கத் தமரிடுகிற செயலின் குறிப்பின் காரணத்தைத் தெரிவித்தன. இந்த நடை கற்பிக்கிற இலக்ஷணம் மின்ஸாரிகதி. அங்குஷ்டமூலத்திலுமதற்குரிய மர்மஸ்தானங்களிலும் குணப்படுகிறது.

## யூனானி மதானுசார நாடிகோஷ்டகம்.

### ஜன பலபார.

### மூம்வேஸகி, பூம்சம்.

அந்த நாடி ஸ்தன உறுப்பில் அல்லது சூசுகத்திலறி
யப்பட்டால் அப்பொழுது அந்த நடை ஒரு உயிரை
வதைக்கிறதற்குப் பூனை எதிர்த்துப் போகிற எழுப்பத்
தின் செயலைப்போல் நடக்கிறது. நாடியின் பூர்வ அந்
5. தங்கள் கற்பிக்கிற நடை (ஜனபலபாரகதி) மக்களடை
கிற அநிஷ்டத்திற்கு, அந்த நடை வேதனையைக் கொடுத்
துச் சம குணமாகிற நடை. அங்குஷ்ட மூலத்தோடு மர்
மஸ்தானங்களிலும் மேதுவுடையது. அப்பொழுது கப
பித்தம் கோபங்கொள்ளுகிற செயலின் குணத்தைக்
காட்டி நடக்கிறது. 1.

அந்த நாடியின் மனோவேகமான வாயுவின் நடை (மின்ஸாரிகதி) பராக்கில் மக்களுக்குச் சூசுக உறுப்பிலறியப்பட்டால் அதில் ஒரு பாகம், மேஷ்ட்ரத் துவாரங்களையும், இருதயத்தையும் சீராக்கிறதற்குத் தாக்கி நடக்கிற செயல். நாடியின் பூர்வ அந்தம் கற்பிக்கிற நடை (ஜனபுல்பாரகதி) புலன்களுக்கு அற்ப வேதனையைக் காட்டிச் சமகுணமாகிற நடை. அங்குஷ்டமூலத்திலும் மர்மஸ்தானங்களிலும் அறியப்படுகிறது. அப்பொழுது சிலேஷ்ம பித்தங்கள் கோபமான குணத்தைக் காட்டிப் பலனையளிக்கின்றன. 2.

## யூனானி மதானுசார நாடிகோஷ்டகம்.

| நும்லி. | மதலி. |
| --- | --- |
| மோர சைம்டி. | ஸலாரி. |
| 6. அந்த நாடியின் நடை §சைம்டி நடைக்கும் மோர கதிக்கும் சமான குணமாக இணைந்து நடந்தால் அந்த நடை ஒன்றுக் கொன்றெதிர் தாக்கி நடக்கிற செய்கை அப்பொழுது நாடியின் பூர்வார்த்தம் சிக்ஷை பண்ணுகிற நடை †நும்லிகதி அங்குஷ்டமூலத்திலும் மற்றும் மர்மஸ்தானங்களிலும் காரணமுடையது. !! ரோகிக்குட் பிராணன் விடுகிற நாடி தோற்றிச் சீக்கிரம் மிருத்துகாரணமான செய்கையையுண்டாக்கினது. (§சைம்டி காரெறும்பு. †நும்லி-சகோரப் பட்சி என்றும் மர அட்டையென்றும் சொல்வார்கள் !! ரோகி - கர்ப் பிணியைக் குறித்தது) | 7. வாயுவின் வேக குணமான அந்த நாடியின் நடை: ஒட்டகத்தின் நடைக்குச் சமானமாகப் பிரிந்து தோற்றுத குணம், மலாதமுகைக்குச் சமமாயிருக்கிற பகோரங்களை: யின மாற்றுக்கிற குணம். அப்பொழுது அந்த மங்கல குணமான செயல்; மனசைக் கனிவிக்கிறதற்கும் ரோஜங்களை யின மாற்றுக்கிறதற்கும்; நடக்கிறது. கோபமிற்றுகிற மோடியான குணம் இருபாற் பகுதிக்கு முடைய இரஜஸ் என்னுந் தாதை விழைவிக்கிற செயலை. க்ஷேமம் பயிற்றுகிற நடை மதலி கதி; மனசைக் கனிவிக்கிற குணம். அந்த நடை அங்குஷ்டமூலத்தோடு ஜீவாதாரமான மர்மஸ்தானங்களிலும், நாடியின் நடை ஒரு சூசிமுகச் செயலின் குணத்தை எப்பொழுது தெரிவிக்கிறதோ அப்பொழுது பலவீனமுண்டாகிறது. |

## யூனானிமதானுசாரநாடிகோஷ்டகம்.

### பதரகீ.

### ஹதோடா.

8 அந்த நாடி ஹதோட குணத்திற்குச் சமானமான நடையை வாரம் வாரம் சாந்தமும் சாந்தத்திற் குலைந்த நடை யுடையதாகவும் மாறி மாறி இணங்கிப் பதினாறும் சிவநாடியைப் பயிற்றினால் நாடியின் பூர்வாந்தங்களுக் குரிய நிதானக்கிரியை இயக்குகிற நடை 1 மதரகீகதி: அது மனசுக்குச் சுகத்தைக் கொடுக்கிறது. அங்குஷ்ட மூலத்திலும் மற்றும் ஜீவாதாரமான மர்மஸ்தானங் களிலு மேதுவுடையது. அப்பொழுது அந்தநடை யதிகமான உஷ்ணகாரணங்களைத் தெரிவித்தால் மேற் கூறிய சூசிமுகத் தமரகச் செயலுக்கொப்பான காரணக் குறியென்றறியப்படுகிறது. ருதுவாகும் பருவத்தை யுடையவளுக்கு யோனிமுகமலர்ச்சிக்கு யத்தனமாகிற காரண குறிப்பு. 1(மதரகீ—மனசுக்குச் சுகத்தைக் கொடுக்கிற, குதிரை என்றும் சொல்வார்கள்.)

## யூநானிமதானுசாரநாடிகோஷ்டகம்.

### ஜூலபிகரதம்.

### லோகாக்கிராந்தசமானம்.

9 அந்த நாடி நடையின் செயல் உபய டகரங்களிலும் உருத்துமறைகிறது. நாடியின் பூர்வாந்தங்களின் நிதானம் கற்பிக்கிற இலக்ஷணம் ∴ ஜூலபிகரதநடை. அது அங்குஷ்ட மூலத்திலும் மற்ற மர்ம ஸ்தானங்களிலும் குணமாகிறது. அந்த நடை திலாசயத்திற்குரிய இரஜஸை இருதயத்திற்குப் புலப்படாமல் அகற்றுகிற குறிப்புடைய செயலின் காரணங்களை எப்ப தெரிவித்ததோ அப்பொழுது இருதயஸ்தானத்தில் நின்று பலனை யுண்டாக்கி யளிக்கிற முதற்பொருள், சஞ்சலம், கிலேசம், விசனம், துயரம், கோவு முதலிய சுபாசுப குணங்களிற் சிலவற்றை யடைதற்குரிய தருணம். இந்த நடை மர்மஸ்தானங்களில் நின்று இரத்தமோடுகிற சந்தி நேத்திரங்களைத் தடைபண்ணினால் சிரசைப் பேதப்படுத்துகிற ஏதுக்களை யுண்டாக்கிறது. சிலசமயம் மிருத்துக்கும் காரணம். (ஜூலபிகரதை—அழுகண்ணித் தேவாங்கென்றும் சொல்வார்கள்.) இது கௌரிநாடி. அக்கிரபாக அந்தங்களைச் சமலக்ஷணமாக்குந் தன்மை கூறுகிறது.

## யூநானிமதானுசாரநாடிகோஷ்டகம்.

### லவஸ்த.

### விஷமடம்கோர தேநா.

அந்தப் பாசமமையப்பெற்ற பகத்துள் சிறுமை யொருமைப்பாடுடையதாயிருந்த 1தேநம் புலர்ச்சியுடைய
10 தாகிறதற்குக் கோரம் தெறிப்புற்று நாள்வீதஞ் சிரழிந்து தாழ்ந்த இனமாய்ப் போகிறது. தேநநாடி உசிதமான குணங்களைப் பொருந்தி உயர்ந்த வருணமாகிறது. கண்டிறக்கப்பட்ட ஏடகக்காயின் நன்மைக்கொப்பான அல்குலுள் அற்ப ஐக்கியமாய்ச் சகித்திருந்த தேநம் சந்ததி உற்பத்திக்கு முதற்காரணமான இச்சானுகூலமான செயல்களை இதம்பண்ணுகிறது; ஜீவனையிரட்சிக்கிறது; ஜனனேந்திரியங்களை வளர்க்கிறது; சுவாசாசயத்திற்கு மற்பவுரிமை யுடையது; அதிகமான சுவாசத்தைச் சகித்து நடந்தால் பலவீனமுடையதாகிறது; ஓதியில் இனமாற்றுகிறது.

1 தேநநாடி—கௌரிநாடி. லவஸ்த—பசுவின் வால் மயிர்போன்ற வடிவுடைய நாடிஆதாரமாயிருக்கிற. லவஸ்தம் என்பதை முயல் என்றும் சொல்வர்.



Lion. S. Sriganeshan

நரம்பின் மார்க்கமாக வுதிரமோடுகிற பிரத்தியேக லக்ஷணம் மனுடருக்குண்டாகிற பிரகிருதி பேதங்களின் குணத்தைத் தெரிவிக்கிறது. தேசகால பேதங்களினாலும், ரோக சம்பந்தமான குணங்களினாலும் மனுடருக்குண்டாகிற சமகுணம் வித்தியாசப்படுகிறது. சுகதேகிகளுக்கு நடக்கிற நாடி அனேக காலங்களுக்கு நிலைத்து நல்ல பலனைக் கொடுக்கிறது. (௬அ)

யூனானி வைத்தியக் கொள்கையின்படி நாடிகள் இயல்பாய் நடக்கிற ஏகரூபமான கதி, துவஜரூபமாகக் கையிலே யறியப்படுகிற ஏதுக்களில்லை. அந்தக் காரணங்களை அங்குஷ்டமூலம் பேசுகிறது.

(ஏக நடை இரட்டை நடையாகத் தோற்றுவது தோஷங்கள் கோளாறடைந்த தன்மை.)

| இம்பிஸாதம். (பஹிர்கதி) | இங்கிபாஜம் (அந்தர்கதி) |
| --- | --- |

முதலாவது--சுத்தமான மங்கல நடையைக் கற்பிக்கிற அங் குஷ்டமூலகாரணத்தை அருட்டி விடுகிறது. "அபின்ன நடை" அந்த நடையையுடைய நாடிக்கு முதற் காரணமாயிருக்கிற கோஜம் குவிந்து மலர்கிறதற்கும் மலர்ந்து குவிகிறதற்கும் துணைக்காரணமாயிருக்கிற செட்டுயிர்ப்பின் காரணத்தைச் சாக் கிரதையாய் முயலுகிறது. பரீக்ஷித்தறிகிற கையில் சோதனங் குலிகளுக்குப் பிரத்தியேக லக்ஷணமான நடை சம வாதத்தில் இணக்கமுடையதாக நடக்கிறது. (ருகூ)

இரண்டாவது--துண்டிக்கிற அமங்கலமான நடையைக் கற் பித்து அங் குஷ்டமூலத்திற் றெரிவிக்கிறது. "பின்ன நடை" சுத்த மங்கல நடையில் நடக்கிற நாடியின் நடையைக் குலைக்கிறதற்குப் பரிச அங்குலிகளில் மாறி மாறிப் பிரதி இலக்ஷணத்தைக் காட்டு கிற செயல் வோலிதக் குறிப்பையுடைய தரபத்திலுதித்த உபா கங்களினொன்று அந்தச் செய்கைக்குக் காரணமாக இணங்கிப் பிரவேசிக்கிறது. (சய)

சுட்டிப் பேசிய நாடி ஞான அறிவு; உ பரக முற்பத்தியாகிப் பிரகாசிக்கிற தரபத்தில்; அறியப்படுவதில்லை. இந்தக் கொள்கை தோஷங்களுமன்று திரிகிற வித்தியாசமான குணங்கள் இருதய ஸ்தானத்திலினமாற்றுகிறது. அதை அங் குஷ்டமூலகாரணம் உறுப்புகளுக்கிசைந்த விகிதப்படி விட்டனுபவிக்கிறது. (சக)

ஸௌதை, சபரை, வல்கம் என்பவை முறையே வாதநாடி, பித்த நாடி, சிலேஷ்ம நாடி என்றும், கூசம் என்பது ருதிரநாடி யென்றும்: பரியாய நாமங்களை யுடையன. அவற்றுள் கூசம் தோஷ விகாரமில்லாத தமனி நாடியோடு தொகுத்துக் கூறப்பட் டது. (சஉ)

தோஷங்கள் இனமாற்றுகிறது நுணுக்கமுண்டாகிறதற்குக் கடிகிற செய்கை. அந்தச் செயலில்லாத அங்குஷ்டமூலகாரண மடக்கி வித்தியாசமான இலக்ஷணங்களைக் காட்டிநடக்கிற அறிவு

சில பேசப்படுகின்றன. ஸௌதை, சபரை, வல்கம், இவை மூன்றும் மூன்று தோஷங்கள்; கூகம் உதிரமோடுகிற நாடியின் கிளையைச் சேர்ந்தது. வேறு சில சாஸ்திரங்கள்: நோய்கொண்ட தேகத்திற் சிகைஷ பண்ணுகிற நிமேடம் நீச குணமடைந்த நியாயத்தினல் தோஷங்கள் மாத்திரை நிதானமில்லாமல் நடக்கிறதென்றும், சரீரத்தின் சுபாவ குணம் மாறி வித்தியாசமான குணத்தை யடைகிற தருணத்தி லென்றும், கடவுளாற் சிருட்டிக்கப் பட்ட தேக பேத நிலைமைக்குத் தக்கபடி யென்றும் கூறுகின்றன. (சங)

## நாடிகளின் தத்துவம்.

ஸௌதை, பிருதுவி தத்துவமுடையது:
வாத தோஷம் இனமாற்றுகிறது.
சபரை, தேயு தத்துவமுடையது: பித்த தோஷம் இனமாற்றுகிறது.
வல்கம், அப்பு தத்துவமுடையது: கபதோஷம் இனமாற்றுகிறது.
கூகம், வாயு தத்துவமுடையது: உதிரம் இனமாற்றுகிறது.

## பிரத்தியேககுணமான தோஷம் விகாரப்பட்டு இரண்டிரண்டாய்த் தொந்திக்கிற தன்மை.

தோஷங்கள் சேர்ந்து நடக்கிற நியாயங்களில், பிருதுவி தத்துவ முடைய ஸௌதை, ரூக்ஷ குணமும் சீதள குணமும் பொருந்தி இயல்பான நிலையில் நடக்கிறது. தேயு தத்துவமுடைய சபரை, பித்தாக்கினியின் சொரூபமானது: அது ரூக்ஷ குணமும் உஷ்ண குண முமுடையதாய் நடக்கிறது. அப்பு தத்துவமுடைய வல்கம், சலரூபமானது: அது ஸ்நிக்த குணமும் சீதள குணமு முடையதாய் நடக்கிறது. வாயு தத்துவ முடைய கூகம் சமானமான ஸ்நிக்த குணமும் உஷ்ண குணமு முடையதாய் வனப்புக்குரிய தேஸ காரணமாய் நடக்கிறது. (சச)

இந்த நாடிகளுள், வல்கம் தொந்த நடையில் ஸினிக்த குணமும் சீதள சுபாவமுமுடையதா யணிவிரலிற் சூழ்ச்சியுற்று நடக்கிறது. மனுஷருக்கு நித்தியமும் ஒழுங்காய் நடைபெறுகிற இந்தக் குணங்களில் செய்றகை குணமான தோஷம் இடையிற் சம்பவிக்கும் பொழுது ருதிரநாடி முதன்மையான அதிகாரமுடையதாகிறது. (சரு)

## இம்பிஸாத பேதம்.

| தவீலம். (தீர்க்காகாரம்.) | | |
|---|---|---|
| தவீலம். தீர்க்க நடை. | கஸீரம். ஹ்ரஸ்வநடை. | சமானநடை. |
| எந்த நாடியுந் தன்னடையிலிருந்து ஒரு மாத்திரைக்கு மேலதிகமாய் நடந்தால் அதற்குத் தீர்க்க நடையென்று பெயர். அந்த நடையில் உஷ்ணமழாவி நடந்தால் அதற்கு வாலிகதி யென்று பெயர். | நான்காவது விரலில் மாத்திரை குறைந்து நடக்கும்பொழுது வாத பித்த நாடிகள் தங்களுக்குரிய இயல்பான நடையிற் குறைந்தும சுபநாடி தனக்குரிய நடையில் தீர்க்கமாயும் நடந்தால் அதற்கு ஹ்ரஸ்வ நடையென்று பெயர். | எந்த நாடியும் தமனியின் நடைக்குக் குறையாமல் நடக்கவேணும். பித்த நாடியின் நடை லேசாகக் குறைந்திருந்தால் ருதிர நாடி அந்தக் குறைந்த நடையை உஷ்ணகாலத்திற் றன்னடையுடன் சேர்த்து நடக்கிறது. |

BHARANE PHARMACY
456, HOSPITAL ROAD
JAFFNA
DIAL. 7386

## இம்பிஸாத பேதம்.

| அரீஜம். (ஸ்தூலாகாரம்.) | | |
|---|---|---|
| ஸ்தூலம். | கிருசம். | சமம். |
| வாத நாடி தனக்குரிய இயல்பான நடையிற் கூடியும் சிலேஷ்மநாடியும் தமனியும் தங்களுக்குரிய நடையில் ஒன்று அல்லது இரண்டு மாத்திரைகள் குறைய நடந்தால் அதற்கு தூல நடை யென்றுபெயர். | கப நாடி விளக்கி னொளிபோற் பிரகாசமாயும், வாதமும் பித்தமும் கோபங்கொண்டு நடந்தாலும், அல்லது மந்தமாய் ரூக்ஷ குணமாய் நடந்தாலும் அந்த நடைக்கு கிருச நடையென்று பெயர். | எந்த நாடியு மொன்றுட னொன்று கோபங் கொள்ளாமலும் தன்னிலே தவறி நடவாமலு மிருந்தால் அதற்குச்சமநடையென்று பெயர். |

## இம்பிஸாத பேதம்.

| உமகம். (பஹிர்கதியாகாரம்.) | | |
|---|---|---|
| பகிர்கதி. | அந்தர்கதி. | சமானகதி. |
| ஒவ்வொரு நாடியும் முழுப் பலத்துடன் துரிதமாகவும் ஒன்றுடனென்று சேராமலும் பிரகாச மாயும் நடந்தால் அதற்கு பஹிர்கதி என்று பெயர். | ஒவ்வொரு நாடியு மொன்றுடனென்று வெம்பிப் பெலன் குறைந்தும்; தைரியமாய் நடக்க வியலாமற் கஷ்டத்தை யடைய அப்பொழுது கப நாடி முழுப் பெலத்துடன் நடந்தால் அதற்கு அந்தர் கதி யென்று பெயர் | ஒவ்வொரு நாடியும் தன்னடையிலிருந்து அற்பம் கூடியும் குறைந்தும் ஒன்றுடனென்று தொந்தப்படாமல் இணங்கி நடந்தாலும், அற்ப உஷ்ணமாய் நடந்தாலும் அதற்கு சம நடை யென்று பெயர். |

## அன்ய சக்கரம்.

| முதலாவது— நாடியின் பலாபலம். | | |
|---|---|---|
| இருதய வியக்கம். | அங்குஷ்ட மூலநடை. | |
| ஸபலம் | ஸீக்கிர சாரி | வாயுவின்வேகமான நாடியின் நடை சேர்க்கையிற் பகைத்து இணங்கி நடக்கிற குணம் மாமிசதாதின் குணத்தை மாற்றிச் சீக்கிரமான நடையுடையதா யசைந்து மறைகிறது. சுர ரோகத்தைத் தெரியப் படுத்துகிறது, தெரியாம லொழிக்கிறது. ஸம்வாரத்திற்குரிய இதழ் மூட குணத்தை யனுசரிக்கும் பொழுது இருதயத்தில் பிரபலமான குணமறியப்படுகிறது. |
| துர்ப் பலம். | மந்தஸாரி | சாந்தமாயும் கெதியாயும் பகைத்து நடந்த நாடி கையிலே யிணங்கி நடக்கிற செயலைக் காட்டினாலும், நிமேடக் கிரிகை சீக்கிரமான முயற்சியுடையதானால், அப்பொழுது இருதயம் துர்ப்பலமான அறிவைப் பெறுகிறது; அங்குஷ்ட மூலம் மந்தமான நடையை நடக்கிறது. |

அன்ய சக்கரம்.

| | | | |
|---|---|---|---|
| ஷ முதலாவது ,, பலாபலம். | இருதய. மோததிலம. (சுகபலம். | அங்குஷ்டமூ— சமதை. | அந்த காடியின் செயல் இருதயத்தைப்பற்றிய வுணர்ச்சி பலவிதமான தீவிர வேதனையில்லாம லிணங்கியிருந்தாலும், திரகதிமுற்றுமுழுதாய்ப் பிரமாணத்தை மிஞ்சி நடக்கிற இலக்ஷணத்தை எடாமல் அதில் அற்ப பகுதி உடன்பாட்டிலக்கணத்தைப் பொருந்தியிருந்தாலும் அந்தச் சிறிய பாகம் பிரத்தியக்ஷமாக்கின குணம் சமபலன். |
| இரண்டாவது=நாடியின்நடையின்காரணம் தூக்கமோ அல்லது கெதியோ. | ஸரி. (ஊறுகிற | சமதை. | அந்தநாடியின் நடை கையிலே தாக்கிக் கெதியாய் நடக்கிற செயல், தேகத்தி லுஷ்ண மதிகரித்து விசேஷமான குணங்களை வெளிகாட்டுகிறது. |
| | வதி. (சாஸ்திர முறைப் படி லோ லிதமாகிற) | மந்தசாரி. | கையிற் றுக்கி நடக்கிற செயல் அடக்கப்படாத சாந்தகுணமுடையதாளுலும், அந்தத் தேகத்தின் குணம் மாறி சருதுகாலத்தில் அதிக பகிரங்கமான குணங்களை யுண்டாக்கிற நியாயத்தை எடுக்கிறது. |

## அன்ப சக்கரம்.

| | | | |
|---|---|---|---|
| ஷை இரண்டாவது தூக்கமோ கெதியோ. | இருதய— சுகநடை. | அங்குஷ்ட மூல. ஸீக்ரசாரி. | அந்த நாடி துரிதகதிக்கும் மந்தகதிக்கும் பொதுத்தன்மையாக அசைகிற குணம், பின்பற்றின கையிற் பேசுகிறது. அந்தச் சாருதுகாலத்தில் மேற்கொண்ட உஷ்ணம் சமகுணமான வினையில் நடையை வெளிப்படுத்தினதாக. |
| மூன்றாவது. ஆகிருதி. (ரூபம்) | மிருது. | நரம. | இயற்கையாய்ப் பிறந்த சூடு அந்த நாடியின் நுண்ணிய துவாரத்தில் வித்தியாசமான குணங்களை யுண்டாக்கிறது. நிமேடம் பயிற்றுகிற குறுநடை அங்குஷ்டமூலத்தில் ஸ்கிக்தகுணமாக நடக்கிறது. அநு மற்றும் மர்மஸ்தானங்களிலும் காரணமாகிறது. இது பாரலிகதி அங்குஷ்டமூலத்திற் றுண்டிக்கிற காரணம். நாடி இந்திரகோபமென்னும் பூச்சியைப்போலும், மானின் முலை மடியைப்போலும், மந்தாரைப் புஷ்பத்தைப்போலும் தோற்றுவது, மிருது, நரமசொரூபம். |

## அன்ய சக்கரம்.

### மூன்றாவது = ஆகிருதி (ரூபம்)

| | | |
|---|---|---|
| கடினம். | சகத்கம். | அந்த காடியின் நுண்ணிய துவாரங்களி லுஷ்ணஞ் சம்பவியாதிருந்தால் அது ஞானேந்திரியங்களை யடைகிறது. இமேடம் புரிகிற பாரஸிகதியி னிலக்ஷணம் வேற்றுமைப்பட்டு அங்குஷ்டமூலத்திற் பின்ன நடையாக நடக்கிறது. காடி சந்தனக் கட்டை, எலும்பு, பால் இவைகளைப்போற் றோற்றுவது கடின சொரூபம். |
| சமம்.<br>சுகானுபவம். | சுகானுபவம்.<br>சமம். | நடையைச் சிந்தவிட உரிய குணத்தை மாற்றி மத்திமகுணமான செயலை யெடுப்பது அங்குஷ்டமூலத்திற் பயன்படுவ தரிது: அது கர்க்கசமானது: அதிக கடூரமானதுமல்ல, அந்த நடை அதிகமாய் வளைந்தது: அதனால் ஞானேந்திரியங்கள் சுகத்தை யனுபவிக்கின்றன. காடி பஞ்சுபோல் மெதுமையாயும், தாமரைப் புஷ்பம்போல் மிருதுவாயும், பட்டுநூலைப்போற் றூய்மையாயும் தோற்றுவது சமசொரூபம். |

## அன்ய சக்கரம்.

| நான்காவது = பிரமாணம். | | |
|---|---|---|
| இருதய இயக்கம்.<br>இரத்தம் பூரணமான. | அங்குஷ்ட மூலம், சந்திகள் நடை—<br>அளவின் கூறு பிரிந்துசெல்கிற | அந்த நாடி மூடமாயும் சீக்கிரமாயும் அசைகிறபொழுது, அதிற் சகித்துநடக்கிற இரத்தம் சந்திகளிற் றங்கிப் போஷிக்கிறது. ஞானேந்திரியங்கள் திருப்தியடைகிறது. ஒருபோது ஜீவநாடி பூரணமான அறிவை வளர்க்கிறதாயுமிருக்கலாம். |
| ஸ்வல்ப உதிரம். | அங்குஷ்ட மூலம், திரவமாக்கிற-<br>சந்திகள், மயக்க மற்ற— | அந்த நாடியி லோடுகிற வுதிரம் துளிதுளியா யூறுகிற செயல் தோற்றுகிற காரணம் மந்தமான குணத்தைப் பெற்று உயர்ந்த வலிமையுடைய மனசைக் கனிவிக்கிறதற்கும், நிமேடம் மறைத்திருக்கிற உதிரத்தையும், பொருத்துக்களில் நிலைத்திருக்கிற உதிரத்தையும் இனமாற்றுக்கிவிடுகிறதற்கும். |
| சமம். | சுகநடை. | இரத்தம் அருகி அருகித் துவாரத்தில் அசும்பி நடக்கிற காரணம்: நாடி இணைகிறதற்குமல்ல, போஷிக்கிற நியாயத்திற்காகவுமல்ல, சமபிரமாணமாக மர்பஸ்தானம் அங்கீகரிக்கிற காரணம். நரம்பின் பொருத்திடங்களிற்றங்கிய அற்ப பிரமாணமான இரத்தத்தின் குணம் மாறிப் போகிறதற்குத் தகுந்த பலனை உண்டாக்கிவிடுகிறது. |

## அன்ய சக்கரம்.

| ஐந்தாவது = ஸ்பர்ஸம். | | |
|---|---|---|
| நாடி நடை தெறித்து நடக்கிற சமயம் அந்த நாடியின் ஸ்பர்சம் உஷ்ணமுடையதாயிருந்தால், ப்ரதிதமான குணங்களையுடைய கோ அந்த இரத்தத்தை உஷ்ணகாலத்தில் வித்தியாசப்படுத்திச் சூத்தை யுண்டாக்கிறது. அப்பொழுது நடக்கிறது சூடதிகரிக்கிற குணநாடியின் அறிவு. | அங்குஷ்ட மூலநடை.<br>காம. | இருதய வியக்கம்.<br>உஷ்ண. |
| தாதோட்டம் தன்னடையைச் சிக்துகிற தருணம் நாடி ஸ்பர்சம் சீதள குணமாக மாறி நடந்தால், ப்ரதிதமான குணங்களை யுடையகோ மேற்கூறிய சூடான இரத்தத்தை வேறு குணமாக்கி அல்லது சீத குணமாகத் தானே மாற்றி, மனசுக்குரிய தீவிர வேதனையான நாடி யறிவைச் சாருதுகாலத்திற் றெரியப் படுத்துகிறது. | ஸாதம்.<br>நெகிழ்ந்து செல்லுதல். | வீதம்.<br>குளிர். |
| நடை சிதறி நடக்கிறபொழுது அந்த நாடி மாற்றி எடுக்கிற சீதோஷ்ண குணங்கள் சம லக்ஷண முடையவைகளாயிருந்தால், ப்ரதிதமான குணங்கள் செறிந்த கோவின் கிமேடம் கற்பிக்கிற சமநடை அங்குஷ்டமூலத்தில் நடக்கிறது. | அங்குஷ்ட மூலநடை.<br>சுகபலம். | இருதய வியக்கம்.<br>சம. |

## அன்ய சக்கரம்.

### ஆறுவது — சாத்தியாசாத்தியம்.

| | | |
|---|---|---|
| அந்த நாடியின் சென்னி ஆடுகிற இரத்தாதார உறுப்பில் யாதேனுந் துவாரம்கண்டு அல்லது அக்கவாடம்விரிந்து அற்பமாயொன்றுகிற தேகத்தின் குணம் முப்பத்தைந்து நாட்கள் சுகமுடையது. ஞானேந்திரியங்களி னுணர்ச்சிக்குத் தடைபற்றியிருக்கிற தோஷம் முறைபிறழச் சாத்தியகுணமாகிறது. இதற்கு அக்ஷரரூபகம், நாடி ஒரு ரேகாமாத்திரையில் "கம்" என்று, அல்லது "டம" என்று ஒலித்தல். | அங்குஷ்ட சூடுடைய. | இருதய இரத்தோட்ட ஆரம்பம் கெதி. |
| அற்பமாயொன்றி விரிகிறகவாடம் அசைவற்றிருந்தாலும், அல்லது இயல்பிலேயுள்ள துவாரங்களில் மாறி கடைபெறுலும், நாற்பதாம நாளில் தாதுக்கள் கிரமந்தப்பி நடக்கிற பயனுடையதாகின்றன. ஞானேந்திரியங்களைத் தடைசெய்கிற பாசத்தின்செயல் மூடி அசாத்தியகுணமாகிறது. இதற்கு அக்ஷரரூபம் ஒரு விநாடியில் "ட்ட" என்று முப்பத்தைந்துமுறை பேசினலும "ட" என்பது நான்கக்ஷரத்தில் வடமொழிவைத்தியநூலிற் கூறிய விதிப்படி எந்த எழுத்துடனவது ஒலித்தாலும் அசாத்தியம். | அங்குஷ்ட மூலநடை. நாதம் பதுநடை கிறது. | இருதய வியக்கம். விபரீதமான. |
| ஒழுங்கீனமாகிற அந்தத்தாது அனேகநாட்களுக்கு கிலேத்து நடவாமலற்ப தினங்களுக்குமாத்திரம் கிரமந் தப்பி நடக்கிற குணத்தைக் காட்டி நடந்தால், நாடியின் நடையை யறிதற்கு முதற்காரணமாயுள்ள இரத்தோட்ட ஆரம்பம் கெதியா யசைகிறது. இரத்தாதாரமென்னும் இயந்திரத்தில் இடையிற் சம்பவித்த மாறுகண் திருந்தி ஒற்றுமையுடையதாகிறது. கிமேடம் யாப்பியமான அறிவைக் கற்பிக்கிறது. | அங்குஷ்ட மூலநடை. துண்டியாமல் நடக்கிறது. | இருதய வியக்கம். சமகுணம். |

## அன்ய சக்கரம்.

ஏழாவது — ஸ்திதி.

| | | |
|---|---|---|
| பரிசிக்கிற கையிலே வாயுவேகயான அந்த நாடி கிரமாக்கிரம சங்கலிதமாகச் சிக்ஷைபண்ணுகிற நிலைமை கெதியாய் நீசகுணமாகி, இரத்தசுத்தியறையின் தற்காப்பாயுள்ள இதனை யொழுங்கீனமாகச் செய்கிறது. அப்பொழுது ஞானேந்திரியம் பலவீனமாகிறது. | அங்குஷ்ட துரிதமான. | இருதய பிரமாணத்தைக் கடந்த. |
| சம்குசிதமாகிற மாத்திரையைச் சரியான ஸ்திதியில் புரிகிறதற்கு, இருதயகமலம் விரிந்துகொடுக்கும்பொழுது, கிரமாக்கிரமமான சங்கலிதநடையை யுண்டாக்கின அந்த நாடி; வழுக்கினல்; அல்லது அற்ப தூரம் நடந்து நின்றுவிட்டால், கிமேஷம் கற்பிக்கிற தைரியமான நடை: அங்குஷ்டமூலத்திலும் நடக்கிறது. | அங்குஷ்டமூலநடை. தத்துவமான. | இருதய வியக்கம். தைரியமான. |
| அந்த நாடியின் சமநிலை கர்ன்னபரம்பரையா யியற்றிவந்த பயிற்சியையும் விளக்குகிறது. கையிலே யிணங்கி வெறுத்த சங்கலிதமான நடை ஸ்திரி புருஷ சங்கம ஐக்கியத்தைப் பிரதிபலனுகவு மடைகிறது. கிமேஷம் பயிலுகிற சமஸ்திதி பாலியர் அறிவை யடைந்திருக்கிறது. | துண்டிக்கிற. இருதயத்திற்குக் களிப்பைக் கொடுக்கிற. | சமகுணமான. |

## ப்ரஸ்தார சக்கரம்.

அக்ஷரவடிவமானது. இது மூதநூலில்
நாகர எழுத்தில் விதித்திருக்கிறது.

நாடிகள் பிரமாணத்தைக் கடந்து நடக்கிற நடை சில குணங்களில் உருபழிந்து சக்கரத்தில் அவலக்ஷணமுண்டாக அதிலமையப்பெற்றுள்ள அக்ஷரம் வித்தியாசமான இலக்ஷணங் களைக் காண்பிக்கிற பயனைக் கொடுக்கிறது.

அந்த நாடிகள் துவிகுணமாக நடக்கும்பொழுது இரண் டெழுத்தின் வடிவமாகவும், திரிகுணமாக நடக்கும்பொழுது மூன்றெழுத்தின் வடிவமாகவும் * ரஞ்சனகதி யிலக்கணங்களை யமைத்துக் காட்டுகின்றன. துவிகுணத்தில்: தீர்க்க, ஹ்ரஸ்வ, சமநடைகளை அக்ஷரமுறைப்படி தெளிவா யடித்துப் பேசும். திரிகுணத்தில்: விஸ்திருத, ஹ்ரஸ்வ, அந்தர்கத, பஹிர்கத, தூலாகார, கிருச, சமநடைகளை அக்ஷர முறைப்படி அடித்து ஒலித்து நடக்கும்பொழுது அந்த இலக்ஷணம் தெளிவாகத் தோற்றுவது அருமை. அப்பொழுது அது துர்ப்பலமானதா யிருக்கின்றது. ஒலி வண்டினிசையைப்போலும், மூகிலினிரைச் சலைப்போலும் எழுத்தில்லா ஒலிபோலு முணரப்படும். ஆனால் சில ரோகங்களில், திரிகுணத்திலும் இரண்டெழுத்துக்களில் ஸ்பர்ச கதியிலைப்பொருந்தி நடந்தால் அந்த நாடியின் ரஞ்சனத் தொனி தெளிவாயறியலாம்.

## ப்ரஸ்தார சக்கரவிரிவுரை.

இதில் நாகர அக்ஷரங்கள் இருக்கவேண்டிய இடங்க ளுக்கு, தமிழ் எழுத்திற் சிலவற்றையும், வடமொழி தென் மொழி இரண்டற்கும் பொதுவாயுள்ள சில எழுத்துக்களையும், குறிப்பாகக் காட்டப்பட்டிருக்கிறது; சமஸ்கிருதத்தில் (அம்) என்று உச்சரிப்பதாகிய எழுத்து இல்லாதபடியால் அந்த இடங் களை விட்டு ( ) இந்த அடையாள மிடப்பட்டிருக்கிறது.

---

* ரஞ்சன, அடித்தொலிக்கிற.

## முதலாவது — துவிகுணம்.

துவிகுணத்தில். வாதநாடி நாகர எழுத்தில் மூன்றும் "த" என்னும் அக்ஷரவடிவமாக அடித்து, முப்பத்திரண்டாம் "ஸ" என்னும் அக்ஷர வடிவமாக ஒலிக்கும்பொழுது தீர்க்கநடை. பரிச இலக்ஷணம் "த", கதியிலக்ஷணம் "ஸ". 1.

ஷெ குணத்தில், பித்தநாடி சுட்டிய மூன்றும் "த" என்னும் அக்ஷர வடிவமாக அடித்து, முதலாம் "க" என்னும் அக்ஷர வடிவமாக ஒலிக்கும் பொழுது தீர்க்க நடை. பரிச இலக்ஷணம் த, கதியிலக்ஷணம் க. 2.

சுட்டிப் பேசிய குணத்தில், சிலேக்ஷ்ம நாடி சுட்டிய "த" வடிவமாக அடித்து, நாகர எழுத்தில் "ய" என்னுமக்ஷரவடிவ மாக ஒலிக்கும் பொழுது தீர்க்க நடை. பரிச இலக்ஷணம் த, கதியிலக்ஷணம் ய. 3.

ஸௌதை, நாகர எழுத்திற்கு ஹ என்னும் அக்ஷர வடிவ மாக அடித்து, முப்பத்திரண்டாம் ஸ என்னுமக்ஷர வடிவமாகப் பேசும் பொழுது ஹ்ரஸ்வ நடை. பரிசகதியிலக்ஷணங்கள் முறைப் படியே இந்த எழுத்துக்கள். 4.

பித்தநாடி, ஹ என்னும் அக்ஷரவடிவமாக அடித்து, முதலாம் க என்னும் அக்ஷர வடிவமாகத் தணந்து நடக்கும் பொழுது ஹ்ரஸ்வ நடை. பரிசம் ஹ, கதியிலக்ஷணம் க. 5.

வல்கம், ஹ என்பதைப்போலடித்து, ய என்பதைப் போல் ஒலிக்கும் பொழுது, ஹ்ரஸ்வநடை. பரிச இலக்ஷணம் ஹ, கதி யிலக்ஷணம் ய. 6.

வாதநாடி, யகரம்போலடித்து, ஸ என்பதைப்போ லொலிக் கும் பொழுது சம நடை. பரிசம் ய, கதி ஸ. 7.

சபரை, யகராகாரமாகத் தடித்து, முதலாம் ககராகார மாகத் தணந்து நடக்கும் பொழுது சமநடை. பரிசம் ய, கதி க. 8. (தடித்தல்-பிரகாசித்தல்)

வல்கம், யகரவடிவமாக அடித்து, யகரவடிவமாக ஒலித்து நடக்கும் பொழுது சமநடை. பரிசகதி யிலக்ஷணங்கள் ய. 9,

ஸௌதை, மு தற் குறித்துப்பேசிய எழுத்து, த என்பதைப் போலடித்து, வகரத்தைப் போலொலிக்கும் பொழுது தீர்க்ககதி. பரிசம் த, நடையிலக்ஷணம் வ. 10.

சபரை, த என்பதைப் போலடித்து, (வடமொழி அக்ஷரம்) ( )என்பதைப்போல் ஒலித்து நடக்கும் பொழுது தீர்க்க நடை. பரிசம் த, கதி ( ) 11.

வல்கம், "த" என்பதைப்போலும், "ய" என்பதைப்போலும் தடித்து, தணந்து நடக்கும் பொழுது தீர்க்ககதி. "த"கரம் பரிச இலக்ஷணம், யகரம் கதியிலக்ஷணம். 12.

ஸௌதை, ஹ என்பதைப்போலடித்து, வ என்பதைப் போலொலிக்கும் பொழுது, ஹ்ரஸ்வநடை. ஹ பரிச இலக்ஷணம் வ கதியிலக்ஷணம். 13.

சபரை, ஹ என்பதைப்போலடித்து,(கிரந்தக்ஷரம்) ( ) என்பதைப்போலொலிக்கும் பொழுது ஹ்ரஸ்வநடை. பரிச இலக்ஷணம் ஹ, கதியிலக்ஷணம் ( )

வல்கம், ஹ என்பதைப்போலடித்து, ய என்பதைப்போலொலிக்கும் பொழுது ஹ்ரஸ்வநடை. பரிசம் ஹ, கதி ய. 15.

வாதநாடி, பரிசக் குறிப்பில் ய கர வடிவத்தையும், நடைக் குறிப்பில் வ கரவடிவத்தையும் காட்டி, இந்த எழுத்துக்களில் முறைப்படி அடித்தொலிக்கும்பொழுது அந்த நடை சமநடை.

பித்தநாடி, பரிசக் குறிப்பில் ய என்பதைப்போலும், நடைக் குறிப்பில் (சமஸ்கிருத எழுத்து) ( ) என்பதைப் போலும் முறையே அடித்து ஒலிக்கும் பொழுது சமநடை. 17.

கபநாடி, பரிசக்குறிப்பினியல்புக்கும், நடையினியல்பிலும், ய என்பதைப் போற் றேற்றி நடக்கும் பொழுது சமநடை. 18.

ஸௌதை, பரிசக் குறிப்பில் ஸ என்பதைப் போலும், நடையின் குறிப்பில் வ என்பதைப்போலும் முறையே அடித்தொலிக்கும் பொழுது தீர்க்கநடை. 19.

சபரை, பரிசக் குறிப்பில் ஸ என்பதைப் போலும், நடையின் குறிப்பில் நாகர எழுத்திற்கு ( ) என்பதைப் போலும் அடித்தொலிக்கும் பொழுது தீர்க்க நடை. 20.

வல்கம், பரிசக் குறிப்பில் ஸ என்பதைப் போலும், நடையின் குறிப்பில் ய என்பதைப் போலும் முறையே அடித்து ஒலிக்கும் போழ்து தீர்க்க நடை.

ஸௌதை, பரிசக் குறிப்பில், க என்பதைப் போலும், நடையின் குறிப்பில் வ என்பதைப் போலும் முறையே அடித்தொலிக்கும் போழ்து ஹ்ரஸ்வ நடை. 22.

சபரை, பரிசக் குறிப்பில் க என்பதைப் போலும், நடையின் குறிப்பில் (     ) என்பதைப் போலும் அடித்து ஒலிக்கும் பொழுது ஹரஸ்வநடை. 23.

வல்கம், பரிசக் குறிப்பில் க என்பதைப் போலும், நடையின் குறிப்பில் ய என்பதைப் போலும் அடித்தொலிக்கும் பொழுது ஹ்ரஸ்வ நடை. 24.

ஸௌதைநாடியின், ஸ்பர்சம் ய என்னும் அக்ஷர வடிவமாகவும் நடை வ என்னும் அக்ஷாரகாரமாகவும் முறைப்படி எழுத்துகளில் குலக்கமான குணத்தைக் காட்டும் பொழுது சமநடை.

சபரையின், ஸ்பர்ஸம் ய போலும், நடை, குறிக்கப்படாத எழுத்து (     ) ஒலித்துக் காட்டும் போழ்து சமநடை. 26.

வல்கநாடியின், ஸ்பர்சமும், நடையும் ய என்னும் அக்ஷரவடிவமாக, குலக்கமான குணத்தையும் காட்டினலந்த நடையைச் சமநடையென்று சொல்லப்படும். 27.

## திரிகுணம்.

திரிகுணத்திலும், துவிகுணத்திற்குக் கூறிய முறைப்படி பொது எழுத்துக்களையும், சிறப்பெழுத்துக்களையும் குறிப்பாகக் காட்டப்படும்.

வாதநாடி நாகர எழுத்தில், மூன்றும் "த" என்னும் அக்ஷர வடிவமாகத் தோற்றி, முப்பத்திரண்டாம் "ஸ" என்னும் அக்ஷர வடிவமாக ஒலித்து; "வ" என்னும் அக்ஷர வடிவமாக ஸ்திதியை எடுக்கிறது. இதில்: பரிச இலக்ஷணம் தகரம் சமநடை: கதியிலக்ஷணம் ஸகாரம் தூலநடை: ஸ்திதியிலக்ஷணம் வகரம் பகிர்கத நடை. 1

௦குலக்கம என்பது-மினிற்றுக்கடிக்கிற சத்தம்,

பித்த நாடி தன் நடையை த என்னும் அக்ஷரவடிவமாகப் பிறப்பித்து, ஸ என்னும் அக்ஷர வடிவமாக ஒலித்து, ( ) என்னும் அக்ஷர வடிவமாக மறைக்கிறது. பரிசஇலக்ஷணம் தகாரத்திற் சமநடை; கதியிலக்ஷணம் ஸகாரத்திற் றூலநடை; ஸ்திதியிலக்ஷணம் ( ) என்பதில் அந்தர்கத நடை. 2.

கபநாடி தன்னடையை, த என்னும் அக்ஷர வடிவமாகப் பிறப்பித்து, ஸ என்னும் அக்ஷர வடிவமாக ஒலித்து, ய என்னும் அக்ஷர வடிவமாக ஸ்திதியை எடுக்கிறது. பரிச இலக்ஷணம் தகாரத்தில் சமநடை: கதியிலக்ஷணம் ஸகாரத்திற் றூலநடை; ஸ்திதியிலக்ஷணம் யகாரத்தில் விஸ்திருத நடை. 3.

ஸௌதை, த என்பதைப்போற் றோற்றி, க என்பதைப்போலொலித்து, வ என்பதைப் போல் நிலைமையை யெடுக்கிறது. பரிச இலக்ஷணம் தகாரத்தில் சமநடை; கதியிலக்ஷணம் ககாரத்திற் கிருசநடை; ஸ்திதியிலக்ஷணம் வகாரத்தில் பகிர்கத நடை. 4.

சபரை, த, க, ( ) என்னும் அக்ஷரங்கள் வடிவம் போல் முறைப்படி பிறப்பித்து ஒலித்து மறைகிறது. பரிசலக்ஷணம் தகாரத்திற் சமநடை; கதி—ககாரத்திற்கிருசநடை; ஸ்திதி ( ) என்பதில் அந்தர்கத நடை. 5.

வல்கம், த, க, ய என்னும் அக்ஷரங்கள் வடிவம் போல் முறைப்படி பிறப்பித்து ஒலித்து ஸ்திதியை எடுக்கிறது. பரிசம் தகாரத்தில் சமகுணம்; கதிககாரத்திற் கிருச குணம்; ஸ்திதி யகாரத்தில் விஸ்திருத நடை. 6.

ஸௌதை, த, ய, வ என்பவைகளைப் போல் கூறிய முறைப்படி பிறப்பித்து ஒலித்து நிலைமையை எடுக்கிறது. பரிசம்-தகாரத்தில் சமநடை; கதி—யகாரத்தில் விஸ்திருத நடை; ஸ்திதி வகாரத்தில் அபின்ன நடை. 7.

சபரை, த, ய, ( ) என்பவைகளைப்போல் கூறிய முறைப்படி பிறப்பித்து ஒலித்து ஸ்திதியை எடுக்கிறது. பரிசம் - தகாரத்தில் சமநடை; கதி-ய காரத்தில் விஸ்திருத நடை, ஸ்திதி ( ) என்பதில் பின்ன நடை. 8.

வல்கம், த, ய, ய, என்பனவைகளைப் போல் கூறிய முறைப்படி பிறப்பித்து ஒலித்து ஸ்திதியை எடுக்கிறது. பரிச-தகாரத்திற் சமநடை; கதி-யகாரத்தில் விஸ்திருத நடை; ஸ்திதியகாரத்தில் விஸ்திருத நடை. 9.

ஸௌளதை, ஹ என்னும் அக்ஷர வடிவமாகத் தோற்றி, ஸ என்னும் அக்ஷர வடிவமாக ஒலித்து, வ என்னும் அக்ஷர வடிவமாக ஸ்திதியை எடுக்கிறது. பரிச-ஹ என்பதில் ஹ்ரஸ்வநடை. கதி-ஸகார்த்தில் தூலநடை; ஸ்திதி-வகரத்தில்பகிர்கதநடை. 10

சபரை, ஹ என்னும் அக்ஷர வடிவமாகத் தோற்றி, ஸ என்னும் அக்ஷர வடிவமாக ஒலித்து, ( ) என்னும் அக்ஷர வடிவமாக ஸ்திதியை எடுக்கிறது. பரிச-ஹ என்பதில் ஹ்ரஸ்வநடை; கதி- ஸ என்பதில் தூலநடை; ஸ்திதி- ( ) என்பதில் அந்தர்கத நடை. 11.

வல்கம், ஹ என்னும் அக்ஷர வடிவமாகத் தோற்றி, ஸ என்னும் அக்ஷர வடிவமாக ஒலித்து, ( ) என்னும் அக்ஷர வடிவமாக ஸ்திதியை எடுக்கிறது. பரிச-ஹ என்பதில் ஹ்ரஸ்வநடை, கதி-ஸ என்பதில் தூலநடை, ஸ்திதி- ( ) என்பதில் அந்தர்கத நடை. 12.

ஸௌளதை, ஹ என்னும் அக்ஷராகாரம் போல் தோற்றி, க என்பதைப்போலொலித்து, வ என்பதைப்போல் ஸ்திதியை எடுக்கிறது. பரிச-ஹ என்பதில் ஹ்ரஸ்வநடை, கதி-க என்பதில் கிருசநடை, ஸ்திதி-வ என்பதில் பகிர்கத நடை. 13.

சபரை, ஹ என்னும் அக்ஷராகாரம் போற்றடித்து, க என்னும் அக்ஷராகாரம் போற் றணந்து, ( ) என்னும் அக்ஷராகாரம் போல் ஸ்திதியை எடுக்கிறது. பரிச-ஹ என்பதில் ஹ்ரஸ்வநடை, கதி-க என்பதில் கிருசநடை, ஸ்திதி- ( ) என்பதில் அந்தர்கத நடை. 14.

வல்கம், ஹ என்னும் அக்ஷராகாரம் போற் *றடித்து, க என்னும் அக்ஷராகாரம் போற் ௦றணந்து, ய என்பதைப் போல் ஸ்திதியை எடுக்கிறது. பரிச இலக்ஷணம் ஹ என்பதில் ஹ்ரஸ்வநடை, கதியிலக்ஷணம் க என்பதிற்கிருசநடை, ஸ்திதியிலக்ஷணம் ய என்பதில் அந்தர்கத நடை. 15.

---

*தடித்தல் - தோற்றுதல். ௦ தணத்தல் - ஒலித்தல்.

ஸௌதை, ஹ என்னும் அக்ஷராகாரம் போற் றடித்து, ய என்பதைப் போற் றணந்து, வ என்பதைப்போல் ஸ்திதியை எடுக்கிறது. பரிச-ஹ என்பதில் ஹ்ரஸ்வ நடை, கதி-ய என்பதில் விஸ்திருதநடை, ஸ்திதி-வகாரத்தில் அக்தர்கதநடை. 16.

சபரை, ஹ என்னும் அக்ஷர வடிவமாகத் தடித்து, ய என்பதைப்போற் றணந்து, ( ) என்பதைப் போல் ஸ்திதியை எடுக்கிறது. பரிச-ஹ என்பதில் ஹ்ரஸ்வநடை, கதி-ய என்பதில் விஸ்திருத நடை, ஸ்திதி- ( ) என்பதில் அந்தர்கத நடை. 17.

வல்கம், ஹ என்னும் அக்ஷர வடிவமாகத் தடித்து, ய என்பதைப் போற் றணந்து ஸ்திதியை எடுக்கிறது. பரிச-ஹ என்பதில் ஹ்ரஸ்வநடை‘ கதி- ய என்பதில் விஸ்திருத நடை, ஸதிதி-ய கரத்தில் விஸ்திருதநடை. 18.

ஸௌதை தன்னடையை, யகார வடிவமாகப் பிறப்பித்து ஸகார வடிவமாக ஒலித்து, வகாரவடிவடிவமாக நிலை கொள்ளுகிறது. பரிச-யகாரத்தில் விஸ்திருத நடை, கதி- ஸகாரத்தில் தூலாகாரமான நடை, ஸ்திதி-வகாரத்தில் பகிர்கதாகாரமான நடை. 19,

சபரை, ய, ஸ, ( ) என்பவைகளைப் போல அக்ஷரம் வைத்த ஒழுங்கின்படி அடித்து ஒலித்து நடக்கும்போழ்து; பரிச லக்ஷணம் யகாரத்தில் விஸ்திருத நடை, கதியிலக்ஷணம் ஸகாரத்தில் தூலாகாரமான நடை, ஸதிதியிலக்ஷணம் ( ) என்பதில் பகிர் கத நடை. 20.

வல்கம், ய, ஸ, ய என்பவைகளைப் போல் ஒழுங்கின்படி அடித்து ஒலித்து நடக்கும் போழ்து; பரிச-யகாரத்தில் விஸ்திருத் நடை, கதி-ஸகாரத்தில் தூலாகார நடை, ஸ்திதி-யகரத்தில் விஸ்திருதநடை. 21.

வாதநாடி, ய, க, வ என்பவைகளைப் போல் ஒழுங்கின்படி அடித்து ஒலித்து நடக்கும் போழ்து; பரிச-யகாரத்தில் விஸ்திருத நடை, கதி-ககாரத்தில் கிருசநடை, ஸ்திதி வகாரத்தில் பகிர் கத நடை. 22.

பித்தநாடி, ய, க, (    ) என்பவைகளைப்போல் அடித்து ஒலித்து நடக்கும் போழ்து; பரிச-யகாரத்தில் விஸ்திருத நடை, கதி-ககாரத்தில் கிருச நடை, ஸ்திதி-(    ) என்பதில் பகிர்கத நடை. 23

கபநாடி, ய, க, வ என்பவைகளைப் போல் ஒழுங்கின்படி அடித்து ஒலித்து நடக்கும்போழ்து; பரிச-யகாரத்தில் விஸ்திருதநடை, கதி-ககாரத்தில் கிருசநடை, ஸ்திதி-வகாரத்தில் பகிர்கத நடை. 24.

ஸௌதை, ய,ய,வ என்பவைகளைப் போல் முறையே தடித்து, தணந்து நடக்கும் போழ்து; பரிச-ய காரத்தில் விஸ்திருத நடை, கதி-யகாரத்தில் விஸ்திருத நடை, ஸ்திதி-வகாரத்தில் பகிர்கத நடை. 25.

சபரை, ய, ய, (    ) என்பவைகளைப்போல் முறையே, தடித்து, தணந்து அசையும்பொழுது; பரிசகதியிலக்ஷணங்கள் யகாரங்களில் விஸ்திருதநடை, ஸ்திதி— (    ) என்பதில் அந்தர்கதி. 26.

வல்கம், ய, ய, ய என்பவைகளைப்போல் முறையே, தடித்து, தணந்து நடக்கும்போழ்து, மூன்று குணங்களையுந் தனித்தனி ஒவ்வொரு எழுத்திலும் விஸ்திருதாகாரமான நடையின் பயனை யளிக்கிறது. 27.

இனன்ஸ்தானநாடி பிரிந்து பிரகாசியாத பின்னமான தொந்ததேகத்தை யுடையவருக்கு, ப்ரஸ்தார சக்கரத்தில் விதிக்கப்பட்ட சில அக்ஷரங்களும் வித்தியாசப்படுகிறதாகக் கூறப்பட்டிருக்கிறது. அவ்வாறு நிருமித்த அதமதேகிகளுக்குக் கூறப்பட்டிருக்கிற போலி எழுத்துக்களை இதனடியில் எடுத்துக் காட்டப்படுகின்றது. 28.

| | | | |
|---|---|---|---|
| தீர்க்கநடையில் | த, | ஸ | என்றும் |
| ஹ்ரஸ்வநடையில் | ஹ, | ,, | என்றும் |
| சமநடையில் | ய, | ,, | என்றும் |
| தூலநடையில் | ஸ, | ,, | என்றும் |
| கிருசநடையில் | க, | ,, | என்றும் |
| பகிர்கதநடையில் | வ, | ,, | என்றும் |
| அந்தர்கதநடையில் | ( ), | ,, | என்றும் |

அறியப்படுகிறது. 29.

அவர்களுக்கு இந்த எழுத்துக்க ளுவமையான ஒலியின் வடிவு, போலிநாதம் போலவும்; அல்லது மிஸிரத்தொனிபோலவும், அல்லது அம்லத்தொனிபோற் குறைந்த மாத்திரையை யுடையதுபோலவும், அல்லது நாதமில்லாத குணம்போலவும், கேள்விக்குப் பலவிதமா யுணரவேண்டியிருக்கிறது. இந்த அறிவை அக்ஷரவடிவமான சக்கரத்தி லுதித்த, லேகநாடி யனுபவிக்கிறது. 30.

நான்காம் அத்தியாயம் முற்றுப்பெற்றது.

---

## ஐந்தாம் அத்தியாயம்.

### உபஸ்தானகாரண நாடி.

மனுடருக்கு வேண்டிய உடஸ்தான கருமம் ஏகமுற்றுகிற சமயம் * ஆசனம் நெருங்குகிற காரணம் அந்த நாடி யடைகிற பிரதிகுணமான வேகம்; அப்பொழுது நாடியின் நடை, ஒரு மந்தி பயிலுகிற நாட்டியத்தைப்போல், சயனத்தி லாடியு மாடாமலும் நடக்கிறது. சாயுங்காலத்தில் கேவலகுணமான தருணம், காலையி லுவமையிலுள்ள உரூபகநடையாக நடக்கிறது. நித்திரை செய்யும்பொழுது நிகழுகிற அத § ருழப்பின் காரிய சித்தியைப்பற்றிய வெளிக்குறிப்பை யறிந்துகொள்ளுகிற நாடி கருப்பாசயத்திலும் நடக்கிறது. (௧)

(* நெளிந்து நடக்கிற நாளம் நெருங்கப்பெறுகிறது என்றும் ஒரு பொருள் கொள்ளும். § உழப்பு - முயற்சி.)

இக்காரணத்தில் இருதயஸ்தானத்தினின்று உறுப்புகளுக்கிசையக் கூறுசெய்கிற கோ நிமேஷத்திற்குரிய அபேக்ஷை பைட நிமேட இனமாக மாறுகிறது, அந்தப் பைடநிமேடத்திற்குரிய அபேக்ஷை கௌரிநாடி நிமேஷஇனமாக மாறுகிறது, நாடியின் நடை, இரவில் மந்தியின் நடைக்கும், பின்னேரம் கேவலமான சேர்க்கை நடைக்கும், விடியற்காலம் சர்ப்பத்தின் எழுச்சியான நடைக்கும், உவமையாகக் கூறப்படுகிறது. (௨)

### உணவின் குணநாடி.

உண்ணு முணவு, ஸ்தானத்திற் றங்கிப் பிரிந்து செல்லும் போது, நாடி வேககுணமான சமகுணத்தைப் பொருந்திப் பல

விதமான தன்மையாய் நடக்கிறது. அகிபேனம், சுரை முதலாய லகரிவஸ்துக்களும், உஷ்ணத்திரவியங்களும், விஷம் கலந்த போசனங்களும் மனுஷருக்குப் பசியையும் சுகானுபவமான இச்சை முதலியவைகளையும், யுத்தியின் வளர்ச்சிக்கு விரோதமான கெட்ட குணங்களையும், அடிக்கொருவிதமா யுண்டாக்கிப் புப்புசத்திற்கு அவசரமான ஊக்கத்தைக் கொடுக்கின்றன. நாடி நடக்கிற வேகம் ஹ்ரசத்யலம் என்று சொல்லப்படும். (ங)

சுட்டிய அபினும், மத்யாதிகரமவஸ்துக்களும் மனசுக்குரிய இயல்பான குணத்தை மாற்றி நவீனகுணமான அறிவை யுண்டாக்கி யழிக்கிறது. கரமென்னு மிடுமருந்தை யுட்கொண்ட செயலு மப்படி. இவைகளில் நாடி § படசாதிகாரணமான அறிவைப் பிரதிபலரூபமாக வளிக்கிறது. * அதிகமான சீதளத் திரவியத்தை யுண்டவருக்கு, நாடியினிடைவெளிப்பார்வை நியூனகுணமுடைய, கோஜாதை காரணமாகத் தோற்றுகிறது. அப்போழ்து நளினியின் சமுதாயமான கிரியை அரை அம்ச மியங்குகிறது. மனசுக்கொத்தபிரகார முண்ணு முணவின் குணம் நல்ல குணமாகிறபொழுது நாடியின் வேகமான மந்தநடையும் கோஜாதைபொருட் டடைகிறது. அப்பொழுது அங்குஷ்ட மூலத்தில், நாடி நீதமான நடையைப் புரக்கிறது. (ச)

வைத்தியன் கைபார்க்கும்பொழுது முதல் ஆவசியக மறிய வேண்டிய காரணங்கள் நான்கு. அவைகள், முதலாவது தேகம் எந்தத் தோஷத்தின் நிலைமையைப் பெற்றிருக்கிறதென்பது. இரண்டாவது உத்தமதேகமோ அல்லது 0 அதமதேகியோ என்பது. மூன்றாவது உரோகநாடியோ அல்லது அரோகநாடியோ என்பது. நான்காவது தேகாதார யந்திரம் பிரதிசுயானுகூலமான பலனை யுண்டாக்கி யளிக்கிறதோ அல்லது ஆண் பெண் என்னும் இரு பகுதிக்கும் ஓரேதன்மையான பலனை யுண்டாக்கி யளிக்கிறதோ அல்லது வித்தியாசமான பலனை யுண்டாக்கி யளிக்கிறதோ என்பது. (ரு)

§ படசாதி - சர்ப்பம். * உதராக்கினியின் பலாபலத்தை யறிந்து உணவை யெடுக்கவேண்டியது, அப்படியல்லாத உணவு நோயைக் கொடுக்கிறது.

"தீயளவன்றித்தெரியான்பெரிதுண்ணின்
நோயளவின்றிப்படும்" என்று திருக்குறளிலுங் கூறப்பட்டிருக்கிறது.

0 அதமதேகியென்பது - அலி, முணமுணன் முதலியவை.

சுகதேகர் பார்வைநாடியின் தன்மை:—சுகதேகருக்கு, நாடியின் சந்தித்துவாரங்கள் வேககுணமான வாய்வு சஞ்சரிக்கின்ற இடைவெளி, அதில் ஆராய்ந்தறிகிற பிரமாணங்கள் சோதனுங்குலி நேத்திரக்குறிப்புக்கு உரியவைகள். இரத்தம் பொசிவில்லாம லூடுருவி நடக்கிற செயலை, வைத்தியர் சுகதேகருக்குப் பரீட்சணியநாடியி லனுபவித் தறியவேண்டியது. அவர் தாமறிந்த அனுபவமான பரீக்ஷையில் உயர்ந்த இலக்ஷணமுடைய பிரமாணமாக நடந்தால் அவன் ரோகமுடையவனல்ல. உயர்ந்த இலக்ஷணமான நடை தோற்றித் திரையிட்டதுபோல் மறைந்தாலும் அல்லது ஆவரணம் வளைந்தது போற் சூழப்பெற்றாலும் அதைத் திரிதோஷங்களின் உக்கிர கோபமான நாடியறிவோடு பொருந்தப் புணர்த்தி ஆராய்ந்தறிய வேண்டியது. நடை தோற்றி மறைந்த இடத்தில் நாடியின் யதார்த்தமான அறிவு முற்றுமில்லை யென்று சொல்வதும் சரியல்ல. உக்கிர கோபமான திரிதோஷங்களின் செய்கையால் இடை வெளியிற்பொசிகிற குணம், அந்த நடை கையிலு முயர்ந்த வருணமாகிறதில்லை. (சூ)

## பிரசவ வேதனை.

ரோகிகளுக்குக் கல தலங்களினிலையற்ற குணங்களைச்சகித்து நடக்கிற நாடி கருப்ப ஸ்திரிகளினுசயத்தைச் சேமஞ் செய்கிற காரணம். அதில் வாத பித்த சிலேஷ்மங்கள் சரியான முறைப்படி நடக்கின்றன. நேரம் விட்டு விட்டு மூடுகிற குணம் நாடி நடையைச் சுற்றித் திரும்பச் செய்கிற தன்மையை யுண்டாக்கிறது. அந்த நடை பிரித்தறிய இயலாதது. அந்த நேரத்தில் பிரசவ வேதனைக்குரிய அவஸ்தை குணம் மாறி எடுக்கிறதும் ஸோக குண நாடி இவைகளினிலக்ஷணங்களைப் பொருந்த தருணப் பிரசவத்தில், நாடி தேகத்திற் §சுற்றோட்டத்தை யெடுக்கிறதில்லை. தருணப் பிரசவமாதுக்கு அந்த நேரத்தில் அந்தர்கத நாடித்துவார மூலமாகவும் நாடி ஓட்டத்தை நிச்சயித்துக்கொள்வதரிது. (விசாரம்-நிதானமான பரீக்ஷை, சந்தேகம்) (எ)

---

§சுற்றோட்டத்தைப் பற்றி மனுஷசுகரணம் பேசுகிறது: இரத்த உறுப்புகளடையும் வளர்ச்சியில் மூன்று வித முண்டென்றும் அவைகளில் 1வது சிசுவின் போஷணைக்கு வித்தலச் சுற்றோட்டம்; 2வது சிசுவின் சீவியத்தில் மிகுதியான பாகத்தில் நிற்பதும் அது அணையத்தையிலக்ஷணமாய்க் கொண்டதுமாகிய அணையச் சுற்

## அங்குஷ்டதேகி இலக்ஷணம்

ரோகிகளுக்கு நடக்கிற அங்குஷ்ட மூலநாடி *விடாலகரமான செயலையும், §விடாகரமான குணத்தையும் காட்டி ஆறுதலில்லாத நடையையுடையதாய் நடந்தால் அது துண்டிக்கிற குணமான நடை. அங்குஷ்ட தேகிகளுக்குத் தீவிர வேகமான வாய்வு அனேக அனுகாணச் சார்புள்ள ஓதையினமாக மாறி எடுக்கிறது. அவர்களின் சடம் மற்றய சாதில்லாத குணம், வித்தியாசப் பட்டு அகந்தைகாரணமான குணங்குறிகளை யமைந்திருக்கிறது. அவர்களுக்கு ஆன்ம லாபத்திற் குரிய பேரின்ப அறிவு புறப்பக்கமாயுடையதென்றும், மனசுக்குரிய இயல்பான சுழற்சி பிருஷ்ட பாகத்திலுடைய தென்றும், அப்படியே நாடியின் பூர்வாந்தங்களும் பிரதியனுகூலமில்லாத வியல்பை யடைந்திருக்கின்றன வென்றும், பிணிதுன்பங்களின் வினவுத்தரங்களை யனுபவித்தறிகிற நாடி தேகத்திற் பொருத்தமாயில்லையென்றும், கூறப்பட்டிருக்கின்றது. உத்தமமான தேகருக்கு உறுப்பின் போஷணையை விரைவாய் நடத்துகிற நரம்பின் அந்தங்களிற் பிரிந்திருக்கிற தேள்வாற்கவர் போன்ற நுண்ணிய புச்சங்கள், இவர்களுக்கு நாடிச் சக்கர மத்தியில் சேர்ந்திருக்கின்றன வென்றும் கூறப்பட்டிருக்கிறது. மற்றய விதம் சிலேஷ்மத்தின் மிகுந்த அனுகாணச் சார்புள்ள ஒலியின் றேகமல்ல, என்பது ஐபுறவான நடை. அதாவது:—மற்றய அன்னிய ஸ்தானங்களிலறியப்படுகிற தேகிக்கு, மஸ்தக ஸம்பந்தி ரோக குணங்களைப் பரீக்ஷை பண்ணி யறிகிற நாடி பிரகா

---

ரோட்டம்; 3வது இரத்தஞ் சேர்ப்படலுக்கும் போஷணத்துக்கும் சுவாசப் பைகளையும் சிரணப்பாதையையுடையவர்களுமாகிய வளர்ந்தவர்களில் நிற்கும் பூரணச் சுற்றோட்டம் என்றும்; கருப்பகாலத்தில் ஈரலுளுண்டான இரத்தோட்டமாவது கொஞ்சமான நாள இரத்தம், இன்னும் (.....) வேசக நாளம் வழியாய்ப் புகுந்து வலதிதட்டந்துகிகளினோர் பங்கிற் சுற்றியோடும். நாபி நாள மதிக இரத்தத்தோடு ஈரலுக்குள்ளே சற்று இடப்பக்கத்துட் புக, அதிலுள்ள இரத்தம், முக்கியமான மூன்று தாரைகளாகப் பிரியும், ஒன்று இடது கிளை வழியாக இடது இதயின் தந்துகிகளுட் புக மற்றது வலது கிளை வழியாய்த் திரும்பி வேசக நாள இரத்தத்தைச் சந்தித்து வலது இதயின் தந்துகிகளுட் பரம்பும். மூன்றாம் பங்கு நாள சரம் வழியாக யீரல் நாளத்தைச் சேரும். யீரலுள் நடக்குமிந்தச் சீர் பிறவி நாள் வரைக்கும நிற்கும், பிறவியில் அணைய இரத்தோட்ட மொழிந்து போகும், முன்னையிலுமதிகமான இரத்தம் சுவாசப் பைகளுக்கும் குடலுக்குமூடே சுற்றியோடத் தொடங்கும்; என்றும்.

*விடாலம்-பூனை. விடா-எலி;

சிக்கிறது. நோயிருக்கிற அந்த நேரத்தில் நடியயின் நடை கொண்டு விகாரப் படுத்தி மேலு மனுகரணச் சார்பான அனுகூல மற்ற ஒலியை யுண்டாக்கிறது, அந்த நடை உயர்ந்த பிரமாண மான பின்னமாகாமற் பந்திக்கிற தன்மையுடையது. அல்லது ஒன்று இருகூருய்ப் பிரிந்திராத பாத நாடி வில்லங்கப் பட்டு அல்லது இடைஞ்சறப்பட்டு நடக்கிறது. அது புயத்தின் மேற் பகுதி (ப்ரகண்டம்) என்னும் ஸ்தானத்திலறியப்படுகிறது சிலேஷ்மத்தின் இயல்பான குணமுடைய பைரவி நாடியின் கண்கள் சிருட்டிப்பிலே யிறுகிக் குறைந்த மாற்றை யெடுத்திருக்கிறது. சாரீர குணங்களைத் தெரிவிக்கிற நாடி *போத்திரி ஆரத்திபி அலம் என்னும் பெயரையுடையது. இது மனக்கோட்டத்திற்குரிய அவலத்தொனியை யடைந்து நடக்கிறது. (அ)

## பரீக்ஷையின் உத்தமதானங்களை நீக்கி அதமதானங்களை நிச்சயிக்கிற முறை.

ரோகிகளுக்குப் பாதத்தி லறியப்படுகிற நாடியின் நடை பிரிந்து தோற்ருத குணம் இருதயத்தில் நடக்கவேண்டிய சுழற்சியை அங்கம் (படி-Body) அடைந்திருக்கிற காரணம். இருதயத்தில் நடைபெறுகிற லோலிதத்திற்கு விரோதகுணமான செயல்களை வாய்வு இயற்றிவிடுகிற காரணம் இந்தச் சுழற்சியை யுண்டாக்கினது. தேகத்தில் வாதசிலேஷ்மங்கள் கயல்மீனின் செய்கைக் கொப்பான பிரதிசெயலையுடையதாக அறியப்படுகிறது. (வாதசிலேஷ்மங்கள் பிறண்டு நடக்கிறதாம்) அங்கங்களி லிருந்துண்டாகி நடக்கிற குணங்களை ஏகஓரகிநாடி வழியாகவும் தூஸரி நாடி வழியாகவு மறியவேண்டியது. கூறிய சுழற்சியானது கருப்போற்பத்தி காலத்தில் பிரகிருதிபேதங்களின் காரணமோ அல்லவோ என்பதைத் தேகநாடியி லறியவேண்டியது. அதனை யறிந்தபின் வலதுபாதத்திற் பார்த்தறியவேண்டிய நாடியை இடதுபாதத்திலும், இடதுபாதத்திற் பார்த்தறியவேண்டிய நாடியை வலதுபாதத்திலும் பார்த்தறியவேண்டியது. இது நபுஞ்சகருக்குக் கூறிய விதி.

உத்தமதேகிக்கும் வாதத்தின் கோளாற்றினு லிடையிட்டுண்டான சுழற்சி இரட்டித்து மறுபடி உண்டாகிறது எப்பவோ

*போத்திரி-கழற்சிக்காய்விதையைப் போன்ற நிறம்,

அப்போழ்து அவர்களுக்கும் நியமனமாக விதிக்கப்பட்ட தர்சனக்குறிப்புக்குரிய உத்தமபாகத்தில் நாடியின் நடை தோற்ருமல் மறைந்திருந்தால் இடதுபாதத்திற் பார்க்கவேண்டியநாடியை வலதுபாதத்திலும், வலதுபாதத்திற் பார்க்கவேண்டிய நாடியை இடதுபாதத்திலும் மாறிப் பரீக்ஷைபண்ணி யறியவேண்டியது.

## சந்தானப்புணர்ச்சி, சிசுநிலைமைகளைத் தெரிவிக்கும் நாடிகள்.

ஸ்திரிகளுக்கு அறியப்படுகிற வலதுபாதநாடி அபேக்ஷையான குணங்களையும், இடதுபாதநாடி விதிப்பிரகாரமாக நடக்கிற குணங்களையும் தெரிவிக்கிறது. இது பெண்களுக்கு உத்தமமான பலன்களை யுண்டாக்கிக் கொடுக்கிற நடை. இடதுபக்கத்திற் சம்பந்தப்பட்டிருக்கிற இடதுபாதநாடி தன்யாசயஉறுப்புகளுக்குச் சிறந்த குணங்களை யுண்டாக்கிக் கொடுக்கிறது. (க०)

ஒரு சுகபலமுடைய புருடனுக்கு அறியப்படுகிற நாடியின் நடை அதிகப்பற்ருய்த் தரபோககிதேகத்தி லறியப்படுகிற நாடி, அந்த நாடியின் உயர்ந்த பிரமாணத்திற்குரிய தியானம் வார்ச்சையென்னும் ஓர் நீர்வாழ் மிருகத்திற்கொப்பான செயலைப் பிரதியாக அடைந்து இனமாற்ருகிறது. கன்னம் நெற்றி யிவைகளை நல்ல குணமாக அனுசரிக்கிறது. (இருதயத்திற்குரிய ஸ்தானத்தில் வருணமாகும்போழ்து வார்ச்சையென்னும் பிராணியின் செயலுக் கொப்பாகவும், கன்னம் நெற்றி யிவைகளை யனுசரிக்கும்போது குதிரையின் செயலுக் கொப்பாகவும் பிரதிகுணங்களை யடைகிறதாம்.) இந்த நடைகள் வாயுவின் காரணமான வேறு குணங்களை யடைகிற தெப்பவோ அப்போது கைபார்ப்பிக்கிற மனுஷ்யருக்கு நடக்கிற குணம் பயனற்ற தாழ்ந்த இலக்ஷணமுடையதாகிறது. இருதயவியக்கம் நியூனகுணமான சோஜாதை காரணமாகத் துண்டிக்கிற அசைவை எடுக்கிற செயலுடையதாக அறியப்படுகிறது. இந்தக் காரணங்களினல் நாடிநடைக்குரிய ஆரம்பமான முடிபு தன்வயமா யசைகிறதில்லை, ஓதை காரணமாக அசைகிறதுமல்ல. அது கலஸ்தானங்களுடன் சேர்ந்த காரணமாக அறியப்படுகிறது. (கக)

## பாலர் பிரயோகநாடி.

கீமேடம் ஞானேந்திரிய நரம்பு மார்க்கமாக உத்தமகுணமான பலாபலன்களைச் சிலக்ஷபண்ணுகிற பிரகாரம் நாடி யிரத்தோட்ட ஆரம்பம் சைதன்யதாரைகளுக்கு ஆறுதலாயும் கெதியாயும் நடக்கிற பலன்களை யுண்டாக்கிறது. இந்திரியவுணர்ச்சி நரம்பு கற்பிக்கிற தன்யாசயம்: அதிலமையப்பெற்ற டிலியின் கோட்பு கிரமமாய் நடைபெறவேண்டியது. பதினைும் சிவநாடியின்கிளை சிசுபோஷணநரம்பு. அது தன்யத்தைச் சுரந்து உருக்கும் குணமுடையது. அந்தக் கருமம் நடக்கும்போழ்து பிரதீதமான குணங்களையுடைய கோ தோறறி மறைகிறது, அல்லது அந்தக் கோ தனக்குரிய நல்ல குணங்களில் யாதுமொன்றை யிருதயகோசத்தைச் சூழவிடுகிறது. அந்த சிவநாடியின் மங்கல சக்தியுடைய துவாரம் விளக்குகிறது, கறங்குமாதாவின் துப்புரவால் பழக்கிவைத்திருக்கிற பிளிற்றலென்று. இதமற்ற தன்யாசயம் ஒழுங்காய்விடுகிற இன்னொரு காரணமறியவேண்டியது: அது யாதெனின் இங்கே கூறியிருக்கிற சுழற்சி உதிரத்திற்குப் பிரதிகுணமாக அடையும்போது கோ இயற்றுகிற பரிசவறிவு மனோசக்திக்குக் கேவலமான குணமுடையதாயிருந்தாலும் அக்கினியின் சொலிப்பினல் சிந்தப்பெறுகிறதாக அறியப்படுகிறது. நாடியின் தடப இலக்ஷணம் அந்தரங்கமான உறுப்பில் பிரதீதமான குணத்தை யுண்டாக்கி யளிக்கிறது. (கஉ)

பாலருந்தும் பருவத்தையுடைய சிறுவருக்குச் சேர்மானமாகிற குணங்களை யறியவேண்டில் கரநேத்திரக் குறிப்பும் மசலத்தின் துவாரமும், அாற்றல், புலப்பம், பிரலாபம் ஆகிற செயல்களைப் பணிக்கிறது. சிகைச்சிரை அனேக விதமான பிரதி குணங்களைக் கலக்கிறது. உடம்பில் நாடி கடினமான ஏதுக்களையுடையதாகிறது. இவைகள் சஞ்சரித்தற்கிணக்கமான அவயவத்திலிருந்து பிறந்த உசித பிரமாணமான நல்ல குணம் நெற்றியைப் போஷிக்கிறது. அங்கே பரிசுத்தமான குணமாகி நேததிரம், கட்புருவச் சக்தி முதலிய உறுப்புகளைப் போஷிக்கிறது. அதிக லோப குணமான தேகத்தில் உயர்ந்த மாத்திரையை யுடைய குணம் பிரிந்து மறைந்து அல்லது தொந்தித்த குணமாகிக் கன்னம் நெற்றி இவைகளிற் சுழலுகிற செயலை யுடையதாகிறது. இருத

யத்தில் நடைபெறவேண்டிய சம நிதானமான பரீக்ஷை கடினம், பந்திக்கிற தன்மை. இவைகள் இயற்கையின் காரணமுமல்லச் செயற்கையின் காரணமுமல்ல. அம்மனையின் இரக்ஷணையினு லமைந்துள்ளன. நாடியின் திருஷ்டாந்த உறுதிப்பாட்டுக்காக ஊணருந்தித் தேகம் வளர்ச்சியை யெடுக்கும் போழ்து கோசூழ்ச் சியுறுகிறது. சுற்ரோட்டமாரம்பமாகிறது. (கங)

சூரியன் நாடியின் குணம் தக்க பருவமாகிற காலத்தில் வாயு வின் உணர்ச்சி மனசிலே அவசிய நியானமான உணர்ச்சியை யனு பவிக்கச் செய்கிறது. சுற்ரோட்டம் தரிக்கிறது. நாடியின் இயன்ற வன்மை கிரமமில்லாமற் பந்திக்கிறது. இரசத்தைத் தாங்கிச் செல்கிற பசுமையான நரம்பு நாபியின் பிதுக்கமான மொத்தை முற்றுயழியாமலிருக்கும் வரையும் கோவை வளைந்து கொள்ளு கிறது. அதிக நாட் சென்றுஞ் சுகமாகிற இருதய ரோகங்களி லும், நிலையற்ற குணங்களை யுடைய பிணி துன்பங்களிலும் நாடி தேகத்திற் சுற்ரோட்டத்தைப் பெற்றிருக்கிறது. ரோகம் அந்த ரிக்கிறது அல்லது அந்த ரோகத்தின் குணங்கள் சிதறித்தனிமை தனிமையாகிறது. சம நிதானமான இலக்ஷணைப் புகழ்ச்சி பெண் களின் தற்காப்பான உள்ளறையிற் ரோற்றி மறைகிறது. (கச)

அற்ப ஆயுளுடைய சிசுவுக்கும், இருத்ரோகம் அசாத்திய மான குணமுடையவருக்கும் நாடி தேகத்திற் சுழற்சியை யடை கிறது. அந்த ரோகம் வித்தியாசம் வித்தியாசமான கெட்ட குணங்களை யுண்டாக்கி, நாடி நிலையுறுதிப்படுகிற சம நிதானமான ஸ்தானத்தையும் வித்தியாசமான இயல்புடையதாகச் செய்து சமசய குணமாக்கிறது. (கரு)

## சுக ஆகுலர் நாடி.

வாதம் பித்தம் சிலேஷ்மம் என்பனவாகிய மூன்று தோஷங் களும் கோளாறடையும்போழ்து சுகவீனமும், அவைகள் சமநிலை யில் நடக்கும்போழ்து சுகமும் மாறிமாறி நடக்கின்றன. இந்த இரண்டு நிலைமைகளும் ஏககாலத்தில் ஒரேதருணத்தில் மாறி மாறி நடைபெறுகிற நாடியின் இக்ஷணத்தைச் சொல்வாம்:

பதினறு வயசு முதல் எழுபது வயசிருக வாலிபமாயிருக்கிற ஒரு புருடனுக்கு மதிக்கப் பட்ட ஒரு யுவதி தனக்குரிய சீவிய

காலமாகிய இப் பருவத்தி னிடைக் கூற்றில் தன்னை யடைந்திருக்கிற அவாவற்ற பண்பு, செயல், ஆர்வம், வெகுளி, சிர் சிதம்பு முதலிய பலாபலன்களை அம்ஸ பாகமாகக் கூறு செய்து பரிமாறு செய்கிற வினையில் நடக்கிற நாடி யிலக்ஷணத்தை இந்தச் சுகா குல நாடி விவரிக்கின்றது. அந்த நாடி அடிக்கடி சுக தேகருக்கு அற்ப சுகவீனமான குணத்தைக் காட்டிச் சுகத்தைக் கொடுக்கிற ரோகாரோக்கிய குணங்களை வெளிப்படுத்துகிறது. அது ஸாத ப்ரபந்தமான செயல்களைத் தாங்கி நடக்கிறது. இந்த இருவகைச் செயலினால், சிசு போஷண நரம்பின் துவாரம் விகிதப்படி யூடுருவி நடக்கிறது. குசம் ஓதி பொருட்டிரக்கமான குணத்தை யுண்டாக்கிக் கொடுக்கிறது. இதில் முக்கியமா யறிந்துகொள்ள வேண்டிய இன்னொரு காரணங் கூறப்படுகிறது. அதாவது:—இயற்கையான சிருட்டிப்புக்கு மாறுபாடான உறுப்பமைந்த மாதுக்கும், இயற்கையான குணத்துக்கு வேறுபட்ட குணம் மானதமான தீவிர வேதனையை யுடைய வருத்தங்களிலும் நாடி இயலுக் தன்மை சேருக் தன்மையான கொள்கை கோஜாதை காரணமாக இனமாற்றுகிறது. இன்ப சுகமான பலன்களை ஆக்கியருளுகிற ஜீவதஜ்ஞை மேஷ்ரஸ்தானங்களுக்கும் தன்யாசயத்திற்கும் தொடர்பான கிளைகளை விட்டுப் பிரகாசிக்கிறது. அது புருஷ ஸ்திரிகளின் சேர்க்கையான காரண காரியங்களைத் தெரிவிக்கிறது. அது போலே பாலருக்கறிந்து கொள்ளுகிற நாடியின் பெயர் சோடம். இது தன்யாசயத்தில் குணங்களைப் பயின்று புரக்கிற சோடி. சோடம் அங்குஷ்ட மூலத்திற் சீக்கிர சாரமுடையதாயிருக்கிறது. கரவடமான மாதாவின் சிசுவைப் போஷணை செய்கிற நாடியின் இரக்கமான குணம் நாடி கடூரமாகவும் சீக்கிரமாகவும் நடக்கிறது. (கசு)

கருப்போற்பத்தியி லுண்டாகிற பிரகிருதியின் ஈன குணத்தினால் நாடி கடூரமாகவும் கெதியாகவும் நடக்கிறது. கோமள குணமான சுபாவ ஸ்திதியில் இரத்தம் ஊடுருவிச் செல்லும் போழ்து நாடி பெண்களுக்குச் சாந்தமான குணத்தில் உறுதியாய் நடக்கிறது. விருத்தியான அவஸ்தை குணங்களில் நாடி கடூரமாய் நடக்கிறது; கிழப்பெண்ணுக்கு மப்படியே நடக்கிறது.

நாடி யிரத்தோட்ட ஆரம்பத்தின் வித்தியாசங்களைப் பரீக்ஷித்து நிதானங் கண்டறிதற்கு லோலிதத்திற்குரிய பிரதி செயல்

களை யுரிமை பற்றி பிராத நாடியும், அவஸ்தையிற் சேரத்தக்க காரணங்களைப் பேசுகிற நாடியும் அந்த வித்தியாசங்களைத் தெரிவிக்கமாட்டாது. தெய்விகமான இருதயத்தின் உத்தமமான சம்குசிதம் துண்டிக்கிற குணம். சினையடியாகப் பிறந்த சதுர்த்தாம்ஸங்களினென்று சமகுணமான பலனை யுண்டாக்கி அளிக்கிறது. இந்தச் செயல் நடக்கிற காலம்வரையும் அந்தப் பெண்ணுக்கு மேலுமதிகமான வேறுவித நடத்தை குணங்க ளுண்டாகிற தில்லை. இன்னும், அபஸ்மாரரோகம் முதலாய சித்த விகாரமான குணங்களிலும், மூர்ச்சாரோகம் முதலாய இனங்களிலும் நாடியின் ஏககதி நியூனகுணமான கோஜாதைகாரணமாக இரண்டாய்ப் பிரிகிறது. (கஅ)

சிறுவருக்குப் பரீக்ஷைபண்ணுகிற சோடநாடி இயங்குந் தன்மைக்குரிய சுழற்சி; ரோகங் கடுமையாகி வளருகிற குணங்களில்; அது அம்மனையினுள் துண்டித்துத் தனிமையாகிறது. இப்படி நடக்கிறநாடி, எழுப்பத்திற்குரிய சேர்க்கையைக்குறைந்த வர்ணமாகச்செய்கிறது. வளர்ச்சிக்குரிய பருவங்கள் மாறியெடுக்கும்பொழுது; பெருவிர லடியிற் பார்வையில்; குசம், உத்தமமான தகைமையை எடுக்கிறதற்கு 1 தூலாகாரமான நடையைக் காண்பிக்கிறது. (தூலம்-வளர்ச்சி). (கக)

ஒரு சுகபுருஷனுக்கு ஒரு மினிட்டில் அடித்துப் பெயருகிற எண்குறியளவையிலும் பார்க்க ஒரு சுகஸ்திரிக்கு 10 மாத்திரை அல்லது பத்துமுறை துடிக்கும் துடிப்புக் கூடநடக்கிறது. ()

நாடிநடையின் பிரதிஸ்பந்தனம் தர்ச்சனிவிரலிற் றோற்றுவது, இடைவிடாத முயற்சி யுடையவருக்கும், கர்மரோகத்தையனுபவிப்பவருக்கும், மனசிலே நிகழும் எண்ணத்தைக் குறிப்பினுற் றெரிவிப்பவருக்கும், சுரமுடையவருக்கும், அதிக பெலவீனமுடையவருக்கும், இரத்தஞ் சுரக்குமாறு தேகத்தில் செரிக்கிறபொழுதும், சோபை முதலிய அதைப்புவகைகளிலும் என்று அறிக. (உக)

ரோகத்தின் கடுமையான குணங்கள் மாறி மாறி எடுக்கும் பொழுது நாடி நடைக்குரிய சேர்க்கையும் வேறு வேறு லக்ஷணமுடைய குணங்களை யெடுத்து நடக்கிறது. (உஉ)

சுரம், பிரதரம், விரேசனம் முதலியவைகளில் நாடி கெதியா யசையுந் தன்மையைப் பெறுகிறது. அதற்குரிய கெட்ட குணம், ஊக்கமற்ற தன்மை, கடினத்தன்மை கோஜாதை மூலமாக அறியவேண்டியது. (உ௩)

சுரஅவஸ்தை ஒரு காரணமு மில்லாமற் சடுதியாய் மாறி னுல், அல்லது அதுபோலவே குணத்தை மாற்றி எடுத்தால், உடனே நாடி மந்தகதியாய் நடக்கிறதற்கு துரிதகுணமான செய லைப் பரிச அங்குலியிற் காட்டுகிறது. அப்பொழுது இரத்தோட்ட ஆரம்பத்தின் சிர் ஸாதகுணமான தன்மை. சுரம் விட்டு நல்ல சுகமென்று காணப்படுபவருக்கு நாடித்துடிப்பு ஒரு மினிட்டில் ஒரு தண்டமாத்திரை நடக்கவேண்டியது. அன்னிய சுகவீன மான குணங்க ளதிகப்பட்டால், அவைகள் கோவைச் சூழ்ந்து கொள்ளுகிறது. அதை மஸ்தகநாடி குணப்படுத்துகிறது. இக் தக் குணம் சுகத்திற்கு வராமல் விக்கினமுடையதாக வந்தால் பக்ஷகாதரோகத்திற்கு ஏதுவான செயல்களை யுண்டாக்கிறது. மிருத்துப்பிரதி பலமுடையதா யடைகிறது. அப்பொழுது பயங்கரமான குணம் நீங்கியும் நீங்காமலு மிருக்கும். (உ௪)

நாடியின் நடையை இலக்கக் குறியிற் பரீக்ஷித்தறியும் பொழுது ஏகனுடி இனமாற்றுகிறது சக்கரத்தி னந்தத்தில். அது தனக்குரிய சுய குணத்தை விட்டுக் கொடுக்கிறதில்லை. இருதயம் கற்பிக்கிற நல்ல குணம் அங் குஷ்ட மூலத்திலும் மற்றும் மர்மஸ் தானங்களிலும் நடக்கிறது. (உ௫)

## ஆரோக்கிய அவஸ்தையை யுடையவனுக்கு தருணத்தில் நடக்கும் நாடி நடையின் தன்மை கூறப்படுகிறது.

ஒருவன் சந்தான செறியைப் பற்றிச் சிந்தித்தாற்றுகிற நியா யம், பரீக்ஷித்துச் சுகமனுபவிக்கிற நாடி ஜெனனத்தின் காரியசித் திக் குரியது. அது இரண்டாய்ப் பிரிகிற பிரகாரம் பகத்திலறியப் படுகிறது. (உ௬)

## சீக்கிரசாரி.

சித்த விகாரமே முதற்காரணமாகப் பருவம் பருவம்பட்டனு பவிக்கிற கருப்பாசயம் இச்சானுகூலமான கலவியில் நாடியின்

நடை வேகமான சேர்க்கையுடையதாய் வளர்ந்து பிரிகிறது. அந்த நாடி கருப்பாசயத்தில் பால் வேறறுமை யுருவைச் சீர்படுத்துங் குணமுடையதாய்ப் புனர் சம்பவமான இலக்ஷணத்தை எடுத்து நடக்கிறது. (௨௭)

## மந்தகாமினி.

இன்பத்தை நுகர்ந்தனுபவிப்பவளுக்குச் சித்தம் கேவலஞுண மான தருணமாயிருந்தால் நாடியிரத்தோட்ட ஆரம்பத்திற்குரிய சேர்க்கை நியூன குணமாகி இயற்கைக்கு மாறுன மந்த நடை கொள்ளுகிறது. (௨௮)

ஸ்திரீ மந்தசாரமான நடையைப் பொருந்தி நடக்கிற ஸ்திதி யைச் சீக்கிர கதியுடையதாக மாற்றினுல், அந்தநடையின் விப ரீதமான உற்பாதம் ஸ்திரிக்கு வாத குன்ம ரோக வகுப்புக்குரிய குணத்தை யுண்டாக்கிறது. (௨௯)

## கிரம நாடி.

நெடுங்காலம் காமத்தை யடக்கியிருந்தவருக்குத் தருணத் தில் நாடியிரத்தோட்ட ஆரம்பத்தின் சேர்க்கை அதிகரிக்கிறது மில்லை அளவிற் குறைகிறதுமில்லை. அந்த நாடி வேகமான சேர்க் கையுடையதாய் அங் குஷ்டமூலத்திலும் மற்றும் மர்பஸ்தானங் களிலும் கிரமமாய் நடக்கிறது. உயர்ந்த ஸ்தானத்திற் சிக்ஷை பண்ணுகிற நடையினுல் குசம் தாழ்மையான குணத்தை யடை கிறது. (௩௦)

## ஒழுங்கற்ற நாடி நடை.

காலம் காலம் காமத்தை விட்டனுபவிப்பவருக்கு நாடியின் சேர்க்கை, அல்லது இரத்தோட்ட ஆரம்பத் துடிப்பின் எண்ண லதிகரிக்கிறது. அவருக்கு நாடி கழுதையாட்டம் போலும், அங் குஷ்ட மூலம் அதற்குச் சார்பான வன்பஸ்தானங்களிலும் ஒழுங் கீனமாய் நடக்கிறது. ஆரம்பம் சிக்ஷை பண்ணுகிற *சங்கேதம் கலப்பு வெண்கலப் பாத்திரத்திலிருந்துண்டாகிற ஓசைக்குச் சமானமாக ஒழுங்கீனமாய் நடைபெறுகிற நியாயத்தால், அந்தத் தடபத்தை யடைய விருக்கிற குசம் அதிக தாழ்மையடைந்து பிரதீதமான நல்ல குணங்களைக் கெடவிடுகிறது. (௩௧)

(*சங்கேதம்-குறிப்பு)

## ஸாந்தரி.

அகமகிழ்ச்சியை யனுபவித்தவருக்கு அங்குலிப்பரிசக்குறிப்பில் நாடி மெலிந்து ஒரு மெல்லிய இழைக்குச் சமானமாகத் தோற்றி இடை யிடை ஆறி ஆறி நடத்தல், அந்த உதிரம் ஆமாசயத்திற் றூஷிக்கப்பெற்று இருதயஸ்தானத்தில் வியாதியை யுண்டாக்கின காரணம். (௩௨)

## பரிபூர்ண நடையின் நாடி.

இரத்தம் தோஷமடைந்து பூரித்து நல்ல பெறுபேற்றை யடைந்த நாடியில் பிரதிகுணமாகச் சேர்ந்து வாதிப்படுத்தினால், அந்த நாடி யுற்பத்தியாகும்பொழுது அதில் ஊறுகிற இரத்தம் தடிப்புற்று நிறைந்த பாரமுடையதாய்க் காணப்படுவதுமல்லாமல், அதற்குரிய தடபலக்ஷணமும் கலப்பு வெண்கலப்பாத்திரத்திலிருந் துண்டாகும் நாதத்தைப்போல் நிறைந்த ஒலியுடையதாக அறியப்படுகிறது. (௩௩)

## ரிக்த நாடி.

சிலவேளை இருதயகமலத்தில் முயற்சியாய் நடந்த உச்வாச காரணத்தினால் அந்த இரத்தத்தின் நிறை குறைந்த தன்மையாகிறது. அந்த அற்ப அளவினதாகிய உதிரத்தைத் தாங்கியிருக்கிற விருதயம், நீக்கப்பட்ட வெறுமையான நாடியைச் சூக்ஷமத் தன்மையாக்கிச் சமகுணம்பொருந்தி நடக்கச்செய்கிறது. ()

## ரிக்த நாடி.

இரத்தாசயத்தில் உதிரம் அளவின்பிரமாணத்திற் குறைந்து அற்ப அளவின் பிரமாணமாக விருந்தால் நீக்கப்பட்ட நாடி சூக்ஷமகதியிற் சமநடையுடையதாய் நடக்கிறதாம். (௩௫)

## சூக்ஷ்ம நாடி.

அவ்வாறு இரத்தாசாரத்தில் இரத்தங் குறைந்த நியாயத்தினால், அந்த நாடி யனுபவிக்கிற நல்ல குணம் கெட்டு க்ஷீணகுணமான இலக்ஷணத்தைக் காட்டுதல் அதினுடைய கிளை நரம்பு கொழுப்புள்ள ஒருவகையான பதார்த்தத்தைக் கிரகித்து அந்த மார்க்கத்திற்குரிய வாசலில் போஷிக்கிற தன்மையினால். அப்

பொழுது நெருக்கமுடையதாகிறது. இரத்தம் அந்தச் சிறிய பெரிய மடைகளிற் றங்கிப் பிரதீதமான குணத்தைக் கெடவிட்டு க்ஷீணகுணத்தைப் பெற்று நடக்கிறது. (௩௬)

## கடின நடை நாடி.

நாடியின் நடை விரலிற் றங்கிகிற்கும்பொழுது, அந்த நாடி பந்திக்கப்படுகிறது: வக்கிரவடிவமாகிறதில்லை. அங்குஷ்ட மூலத்தில் வாதசிலேஷ்மங்கள் ரூக்ஷகுணமாகத் தோற்றித் தாமதமான நடையுடன் நடக்கிறது. (௩௭)

## மிருது நாடி.

பரிசாங்குலியில் நடை தரிக்கும்போழ்து, அந்த நாடி பந்திக்கப்பட்டு வக்கிர வடிவுடையதாய் நடந்தால், சீதகுணமான (நாடியின் அறிவு தோற்றிச் சப்ததோஷங்கள் குணப்படுத்தின நாடி மெலிந்து நடக்கிறது. (௩௮)

அந்த நாடியின் நடை விரலுக்கு விவாத சம்பந்தமுடையதாயறியப் படுகிற குணம், சூத்தின் அழற்சி துவாரத்திற் பிரவேசிக்கிறது. அதைப் போஷித்த துவாரம் அந்த அனலை நிமேஷக் கிரிகைக்கு விட்டுக் கொடுக்கிறது. நிமேஷம் கற்பிக்கிற மிருதுநாடி சுஷ்கித்து மர்மஸ்தானங்களில் நடக்கிறது. (௩௯)

## சீக்கிர காமினி.

நாடித் துடிப்பு அதிக கெதியுடையதாக எண்ணி அலைபடுகிற அறிவு மாணத்திற்கு நியமிக்கப் பட்டது. அந்த நடை நல்ல குணங்களை வளர்த்துப் பிரிந்து நடக்கிற செயலைக் காட்டுகிறதற்காக வல்ல, அதிக் கிருச்சரகுணமான தோஷங்கள் மூன்றும், அல்லது கோயினாலடிப்படப்பட்ட தோஷங்கள் மூன்றும் சேர்ந்து துரிதமாக நடக்கிறநாடி சடுதியாய்க் குணங்களை மாற்றினது. (௪0)

அந்த நாடி குணம் மாறி யெடுக்கும் போழ்துண்டாகிற பிரத்தியேக குணமான தடபம் கெதியாயடித்துச் சுழலுகிற நியாயம் (முறைமையாய் நடக்கிற) நாடி யிரத்தோட்ட ஆரம்பத்தின் சேர்க்கைக்காகவுமல்ல, நடை தகுதியாகிறதற்காகவுமல்ல, அவைகள் அப்படித்தானிருந்தாலும் ஏகவாரத்தில் மறைகிற செய்கை,

இரத்த முற்பத்திஸ்தானத்திற் பயிற்றுகிற துரித குணம் பொருந்திய நாடி அங்குஷ்டமூலத்திற் கெதியாய் நடக்கிறது. (சக)

## தீரகாமினி.

அந்தநாடியில் இரத்தம் பூரணப்பட்டு நிறைந்ததாயும், நடை மந்த கதியுடையதாயும், தாங்கி நடக்கிற இலக்ஷணம். இரத்தம் கோபங் கொண்ட குணம்போலறியப்பட்டது. நாடி பயிற்றுகிற துவாரத்திலூடுருவி நடக்கிற செயல் அங்குஷ்டமூலத்தி லாறுதலான நடையைத் தெரிவிக்கிறது. (சஉ)

## சாவதானதை.

இருதயத்திலே யறியப்படுகிற நடையின் குணம் பந்திக்கிற சுபாவம்; பிரகிருதி. அப்போழ்து அதைப் பிரவேசித்த நாடியின் ஜெயம் வருங்கால அதிஷ்டத்திற்குரிய மரபைக் கூறுசெய்கிறது. ஏகனுடி கிரமமான நடையுடையதாய் நடக்கிறது. அந்த நாடியிலோடுகிற உதிரமும் கிரமமான செயலுடையதாய் நற்குணம் பொருந்திப் பஞ்சேந்திரியங்களை யூடுருவி அவைகளை நல்ல இனமாகச் செய்கிறது. அந்தக் கிரமமான நடை மர்மஸ்தானங்களைத் திருத்துகிறது. இந்த முதலைப் பெருக்குகிற துவாரமனுபவித்து அந்நடையைச் சாவதானதைக்கு விட்டுக் கொடுக்கிறது. அதைப் போஷித்து இரக்ஷிக்கிற சாவதானதையின் சிறந்தவுக்கத்தினுல் பூரண கருப்பமாகச் சூசகநாடி ருசுவாக்கிக் காண்பிக்கிறது. இந்தக் கொள்கை சிலேஷ்மதாதிலினமாற்றுகிறதில்லை. (சங)

## அசாவதானதை.

அந்த நாடியிலோடின சிறந்த குணமான இரத்தம் விபரீதமடைந்த நியாயம் ஸரியொழுங்கீனமான பயனுடையதாகிறது. இந்த இதமற்ற தப்பிதமான குணத்தை யடைந்து ஒரு முதலாகப் பெருக்குகிற துவாரம் அந்த விபரீதமான நடையைச் சாவதானதைக்கு வழங்க, அது சாக்கிரதையற்ற முயற்சி யுடையதாய்ப் பிரதிதமான நல்ல குணங்களை யுண்டாக்கி யளிக்க வல்லாத அசாவதானதை. இந்த அசாவதானதையின் கொள்கை சிலேஷ்மதாதிற் றோற்றி நடந்து இனமாற்றுகிறது. இவைகளுக்குரிய நியாயம் யாதெனின், கிரமநாடிநடை கொள்ளுகிற

சமூகத்தில் ரோகத்தின் கடுமையான குணங்கள் இனத்தை மாற்றி எடுக்கிறது. அதினால் அந்தக் குணங்கள் கிரமநாடியிற் பிரவேசிக்க அது பிணிப்புற்றது. (சச)

### ஸாந்தரி.

அந்த நாடியின் தடபலக்ஷணத்தைக் கோநிமேஷமடையப் பண்ணிவிடும் காலம், பிறவிக்கேதுவாகும்வேளை. அப்படி வச மாக்காமல் விட்ட கால மிரத்தோட்டத்தி னாரம்பமும் நிலைமையு மதிக ஞாயக்கருத்துடைய பலனை யளிக்கிறது. கருப்பவதிக் குத் தூலரியின் நடை வேட்கை விழைந்திருந்த காலங்கள் கழிந்தபின் "கோ" தோற்றுகிறதும் மறைகிறதுமான செயல். அப்போழ்து நிமேடங் கற்பிக்கிறநடை யங்குஷ்டமூலத்தில் விட்டு விட்டடிக்கிறது. இன்னு மிதிற் சில காரணங் கூறப்படுகிறது, அதாவது இந்த நடைகள் பேதப்படப் பால் வேற்றுமையுருவைக் கூறுசெய்கிற ஏகநாடி யிடையிடை விட்டு விட்டுக் கிரமமாய் நடக்கும். (சரு)

### பரிபூர்ண — நாடி.

சிரஸ்தாபரோகங்களில் அன்யகாரண சம்பந்தமாய் நடக்கிற நாடி மாற்றிக் குணத்தைக் கொடுக்கிறது. அதில் அளவின்மே லதிகரிக்கிற இரத்தம் அதிக தோஷத்தை யடைகிறது. அல்லது அது சுலவிக் குறிப்புற்றுத் தாக்கி நடக்கிற குணம் நாடியைத் தாழ்ந்த வருணமாகச் செய்து அதிற்புகு முதிரத்தை ஒரு தர்ப் பைப்புல்லி னந்தத்திலிருந்து அக்கினியில் விழுவதாகிய நெய்த் துளியின் றன்மைக் கொப்பாக விசைத்தெழும்புகிற செய லதிக பிரதீதமான காரணம், அப்பொழுது உதிர முற்பவித்துப் போஷணை செய்யும் நாடி கற்பிக்கிற குணம், அங்குஷ்டமூலத் தினும் வன்மஸ்தானங்களினுந் தூலவிலக்ஷணமாக நடக்கிறது. இந்த இரத்தவிருத்திநாடியி லதிகமான இரத்தங் கூடி யினமாற் றுகிறது. அது தோஷங்கள் கோளாறடைந்து பேதப்பட்டதி னால், அல்லது கடுமையான வுரோககுணங்கள் வித்தியாசப்படுத் தின தன்மையினால் இந்தப் பிரதீதமான செய லுண்டானது. ()

### ரிக்த — நாடி.

அந்த நாடியின் தூலலக்ஷணம் விபரீதப்பட்டுச் சூக்ஷமகுண மடைந்தால், அது தான் விட்டுப்பெறுகிற நுண்ணிய விரத்தம்

மேலும் மேலுந் தோஷமடைகிறதினல், அல்லது பிரதிகுணமாக வடைகிற உஷ்ணமான வுதிரங் குதிப்புற்றுச் சாந்தமுந் துரிதமு மாகத் தாக்கி நடக்கிற நடையினல் பிரதீதகாரணத்தை யவமதிப் புடன் நடைபெறச்செய்கிறது. இதில் நிமேஷம் சிக்ஷைபண்ணு கிற நடை சூக்ஷமகுணம், அங்குஷ்டமூலத்திற் றோற்றுவது தூல நாடி. (சஎ)

## சூக்ஷமதர—நாடி.

அளவற்ற சூக்ஷமரூபத்தைப் பிறப்பித்த நாடியின் சம குணம் தோற்றுமல் மறைந்து நடக்கிறது. அப்போழ்து நிமே ஷம் பயிற்றுகிற சூக்ஷமதரம் அங்குஷ்டமூலத்திலு மதற்குச் சார்பான வன்மஸ்தானங்களிலும் நடக்கிறது. இரத்தம் நியூன குணமாகி வருந்திய குணத்திறை் றேகி பலவீனப்படச் சாதி வேற்றுமையடைகிறது. (சஅ)

## கடின—நாடி.

நாடி பகலிலே கோபங்கொள்ளுகிற குணமுடையதாக அறி யப்பட்டால், அந்தக் குணத்தை யுவமையாகப் பொருந்திய நாடி யின் நடை யிரண்டாய்ப் பிரிகிறதற்கு ஏகநாடி யுண்டாக்கியளிக் கிற பலன் கடுமையான நடையின் பயனைக் கொடுக்கிறது. அந் தக் 1 கர்க்கசமான நடை சிறிய பிரமாணமுடையதாகி வழமை யாய்ப் பிரவேசியாத நரம்பின் துவாரத்திற் பிரவேசித்து மிருது கடினமான நடையைப் புரிந்து, நடைபெறுகிற பிரதீதகுணத்தை யும் கடினத்தன்மை யுடையதாகச் செய்கிறது, அப்பொழுது நாடி மேலு மதிக கோபங்கொள்ளுகிற குறியைக் காட்டு கிறது. (1 கர்க்கசம் - கடினம்) (சகூ)

## மிருது—நாடி.

இரண்டாம் பகலில் மிருதுவான நடையினிலக்ஷணத்தை யெடுத்து மங்கி மங்கி நடக்கிற அந்நாடி (சிலேஷ்மம்) குறுத்து இல்லாமற் போகிறதாகக் கைக்குறிக்கறியப்பட்டாலந்த நடை யிருதயத்தைக் கடுமைப்படுத்த அங்கே ஸ்தாபிததிருக்கிற நாடி யின் குணமும் விபரீதமான பலனை யுண்டாக்கி யளிக்கிறது. அப் பொழுது உதிரத்தைக்கொண்டு சென்று போஷிக்கிற நாடியின் துவாரம் வரண்டு தேக குணமும் பலவீனப்பட்டுத் தேக வர்ண மும் வித்தியாசமடைகிறது. (ருo)

## சீக்கிரகாமினி—நாடி.

நாடியின் நடை மாறித் தீவிர வேகமான வாயுவின் குணத்தைப் பெறுகிற சமயமறியப்படும் பொழுது, கோகிமேஷத்தின் செயலற்ற நாடியிலிருந்து நீக்கின சேடமான செந்நீரைத் தான் அனுபவித்து மறுபடி இயக்கி விடுகிறது. அது தத்துவ நாடிக்கு இருவகையான இலக்ஷணங்களையுண்டாக்கி விடுகிறது. அவைகளிலொன்று சீக்கிரகதி (அதுதுரிதமான அசைவுடன் தோற்றிப் பிரத்தியேக குணமாக நடப்பது) மற்றது சீக்கிர கதியில் இடைஞ்சற்படுத்தி நடப்பது, (அது ஒரு நடையை ஒரு நடை செயங்கொண்டு நடப்பது) அல்லது இருதய சம்பந்தமான ரோகத்தின் குணங்கள் வித்தியாசப்பட்டுச் சில்லறையான இனமினமாகமாறி இயற்கை சம்பந்தமாயுள்ள குணத்தையுங் கெட்ட தன்மையாக்கி உத்தம தானங்களையும் வித்தியாசப்படுத்தி *ஜாதி பேதத்தையும் வேற்றுமைப்படுத்துகிறது. (ஜாதிஎன்பது-ஆண் பெண் அலி என முப்பாற்கும் பொது. 2-தேகவர்னம்.) (ருக)

## தீரகாமினி—நாடி.

தீவிர வேகமான வாயுவின் குணத்தைப் பொருந்திச் சீக்கிரமான அசைவைக் கொண்டு நடந்த அந்த நாடியின் குணம் §விபரீதமான பொருளுடையதானால், தேகம் சுகமடைகிறதற்கு கோகிமேஷம் கற்பிக்கிற தீரகாமினிநடை அங்குஷ்ட மூலத்தி லாறுதலான நடை கொள்ளுகிறது. (விபரீதம்-வேறுபாடு.) (ருஉ)

## மதனகாமரசாயனம்.

மதன காமியப்பூ, கராம்பு, கசகசா, சீடைப்பருப்பு, கல்மதம், ஓமம், ஏலம், இலவங்கம், வெள்ளுரம், குங்குமப்பூ, இவைகள் வகை விரகனெடை, 1. சாதிக்காய் விராகன் 10. கஞ்சாவிரை, முருங்கை வித்து, மொச்சைக்கொட்டை, குரங்கவரைக்கொட்டை கோழியவரைக்கொட்டை, பழுத்த மாதுளம்பழத்தின் கொட்டை, இலுப்பைப்பூ, அரசங்கொட்டை, அத்திக் கொட்டை, கருவேப்பங்கொட்டை, ஆதொண்டைவித்து, தும்பை வித்து, சருக்கரைப் பூசணி வித்து, வெள்ளரிக் கொட்டை, நீற்றுப் பூசணி வித்து, நரிப்பயிற்றங் கொட்டை, பாசிப் பருப்பு, பூனைக்காலிவிரை, கட

லைப் பருப்பு, நற்சீரகம், காட்டுக்கொள்ளின் பருப்பு, தண்ணீர் மீட்டான் விரை, பாகற்களிக்கொட்டை, தேமாம் பருப்பு, மூங்கிலரிசி, ஆவரை வித்து, ஆவரைப் பிஞ்சு, ஆலின்பழவித்து ஆலின் பிஞ்சு, அத்திப் பிஞ்சு, அல்லிக்காய், அரசம் பிஞ்சு இவைகள் ஒவ்வொன்றும் தனித்தனி சமன் நிறையாக எடுத்துப் புனிதப் படுத்தி மாவாக்கின தூள் 40விராகனிடை. எள்ளுப் பருப்புமா 80விராகனிடை, வெந்தயமாவும் கோதுமைமாவும் தனித்தனி 80 விராகனிடை, உழுந்துமா 320விராகனிடை, முதற் சொன்ன மதனகாமியப்பூ ஆதி சாதிக்காயீறுபுள்ள சரக்குகளையும் புனிதப் படுத்தி மாவாக்கி எல்லாவற்றையும் ஒன்றறச் சேர்த்துச் சூரணித்து வைத்துக் கொண்டு, இந்தத் தூள்வகை எல்லாவற்றிற்கும் சரி பங்கான சர்க்கரையும் நிறுத்தெடுத்து, சர்க்கரையைப் போதிய தேங்காய்ப் பாலிற் கரைத்துக் கொதிக்க வைத்து மேற்படி மாக்களைப் போட்டு மிஸ்ரமித்துப் பாகு பதத்திற் கிண்டி எடுத்து ஒருநாளைக்கு உலரவைத்து, மறுநாள் எடுத்து போதிய பசுப்பால், போதிய பசு நெய் சேர்த்துக் காய்ச்சும் பொழுது, பசும்பாலிலூறவிட்டுலர்த்தி மாவாக்கின தூதுவளம் பூப்பலம் 5, அவ்விதமா யூற விட்டுலர்த்தி மாவாக்கின முருங்கைப்பூ, கவலைக் கொடியின்பூ, வில்வம்பூ, கற்றாளம்பூ வகைக்குப் பலம் 10 இவைகளையும் மாவாக்கி மருந்திற் சேர்த்துக் காய்ச்சி லேகிய பதமாக இறக்கி பவுத்திரமாய்வைத்திருந்து, நாள்வீதம் சாப்பிடு மருந்தை, வெங்காயம், உள்ளி, பெருங்காயம், வெந்தயம், கடுகு, சீரகம் இவைகளை நெய்யிற் றாளிதம் பண்ணி மருந்தையும் மிஸ்ரமித்து நேரம் புன்னைக்காயளவு ஒரு மண்டலம் சாப்பிட்டு வரத் தாது விருத்தி யுண்டாம், கருப்பந்தரிக்கும் விலாவலி, கால்கைத்தளர்ச்சி வெட்டை, மாதாந்த ருதுவிறுலுண்டாகும் குற்றம் முதலிய பல வியாதிகணீங்கிப் புத்திரப் பேற்றை யடைந்து சுகமுடையவராய் வாழ்வார்கள். இம் மருந்திற்குப் பத்தியம், புளிநீக்கிப் பசுப்பால், பசு நெய், இழந்தயிர், இஞ்சி, முருங்கைப் பிஞ்சு, துவரம் பருப்பு, வெல்லம், கதலிப் பிஞ்சு சேர்த்துக் கொள்ளவும்.

நாடி தர்ப்பணம் முற்றுப் பெற்றது.

# அரும்பதவுரை.

அ.

அகடு-வயிறு.
அகவ்ல்-எழுத்தில்லாவொலி.
அசாவதானதை-ஒழுங்கற்றது, சாக்கிரதையில்லாதது.
அஸாவதானதை-பார், அசாவதானதை.
அசும்புதல்-ஊறுதல்.
அஞர்-துன்பம், பயப்பாடு.
அண்ணம்-மேல்வாய், உண்ணாக்கு.
அதோ-கீழ்.
அத்தி-எலும்பு.
அந்தம்-முடிவு, கடைசி, நுனி.
அந்தர்-உள், மறைவான.
அந்தரம்-தொள்ளை, பிரதிவாதம், தர்க்கம், தீது, முட்டுப்பாடு.
அந்வயம்-முறைதப்பி நடக்கிற இலக்ஷணங்களை முறைமையான நிலைமைக்குக் கொண்டுவருதல்.
அபத்தம்-தவறு, பொருத்தமின்மை.
அபிஷங்கம்-சாபம், அனுசரித்தல், கோபம், பைசாசம் துஷ்ட கிரகங்களால் பீடிக்கப்பட்டது. நோய் கொண்டிருத்தல்.
அமலம்-சுத்தமானது.
அமீசம்-அபின்னமானது.
அமுக்கம்-நெருடுவது.
அமுக்குதல்-தொண்டை நெருடுதல்.
அமைச்சன் - பித்தநாடி, மரண சமீப காலத்தில் பித்தஸ்தானத்தை யெடுக்கும்போது கபநாடி.
அம்சம்-அன்னப்பறவை.
அம்லம்-புளிப்பு.
அயம்-குதிரை.
அருத்தம்-பாதி, பொருள்.
அருகுதல்-குறைதல்.
அர்த்தம்-பயன், பிரயோசனம்.
அல்கல்-நாள், சுருங்கல்.
அவஸ்தை-வருத்தம், தசா அவஸ்தை.
அழித்தல்-இல்லாமற்செய்தல்.
அளவை-அநுமானம், அறிதல், பிரத்தியக்ஷம், (எண்ணி) அளவிடல், பிரமாணம், தன்மை.
அனலம்-பித்தம்.
அனிலம்-வாதம்.
அன்வயம்-பார், அந்வயம்.
அன்னியம்-வித்தியாசமானது, வேறு.

ஆ.

ஆசதி-ஸம்ப்ராப்திஎன்னும் நிதானப் பரீக்ஷைக்குரிய ஓர் பரியாயநாமம்.
ஆடி-சரளி என்னும் ஓர் பறவை.
ஆமம்-ஆமாசயம், சிலேஷ்மம்.
ஆரம்-சக்கரம், முத்து.
ஆரா-ஆதாரநாடி, (மூலநாடி)
ஆர்-மத்தியநாடி.

இ.

இமம்-குளிர்.
இருத்-மார்பு.
இலகு-இலேசானது.
இவுளி-குதிரை.
இறை-வாதம்.
இனன்-சூரியன்.
இன்பம்-சுகம், சந்தோஷம்.
இன்னல்-வருத்தம்.

ஈ.

ஈகை-கொடை.
ஈவு-இடைவெளி.
ஈறு-கடைசி.

உ.

உகுத்தல்-சிந்துதல், சொரிதல்.
உப-தொகை, விகி, ஊக்கம், இரண்டு, உவமை, அலங்காரம்.
உபகரணம்-கருவி, சாஸ்திரத்தி னுட்குறிப்பு, உண்டாக்கல், உயிர்க்காதாரமாயுள்ள விஷயம், சேர்க்கை, உதவிசெய்தல்.
உபரக்தம்-தோஷமடைந்த இரத்தம்,

உ.

உபஹாரணம்-ஒரு குரு ஒரு சிஷனுக்குத் தீக்ஷை வைக்கும்பொழுது அவனேற்கும் பிரசாதம்.

உயிர்ப்பு-வாதம்.

ஊ.

ஊதை-வாதம்.

ஊழ்-குணம், பூர்வசன்மம்.

எ.

எகினம்-அன்னப்பறவை.

எருவை-இரத்தம்.

எழில்-அழகு.

ஏ.

ஏகம்-ஒன்று, தனிமை, வித்தியாசமானது, மேலானது.

ஏடகம்-தேங்காய்.

ஏதம்-துன்பம்.

ஏந்தல்-வாதநாடி.

ஐ.

ஐ-சிலேஷ்மம்.

ஐயம்-சிலேஷ்மம், சந்தேகம்.

ஒ.

ஒகரம்-மயில்.

ஒக்கலே-மருங்கின் பக்கம்.

ஒட்டுரோகம்-தொற்றுநோய்.

ஒலி-வாதம், சத்தம்.

ஓ.

ஓதி-இரத்தந் தரிக்கு மிடங்களினின்று பலனை உண்டாக்கிவிடுவது.

ஔ.

ஔஉற்பிதம்-நிலத்திலிருந் தெடுக்கப்படுவது (பஞ்ச லவணத்தி னொன்று).

க.

கசட்புள்-நாரைப்பகுதியி லொரு சாதி. (அதை ஆள்காட்டிக்குருவி என்றும் சொல்வது).

ககம்-சாதகப்புள்.

கங்கு-பருந்து.

கங்குல்-இரவு.

கடினம்-கடுமையானது, வன்மை.

கடி-சுண்ணம்பு, கெடிகாரம்.

கணம்-தொகை, ஒருநொடிப்பொழுது, மினிட்டு.

க்ஷணம்-ஒருநொடிப்பொழுது, காலநுட்பம் நான்கு கொண்டது, 30டிக்கிறிக்குச் சரியான ஒரு நேரத்தின் கணக்கு, 4 விநாடி, 4விகலே, 4கலே, ஒரு சடுதியான நேரம்.

கநம்-கெடிகாரக் கொட்டல், அடிப்பு.

கபம்-சிலேஷ்மம்.

கபி-சிலேஷ்மம்.

கபோதம்-புருப்பறவை.

கமனம்-ஓட்டம், நடை, சுற்றோட்டம்.

கரணப்புரு-ஒருவகையானசுழற்சியுடன் போகும் ஓரீனமான புருப்பறவை.

கரம்-சூடானது, விஷத்தன்மையானது, மழமழப்பற்றது.

கர்ணம்-காது.

கர்ணிகை-இடை (விரல்)

கர்ன்னம்-செவி.

கஸாரம்-சிலேஷ்மம்.

கா.

காடி-கஞ்சி, கழுநீர்.

காதனம்-அடித்தல், ஆயுதங்களாற் காயமுண்டாக்கல்.

காருகம்-கையாற் செய்யப்பட்டது,

கி.

கிருதி-பவனியான நடை, ஒரு போர் வீரனின் பயிற்சியான நடை.

கீ.

கீசகம்-மலேமூங்கில்.

கீ[illegible]-பால்.

கு.

குக்கி-வயிறு.

குக்குடம்-கோழி.

கு.

குடாீனிஸ்-இனிப்புச்சுவையான அவரை.
குட்டன்-ஆட்டின் குட்டி.
குருதி-இரத்தம்.
குரூ-கடினத்தன்மை, கனப்பானது.
குர்ப்பரம்-முழங்கால்.
குலக்கம்-(நாடி) மாத்திரைக் கடித்து ஒலிப்பது, நாடியின் ஸ்பந்தனம்.
குலிங்கம்-ஊர்க்குருவி.
குறும்பூழ்-காடை.

கூ.

கூதனம் } மறைத்து மொழியுஞ்சொல்.
கூதநம

கூர்ப்பரம்-முழங்கை.

கெ.

கெங்கை-சங்காநதி, சாரம்.

கே.

கேவலம்-தனிமை, குறிப்பாய், அற்பம், ஒழுங்கு, ஒருமிக்கக்கூடி இலட்சணப்பொருத்தமில்லாமல் நிற்றல்.

கை.

கைரிசம்-இதில் இரண்டு விதம் ஒன்று பாஷாண கைரிசம் ஒன்று சுவர்ண கைரிசம்.

கொ.

கொங்கு-கோளக பாஷாணம்.

கோ.

கோஷ்டகம்-இரத்தம் முதலியவை தங்கியிருப்பதற்சாதாரமாயுள்ள உறுப்புகள்:—அவை—இருதயம், குலோட்டம், புப்புசம், யகிருதம், பிலீகம், குடல், வ்ருக்கங்கள், நாபி, கருப்பாசயம், வஸ்தி.
கோட்பு-சுழற்சி, துழாவல்.
கோமளம்-மிருதுவானது, சாந்தமானது, குறுகியது.
கோரம்-முகிள், மலராத முகை.

கௌ.

கௌரி-கௌரிநாடி, மஞ்சள், வெள்ளறுகு.

ச.

சகதி, சஹதி-பழுதடைந்த.
சசை-(நரம்பின்) கிளை.
சங்கீரணம்-கலப்பு, சேர்க்கை.
சங்க்யை-எண்ணிக் கண்ட தொகை.
ஜடம்-தேகம், அங்குட்ட தேகிக்கிரத்தம்சுத்தமாகுமிடம்.
சந்தாபிதம்-விரகதாபத்தால் வருந்துதல், நோயினற் சினங்கொண்டது.
சர்துவாங்கி-முதுகைத் தன் பாரிசத்திற்றரித்து நடப்பவர்.
சந்திப்பு-பொருந்துமிடம்.
சபலம்-அசையுந்தன்மையுடையது, கெதியுடையது, நீதியிற் செயமுடையது.
சபேதம்-வெண்மையில் மங்கலானது.
சப்தம்-ஏழு, பேசப்பட்டது.
சமுதாயம்-சேர்க்கை, கூட்டம், சேர்ந்திருக்குமிடம்.
சயதி-வெற்றியடைதல், மேற்கொள்ளல்
சலூகை-அட்டை.
சவ்யபாகம்-வலப்பக்கம், இடப் பக்கம், பிற் பக்கம்.

சா.

சாதம்-பார், ஸாதம்.
ஜாதி-ஸம்ப்ராப்தி என்னும் நிதானப் பரிக்ஷைக்குரிய ஒரு பரியாய நாமம். வருணம், தேகத்தின் வர்ணம் பிறவி, சமன் படுத்துங் குணம், நோய்தொடருங்காரணம்.

[கிற

சாந்தரி-இடைவிட்ட, ஆறிஆறி அடிக்
சாரம்-அசைவு, உட்பொருள்.
சாவதானதை-கிரமமானது, சாக்கிரதையுள்ளது, இரட்சிப்புக்குரியது.

சி.

சிதம்பு-குணமின்மை.
சிராபூரணம்-சிரையென்னும் இரத்தக் குழாயில் இரத்தம் அதிகம் நிரம்பியிருப்பது.

ஸி.

ஸிரிகண்டம்-கருப்புக்கட்டி, கல்காரம்.
ஸிலதி-பணிவிடைக்குரியது, அடிமை.

சீ.

சீக்கிரகாமினி-தீவிரமானநடையுடையது
சீக்கிரசாரி-படபடத்த நடையுடையது.
சீதம்-ஆமம், குளிர்.
சீதளம்-குளிர், விறைப்பு.

சு.

சுரை-கள்ளு.
சுலவுதல்-சுற்றுதல்.
சுவேதம்-வெண்மையான து.
சுஷ்கம்-வரண்டது.

சூ.

சூக்ஷமம் / சூச்குமம் } சிறுகரது, நுண்மையானது
சூக்ஷமதரம்-மெல்லிய இளைக்குச் சமானமானது, நுண்ணிய தன்மையுடையது.
சூசகம்-ஊசி, ருசுவாக்கிக் காண்பித்தல், முலைக்கண்.
சூசி-ஊசி.

செ.

செந்நீர்-இரத்தம்.
செயல்-(இடையிற் சேர்ந்த) குணம், செய்கை.
செவ்வேள்-சுப்பிரமணியக் கடவுள்.

சே.

சேகு-வயிரம், தழும்பு.
சேடம்-மிஞ்சியிருந்தது.
சேர்பு-இடம்

சை.

சைந்தவம் - சைந்தவஇலவணம் (கல்லுப்பு—இந்துப்புஎன்றும் கூறுகிறார்கள்.)

சொ.

சொறியன்-துத்த பாஷாணம்.

சோ.

சோணிதம்-இரத்தம்.
சோரி-இரத்தம்.

சௌ.

சௌசம்-சுத்தம்.
சௌண்டி-திப்பலி.

ச்.

ச்லக்ஷணம்-மழுமழுப்பானது.
ஜ்வரம்-சுரம்.

ஞ.

ஞுயபஞ்சகம்-நன்னும்பின் வீறு.

ட.

டகரம்-மாறுகண், ஓரக்கண், டகரவடிவமான குதி.
டங்கம்-சீர்குலைந்திகிறது.

த.

தடபம்-அடிப்பு, தட்டுதல்.
தடபதி-உன்னதமாயடித்து அனுகூலமாகிறதற்கு.
தடித்தல்-மின்னுதல், பிரகாசித்தல்.
தணம்-ஒலிப்பு.
தண்டம்-தெண்டு, ஒருநாளில் $\frac{1}{60}$பங்கு, இருபத்துநான்கு நிமிஷம், இருபத்துநான்கு மினிற்.
தபனன்-சூரியன், வெப்பம்.
தமர்-துவாரம்.
தரங்கம்-கடற்றிரை.
தரலம்-முத்து, பரல்.
தரா-சருப்பை.
தரிசனம்-பார்வை.
தன்யம் / தன்னியம் } முலைப்பால்.
தன்னியாசத்திற்குரியது.

தா.

தாபனம்-சூடேற்றல்.
தாரதம்மியம்-உவமையில்லாதது, பிரமாணம் வித்தியாசமானது.
தாரா-ஒரினமான சோதி.
தாரை-பார்வை, கண்.
தாளாண்மை-ஊக்கம், முயற்சி.
தானம்-இடம், கொடை,

தி.

திக்தம்-கைப்பு.
தித்தம்-கைப்பு.
தித்திரி-சகுந்தப் பறவை.
திரவம்-நீர்த்தன்மையானது, பொசிபுந் தன்மையுடையது.
திரவபதார்த்தம்-பனை தெங்கு ஈஞ்சு முதலியவற்றின் மடல் விருத்தங்களிலிருந்தூறுவதாகிய இரசம், வடித்த திராவகம், திராவகம் வடித்தற்குரிய திரவியம்.
திரியக்-குறுக்கு
தில-எள்ளிலைபோன்ற, திலாசயத்திற்குரிய
திலம்-எள்.

தீ.

தீக்ஷணம்-கூர்மையானது, காரமானது, அக்கினித் தன்மையுடையது, செமிக்கப்பண்ணும் குணமானது.
தீரகாமினி-ஆறுதலானநடையுடைய.
தீரம்-அடக்கப்படாதது, உறுதியானது, மந்தமானது.
தீர்க்க - நீண்ட, நெடில்.
தீவிரம்-கொடுமை.

து.

துக்தம்-பால், வெண்டுத்தம்.
துக்தநீணிஸ்-பாற்போஞ்சியவரை.
துண்டித்தல்-பிரித்துகாட்டுதல்.
துப்புரவு-அனுபவம், பழக்கம்.
துர்ப்பலம்-பலவீனம், தொய்ந்தது.
துர்லபம்-சித்தியில் மறைவானது.
துவம்-இரண்டு.

தூ.

தூதம்-போஞ்சியவரையி லோரினம்.
தூதி-தூதுவழுதுணம்.
தூலம்-பருத்தது.

தெ.

தெய்வபிஷக்-தேவமருத்துவன்.

தே.

தேகம்-கௌரிநாடி.
தேனம்-வறுமை, தரித்திரம்.

தை.

தைலபர்ணி-துருடகம்.

தொ.

தொந்தம்-இரண்டு சேர்ந்தது, இரண்டிரண்டாய்த் தொந்திப்பதற்கும் தொந்தம் என்று பெயர்.
தொம்தொம்-இரண்டிரண்டு.
தொனி-சத்தம்.

தோ.

தோஷம்-வாதம் பித்தம் சிலேஷ்மம் என்பவைக்குத் தனித்தனி யுரிய பெயர், சுரதோஷம்.

ந.

நம்ரம்-வளைந்தது.
நகிகம்-இருதயத்தின் பக்கத்திலுள்ள மாமிசகண்டம்.
நவீரம்-சிரசு.
நளினம்-தாமரை.
நளினி - தாமரை யிதழுக்கு ளிருக்கும் தாதுக் கொப்பானது, (நரம்பின்) கூந்தல், (நரம்பின்) தாது.

நா.

நாககேசரம்-இதில் இரண்டினம்; ஒன்று மலராத மூசை, ஒன்று மலர்ந்த கூந்தல்வடிவமானது.
நாடி-நரம்பு.
நாட்டம்-பார்வை, கண்.
நாமம்-இபலுந்தன்மை.
நாமம்-பெயர்.
நாம்-அச்சம்.
நாளம்-நரம்பு.

நி.

நிகளம்-தோள்மேல், புயம்.
நிமேஷம் - இரத்தாசயத்திற் சினையடியாகப் பிறந்த அம்சங்கள் வழியாக உதிரம் அளவின்படி உட்புகவும் அளவின்படி யுறப்புகளுக்குப் பிரயோகிக்கவும்நடைபெறுகிற நிதானமான மாத்திரை, அப்படியே இரத்தம் சத்தியடைகிற இடம் எங்கும்

# அரும்பதவுரை.

நி.

நிமேடம்-பார், நிமேஷம்

நிறை-சமன்.

நீ.

நீதம்-பொது, சமானம்,

நீதி-பொது, சமானம், தருமம்.

நு.

நுகர்தல்-புசித்தல், அனுபவித்தல்.

நுதல்-நெற்றி.

நூ.

நூறில்-கொடிக்கொத்தான்.

நூன்மை-சாத்திரக்கருத்து.

நெ.

நெறிக்கல்-சக்கான்கல்.

நே.

நேத்திரம் - கண்.

நேயம்-நெய், தயிலம், மனம், அன்பு.

நை.

நைவு-வருத்தம்.

நோ.

நோலை-எட்கசி.

நோற்றுண்ணல்-பட்டினி விட்டுண்ணல்.

ப.

பங்கி-கஞ்சா, தலைமயிர்.

படகதி-சர்ப்பத்தின் நடைக்கு உவமை யானது, வளருந்தன்மையுடையது, உத்தமமாகிற நடை.

பதவை-வழி.

பயத்தல்-உண்டாக்கல். கொடுத்தல், பிறப்பித்தல்.

பயன்-பிரயோசனம், பலன், கருத்து.

பராக்கு-ரோகம், இலக்ஷணமடைய முன்பு, பூப்பின் முன்பு, (உள்ள காலம்)

பரி-போஷிப்பு.

பரிசாரகன்-வருத்தக்காரரைப் பார்பவன் வைத்தியருடைய ஆஞைக்கு ளமைந்து வேண்டிய கருமங்களை முடித்துக் கொடுப்பவன்

பரிபூர்ண-பூரித்துப் பருத்த, இரத்தம் நிரம்பிய.

பா.

பாசகம்-அன்பு,பாசகமென்னும்பித்தம்

பாசமம்-ஊசிமுகவடிவமான தமர்.

பாடநம்-துண்டித்த உறுப்பைப் பொருத்துவது.

பாணி-கை, சலம்.

பாண்டுரம்-மஞ்சள் (நிறமும்) வெண் (நிறமும்)கலந்தது, வெழுவெழுப்பானது.

பாரம்-உணவென்ன மலசலங்களென்ன ஸ்தானத்திற் றங்கிப் பிரிந்து செல்லும் சமமான நிலைமை. இரண்டாயிரம் பலம் என்னும் ஓர் நிறை. சுமை, கனம்.

பாராவதம்-புருப்பறவை.

பி.

பிச்சிலம்-பிசுபிசுப்பானது.

பிரகண்டம்-தோள்மேல், (அது முழங்கையிலிருந்து தோள்மூடுவரையும்)

பிரதி-பதில், எதிர், விகாதம்.

பிரதீதம்-பார், ப்ரதீதம்.

பிரபஞ்சன-துண்டிக்கிற, பின்னமாகிற.

பிரமம்-முதல்.

பிரமரம்-வண்டு.

பிரஷ்டம்-மேற்படுதல்.

பிலவம்-குரங்கு.

பிலீகம்-மண்ணீரல்.

பினிற்றல்-உமிழ்தல், (பாய்ச்சும்பொருட்டுவிடுதல்)

பீ.

பீசம்-தாது, விரை.

பீடனம்-முப்பத்திரண்டு வகைச் சிகிச்சையில் ஒன்று, நசுக்குதல்.

பீடை-துன்பம்.

பீத-சிவப்பான.

பீநிஸ் / பீனிஸ் } யோஞ்சி அவரை.

பு.

புஜங்கம்-சர்ப்பம்.

புண்ணீர்-இரத்தம்.

பு.

புப்புசம்-நுரையீரல்.
புரஸ்ணம்-தாதோட்டம், நாடிநடை.
புலரி-வைகறை, விடியற்காலம்.
புழுங்கல்-கோபக் குறிப்பு.

பூ.

பூ-கதிர், பூநீற்றுக்கு முன்பு தோன்றுங் கதிர், புஷ்பம்.
பூசம்-பூனை.
பூம்சம்-பூனை.
பூருவம்-பார், அடுத்த சொல்.
பூர்வம்-ஆதி, முதல், தொடக்கம், ஆரம்பம்.
பூலதா-மயில்.
பூலதை-நிலப்புழு, மயில், பூனகம்.

பெ.

பெருவியாதி-ஏகசர்ம குஷ்டம்.

பே.

பேகம்-தவளை.
பேடு-(அலிச்சாதியில்) பெண்.
பேதம்-வித்தியாசம்.

பை.

பையுள்-துன்பம்.

பொ.

பொன்வல்லி-பொற்சீந்தில்.

போ.

போதம்-அறிவு.
போதகி-சீரகம், புதினாக்கீரை.
போத்திரி - நரைத்த நிறம், பன்றி.
போழ்து - காலம், பொழுது.

ப்.

ப்ரகண்டம் - பார், பிரகண்டம்.
ப்ரதீத - வழமைபோற் பழகிக்கொண்ட, சரியாய் நிர்ணயித்த, காரியசித்திக்குரிய, விதிவிகிதமான, நோயில்லாத, பாராட்டப்படத்தக்க, முன்நடந்த ஒழுங்கின்படி சேர்த்துவிட்ட, அகந்தையுள்ள, திடமாய்ச் சங்கற்பித்த, அறிவுடைய.

22

ப்.

ப்ரபந்தம் - ஆறுதலில்லாத செயல், விக்கினமில்லாதது, பந்திப்பு.
ப்லவம் - பார், பிலவம்.

ம.

மணிபந்தம் - அங்குஷ்டமூலம்.
மதுரம் - இனிப்புச் சுவையுடையது.
மத்திமம் - நடு, இடை, பொது.
மத்ய - நடுவான, சமமான.
மத்யாதி - அறிவுக்கு மயக்கத்தையுண்டு பண்ணும் குடிவகை.
மந்தம் - மலபந்தத்தினால் உண்டாகும் குணம், சோம்புத்தன்மை, செறிவில்லாதது, செமியாக்குணம்.
மந்தகாமினி-மந்தமான நடையையுடைய
மந்தி - குரங்கு.
மயூரம் - மயில்.
மருத்து - வாதம்.
மர்த்தனம் - உரைஞ்சித் தேய்த்தல்.
மனோகதம்-குதிரையின்போக்குக்குவமை

மா.

மாத்திரை - நிதானம், ஒருவிசலை, ஒரு க்ஷணப்பொழுது, ஒரு அவஷதத்தின் பெயர்.
மானம் - நிறை, பிரமாணம், அளவு.

மி.

மிஸ்ரம் - கலந்த, சேர்க்கை, கலவை.
மிருது - மென்மையானது, நொய்யது.
மிருதம் - உண்மையாயறிந்த, மறந்து போனதை அவதானித்த.
மிருத்து - மரணம்.
மிலனம் - ஒன்றுறக் கலத்தல்.
மிலானம் - அழுக்குடையது, தளர்ச்சியானது, நிறம் மங்கியது, தேய்சிற குணமுடையது, வாட்டமானது, தியக்கமானது.
மின்ஸாரிகதி-திரியக் கமனமான ஓட்டம்.

மீ.

மீளி - க்ஷயரோகம்.

மு.

முகநாடி - வாதநாடி.
முஞ்சதி - கஷாயங்கள் திராவகங்கள் உண்டாக்கும்பொழுது பிறக்கின்ற இரைச்சல்.

மூ.

மூகை - ஊமைக்குணம்.
மூவர் - வாதம் பித்தம் சிலேஷ்மம்.

மெ.

மெய் - உடம்பு; குப்பைமேனி.

மே.

மேடகா - ஆட்டின் குட்டி, தவளை, பாகனுக்கடங்காதமதங்கொண்டயானை.

மை.

மைசாக்ஷி - குக்கில்.

மோ.

மோரம் - மயில்.
மோனை - முதல்.

ய.

யகிருதம் - கல்லீரல்.
யதி - சேருதல், நரம்புசளந்திக்குமிடம்.
யதிப்பிரஷ்டம் - ஓசை முடியு மிடத்தி லுள்ள பிறழ்ச்சி.

யா.

யாமம் - ஒருநாளி லெட்டிலொரு பங்காகிய நேரம்.

யு.

யுதி - இணைப்பு, பொருத்து.

யூ.

யூக்மை - மந்தாரை.

யோ.

யோசம் - சேர்க்கை, மருந்து.

ர.

ரகிதம் - ரோகம் மாறியிருப்பது.
ரசம் - சாரம், பாதரசம், விந்து.
ரசஸ் - சப்ததாதுக்களிலொன்று.
ரந்திரம் - மணிரந்திரம், நரம்பின் கோணங்களிலுள்ள துவாரம்.

ரி.

ரிக்த - அற்பமான, வெறுமையான, நீக்கப்பட்ட.

ரு.

ருசு - அத்தாட்சி, திருத்தம்.
ருண்டம் - தலையில்லாத உடல்.
ருத் - வருத்தம், அழுகை.
ருத்தம் - தடுக்கப்பட்டது.

ரூ.

ரூக்ஷம் - கடினமானது, மனதுக்கிணங்காதது, சுவையிற் கரடுமுரடானது.
ரூக்ஷை - இரமில்லாத சுவை, வெப்பித்தது, வரண்டது.
ரூபம் - கண்ணினாற் பார்த்தறிவது, உருவம், இலக்ஷணமமைந்திருப்பது.

ரே.

ரேகை - வரி, எழுத்து, ஆயுளின் அளவைத் தீர்மானிப்பது.
ரேசநீயம் - விரேசன அவுஷதம்.
ரேணு - மணல்.

ரோ.

ரோசம் - வருத்தம்.
ரோககாதகன்-பிராணரக்ஷகவைத்தியன்
ரோக சங்காரகன்-பிராண ரக்ஷக வைத்தியன்.
ரோகாரி - பரிகாரி.

ல.

லபம் - இனமாற்று.
லவா — பார் லாவம்.

லா.

லாலம் - விளர்த்தது, வெளுப்பானது.
லாவம் - காடைப்பறவை.

லோ.

லோ கம் - இரத்தாசயத்தில்இரத்தம் பிரவேசித்துப் பிறக்கும்பொழுது நடைபெறுங் கிரமங்களிலொன்று, நடுக்கம், அதிர்ச்சி, கிடுகிடுப்பு.

வ.

வக்கிரம் - முகம், வளைந்தவடிவானது.
வசா - வசாச்சலம், சப்த தாதுக்களி ஞென்று, மச்சா தாதுவிலிருந்து பேதப்பட்டது.
வத்திரம் - முகம்.
வஸ்தி - மூத்திரப்பை.

வா.

வாதி-நியாயதுரந்தரன், வேதனை, மலசல வாதை.
வாம-இடது, குறுகின, வளைவான.
வாரம்-ஒரு தினம்.

வி

விகிதம்-விகிதப்படி, விதிக்கப்பட்டது.
விருதி-ஈறு, கடைசி.
வித்துத்து-மின்னல்.
விபரீதம்-கஷ்டம், உற்பத்தி, மாறுபாடு, பிழையானது, இதமில்லாதது, குறுக்கானது.
விமபாகம்-இணங்காமலிருக்கிற பகுதி, நெருக்கத்திலிருந்திஷ்டமாகிக் கொள்ளுகிற பகுதி, எதிரிடையான பாகம்.
விளம்பனம்-தாமதம், தடை, இடைஞ் சற்பண்ணல், தங்கியிருத்தல்.
விளித்தல்-அழைத்தல்
விஸம-விபரீதமான.

வீ

வீசம்-தாது, வித்து.
வீரியம்-பெலனுள்ளது, புருஷேந்திரியம்.
வீரியவிரகித-இந்திரியமில்லாத.

வெ.

வெம்பல்-கோபங்சொள்ளல்.
வெள்ளிலோத்திரம்-லோத்திர விருட்சத திலிருந்தெடுக்கப்படுவது, அது இல வங்கப்பட்டை போன்றது.

வே

வேகம்-இயல்பிலேயுண்டானவாதைகளை யடக்காமல் விடுவது,யாதுமுரோ கங்களில் அடங்கி யடங்கித் தீவிர மாயெழும்புங் குணம்.
வேகநிரோதம்-மல மூத்திராதி வேகங் களை இயற்கைக்கு விரோதமாயடக் கிக் கொண்டிருத்தல்.
வேதனம்-வேதனைப்படுதல், பிரசவவே தனை.

வை-

வைகறை-விடியற்காலம்.
வைப்பு-இடம்.

வோ.

வோதி-புளிநரலை.
வோரம்-துவரை.
வ்ருக்கம்-மூத்திரக் குண்டிக்காய்.

ஸ.

ஸங்கல அவுஷதம்-கலந்தமருந்து.
ஸத்வம்-நல்ல குணமானது.
ஸந்தாபிதம்-பார், சந்தாபிதம்.
ஸபேதம்-வெண்மையான (நிறத்திற்கு)
ஸம்ஸயம்-சந்தேகமானது.
ஸம்பவம்-காரணம், உற்பத்தி,அசைக்க வலிமை யுள்ளது.
ஸம்பூதம்-பிறந்தது, உடன் பிறந்தது.
ஸர-சரருது (கார்லம்.)
ஸரம்-விரைந்து செல்லுந் தன்மையுடை யது, நெகிழ்ந்து விழுகிறது, அசை யுந் தன்மை யுடையது, அம்பு, உப் புத் தன்மை.
ஸரதம்-நெகிழ்ந்து செல்கிறது.
ஸரலம்-சுத்தமானது, கபடமில்லாதது, ஒருபறவையின் பெயர்.
ஸரி-பொசிதல்.

ஸா.

ஸாதம்-சுத்தம், ஆயாசம், செலவு, உலர்வு, அடைப்பு, ஒப்வு, மிருது, சந்தோஷம்.

ஸாந்திரம்-திரண்டது, கட்டித் தன்மையானது.

ஸாம்தரி-பார், சாந்தரி.

ஸாவதானதை பார். சாவதானதை.

ஸி.

ஸிநிக்தம்-அழுத்தமானது, தைலப் பசமையுடையது, பட்சமானது, தடிப்பானது, குளிரானது, வைரமானது.

ஸிரிகண்டம்-கருப்புக் கட்டி.

ஸீ.

ஸீக்ரகாமிநி-பார், சீக்கிரகாமினி.

ஸீக்ரசாரி-பார், சீக்கிரசாரி.

ஸூ

ஸூக்ஷ்மதர-பார், சூக்ஷ்மதர.

ஸூசக-ருசுவாக்கிக் காண்பிக்கிற.

ஸோ.

ஸோஷம்-சுவாசத்திற் குரிமை யானது, க்ஷயரோகம், வரட்சி, சூட்டினால் விரியுந் தன்மையுடையது.

ஸ்

ஸ்திரம்-உறுதியானது, நிலைக்குந்தன்மையுடையது.

ஸ்தூலம்-பருத்தது.

ஸ்பந்தனம்-நாடிஎழுப்பத்திற்குரிய இயக்கம், (அது இரத்தோட்ட ஆரம்பத்திற்குரிய "கே" என்னும் முதல் இரத்தம் ஆசயத்திலிருந் துற்பத்தியாகும் பொழுது சேரக் கருது முறுப்பில் இச்சைகூர்ந்து துன்னும் அநு சந்தானம்) அசைதல், தளம்புதல், இருதயத் துடிப்பு, நாடித் துடிப்பு, கம்பண்ணுதல், கருப்பத்திலுள்ள ஒரு சிசுவின் விரைவான அருட்சி.

ஸ்யாமம்-கருமை.

ஸ்வேதம்-பார், சுவேதம்.

ஹ.

ஹம்ஸம்-அன்னம், வாத்து.

ஹரித-மஞ்சள் நிறமான.

ஹோதி-பார், ஓதி.

ஹ்ரஸ்வ-குட்டையான, குறுகிய.

## நாடிதர்ப்பணம்
## உபகரண அத்தியாயப் பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௧௩ | ௪ | பிராஸ் | பிராஸ்ந |
| ௧௪ | ௧௧ | ஆலஸ்ம் | ஆலஸ்யம் |
| ,, | ௧௨ | பிரத்திபக்ஷ | பிரத்தியக்ஷ |
| ,, | ௧௩ | பிரபோகிப் | பிரயோகிப் |
| ,, | ௨௨ | றெளிக்கிறனும் | றெளிக்கிறதும் |
| ,, | ௩௩ | பிரத்திபக்ஷ | பிரத்தியக்ஷ |
| ௧௫ | ௩ | வேளி | வெளி |
| ,, | ௭ | யரைவற் | யசைவற் |
| ௧௬ | ௩0 | ழுடையது. 1பராக், | என்பது ழுடையது 1பராக், என்று சேர்த்து வாசிப்பது. |

## நாடிதர்ப்பணப் பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| | | சுப்பிரமணியர்துதி, ஆசிரியப்பா என்பது | சுப்பிரமணியர்துதி சூத்திரம், என்றும் |
| ௧௪ | ௬ | பிணேதது | பிணேந்து |
| ௨௪ | ௧௧ | மல்புத்த | மல்புத்த |
| ,, | ௧௮ | பிருக்கு | பிருக்கு |
| ௨௭ | ௨௯ | யோக்கிப | யோக்கிய |
| ௩௫ | ௨௭ | மந்தகுணமான | மந்தகுணமான |
| ,, | ௨௮ | மந்த துணமான | மந்தகுணமான |

| | | | |
|---|---|---|---|
| ௩௯ | ௧௧ | அிதத் | அதைத் |
| ,, | ௧௧ | அனுபவப்படிபும் | அனுபவப்படியும் |
| ,, | ௧௨ | நூலறிவின்பாடிபு | நூலறிவின்படியு |
| ௪௩ | ௧௧ ௧௨ | யதிப்பிரஷ்டகம் | யதிப்பிரஷ்டம் |
| ௪௦ | ௧௦ | நாடிசக்கரத்தில் ஐந்தாவதுகோட்டில் ஹறஸ்வ | ஹ்ரஸ்வ. (ஹ்ரஸ்வ என்று வருமிடமெங்கும் ஹ்ரஸ்வ என்றும் |
| ௪௪ | ௨௮ | பித்தம்தானே | பித்தந்தானே |
| ௪௬ | ௧௦ | யோடுக | யோடுங் |
| ௪௮ | ௧௧ | சிலதுமந்த | சிலதும் அந்த |
| ௫௪ | ௧௩ | ஙயை | நடையை |
| ௫௬ | ௧௬ | யிருப்த் | யிருப்ப |
| ,, | ௨௮ | சிலமை | சிலாமை |
| ௬௦ | ௩௦ | முதலியய | முதலிய |
| ௬௦ | ௩௧ | தெளிவாயப | தெளிவாய்ப் |
| ௬௧ | ௭ | நாணிலொலி | நாணிஞெலி |
| ௬௪ | ௬ | ரமோராக | சுரமோராக |
| ,, | ௩௨ | ஒரு தினத்தை | ஒரு தினத்தில் |
| ௬௭ | ௩ | களப | களப் |
| ௬௮ | ௨௯ | தானத்தில | தானத்தில் |
| ௭௧ | ௧௮ | தொந்தங | தொந்தங் |
| ,, | ௨௬ | சங்கற.பிக்கிற அறிவும் | சங்கற்பிக்கிற அறிவும் |
| ௭௧ | ௨௮ | ககிற | க்கிற |
| ,, | ,, | காரமும | காரமும் |
| ௮௦ | ௧௭ | வெறுப்பு | வெப்பு |
| ,, | ௨௩ | நடி | நாடி |
| ௮௩ | ௨௦ | தென்றும | தென்றும் |
| ௮௯ | ௨௪ | கிணுக்கிக் | கிணுக்கித் |
| ௯௨ | ௧௨ | மாரன | மாரப் |
| ,, | ௨௮ | கப | சப |
| ௯௩ | ௨௭ | ஒவவொன்றிலும் | ஒவ்வொன்றிலும் |

| | | | |
|---|---|---|---|
| ௯௭ | ௯ | புஞ்சா | புஞ்சை |
| ,, | ௧௩ | சஞசலைநாடியின் | சஞ்சலைநாடியின் |
| ௪00 | ௧௨ | நாடிபும் | நாடியும் |
| ,, | ௧௯ | சென்றுட | சென்றும் |
| ௪0௧ | ௨0 | அறிகிற | அழிகிற |
| ,, | ௨௨ | றன்றை | றன்மை |
| ௪0௨ | ௨ | மஸ்தகஸ்தை | மஸ்தகத்தை |
| ,, | ௨௪ ௨௫ | அதை அதை | அதை |
| ௪0௫ | ௨0 | செயலைரபோல் | செயலைப்போல் |
| ௪0௬ | ௧௭ | யிரடடி | யிரட்டி |
| ௪0௮ | ௯ | இருதப | இருதய |
| ௪௧௧ | | குறிப்புரையில் இ-ச ஷெ அக்ஷரத்தின் ஒ- | இசை அக்ஷரத்தின் ஒலி |
| ௪௧௩ | ௪ | சுர | சுக |
| ௪௧௮ | ௧௪ | கான | தான |
| ,, | ௧௫ | கற் | தற் |
| ,, ,, | ௧௮ ௧௯ | செய்கைடைபுண்டாக்கின | செய்கையையுண்டாக்கின |
| ௪௨௩ | ௨௪ | கூ-ம் | கூகம் |
| ௪௨௪ | ௩௧ | செய்றகை | செயற்கை |
| ௪௩௨ | ௭ | வலிமைமடை | வலிமையுடைய |
| ௪௩௩ | ௮ | கா | கோ |
| ௪௩௪ | ௭ | "டம" | "டம்" [த்து வாசிப்பது] |
| ௪௩௯ | ௧௭ | ஒலித்து என்பதின் முன் | அடித்து (என்பதைச்சேர் |
| ௪௪௫ | ௧௮ | கிறறு | கிறது |
| ௪௪௮ | ௨௫ ௨௯ | அல்லவோ | அல்லாததோ |
| ,, | ௩௩ | குறிப்புரையில், வியைப் | விரையைப் |
| ௪௫0 | ௪0 | தோறறி | தோற்றி |
| ,, | ௨௯ | நேததிரம் | நேத்திரம் |
| ௪௫௧ | ௮ | திவான | தியான |
| ,, | ௩0 | இக்ஷண | இலக்ஷண |
| ,, | ௩௨ | குர்ய | சூரிய |
| ௪௫௨ | ௧௫ | மானத | மானஸ |

## அரும்பதவுரையிற் பிழைதிருத்தம்.

| | பிழை. | திருத்தம். |
|---|---|---|
| (ஓதி) என்பதில் | பலனேண்டாக்கிவிடுவது | பலனை யுண்டாக்கி விடுவது. |
| (கநம்) ,, | அடிப்ப | அடிப்பு. |
| (காதனம்) ,, | ஆயுதங்களாற் ரய முண்டாக்கல் | ஆயுதங்களாற் காய முண்டாக்கல் |
| (கீரம்)— | | பால் |
| (கூதனம்) என்பதில் | | மறைத்து மொழி யுஞ் சொல். |
| (கோஷ்டகம்) ,, | குலோட்ம் | குலோமம். |
| (சூக்ஷமம்) ,, | சிறுதது | சிறுத்தது. |
| (சௌசம்) ,, | சுத்தம | சுத்தம். |
| (சௌண்டி) ,, | திப்பரி | திப்பலி. |
| (து—வரியில்) | துபம் | துவம். |
| (பராக்கு) என்பதில் | ரோகம், இலக்ஷண மடைய முன்பு | ரோகமிலக்ஷண மடைய முன்பு. |

Dr. T. K. SIVAGNANAM
L. A. M. P. (Cey)
Kondavil West
KONDAVIL

B[illegible] [illegible]RMACY
45[illegible] H[illegible]SPITAL ROAD
JAFFNA
DIAL. 7386